மத்திய கலால் மற்றும் சுங்க வரித்துறை

புது டில்லி

# சரக்கு மற்றும் சேவை வரி (GST)

# பற்றி

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs)

2ம் பதிப்பு, 31 மார்ச். 2017

# முன்னுரை

மத்திய கலால் மற்றும் சுங்கத்துறை (CBEC), தேசிய சுங்கம், கலால் மற்றும் போதை மருந்து தடுப்பு பயிற்சி மையம் (NACEN)கீழ் செயல்படும் உயர்நிலை பயிற்சி நிறுவனத்தாமல் வழங்கப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரிப் பற்றி அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளுக்கு மிகவும் நன்றாக தொகுத்து விளக்கப்பட்டுள்ளது. இந்த சரக்கு மற்றும் சேவைப் பற்றி அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் தொகுப்பை 2016, செப்டம்பர் மாதம் 21தேதியன்று மாண்புமிகு நிதியமைச்சரால் வெளியிடப்பட்டது. சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டத்தின் மாதிரியை அடிப்படையாகக் கொண்டது.இந்த சரக்கு மற்றும் சேவைப் பற்றி அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் தொகுப்பைநாடு முழுவதும் பரப்புவதை உறுதி செய்ய இவை மாநில மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

முதல் பதிப்பு வெளியிடப்பட்ட உடனேயே எண்ணற்ற குறிப்பிடத்தக்க வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளது. CGST, SGST, IGST, UTGST ஆகியவற்றின் இது வரையிலான சட்ட வரைவுகள் மற்றும் விதிமுறைகளின் தொகுப்புடன் இழப்பீட்டுவரி போன்றவற்றிற்கு GST கவுன்சில் ஒப்புதல் அளித்துவிட்டது. மத்திய மசோதாக்களை பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும் மாநிலம் சம்பந்தப்பட்ட சட்டங்களை அந்தந்த மாநில சட்டமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும். முதற்பதிப்பு வெளியிடும் போது அளிக்கப்பட்ட உறுதிமொழியின்படி, இரண்டாம் பதிப்பு பாராளுமன்றத்தில் முன்பே அறிமுகப்படுத்தப்பட்ட மசோதாக்களின் அடிப்படையில் தேசிய சுங்கம், கலால் மற்றும் போதை மருந்து தடுப்பு பயிற்சி மையத்தால் (NACEN) தயாரிக்கப்பட்டுள்ளது. DG, NACEN மற்றும் அவர்களின் குழுவினர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.மேலும், வரி அதிகாரிகள், வர்த்தகர்கள், மற்றும் பொதுமக்கள் மத்தியில் GST பற்றிய அறிவையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதற்கு இது மிக நெடுந்தூரம் செல்லும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நஜீப் ஷா

மத்திய கலால் மற்றும் சுங்கவரித் துறை. (CBEC)

## உள்ளடக்கம்

1.சரக்கு மற்றும் சேவை வரிப் பற்றிய கண்ணோட்டம் (GST)
2. வரி வசூலும்/விதிப்பும், வரி விலக்கும்
3. பதிவு
4. வழங்கல்என்றசொல்லின்பொருளும்வீச்சும்
5. சப்ளை நேரம்
6. ஜிஎஸ்டிமதிப்பிடுதல்
7. ஜிஎஸ்டிவரிசெலுத்துதல்
8. மின்னணு வர்த்தகம்.
9. பணி எடுத்து செய்தல்
10. உள்ளீட்டு வரி வரவு
11 GST-யில் உள்ளீட்டு சேவை பகிர்பவர் பற்றிய கோட்பாடு
12 வருமானவரிதாக்கல்செயல்முறைகள்மற்றும்உள்ளீட்டுவரிகடன்
13. மதிப்பீடுமற்றும்தணிக்கை
14. பணம் திரும்பப் பெறுதல்
15. கோரிக்கைகள்மற்றும்மீட்பு
16. ஜிஎஸ்டியில்முறையீடுகள், மறுஆய்வுமற்றும்சீராய்வு
17. முன்னீட்டுத்தீர்ப்பு (AdvanceRuling)
18. பைசல் அமைப்பு - நீக்கப்பட்டது (Omitted / Deleted)
19. ஆய்வு, சோதனை, கையகப்படுத்தல்மற்றும்கைது
20. குற்றங்கள், அபராதங்கள், வழக்குமற்றும்காம்பௌண்டிங்
21. IGST சட்டம் - ஒட்டுமொத்தப் பார்வை
22. சரக்குகள் வழங்கல் இடம் மற்றும் சேவை
23. ஜி.எஸ்.டி.என். மற்றும்ஃப்ரண்ட்எண்ட் (FRONTEND) தொழில்
24. மாற்றத்தின்வரையறைகள்

## தயாரிப்பு:

மும்பையிலுள்ள NACENன் கூடுதல் இயக்குநர் திரு. சமீர் பஜாஜ் அவர்களின் மேற்பார்வையின் கீழ் மும்பை NACENன் உதவி இயக்குநர் திரு. தீபக் மாதாமற்றும் மும்பை CESTATன் பரிசோதகர் திரு. சஞ்சீவ் நாயர்ஆகியோரால் இணைந்து தயாரிக்கப்பட்டது

## பரிசீலித்தவர்கள்:

திரு. P.K. மொஹந்தி, ஆலோசகர், CBEC (அத்தியாயம் 1);
திரு.விஷால் பிரதாப் சிங், DC(GST), GST கொள்கைப் பிரிவு, CBEC(அத்தியாயம் 2);
Dr. P.D. வகேலா, CCT, குஜராத் (அத்தியாயம் 3&7);
திரு. D.P. நாகேந்திர குமார், Pr. ADG, DGCEI, பெங்களூரு (அத்தியாயம் 4 முதல் 6);
திரு. உபேந்திர குப்தா, ஆணையர், GST, CBEC (அத்தியாயம்8 முதல் 11);
திரு. ரிட்விக் பாண்டே, CCT, கர்நாடகா (அத்தியாயம் 12);
திரு. அருண் குமார் மிஷ்ரா, இணை செயலாளர், CTD, பிஹார் (அத்தியாயம்13);
திரு.காலித் அன்வர், முதுநிலை JCT மேற்கு வங்காளம் (அத்தியாயம் 14 & 24);
திரு.அஜய் ஜெயின், Pr. ஆணையர், சுங்கத்துறை, அஹமதாபாத் (அத்தியாயம்15);
திரு. பேங்கீ பெஹாரி அகர்வால், முதன்மைஆணையர், சுங்கத்துறை;
திரு.ஷஷாங்க் ப்ரியா, ADG, DG GST, CBEC (அத்தியாயம் 17 முதல் 20);
திரு.G.D. லோஹானி, CCE, ஃபரிதாபாத் (அத்தியாயம் 21 & 22);
மற்றும் திரு.பிரகாஷ் குமார், CEO, GSTN (அத்தியாயம் 23).

அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் குறித்த விமரிசனங்கள் மற்றும் அபிப்பிராயங்கள் dg.nacen-cbec@nic.in மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.

## பொறுப்புத் துறப்பு

GSTயைப் பற்றி அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளை NACENஆல் தொகுக்கப்பட்டது, அதை CGST/SGST/IGST/UTGST சட்டங்களின் ஆதாரபூர்வ பயிற்சியாளர்களால் பரிசோதிக்கப்பட்டது. GSTயைப் பற்றி தெரிந்து கொள்ளவும் மற்றும் பயிற்சிக்கு மட்டுமே இந்த FAQ பயன்படுத்தப்பட வேண்டும்.

இந்த சிற்றேட்டில் உள்ள தகவல்கள் ஒரு பொதுவான கண்ணோட்டத்தை வழங்குவதற்கு மட்டுமே உருவாக்கப்பட்டவைகள். இவைகளை சட்ட அறிவுரைகளாகவோ அல்லது விளக்கங்களாகவோ நாம் புரிந்துக் கொள்ளக் கூடாது. மேலும் சரியான தகவல்களுக்கு, சம்பந்தப்பட்ட CGST/SGST/IGST/UTGST சட்டங்களை பார்த்து தெரிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்த FAQ குறிப்பிடும் CGST மற்றும் SGST சட்டங்கள் CGST/SGST என்றோ CGST சட்டம் மற்றும் SGST சட்டம் என்றோ பெரும்பாலான விதிகளில்

அடையாளப்படுத்தப்படுகின்றன. CGST சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுகின்றன. SGST சட்டங்கள் அந்தந்த மாநில சட்டமன்றங்களில் நிறைவேற்றப்படுகின்றன. குறிப்பிட்ட ஒரு சில விதிகள் மாநிலத்திற்காக மட்டுமே சேர்க்கப்படும், CGST சட்டத்தில் அவை இடம் பெறாது.

## 1. சரக்கு மற்றும் சேவை வரிப் பற்றிய கண்ணோட்டம் (GST)

கேள்வி 1. சரக்கு மற்றும் சேவை வரி என்றால் என்ன (GST)?

பதில் : சரக்கு மற்றும் சேவைகளை நுகர்வோர் மீது விதிக்கப்படும் ஒரு இலக்கின் அடிப்படையிலான வரியாகும். முன்பு இருந்த நிலைக்கு முரணாக செலுத்தப்பட்ட வரியின் மதிப்புடன், உற்பத்தியாவதிலிருந்து இறுதி நுகர்வு வரை அனைத்து நிலைகளிலும் வரி விதிக்கப்பட வேண்டும் என்று முன்மொழியப்பட்டது. சுருக்கமாகச் சொன்னால், ஒரே மதிப்பு கூட்டு வரியே விதிக்கப்படும். மேலும், இந்த வரிச்சுமை இறுதியாக நுகர்வோர் மீதே சுமத்தப்படும்.

கேள்வி 2. நுகர்வோர் மீதான இலக்கு அடிப்படையிலான வரி என்பதன் சரியான கருத்து என்ன?

பதில் : வரி வசூல் செய்யும் அதிகாரம் நுகர்வோர் இடத்தின் வரி அதிகார வரம்புக்கு உட்படவேண்டும் என்று வழங்கல் இடம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

கேள்வி 3. தற்போதுள்ள எந்தெந்த வரிகள் GSTக்குள் ஐக்கியமாகிறது?

பதில் : GSTல் மாற்றம் பெறப்போகின்ற வரிகள் பின்வருமாறு:-

(அ). மத்திய அரசு தற்போது வரி விதிக்கின்றது, வசூலும் செய்கின்றது

க). மத்திய கலால் வரி

ங). கலால் வரிகள் (மருத்துவம் மற்றும் கழிப்பறை ஏற்பாடுகள்)

ச). கூடுதல் கலால் வரிகள்( சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த சரக்குகள் )

ஞ). கூடுதல் கலால் வரிகள் (ஜவுளிகள் மற்றும் ஜவுளி பொருட்கள்)

ட). கூடுதல் கலால் வரிகள் (ஈடுசெய் வரி CVD என்று பொதுவாக அறியப்பட்டது)

ண). சிறப்புக் கூடுதல் கலால் வரிகள் (SAD)

த). சேவை வரி

ந). இது வரை சரக்கு மற்றும் சேவைகள் வழங்கலில் தொடர்புடைய மத்திய மிகை வரிகள்மற்றும் மேல்வரிகள்

(ஆ). GSTக்குள் ஐக்கியமாகும் மாநில வரிகள்:-

க). மாநில மதிப்புக் கூட்டு வரி

ங). மத்திய விற்பனை வரி

ச). ஆடம்பர வரி

ஞ). நுழைவு வரி (அனைத்து வடிவங்களிலும்)

ட). பொழுதுபோக்கு மற்றும் கேளிக்கை வரி (உள்ளூர் வரி நீங்கலாக)

ண). விளம்பரங்களின் மீதான வரி

த). கொள்முதல் வரி

ந). குலுக்கல் சீட்டு (லாட்டரி), பந்தயம் மற்றும் சூதாட்டம் மீதான வரி

ப). இது வரை சரக்கு மற்றும் சேவைகள் வழங்கலில் தொடர்புடைய மாநிலத்தின் மிகை வரிகள்மற்றும் மேல்வரிகள்.

மத்திய அரசால் விதிக்கப்பட்ட வரிகள், மேல்வரி மற்றும் மிகைவரி பற்றி யூனியன் மற்றும் மாநிலங்களுக்கு GSTகவுன்சில் பரிந்துரைக்க வேண்டும். இதில் மாநில மற்றும் உள்ளூர் அமைப்புகளின் வரிகள் GSTக்குள் ஐக்கியமாகி விடும்.

கேள்வி 4. மேலே குறிப்பிட்ட வரிகளை GSTக்குள் ஐக்கியப்படுத்துவதற்கு என்ன கொள்கைகள் பின்பற்றப்படுகின்றன?

பதில்: GSTக்குள் ஐக்கியப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை அடையாளம் கண்டறிய, மத்திய, மாநில மற்றும் உள்ளூர் வரிகள் பரிசோதிக்கப்பட்டது.

அப்படி அடையாளம் கண்டறியப்படும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவைகள்:-

அ). சரக்கு வழங்கல் அல்லது சேவைகள் வழங்கலில் முன்பு மறைமுக வரிகளாக வசூலிக்கப்பட்டவைகள், இப்போது GST வரி அல்லது வரி விதிப்புகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

ஆ). இறக்குமதி, பொருட்கள் உற்பத்தி, அல்லது சேவைகள் வழங்குதல் ஒரு முனையிலும், சரக்கும் மற்றும் சேவைகள் வழங்கல் நுகர்வு மறுமுனையையும் பரிமாற்ற சங்கிலியின் பகுதிகளாக வரி அல்லது வரி விதிப்புகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

இ). ஐக்கியப்படுத்தப்பட்டதன் விளைவாக மாநிலத்திற்கள்ளும், மாநிலங்கள் அளவிலும் வரி விலக்கு சுமுகமாக நடைபெறவேண்டும். சரக்கு மற்றும் சேவைகளில் குறிப்பாக தொடர்பற்ற வரி மற்றும் கட்டணங்களை, GSTன் கீழ் மாற்றியமைக்க கூடாது.

ஈ). யூனியன் மற்றும் மாநிலங்களுக்கான நேர்மையான வருவாய்க்கு தாங்களே தனித்தனியாக முயற்சி செய்ய வேண்டும்.

கேள்வி 5. எந்தெந்தப் பொருட்களை வெளியிலிருந்து கண்காணிக்க வேண்டும் என்று GST முடிவெடுத்துள்ளது?

பதில் :101வது அரசியலமைப்பு திருத்தம் 2016 படி திருத்தியமைக்கப்பட்ட 366(12A) அரசியலமைப்பு பிரிவு சரக்கு மற்றும் சேவைகள் பற்றி விளக்குகின்றது. அதன்படி, மனிதன் உட்கொள்ளும் மது விநியோகம் நீங்கலாக, சரக்கு அல்லது சேவைகள் வழங்கல் அல்லது இரண்டிற்கும் மீதான வரி என்று விளக்குகின்றது. எனவே, அரசியலைப்பிலுள்ள GSTன் விளக்கத்தின்படி. மனிதன் உட்கொள்ளும் மதுவை GSTயிலிருந்து வெளியேற்றிவிட்டது.கச்சா பெட்ரோல், மோட்டார் எரிபொருள் (பெட்ரோல்), அதி வேக டீசல், இயற்கை எரிவாயு மற்றும் விமான டர்பைன் எரிபொருள் ஆகிய ஐந்து பெட்ரோலியப் பொருட்களை GSTக்கு வெளியில்

தற்காலிகமாக வைத்துள்ளது. எந்த தேதியிலிருந்து அவை GSTக்குள் சேர்க்க வேண்டும் என்பதை GST கவுன்சில் முடிவு செய்யும். மேலும், மின்சாரமும் GSTயிலிருந்து வெளியேற்றி விட்டது.

கேள்வி 6. GST அறிமுகமானபின் மேலே குறிப்பிட்ட பொருட்களின் மீதானவரி விதிப்பின் நிலை என்னவாகும்?

பதில் :தற்போதை மதிப்பு கூட்டு வரி மற்றும் மத்திய சுங்க வரி விதிப்பு முறையையே மேலே குறிப்பிட்ட பொருட்களின் மீது தொடர்ந்து கடைபிடிக்கப்படும்.

கேள்வி 7. புகையிலை மற்றும் புகையிலைப் பொருட்களின் மீதான GSTன் நிலைப்பாடு என்ன?

பதில் : புகையிலை மற்றும் புகையிலைப் பொருட்கள் GSTக்கு உட்பட்டது. கூடுதலாக இந்த பொருட்களின் மீது மத்திய சுங்க வரியை கூடுதலாக விதிக்க மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் உள்ளது.

கேள்வி 8 என்ன வகையான GSTஐ அமல்படுத்த திட்டமிடப் பட்டுள்ளது?

பதில் : பொதுவான வரி விதிகளின் அடிப்படையில் மத்திய மாநில அரசுகளுடன் இணைந்து இரட்டை GSTஐ ஒரே சமயத்தில் விதிக்கப் போகின்றது. உள் மாநில சரக்குகள் வழங்கல் மீது மத்திய அரசால் சரக்கு மற்றும் சேவைகள் வரி விதிக்கப்படும் மற்றும் சேவைகள் மத்திய GST என்றும் அழைக்கப்படும். மாநில மற்றும் யூனியன் பிரதேசத்தினால் விதிக்கப்படும் வரிகள் மாநில சரக்கும் மற்றும் சேவை வரி SGST UTGST என்றும் வழங்கப்படும். அதே போல், ஒருங்கிணைக்கப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி (IGST) விதிக்கப்படும் மற்றும் ஒவ்வொரு மாநிலங்களுக்கிடையேயும் நடைபெறும் சரக்கு மற்றும் சேவைகள் வழங்கலை மத்திய அரசு நிர்வகிக்கின்றது

கேள்வி 9. இரட்டை GSTன் அவசியம் என்ன?

பதில் : இந்தியா ஒரு கூட்டாட்சி நாடு ஆகும். சட்டப்படி வரி விதித்து, அந்த வரியை வசூல் செய்வதற்கு மத்திய, மாநில அரசாங்கங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அரசியலைப்பின் பரிந்துரையின்படி அதிகாரங்களை பிரித்துக் கொண்டதன் அடிப்படையில் இரு அரசாங்கங்களுக்கும் நிறைவேற்ற வேண்டிய தனிப்பட்ட பொறுப்புகள் உள்ளன. அதற்கான ஆதாரங்களை பெருக்க வேண்டிய அவசியமும் உள்ளது. நிதி கூட்டாட்சியின்க அரசியலமைப்பின் தேவைக்கேற்ப, ஒரு இரட்டை GST இருக்கும்.

கேள்வி 10. வரி விதிப்பதற்கும், GSTஐ நிர்வகிப்பதற்கும் எதற்கு அதிகாரம் உள்ளது?

பதில் : மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் வரிவிதித்து , SGST UTGST நிர்வகித்தாலும், மத்திய அரசு வரி விதித்து, CGST மற்றும் IGSTயையும் நிர்வகிக்கும்.

கேள்வி 11. இந்திய அரசியலமைப்பு சமீபத்தில் GST அமைப்பில் திருத்தம் செய்தது ஏன்?

பதில்: தற்போது மத்திய மாநிலத்திறகிடையேயான நிதி வலிமை அரசியலைப்பில் ஜனநாயகத்தின்படி மிகவும் தெளிவாக உள்ளது. இதில், அவரவர் இடத்தில் எந்த அத்துமீறல்களில்லை. மனிதன் உட்கொள்ளும் மது, அபின், போதைப் பொருள் நீங்கலாக மற்ற உற்பத்திப் பொருள்களின் மீது வரி விதிக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்கும் நிலையில் விற்பனை வரியை விதிப்பதற்கு மாநிலத்திற்கு அதிகாரம் உண்டு. மாநிலங்களுக்கிடையேயான விற்பனைகளில், மத்திய விற்பனை வரியை (CST) விதிக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு இருந்தாலும், அந்த வரியை வசூலித்து, தானே வைத்துக் கொள்ளும் அதிகாரம் மாநில அரசுகளுக்கே உள்ளது. சேவைகளை பொருத்தவரையில். சேவை வரி விதிப்பது மத்திய அரசின் தனிப்பட்ட அதிகாரம் ஆகும்.

GST அறிமுகத்தை அரசியலமைப்பில் திருத்தம் செய்ய வேணடும். ஏனென்றால், ஒரே சமயத்தில் வரியை விதித்து, வசூல் செய்யும் அதிகாரத்தை மத்திய, மாநில

அரசுகள் பெற வேண்டும். இந்த நோக்கத்திற்காக, 101வது அரசியலமைப்பு சட்டம் 2016 திருத்தத்தின் படி, இந்திய அரசியலமைப்பில் திருத்தம் செய்யப்பட்டது. , GST வரிகளை விதித்து, அதை வசூலிப்பதற்கான அதிகாரத்தை மத்திய, மாநில அரசுகளுக்கு அரசியலமைப்பு 246A பிரிவு வழங்குகின்றது.

கேள்வி 12. குறிப்பிட்ட சரக்கு மற்றும் சேவைகள் பரிவர்த்தனையில் எப்படி ஒரே சமயத்தில் மத்திய GST(CGST) , மற்றும் மாநில GST (SGST)ன் கீழ் வரி விதிக்க முடியும்?

பதில்: பரிந்துரைக்கப்பட்ட தொடக்க வரம்புக்கு கீழ் நடக்கும் பரிவர்த்தனைகள், GSTயால் வெளியிலிருந்து கண்காணிக்கப்படும் சரக்குகள், விலக்களிக்கப்பட்ட சரக்கு மற்று சேவைகள் நீங்கலாக, மற்ற சரக்கு மற்றும் சேவைகள் வழங்கலின் ஒவ்வொரு பரிவர்த்தனைகளுக்கும் CGST மற்றும் SGSTயால் ஒரே சமயத்தில் வரி விதிக்கமுடியும். மேலும், சரக்குகளின் மீது விதிக்கப்பட்ட மத்திய மதிப்பு கூட்டு வரி உட்பட மாநில கூட்டு வரி போலல்லாமல், இருவரும் அதே விலைக்கு அல்லது மதிப்புக்கு வரி விதிக்க வேண்டும். விற்பவர், வாங்குபவர் இருப்பிடம் நாட்டிற்குள் இருக்கும்போது மத்திய சரக்கு மற்றும் சேவை வரி (CGST) முக்கியமானதல்ல. ஆனால் விற்பவர், வாங்குபவர் இருப்பிடம் மாநிலத்திற்குள் இருக்கும்போது மாநில சரக்கு மற்றும் சேவை வரி (SGST) விதிக்கப்படும்.

வரைபடம் 1. CGSTன் விகிதம் 10% எனவும், SGSTன் விகிதம் 10% எனவும் கற்பனையாக வைத்துக் கொள்வோம். உத்தரப்பிரதேசத்திலுள்ள மொத்த விற்பனையாளர் ஒருவர் இரும்பு கட்டிகள் மற்றும் கம்பிகளை அதே மாநிலத்திலுள்ள ஒரு கட்டுமான கம்பெனிக்கு ரூ.100க்கு விற்பனை செய்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அந்த விற்பனையாளர் ரூ.10 CGSTக்காகவும், ரூ.10 SGSTக்காகவும் பொருட்களின் அடிப்படை விலையிலிருந்து கூடுதலாக கட்டணம் வசூலிக்கிறார். CGSTஐ மத்திய அரசிடம் செலுத்திவிட்டு, SGSTன் பகுதியை மாநிலத்தின் கணக்கில் பெறலாம். நிச்சயமாக, ஏனெனில், வாங்கும் போதே CGST மற்றும் SGST செலுத்திவிட்டதால், அவர் ரொக்கமாக ரூ.20ஐ செலுத்த வேண்டிய அவசியமில்லை (உள்ளீடு என்று கூறலாம்). CGST செலுத்துவதால் CGSTக்கான

சலுகையை மட்டுமே பெற அனுமதியுண்டு. அதேசமயம் SGSTக்கான சலுகையை மாநில GSTயிடம் தனியாக பெற வேண்டும். வேறு வகையில் சொல்ல வேண்டுமென்றால், பொதுவாக, CGST கடனுக்காக செலுத்தப்படும் தொகையை SGSTக்காக பயன்படுத்து முடியாது. அதேபோல், SGST கடனுக்காக செலுத்தப்படும் தொகையை CGSTக்காக பயன்படுத்து முடியாது.

வரைபடம் 2. CGSTன் விகிதம் 10% எனவும், SGSTன் விகிதம் 10% எனவும் மீண்டும் கற்பனையாக வைத்துக் கொள்வோம். மும்பையிலுள்ள ஒரு விளம்பர கம்பெனி, மஹாராஷ்டிராவிக்குள்ளே இருக்கின்ற ஒரு சோப்பு கம்பெனிக்கு விளம்பர சேவையை ரூ. 100க்கு வழங்குகிறார்.அந்த விளம்பர கம்பெனி, ரூ. 10 CGSTக்காகவும், ரூ. 10 SGSTக்காகவும் சேவை கட்டணத்தின் அடிப்படை விலையிலிருந்து கூடுதலாக கட்டணம் வசூலிக்கின்றது. CGSTஐ மத்திய அரசிடம் செலுத்திவிட்டு, SGSTன் பகுதியை மாநிலத்தின் கணக்கில் பெறலாம். நிச்சயமாக, ஏனெனில், வாங்கும் போதே CGST மற்றும் SGST செலுத்திவிட்டதால், அவர் ரொக்கமாக ரூ.20ஐ செலுத்த வேண்டிய அவசியமில்லை (காகிதம் மற்றும் எழுதுபொருள்கள், அலுவலக உபகரணங்கள், கலை சேவைகள் போன்றவைகள் உள்ளீடு என்று கூறலாம்). CGST செலுத்துவதால் CGSTக்கான சலுகையை மட்டுமே பெற அனுமதியுண்டு. அதேசமயம் SGSTக்கான சலுகையை மாநில GSTயிடம் தனியாக பெற வேண்டும். வேறு வகையில் சொல்ல வேண்டுமென்றால், பொதுவாக, CGST கடனுக்காக செலுத்தப்படும் தொகையை SGSTக்காக பயன்படுத்த முடியாது. அதேபோல், SGST கடனுக்காக செலுத்தப்படும் தொகையை CGSTக்காக பயன்படுத்த முடியாது.

கேள்வி 13. GSTயினால் நாட்டுக்கு கிடைக்கப்பெறும் நன்மைகள் என்ன?

பதில் : இந்தியாவின் மறைமுக வரி துறை சீர்திருத்தத்தில் ஒரு மிக முக்கியமானபடியாக இந்த GST அறிமுகம் இருக்கும். இந்த மாற்றத்தால் அதிக எண்ணிக்கையில் மத்திய மற்றும் மாநில வரிகள், ஒரே வரியாக மாற்றம் பெறும். முன்கூட்டியே வரிகளை செலுத்த அனுமதிக்கப்படும். இது விழப்போகும் மோசமான விளைவை தடுப்பதோடு, பொதுவான தேசியச் சந்தைக்கான வழியை

வகுக்கும். தற்போது 25-30 மதிப்பீடு செய்யப்பட்ட பொருட்களின் மீதான ஒட்டுமொத்த வரிச் சுமையை குறைக்கும் என்பதால் நுகர்வோர்க்கு இது மிகப் பெரிய லாபமாகும். GST அறிமுகத்தால், உள்நாடு மற்றும் வெளிநாட்டு சந்தையில் நம்முடைய பொருட்களுக்கு மிகப் பெரிய போட்டி ஏற்படும். இது உடனடி பொருளாதார வளர்ச்சிக்கான தூண்டுகோலாக இருக்கும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. வரித் தளத்தை விரிவுபடுத்துதல், வர்த்தக அளவை பெருக்கியது, மற்றும் வரிக்கு கீழ்படிதல் போன்றவற்றினால், மத்திய மற்றும் மாநிலங்களுக்கு வருவாய் ஆதாயம் உள்ளது. கடைசியாக ஆனால் குறைந்தவை அல்ல, இந்த வரியின் வெளிப்படைத் தன்மை, நிர்வகிப்பதற்கு சுலபமாக இருக்கும்.

கேள்வி 14. GST என்றால் என்ன?

பதில் :GSTன் ஆளுமையின் கீழ், ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட GSTஐ(IGST) சரக்கு மற்றும் சேவைகள் வழங்கல் மீது மத்திய அரசால் விதிக்கப்பட்டு, அதை வசூலிக்கும்.அரசியலமைப்பு 269A பிரிவின்படி, மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகம் மற்றும் வணிக வழங்கலின் மீது மத்திய அரசு வரி விதித்து அதை வசூலிக்க வேண்டும். அந்தமாதிரி வரிகளை மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கிடையில் பகிரந்தளிக்கும் வகையில், சரக்கு மற்றும் சேவைகள் வரி கவுன்சிலின் பரிந்துரையின் மீது பாராளுமன்றசட்டப்படி வழங்கப்படலாம்.

கேள்வி 15. GSTன் வரி விகிதத்தை முடிவு செய்வது யார்?

பதில் :மத்திய மாநில அரசாங்கள் இணைந்து CGSTமற்றும் SGST வரி விகதங்களை முடிவு செய்கின்றன.இந்த விகிதங்கள் GSTன் பரிந்துரைகளில் தெரிவிக்கப்படும்.

கேள்வி 16. GST கவுன்சிலின் பங்கு என்ன?

பதில் : GST கவுன்சில் மத்திய நிதி அமைச்சர்(கவுன்சிலின் தலைவர்), மாநில அமைச்சர் (வருவாய்), மற்றும் மாநில நித மற்றும் வரி விதிப்பு அமைச்சர்கள் ஆகியோரை கொண்ட அமைப்பாகும். இந்த அமைச்சர்கள் மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு பரிந்துரைகளை கொண்டு செல்வார்கள்.

அ). வரிகள், மேல்வரி மற்றும் மிகைவரிகள் மத்திய அரசால் விதிக்கப்படும் இதில் மாநில மற்றும் உள்ளூர் அமைப்புகளின் வரிகள் GSTக்குள் ஐக்கியமாகி விடும்.

ஆ).GSTயிலிருந்து சரக்கு மற்றும் சேவைகளுக்கு வரி விதிக்கலாம் அல்லது விலக்களிக்கலாம்.

இ). கச்சா பெட்ரோல், மோட்டார் எரிபொருள் (பெட்ரோல்), அதி வேக டீசல், இயற்கை எரிவாயு மற்றும் விமான டர்பைன் எரிபொருள் ஆகிய பொருட்கள்.GSTதேதி அறிவித்த நாளிலிருந்து வரி விதிக்கப்படும்.

ஈ) GST மாதிரி சட்டம்,வரிக் கொள்கைகள், IGSTஐ பகிர்ந்தளித்தல், மற்றும் வழங்கல் இடத்தை நிர்வாகித்தல்.

உ) வருடாந்திர விற்பனை அளவு தொடக்கநிலை வரம்புக்கு கீழே இருந்தால் சரக்கு மற்றும் சேவைகளுக்கு GSTயிலிருந்து விலக்களிக்கப்படும்.

ஊ) GSTன் அடிப்படை வரி விகிதத்துக்கு உட்பட வரி விகிதம்.

(vii) ஏதாவது சிறப்பு விகிதம் அல்லது இயற்கை சீற்றம் அல்லது பேரழிவு போன்ற சமயத்தில் கூடுதல் ஆதாயங்களை அதிகரிக்க குறிப்பிட்ட காலத்திற்கு விகிதம்

(viii) வடகிழக்கு மாநிலங்கள். ஜம்மு & காஷ்மீர், இமாசலப் பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் முதலியவற்றுக்கு சிறப்பு ஏற்பாடுகள்

(ix) GST சம்பந்தப்பட்ட வேறு ஏதாவது விஷயங்களை,GST கவுன்சில் தீர்மானிக்கும்.

கேள்வி 17. GSTகவுன்சிலின் வழிகாட்டுக் கொள்கை என்ன?

பதில்:மத்திய மாநிலங்களிடையேயும், மாநிலங்களுக்கிடையேயும் உள்ள பல்விதமான அம்சங்களில் இணக்கமான சூழ்நிலையை ஏற்படுவதற்கு GST கவுன்சில் உறுதியளிக்க வேண்டும். நூற்றொன்றாம் அரசியல் திருத்தசட்டம், 2016ன் படி GSTன்ஒரு இணக்கமான கட்டமைப்பிற்கு அவசியமாண வழிகாட்டுதல் வழங்கவும், மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகளுக்கு ஒரு இணக்கமான தேசிய

சந்தை மேம்படுத்துதல் போன்றதன்னுடைய பல்வேறு செயல்பாடுகளில் GST கவுன்சில் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

கேள்வி 18. GST அமைப்பால் எவ்வாறு தீர்மான்ங்கள் எடுக்கப்படுகின்றன?

பதில் :நூற்றொன்றாம் அரசியல் திருத்தசட்டம், 2016ன் குறிப்பிட்டுள்ளபடி கூட்டத்திற்கு *3/4*க்குக் குறையாத அளவில் உறுப்பினர்கள் கலந்து கொண்டு வாக்களிக்க வேண்டும். உறுப்பினர்கள் அளித்த பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் தான் GST கவுன்சில் ஒவ்வொரு தீர்மானத்தையும் எடுக்க வேண்டும். பதிவான வாக்குகளில் 1/3 வாக்குகள் மத்திய அரசாங்கத்துக்கும், அனைத்து மாநில அரசாங்கங்களுக்கும் ஒட்டுமொத்தமாக 2/3 வாக்குகளும் வழங்கப்பட்டுள்ளன் GST கவுன்சில் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் பாதிக்கு மேல் பங்கேற்றால் தான் கூட்டத்தை நடத்தமுடியும்.

கேள்வி 19. GST ஆளுமையின் கீழ் GST செலுத்த வேண்டியவர்கள் யார்?

பதில் : சரக்கு மற்றும்/அல்லது சேவைகள் வழங்கல் மீது வரி செலுத்த வேண்டிய நபர் GST ஆளுமையின் கீழ் வரி செலுத்த வேண்டும். வரி செலுத்த வேண்டிய நபரின் வருடாந்திர விற்பனை அளவு வரம்பான ரூபாய் 20 லட்சத்தை கடக்கும் போது வரி செலுத்த வேண்டும் (வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் சிறப்பு அந்தஸ்து மாநிலங்களுக்கு ரூபாய் 10 இலட்சம்), சில குறிப்பிட்ட அம்சங்களில் வரி செலுத்த வேண்டிய நபர், தன்விற்பனையின் அளவு வரம்பைகடக்கா விட்டாலும் GST செலுத்த வேண்டும். மாநிலங்களுக்குள்ளேயே நடக்கும் அனைத்து சரக்கு மற்றும் / அல்லது சேவைகள் வழங்கல் மீது CGST/SGST செலுத்த வேண்டும். அனைத்து மாநிலங்களுக்கு இடையிலான சரக்கு மற்றும்/அல்லது சேவைகள் மீது IGST செலுத்த வேண்டும். சம்பந்தப்பட்ட சட்ட பட்டியல்களில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதப்படி CGST/SGST மற்றும் IGST செலுத்தப்பட வேண்டும்.

கேள்வி 20. GSTன் ஆளுமையின் கீழ் சிறிய அளவு வரி செலுத்துபவர்களுக்கான ஆதாயங்கள் என்ன?

பதில்: ஒரு நிதியாண்டின் ஒட்டுமொத்த விற்றுமுதல் ரூபாய் 20 லட்சம் வரை (வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் சிறப்பு அந்தஸ்து மாநிலங்களுக்கு ரூபாய் 10 இலட்சம்), உள்ளவர்களுக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

ஒரு நபரின் முந்தைய நிதியாண்டின் விற்றுமுதல் ரூபாய் 50 லட்சத்திற்கும் குறைவாக இருந்தால், எளிமைப்படுத்தப்பட்ட தொகுப்புத் திட்டத்தை தேர்ந்தெடுத்து, விற்றுமுதலின் மீது ஒரு மாநிலத்திலுள்ள சலுகை விகிதத்தில் வரியை செலுத்த வேண்டும்.

(வரி விதிப்புக்குரிய அனைத்து வழங்கலின் ஒட்டுமொத்த மதிப்பு, வழங்கல் மற்றும் பொருட்கள் ஏற்றுமதி மற்றும்/அல்லது சேவைகளில் விலக்கு, மற்றும் GSTயிலிருந்து விலக்கு போன்ற அனைத்தும் ஒட்டுமொத்த விற்றுமுதலில் அடங்கும்). ஒட்டுமொத்த விற்றுமுதல் அகில இந்திய அடிப்படையில் கணக்கிடப்படும். வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் சிறப்பு அந்தஸ்துள்ள மாநிலங்களுக்கு தொடக்க நிலை வரம்பில் ரூபாய் 10 இலட்சம் விலக்களிக்கப்பட்டுள்ளது),உள்ளீட்டு வரி வரவுடன் (ITC) சேர்த்துவரி செலுத்தும் முறையை தெரிவு செய்தால் வரி செலுத்தும் அனைவரும் இந்த தொடக்க நிலை வரம்பு விலக்கைப் பெற தகுதியுடையவர்களாவார்கள். வரி செலுத்துபவர்கள் மாநிலுங்களிடையில் வழங்கல் செய்பவர்

அல்லது நேர்மாறான வரி விதிப்பு அடிப்படையில் வரி செலுத்துபவர்களுக்கு இந்த தொடக்கநிலை வரம்பு விலக்கு பெறத் தகுதி இல்லை.

கேள்வி 21. GST ஆளுமையின் சரக்கு மற்றும் சேவைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றன?

பதில்: GST ஆளுமையின் சரக்கு கீழுள்ள சரக்குகள் HSN (இசைவான பெயரிடும் முறை) குறியீடு எண்ணைப் பயன்படுத்தி வகைப்படுத்தப்படுகின்றன. வரி செலுத்துபவரின் விற்றுமுதல் ரூபாய் 1.5 கோடிக்கு அதிகமாகவும், ரூபாய் 5 கோடிக்குக் குறைவாகவும் இருந்தால், அவர் 2 இலக்க அடையாள குறியீடு எண்ணை பயன்படுத்த வேண்டும்.வரி செலுத்துபவர்கள் விற்றுமுதல் விற்பனை ரூபாய் 5 கோடி அல்லது அதற்கு அதிகமாக உள்ளவர்கள் 4 இலக்க அடையாள குறியீடு எண்ணை பயன்படுத்த வேண்டும். வருடாந்தர விற்பனை 1.5 கோடிக்குக் கீழ் உள்ளவர்கள் அவர்களுடைய விலைப்பட்டியில் HSN அடையாள எண்ணைக் குறிப்பிடத் தேவையில்லை. சேவைகள் கணக்கீடு அடையாள குறியீடு எண்ணின்படி (SAC) சேவைகள் வகைப்படுத்தப்படுகின்றன.

கேள்வி 22. GSTன் கீழ் இறக்குமதிகளுக்கு எப்படி வரி விதிக்கப்படுகின்றது?

பதில் : சரக்குமற்றும் சேவைகளின் இறக்குமதிகள் மாநிலங்களுக்கிடையிலான வழங்கலாகவே கருதப்படும் நாட்டிற்குள் இறக்குமதி செய்யப்படும் சரக்குகள் மற்றும் சேவைகள் மீது IGST விதிக்கப்படும். வரியின் நிலைப்பாடு இலக்கு கோட்பாட்டை பின்பற்ற வேண்டும். சரக்குமற்றும் சேவைகள் நுகரப்படும் போது, SGST மூலம் வரி வருவாய் மாநிலத்திற்கு வந்து சேரும் சரக்குகள் மற்றும் சேவைகளின் இறக்குமதிகள் மீது GST செலுத்தப்பட்டது முழுவதுமாகவும் மற்றும் முற்றிலுமாகவும் கிடைக்கும்படி அமைக்கப்பட்டுள்ளது.

கேள்வி 23. GSTன் கீழ் ஏற்றுமதிகள் எப்படி நடத்தப்படுகின்றது?

பதில் :பூஜ்ய விகித வழங்கல்களின் அடிப்படையில் ஏற்றுமதிகள் செய்யப்படுகின்றன.. ஏற்றுமதி செய்யப்படும் சரக்கு மற்றும் சேவைகளுக்க வரி செலுத்த அவசியமில்லை. இருப்பினும் உள்ளீட்டு வரி வரவு சலுகை உள்ளது. அதையே ஏற்றுமதியாளர்களுக்கு திருப்பிக் கொடுக்கும்படியாகவும் அமையப பெற்றுள்ளது. ஏற்றுமதியாளர்களுக்கு சலுகைகளை தெரிவு செய்யும் வாய்ப்புள்ளது. அதாவது வெளியீடுகளின் மீதான வரியை செலுத்திவிட்டு, பின்னர் அதை IGSTயாக திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் அல்லது வரியை செலுத்தாமல் ஒப்பந்த பத்திரத்தின் கீழ் ஏற்றுமதி செய்துவிட்டு, உள்ளீட்டு வரி வரவாக (ITC)அதை திருப்பிதரக் கோரலாம்

கேள்வி 24.GSTன் கீழ் தொகுப்பு வரி நோக்கம் என்ன?

பதில் :சிறிய அளவு வரி செலுத்துபவர்களின் ஒட்டுமொத்த விற்றுமுதல் கடந்த நிதியாண்டில் ரூபாய் 50 இலட்சம் வரை இருந்தால், அவர்கள் தொகுப்பு வரித் திட்டத்திற்கு தகுதி பெறுவார்கள். இந்த திட்டத்தின் கீழ், ஒரு வரி செலுத்துபவர் ஒரு மாநிலத்தில் தன்னுடைய ஒட்டுமொத்த விற்றுமுதலில் ஒரு ருறிப்பிட்டசதவீதத்தை ITC சலுகையின்றி வரி செலுத்தலாம்.உற்பத்தியாளர்களுக்கு CGST மற்றும் SGST/UTGSTக்கு வரி விகிதம் 1%க்கு. மற்றவைகளுக்கு 0.5%குறைவாக இருக்காது. மக்கள் நுகரக்கூடிய உணவு வழங்கல் அல்லது வேறு ஏதாவது பொருட்கள் போன்ற குறிப்பிட்ட சேவைகளுக்கு, பட்டியல் II பகுதி 6(b)ல் குறிப்பிட்டுள்ளபடி 2.5% ஆகும். ஒரு வரி செலுத்துபவர் தொகுப்பு வரியை தெரிவு செய்தால், அதை வாடிக்கையாளர்களிடம் வசூலிக்க முடியாது. GST பரிந்துரைகளின்படி ஐம்பது லட்சம் என்ற வரம்பை ஒரு கோடியாக அரசாங்கம் உயர்த்த வாய்ப்புள்ளது.

மாநிலங்களுக்கிடையில் வழங்கல் அல்லது மின்னணு வர்த்தகம் இயக்குபவர் மூலம் வழங்கலை செய்யும் வரி செலுத்துபவர் வசூல் செய்யும் வரி ஆதாரம், தொகுப்பு வரி திட்டத்திற்கு தகுதி பெற முடியாது.

கேள்வி 25. தொகுப்பு வரி திட்டம் கட்டாயமா அல்லது விருப்பமா?

பதில் : விருப்பத் தெரிவாகும்.

கேள்வி 26. GSTN என்றால் என்ன?GSTல் அதன் பங்கு என்ன?

பதில் :GSTN என்றால் சரக்கு மற்றும் சேவை வரி நெட்வொர்க் என்று அர்த்தம்.GSTன் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகஅமைக்கப்பட்டதுதான், ஒரு சிறப்பு குறிக்கோள் நிறுவனம் என அழைக்கப்படும் GSTNஎன்பதாகும். ஒரு தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பில் ஒரு பங்களிப்பும், மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களின் சேவைகள், வரி செலுத்துபவர்கள் மற்றும் வேறு பங்குதார்ர்களுக்கு GSTஐ அமல்படுத்துவதில் GSTN பெரும் பங்கு வகிக்கின்றது. ஒன்றுக்கொன்று தொடர்புடையவற்றை உள்ளடக்கிய GSTNன் செயல்பாடுகள்:-

அ) பதிவு செய்ய வசதி செய்தல்;

ஆ) வருமான வரி தாக்கலின் விவரங்கள் மத்திய மற்றும் மாநில ஆணையங்களுக்கு அனுப்புதல்;

இ) IGSTன் கணக்கீடு மற்றும் தீர்வு காணுதல்;

ஈ) வங்கி நெட்வொர்க்குடன் செலுத்தப்பட்ட .வரி விவரங்களை சரிபார்த்தல்.;

உ) வரி செலுத்துபவரின் வருவான வரி தாக்கலின் தகவல் அடிப்படையில் மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களுக்கு பல்வேறு மேலாண்மை தகவல் நிறுவண (MIS)அறிக்கைகளைத் வழங்குதல்;

ஊ) வரி செலுத்துபவர்களின் சுயவிவர ஆய்வுகளை வழங்குதல் மற்றும்

எ) பரிசோதனை இயக்கத்தை சரியாக வழி நடத்துதல், நேர்மாறான மற்றும் உள்ளீடு வரி வரவை மீண்டும் திருப்பக பெற கோருதல்;

GSTN ஒரு பொதுவான GST வலைவாயில் மற்றும் பதிவு அப்ளிகேஷன்ஸ், பணம் செலுத்துதல், வருமானவரி தாக்கல், MIS / அறிக்கைகள் முதலியனவற்றை வளர்த்துக் கொண்டிருக்கின்றது. தற்போதுள்ள வரி நிர்வாக தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை, GSTN பொதுவான வலைவாயிலுடன் ஒருங்கிணைத்து வரி செலுத்துவோருக்கு இடைமுகங்களை உருவாக்குகின்றது.மேலும் 19 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு (மாதிரி II மாநிலங்கள்) மதிப்பீடுகள், தணிக்கை, திருப்பித் தருதல், மேல்முறையீடு முதலிய பின்முணை மாதிரிகள GSTN உருவாக்குகின்றது. CBEC மற்றும் மாதிரி I மாநிலங்களில் (15 மாநிலங்கள்) அவர்களே தங்களுடைய GSTஐ பின்முணை அமைப்புகளை மேம்படுத்திக் கொள்கின்றனர். ஒருங்கிணைக்கப்பட்ட GSTன் முன்முணை அமைப்புடன் பின்முணை அமைப்புகள் பூர்த்தி செய்யப்பட்டு முன்கூட்டியே பரிசோதிக்கப்பட வேண்டும்.

கேள்வி 27. GST ஆளுமையின் கீழ் எவ்வாறு பிரச்னைகள் தீர்க்கப்படப் போகின்றன?

பதில் : சரக்கு மற்றும் சேவை வரி கவுன்சில் ஒரு பிரச்னைக்கு தீர்வுகாண எந்த முறையையும் கையாளுவதற்கு அரசியலமைப்பு நூற்றொன்றாம் சட்ட திருத்தம், 2016 வழிவகுக்கிறது

அ), இந்திய அரசாங்கம் மற்றும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்கள் இடையில்; அல்லது

ஆ) இந்திய அரசாங்கம் மற்றும் ஏதாவது ஒரு மாநிலம் அல்லது மாநிலங்கள் ஒருபுறமும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்கள் மறுபுறமும்; அல்லது

இ) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கிடையில் கவுன்சிலின் சிபாரிசுகளினால் எழுகின்ற அல்லது அமல்படுத்தும்போது உருவாகும் பிரச்னைகள்ல

கேள்வி 28. இணக்கமான மதிப்பீடு செயல்முறையின் அவசியம் என்ன்?

பதில் :CGST/SGST சட்டம் 149வது பிரிவின்படி, ஒரு குறிப்பிட்ட அளவீடுகளை பொருத்து இணக்கப் பதிவு அடிப்படையில் ஒவ்வொரு பதிவு செய்த நபருக்கும் இணக்கப் மதிப்பீடு ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த மதிப்பீடுகள் பொதுவெளியில் வெளியிடப்படுகின்றது. இது ஒரு வருங்கால வாடிக்கையாளருக்கு அந்த விநியோகஸ்தர் பற்றிய இணக்க மதிப்பீடு பார்த்து தெரிந்து கொள்ள முடியும். பிறகு அந்த குறிப்பிட்ட விநியோகஸ்தருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளலாமா அல்லது வேண்டாமா என்பதை முடிவு செய்து கொள்ள முடியும். வரி செலுத்துவோர் மத்தியில் ஒரு ஆரோக்கியமான போட்டியை உருவாக்கும்.

கேள்வி 29. நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய உரிமைக் கோரல் GSTக்கு உட்படுமா?

பதில் :CGST/SGST சட்டம் 2(52)வது பிரிவின்படி, நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய உரிமைக் கோரல்அனைத்தும் சரக்குகள் என்றே கருதப்படும். CGST/SGST சட்டம் 7வது பிரிவுடன் பட்டியல் III படிக்கும்போது, சரக்கு வழங்கலாகவோ அல்லது சேவை வழங்கலாகவோ கருதப்படாத செயல்பாடுகள்

அல்லது பரிமாற்றங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. பட்டியலிடப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய உரிமைக் கோரல்கள் லாட்டரி, பந்தயம், மற்றும் சூதாட்டம் தவிர வேறு ஏதாவது நடவடிக்கைகளில் ஈடுபடுதலாகும். எனவே. தான் லாட்டரி, பந்தயம், மற்றும் சூதாட்டம் போன்றவைகளை GSTன் கீழ் வழங்கலாக கருதப்படுகின்றது. மற் ற நடவடிக்கை எடுக்கக்கூடிய உரிமை கோரல்கள் அனைத்தும் வழங்கலாக கருதப்படவில்லை.

கேள்வி 30. பாதுகாப்பு பத்திர பரிமாற்றங்கள் GSTல் வரி செலுத்த வேண்டுமா?

பதில் : சரக்கு மற்றும் சேவைகளின் விளக்கத்திலிருந்து பாதுகாப்பு பத்திர பரிமாற்றங்கள் குறிப்பாகவே உட்படுத்தப்படவில்லை. எனவே, பாதுகாப்பு பத்திர பரிமாற்றங்கள் GSTக்கு வரி செலுத்த வேண்டியதில்லை.

கேள்வி 31, வருமானவரி தகவலின் கருத்து என்ன?

பதில் : வருமானவரி தகவலின் அடிப்படைச் சிந்தனையே தனிப்பட்ட மூன்றாம் நபரிடமிருந்து சேகரிக்கப்பட்ட தகவல் மூலமாக பதிவு செய்த நபரின் இணக்க அளவை பரிசோதிப்பதாகும். CGST/SGST சட்டம் 150வது பிரிவின்படி, பதிவு செய்யப்பட்ட பதிவேடுகள், கணக்கு விவரப்பட்டி, அல்லது ஏதாவது குறிப்பிட்ட கால இடைவெளி வருமான வரி தாக்கல் அல்லது வரி செலுத்தப்பட்ட தகவல்கள் அடங்கிய ஆவணங்களை பராமரிக்க வேண்டியது பல அதிகாரிகளின் பொறுப்பாகும். மேலும், சரக்கு மற்றும் சேவைகள் பரிமாற்றங்கனின் மற்ற விவரங்கள், அல்லது இரண்டும், அல்லது வங்கி கணக்குகள் தொடர்பான பரிமாற்றங்கள், அல்லது மின் நுகர்வு, அல்லது கொள்முதல் பரிமாற்றம், விற்பனை அல்லது சரக்கு பரிமாற்றங்கள் அல்லது சொத்துகள் அல்லது உரிமைகள் அல்லது தற்போது நடைமுறையில் இருக்கும் எந்தவொரு சட்டத்தின் கீழுள்ள சொத்தினால் கிடைக்கும் வட்டி ஆகிய அனைத்து தகவல்களையும் வருமான வரி தாக்கலின் போது கட்டாயமாக இணைக்க வேண்டும். அதே தகவல்களை குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட நேரத்திற்குள், அதே படிவத்தில் மற்றும் முறையிலும், அந்த அதிகாரியிடம் அல்லது முகவரிடம்

பரித்துரைக்கப்பட்டப்படி கொடுக்கப்பட வேண்டும். அப்படி கொடுக்கத் தவறினால், பிரிவு 123ன் படி அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும

கேள்வி 32. வெவ்வேறான கம்பெனிகள், வெவ்வேறான வகையான மென்பொருள் கணக்குத் தொகுப்பை வைத்துள்ளன. ஒரு குறிப்பிட்ட வடிவமைப்பில் பதிவேற்றம் செய்து வைப்பது கட்டாயமாக்கப்படவில்லை. இந்த மாதிரி சிக்கலான மென்பொருளை துறை எப்படி கையாளும் / படிக்கும்?

பதில் :CGST/SGST சட்டம் 153வது பிரிவின்படி, இந்த விஷயத்தின் இயல்பு, சிக்கல் மற்றும் வருவாயின் மீதுள்ள ஈடுபாட்டால், துறை ஏதாவது மீளாய்வு, விசாரித்தல், ஆய்வு அல்லது வேறு ஏதாவது நடைமுறைகள் போன்றவற்றை நிபுணர்களின் உதவியை துறை பெறும்.

கேள்வி 33. பெறுநர் திருப்பியனுப்பிய சரக்குகளுக்கான வரி நடவடிக்கை GSTல் உள்ளதா?

பதில் : ஆமாம் உள்ளது. இந்த சூழ்நிலையை பிரிவு 34 விசாரிக்கின்றது. வழங்கப்பட்ட சரக்கை திருப்பியனுப்பிய பெறுநருக்கு, சரக்கு அனுப்பிய பதிவு செய்த நபர், விவரங்கள் அடங்கிய கடன் குறிப்பை (credit note)வழங்க வேண்டும். செப்டம்பர் மாதத்தைத் தொடர்ந்து வரும் வருடக் கடைசியிலல்லாமல், எப்பொழுது வழங்கப்பட்டதோ அல்லது தொடர்பான வருடாந்திர வருமானவரி தாக்கல் செய்த தேதியிலோ, முற்பட்டது எதுவாக இருந்தாலும், கடன் குறிப்பை (credit note) வழங்கியமாதத்தில் வருமானவரி தாக்கலில் கடன் குறிப்பு (credit note) விவரங்களை அனுப்புநர் வெளியிட வேண்டும். பெறுநர் தன்னுடைய சரியான வரி தாக்கல் அதே வரி செலுத்தும் காலத்தில், உள்ளீடு வரி வரவை (ITC) திரும்பப் பெறுவதற்கான குறைப்பு தொடர்புடையவற்றுடன் இந்த கடன் குறிப்பு (credit note) விவரங்கள் ஒப்பிட்டுப் பார்க்கப்படும் அல்லது அடுத்தடுத்து வரக்கூடிய வரி செலுத்தம காலம் மற்றும் அனுப்புநரின் வெளியீடு வரி செலுத்தலின் குறைப்பை திரும்பப் பெறும் உரிமைகோருதலுடன் பெறுநரின் ITC திரும்பப் பெறும்

உரிமைகோரிலில் தொடர்புடைய குறைப்புடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படும். இறுதியாக ஒப்புக்கொள்ளப்பட்ட தகவலை இரு தரப்பினருக்கும் தெரிவிக்கப்படும்.

கேள்வி 34. எதிர் லாபமீட்டு நடவடிக்கை என்றால் என்ன?

பதில்: CGST/SGST சட்டம் 149வது பிரிவின்படி, சரக்கு மற்றும் சேவைகள் வழங்கலில் மீது ஏதாவது குறைப்பு வரி விகிதம் அல்லது ITC சலுகையை, விலையை தேவையான அளவு குறைப்பதன் மூலம் பெறுநருக்கு வழங்கப்படும். ITCஐ வேறு பதிவு செய்த நபரால் பெறப்பட்டுள்ளதா அல்லது வரி விகிதத்தின் குறைப்பு உண்மையிலேயே, சரக்கு மற்றும் சேவைகளின் விலையில் தேவையான அளவு குறைக்கப்பட்டுள்ளதா அல்லது இரண்டும் அவரால் அனுப்பப்பட்டதா என்று பரிசோதிக்க அரசாங்கத்தால் ஒரு அதிகாரி நியமிக்கப்படுவார்.

*******

## 2. வரி வசூலும்/விதிப்பும், வரி விலக்கும்

கேள்வி 1. வரி விதிக்கும் அதிகாரம் GSTக்கு எங்கிருந்து பெறப்படுகின்றது?

பதில் :அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்பு நூற்றியொன்றாவது திருத்த சட்டம், 2016ஆல் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்பு பிரிவு 246Aன் படி பாராளுமன்றம் மாநில சட்டமன்றம் இரண்டும் GSTயுடன் இணைந்து சட்டங்களை இயற்றும். அதாவது மத்திய வரி(CGST), மற்றும் மாநில வரி(SGST) அல்லது யூனியன் பிரதேசம் (UTGST). இருப்பினும், மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகம் மற்றும் வணிகம் தொடர்பான சட்டத்தைஅதாவது ஒருங்கிணைக்கப்பட்ட வரியை(IGST) இயற்றும் சிறப்பு அதிகாரத்தை பாராளுமன்றம் மூலமாக சட்டமன்றத்திற்கு பிரிவு 246Aன் உட்பிரிவு 2 உடன் பிரிவு 269A வழங்குகின்றது.

கேள்வி 2. GSTன் கீழ் வரிவிதிப்புக்கு உட்படக்கூடியவைகள் என்றால் என்ன?

பதில் : சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகள் வழங்கல் அல்லது இரண்டும் GSTன் கீழ் வரிவிதிப்புக்கப்படக் கூடியவைகள். மாநிலத்திற்குள் நடக்கும் சரக்குகள் வழங்கல் மீது CGST/SGST மற்றும் UTGSTவரி விதிக்கப்படும். மாநிலங்களுக்கிடையே நடக்கும் நடக்கும் சரக்குகள் வழங்கல் மீது IGST வரி விதிக்கப்படும்.

கேள்வி 3. பரிசீலக்கப்படாத வழங்கலும், GSTன் கீழ்வழங்கல் வரம்பிற்குள் வருமா?

பதில் :ஆமாம். CGST/SGST பட்டியல் Iல் குறிப்பிட்டுள்ள செயல்பாடுகள் மட்டுமே வரம்பிற்குள் வரும். இந்த விதிமுறைகள் IGST மற்றும் UTGSTலும் பின்பற்றப்படும்.

கேள்வி 4. ஒரு அறக்கட்டளை மூலம் வழங்கப்படும் அத்தியாவசியமான பொருட்களுக்கு வரி விதிக்கப்படுமா?

பதில் : பரிமாற்றங்கள் வியாபாரத்தை பெருக்கும் நோக்கிலிருந்தால்,வழங்கப்பட்ட பொருட்களுக்கும் GSTன் கீழ்வரி விதிக்கப்படும்.மேலும், இதில்

அறக்கட்டளைக்களுக்கு வழங்கப்படுவதில் மூலம் கொடுக்கல் வாங்கல் வியாபாரம் இல்லையென்றால், GSTன் கீழ்வரி விதிக்கப்பட மாட்டாது.

கேள்வி 5. சரக்குகள் மற்றும் சேவைகள் வழங்குவதற்கான பரிமாற்றங்களை அறிவிப்பது யார்?

பதில் : ஒரு செயல்பாடுகள் சரக்கு வழங்கல் மற்றும் சரக்கு வழங்கல் இல்லை என்றும், அல்லது சேவைகள் வழங்கல் மற்றும் சேவைகள் வழங்கல் இல்லை என்றும், இவைகள் சரக்கு வழங்கலோ சேவைகள் வழங்கலோ இரண்டுமே இல்லை என்று GST கவுன்சிலின் பரிந்துரைகளின்படி மத்திய, மாநில அரசாங்கங்கள் அறிவிக்கலாம்.

கேள்வி 6. தொகுப்பு வழங்கல் மற்றும் கூட்டு வழங்கல் என்றால் என்ன? இவை இரண்டும் ஒன்றுக்கொன்று எவ்வாறு வேறுபடுகின்றன?

பதில் :தொகுப்பு வழங்கல் என்றால் வரி விதிக்கப்பட வேண்டிய இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சரக்கு மற்றும் சேவைகள் வழங்கல்கள் அல்லது இரண்டும் அல்லது ஏதாவதுடன் இணைந்தோ, இயல்பான முறையில் தொகுக்கப்படும். அல்லது வியாபாரத்தின் சாதாரண முறையில் ஒன்றோடொன்று இணைத்து வழங்கப்பட்டதில் ஒன்று முதல் வழங்கலாகும். உதாரணமாக, ஒரு வாடிக்கையாளர தொலைக்காட்சிப் பெட்டி வாங்குகிறார் என்று வைத்துக் கொள்வோம். அதனுடன் உத்தரவாதம் மற்றும் பராமரிப்பு ஒப்பந்தமும் சேர்ந்து அவருக்குக் கிடைக்கும். இது தான் தொகுப்பு வழங்கலாகும். இந்த உதாரணத்தில், தொலைக்காட்சி பெட்டி முதல் வழங்கலாகும், உத்தரவாதம் மற்றும் பராமரிப்பு இரண்டும் இணைப்புச் சேவையாகும்.

ஒன்றுக்கு மேற்பட்ட நபருக்கு கூட்டாக வழங்கப்படும் சரக்கு மற்றும் சேவைகள் வழங்கல் அல்லது சாதாரணமாக தனித்தனியாக வழங்கக் கூடியவற்றை ஒன்றோடொன்று இணைத்து ஒற்றை விலைக்கு விற்கப்படும் எந்தவொரு இணைத்தலும் கூட்டு வழங்கல் என்பதாகும். உதாரணமாக, ஒரு கடைக்காரர் குளிர்ப்பதனப் பெட்டியுடன் தண்ணீர் பாட்டில்களையும் சேர்த்து விற்கிறார் என்று

வைத்துக் கொள்வோம். பாட்டில்கள் மற்றும் குளிர்ப்பதனப் பெட்டி இரண்டிற்கும் விலையிட்டு தனித்தனியாக விற்கமுடியும்.

கேள்வி 7. GSTன் கீழ் தொகுப்பு வழங்கல் மற்றும் கூட்டு வழங்கலுக்கான நடவடிக்கைகள் என்ன?

பதில்: தொகுப்பு வழங்கலில் முதல் வழங்கப்பட்ட வழங்கலுக்கே வரி விதிக்கப்படும். கூட்டு வழங்கலில் குறிப்பிட்ட சரக்கு மற்றும் சேவைகளின் வழங்கலாக கருதி அதிகபட்ச வரி விகிதம் விதிக்கப்படும்.

கேள்வி 8. சரக்கு மற்றும் சேவைகள் GSTன் கீழ் வரி விதிக்கப்படுமா?

பதில்: மனிதன் உட்கொள்ளும் மசது நீங்கலாக மற்ற அனைத்து சரக்கு மற்றும் சேவைகளுக்கு GSTன் கீழ் வரி விதிக்கப்படும்கச்சா பெட்ரோல், மோட்டார் எரிபொருள் (பெட்ரோல்), அதி வேக டீசல், இயற்கை எரிவாயு மற்றும் விமான டர்பைன் எரிபொருள் ஆகியவற்றிற்கு வருகின்ற காலகட்டத்தில் வரி விதிக்கப்படும். இதற்கான தேதியை GSTகவுன்சிலின் பரிந்தரைகளின்படி அரசாங்கத்தால் அறிவிக்கப்படும்.

கேள்வி 9. நேர்மாறான வரி விதிப்பு என்றால் என்ன?

பதில்: அறிவிக்கப்பட்ட வழங்கல்களின் வகைகளைப் பொறுத்தவரை அம்மாதிரியான சரக்கு மற்றும் சேவைகளை வழங்கிய அனுப்புநருக்கு பதில் வழங்கப்பட்ட சரக்கு மற்றும் சேவைகள் பெற்றுக் கொள்பவரிடமிருந்து தான் வரி வசூல் செய்யப்படும்.

கேள்வி 10. நேர்மாறான வரிவிதிப்பு செயல்முறை சேவைகளுக்கு மட்டுமே பொருந்துமா?

பதில் : பொருந்தாது. GSTகவுன்சிலின் பரிந்தரைகளின்படி அரசாங்கத்தின் அறிவிப்புப்படி. நேர்மாறான வரிவிதிப்பு சரக்கு மற்றும் சேவைகள் வழங்கலாகிய இரண்டிற்குமே பொருந்தும்.

கேள்வி 11. பதிவு செய்யாத நபரிடமிருந்து சரக்குகள் வழங்கப்பட்டால், எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தும்?

பதில் : பதிவு செய்யாத நபரிடமிருந்து சரக்குகள் வழங்கப்பட்டால், சரக்கு மற்றும் சேவைகளைப்பெற்றுக் கொண்ட, பதிவு செய்யப்பட்ட நபர் நேர்மாறான வரி விதிப்பு செயல்முறையின் கீழ் வரி செலுத்தக் கடமைப்பட்டவர் ஆவர்.

கேள்வி 12. வழங்குபவர் அல்லது பெறுபவர் இவர்களைத் தவிர வேறு யாராவது தGSTன் கீழ் வரி செலுத்தபடவேண்டுமா?

பதில் :ஆமாம். மத்திய மாநில அரசாங்கள் குறிப்பிட்ட வகையான சில சேவைகளுக்கு வரி விதித்துள்ளது. அது மின்னணு வர்த்தகம் இயக்குபவர் சேவைகளாகும். சேவைகளை அதன் வழியாக வழங்கப்பட்டிருந்தால், அனைத்து சட்ட விதிமுறைகளும் இந்த மின்னணு வர்த்தகம் இயக்குபவர் சேவைகளுக்கு பொருந்தும். அம்மாதிரி சேவைகளை வழங்கிய நபர் வரி செலுத்த கடமைப்பட்டவர் ஆவார்.

கேள்வி 13. தொகுப்பு வரித் திட்டத்தின்கீழ் வரி செலுத்துவதற்கான வரம்பு என்ன?

பதில் : கடந்த நிதியாண்டின் ஒட்டுமொத்த விற்றுமுதல் ரூ.50 லட்சம் என்பது தொகுப்பு வரித் திட்டத்தின் வரம்பு ஆகும். தொகுப்பு திட்டத்தின் சலுகையை தற்போதைய நிதியாண்டின் விற்றுமுதல் ரூ.50 லட்சத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி 14. தொகுப்புத் திட்டத்தின் வரி விகிதம் என்ன?

பதில் : வெவ்வேறு துறைகளுக்கு வெவ்வேறான தொகுப்பு வரி விகிதம் உள்ளது. மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசத்திலுள்ள சாதாரண சரக்கு வழங்குபவருக்கு (வணிகர்கள்) தொகுப்பு வரி விகிதம் 0.5% ஆகும். மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசத்திலுள்ள உற்பத்தியாளர்கள் தொகுப்பு வரித் திட்டத்தை தெரிவு செய்தால், அதற்கு வரி விகிதம் 1% ஆகும். மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசத்திலுள்ள உணவக சேவைகளுக்கு தொகுப்பு வரி விகிதம் 2.5% ஆகும். ஒரு சட்டப்பிரவின் கீழ் உள்ள விகிதங்களாகும், மற்ற

சட்டப்பிரிவுகளுக்கும் இதேவிகிதங்கள் பொருந்தும். ஆகையால், 1%, 2% மற்றும் 5%(CGST மற்றும் SGST/UTGSTன் கீழ் தொகுப்பு வரி விகிதம்) என்பது முறையே சாதாரண வழங்குபவர், உற்பத்தியாளர் மற்றும் உணவக சேவைகளுக்கான திறன் வாய்ந்த தொகுப்பு வரி விதகிதமாகும்.

கேள்வி 15. தொகுப்பு வரித் திட்டத்தை தெரிவு செய்த ஒரு நபர் நடப்பு நிதியாண்டின் விற்றுமுதல் வரம்பான ரூ. 50 லட்சத்தைக் வருட முடிவதற்குள் கடந்து விட்டார். அதாவது, விற்றுமுதல் ரூ. 50 லட்சத்தை டிசம்பரக்குள் கடந்து விட்டார் என்று வைத்துக் கொள்வோம். தொகுப்பு வரித் திட்டத்தின் கீழ் எஞ்சியுள்ள மாதங்களுக்கு, அதாவது 31 மார்ச் வரை, வரி செலுத்த அனுமதிக்கப்படுவாரா?

பதில் : இல்லை. நிதியாண்டின் ஒட்டுமொத்த விற்றுமுதல் வரம்பான ரூ. 50 லட்சத்தை கடந்த அதே நாளிலில் தெரிவுச் செய்யப்பட்ட சலுகைத் தானாகவே காலாவதியாகிவிடும்.

கேள்வி 16. பலமுறை பதிவு செய்த ஒரு வரி செலுத்தும் நபர், ஒரு சில பதிவுகளுக்கு மட்டும் தொகுப்பு வரி திட்டத்தை தெரிவு செய்ய தகுதி உள்ளதா?

பதில் : பதிவு செய்யப்பட்ட அனைத்து நபர்களுக்கும் ஒரே நிரந்தர கணக்கு எண்ணின் (PAN) மூலம் தான் தொகுப்பு வரித் திட்டத்தை தெரிவு செய்ய முடியும். ஒரு பதிவு செய்த நபர் சாதாரண திட்டத்தை தெரிவு செய்துவிட்டார் எனின், மற்றவர்கள் தொகுப்பு வரி திட்டத்திற்கு தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

கேள்வி 17. உற்பத்தியாளர் மற்றும் சேவை வழங்குபவரால் தொகுப்பு வரித் திட்டத்தில் சலுகை பெற முடியுமா?

பதில் : முடியும். உற்பத்தியாளர்கள் தொகுப்பு வரி திட்டத்தை தெரிவு செய்ய முடியும். இருந்தாலும், ஒரு பொருட்கள் உற்பத்தியாளர் மீது GSTகவுன்சிலின் பரிந்துரைகளின்படி அறிவிப்பு வந்தால், அவரால் இந்த திட்டத்தை தெரிவு செய்ய

முடியாது.  உணவகங்களைத் தவிர மற்ற சேவைகளுக்கு இந்த திட்டத்தை பெற முடியாது.

கேள்வி 18.  தொகுப்பு வரித் திட்டத்தை தெரிவு செய்ய தகுதியற்றவர்கள் யார்?

பதில் :  பெரியளவில், பதிவு செய்திருக்கின்ற நபர்களில் ஐந்து வகையானவர்கள், தொகுப்பு வரித் திட்டத்தை தெரிவு செய்ய தகுதியற்றவர்கள். அவர்கள் :-

அ)  உணவக சேவைக்கான வழங்குபவர் தவிர மற்ற சேவைகள் வழங்குபவர்.,

ஆ) CGST சட்டம் / SGSTசட்டம் / UTGST சட்டங்களுக்கு கீழ் வரி செலுத்தாத சரக்கு வழங்குபவர்;

இ) மாநிலங்களுக்கிடையில் சரக்கு வழங்குபவர்;

உ) ஒரு மின்னணு வர்த்தக இயக்குபவர் மூலம் சரக்குகளை வழங்கும் நபர்;

ஊ) அறிவிக்கப்பட்ட சில பொருட்களின் உற்பத்தியாளர்;

கேள்வி 19. பதிவு செய்திருக்கின்ற நபர் தொகுப்பு வரித் திட்டத்தின் கீழ் உள்ளீட்டு வரி வரவை உரிமைக் கோர முடியுமா?

பதில் : முடியாது.  பதிவு செய்திருக்கின்ற நபர் தொகுப்பு வரித் திட்டத்தின் கீழ் உள்ளீட்டு வரி வரவை உரிமைக் கோர தகுதியற்றவர்.

கேள்வி 20.  தொகுப்பு வரித் திட்டத்தின் கீழ் பதிவு செய்திருக்கின்ற நபரிடமிருந்து வாங்கிய வாடிக்கையாளர்தொகுப்பு வரியை உள்ளீட்டு வரி வரவாக உரிமை கோர முடியுமா?

பதில் :  கோர முடியாது. தொகுப்பு வரித் திட்டத்தின் கீழ் பதிவு செய்திருக்கின்ற நபரிடமிருந்து வாங்கிய வாடிக்கையாளர்தொகுப்பு வரியை உள்ளீட்டு வரி வரவாக உரிமை கோர முடியாது, ஏனென்றால், தொகுப்பு வரி வழங்குபவரால் வரி விலைப்பட்டியை தர முடியாது.

கேள்வி 21. வாடிக்கையாளரிடமிருந்து தொகுப்பு வரியை வசூல் செய்யலாமா?

பதில் : கூடாது. தொகுப்பு வரித் திட்டத்தின் கீழ் பதிவு செய்திருக்கின்ற நபருக்கு வரி வசூல் செய்ய அனுமதி கிடையாது. தொகுப்பு வரி வழங்குபவரால் வரி விலைப்பட்டியை தர முடியாது என்பது இதன் பொருளாகும்.

கேள்வி 22. தொகுப்பு வரித் திட்டத்திற்கு தகுதியை தீர்மானிப்பதற்கு 'ஒட்டுமொத்த விற்றுமுதலை' கணக்கிடுவது எப்படி?

பதில் : 'ஒட்டுமொத்த விற்றுமுதலை' கணக்கிடும் முறையை பிரிவு 2(6)ல் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஒரே நிரந்தர கணக்கு எண்ணுடைய (PAN) நபரின் வெளியே வழங்கியவற்றின் மதிப்புதான் (வரி விதிக்கப்பட வேண்டிய வழங்கல்+விலக்களிக்கப்பட்ட வழங்கல்+ஏற்றுமதி+மாநிலங்களுக்கிடையிலான வழங்கல்)'ஒட்டுமொத்த விற்றுமுதல்' என்பதன் பொருளாகும். மத்திய வரி (CGST), மாநில வரி (SGST), யூனியன் பிரதேச வரி (UTGST), ஒருங்கிணைந்த வரி (IGST) மற்றும் இழப்பீடு மேல்வரி இவற்றில் எதிலிருந்தும் வரி விதிக்கப்படாதவை. மேலும், உள்ளீட்டு வழங்கலின் மதிப்பு மீது நேர்மாறான வரி விதிப்பின் கீழ் வரி செலுத்துப்பட வேண்டியவற்றை ஒட்டுமொத்த விற்றுமுதல் கணக்கீடின் போது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

கேள்வி 23. ஒரு நபர் விதிகளை மீறி தொகுப்பு வரி திட்டத்தை தெரிவு செய்தால், இதற்கு சட்ட பின்விளைவுகள் என்ன?

பதில் :வரி செலுத்தும் நபர், தனக்கு தகுதியில்லை என்று தெரிந்தே, தொகுப்பு வரித் திட்டத்தின் கீழ் வரி செலுத்தினார் என்றால், அந்த நபர் தண்டனைக்குரியவர். மேலும், வரி மற்றும் தண்டனையை தீர்மானிக்க பிரிவு 73 அல்லது 74 விதிகள் இதற்குப் பொருந்தும்.

கேள்வி 24. GST விதித்த வரிக்கு விலக்கு அளிக்கும் அதிகாரத்தை அரசாங்கத்திற்குள் GST சட்டம் வழங்கியுள்ளதா?

பதில் : ஆமாம் வழங்கியுள்ளது. மக்கள் நலனுக்காக, சரக்கு மற்றும் சேவைகள் அல்லது இரண்டிற்கும் GST வரி விதிப்பிலிருந்து முற்றிலுமாகவோ அல்லது நிபந்தனை அடிப்படையிலோ விலக்களிக்க முடியும். இதற்கு GST கவுன்சிலின் பரிந்துரைகளின்படி, மத்திய மாநில அரசுகள், மொத்தமாகவோ அல்லது பகுதியையோ விலக்கு அளிக்கலாம். ஒரு விதிவிலக்கான தன்மையில் சூழ்நிலையின் ஏற்ப, ஒரு சிறப்பு ஆணை பிறப்பித்து, எந்த சரக்குகளுக்கும் அல்லது சேவைகளுக்கும் அல்லது இரண்டிற்கும் வரி விலக்கு அளிக்க அரசாங்கத்தால் முடியும். SGST சட்டம் மற்றும் UTGST சட்டபபடி, CGSTன் கீழ் அனுமதிக்கப்பட்ட எந்த விலக்கும் சட்டப்படி கூறப்பட்டதாகும்.

கேள்வி 25. சரக்கு மற்றும் சேவைகள் அல்லது இரண்டிற்கும் மீது வசூலிக்கப்பட்ட வரி மொத்தத்திற்கும் முற்றிலும் அனுமதிக்கப்பட்ட விலக்களித்த பின். ஒரு நபர் வரி செலுத்த வேண்டுமா?

பதில் : வரி செலுத்த வேண்டாம். விலக்களிக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் அல்லது இரண்டிற்கும் அதிக திறன்பட்ட விகிதத்தின் வரி வசூலிக்கக் கூடாது.

-------------------

## 3. பதிவு

கேள்வி1 .GSTல் பதிவு செய்வதால் என்னென்ன நன்மைகள் கிடைக்கும்?

பதில்: சரக்குகள் மற்றும் சேவை வரி (GST) ஆளுமையின் கீழ் பதிவு செய்து கொள்வதால் வர்த்தகங்களுக்கு பின்வரும் நன்மைகள் கிடைக்கின்றது .

- சரக்கு அல்லது சேவைகள் வழங்குபவர் சட்டபடி அங்கீகரிக்கப்படுகிறார்.
- உள்ளீட்டு சரக்குகள் அல்லது சேவைகளுகளின் முறையாக கணக்கில் காட்டப்பட்டுவரிகள் செலுத்தப்பட்,டிருந்தால், அதைசரக்கு அல்லது சேவைகள் வழங்கல் அல்லது இரண்டிற்குமான GST வரி பாக்கியை செலுத்த பயன்படுத்தலாம்.
- சரக்கு வாங்கியவர்களிடமிருந்து சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட வரியை வசூல் செய்ய வேண்டும் .வாங்குபவர்கள் மற்றும் விற்பவர்களுக்கு வழங்கப்பட்ட சரக்கு அல்லது சேவைகளுக்காக செலுத்தப்பட்ட வரிக்கான சலுகையாக மாற்றபடுகிறது.
- GSTன் கீழ் மற்ற பலன்கள் மற்றும் தனிச்சலுகைகள் கிடைப்பதற்கு தகுதி பெறமுடியும்.

கேள்வி 2. GSTல் பதிவு செய்யாத ஒரு நபர் ITCஜப் பெற உரிமை கோர மற்றும் வரியை வசூலிக்க முடியுமா?

பதில்: முடியாது. GST பதிவு செய்யாத ஒரு நபர் அவருடைய வாடிக்கையாளர்களிடமிருந்து GST வசூலிக்கவும் முடியாது, அவர் GSTக்கு செலுத்திய உள்ளீட்டு வரி வரவை பெற உரிமை கோரவும் முடியாது.

கேள்வி 3. அமலாக்கப்படும் பதிவு தேதி எது?

பதில்:பதிவு செய்ய வேண்டிய நபர், பதிவுக்கான விண்ணப்பத்தை முப்பது நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும். அப்படி சமர்ப்பிக்கப்பட்டவுடன், நபரின் பதிவுசெய்ய வேண்டிய தேதியே பதிவு அமலாக்கம் பெறும் தேதியாகும்.

பதிவு செய்ய வேண்டிய நபர், பதிவுக்கான விண்ணப்பத்தை முப்பது நாட்களுக்குப்பின் சமர்ப்பித்தால், அந்த, நபரின் பதிவுக்கு அனுமதி கிடைத்தப் பின்னரே, பதிவு அமலாக்கம் பெறும் தேதியாகும்.

வரி செலுத்தும் தொடக்கநிலை வரம்பிற்குள் உள்ள நபர், தானாக முன்வந்து பதிவு செய்ய விரும்பினால், பதிவாணை கிடைத்த தேதியிலிருந்து, பதிவு அமாலாக்கம் பெறும்.

கேள்வி 4. GST மாதிரி சட்டத்தின் கீழ் யாரெல்லாம் பதிவு செய்ய வேண்டிய கடமைப்பட்டவர்கள்?

பதில்: வரி செலுத்துவதற்குட்பட்ட வழங்கலை முகவர்கள் உட்பட எவரெல்லாம் வழங்குகிறார்களோ, அவர்கள் அனைவரும் CGST/SGST 2017 சட்டம், 22ம் பிரிவின்படி பதிவு செய்ய கடமைப்பட்டவர்கள். அதாவது, GST சட்டப்படி சரக்கு வழங்குதல் / அல்லது சேவைகள் வரி விதிக்கப்பட வேண்டியவைகள், அவரின் ஒட்டுமொத்த விற்றுமுதல் நிதியாண்டின் தொடக்கநிலை வரம்பான 20 லட்சத்தை கடந்துவிட்டால், வரி செலுத்த வேண்டிய மாநிலத்திலோ அல்லது யூனியன் பிரதேசங்களான டில்லி அல்லது புதுச்சேரிதானாக முன்வந்து பதிவு செய்ய வேண்டும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 279A(4)(g) குறிப்பிட்டுள்ளபடி, பதினொன்று சிறப்புவகைப்பட்ட நிலைகளில, தொடக்கநிலை வரம்பு ரூ.10 லட்சம் உள்ளவைகள் பதிவு செய்யக் கடமைப்பட்டவர்கள்.

அவர்களின் ஒட்டுமொத்த விற்றுமுதல், தொடக்கநிலை வரம்பு ரூ. 20 லட்சத்திற்கும் கீழிருந்தாலும்,

சட்டப் பிரிவு 24ன் படி குறிப்பிட்டுள்ளபடி சில வகைப்பட்ட வழங்குபவர்கள் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும்.

சட்டப் பிரிவு 23ன் படி, தன்னுடைய வேளாண் பொருட்கள் வழங்கும் ஒரு விவசாயி பதிவு செய்ய வேண்டியதில்லை. ஒரு நபர் GST சட்டத்தின் கீழ் பிரத்யேகமாக செய்யும் வரியில்லாத அல்லது மொத்தமும் விலக்களிக்கப்பட்ட சரக்கு மற்றும் / அல்லது சேவைகளுக்கு பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லை.

கேள்வி 5. ஒட்டுமொத்த விற்றுமுதல் என்றால் என்ன?

பதில்: CGST/ SGSTன்2(6) சட்டப்பிரிவின்படி, ஒட்டுமொத்த மதிப்பையும் உள்ளடக்கிய "ஒட்டுமொத்த விற்றுமுதல்" என்றால் :-

அ) அனைத்து வரி செலுத்த வேண்டிய வழங்கல்,

ஆ)அனைத்து வரி விலக்களிக்கப்பட்ட வழங்கல்,

இ) சரக்குகள் மற்றும்/அல்லது சேவை ஏற்றுமதிகள்,

ஈ)ஒரே PAN இருக்கும் ஒரு நபரின் மாநிலத்திடையேயான வழங்கல்.

மேலே குறிப்பிட்டவைகள் அனைத்திந்திய அடிப்படையில் கணக்கிடப்பட்டு, CGST சட்டம், SGST சட்டம், UTGST சட்டம் மற்றும் ITGSTசட்டம் கீழ் வரி விலக்கு அளிக்கப்படுகின்றது. சொந்த கணக்கிலிருந்தோ அல்லது தனது மொத்த முதலீடின் மூலமாகவோ வழங்கலை செய்த வரி செலுத்தும் நபர் ஒட்டுமொத்த விற்றுமுதலை சேர்த்துக் கொள்ளலாம்.

உள்ளீடு வழங்கலின் மதிப்பு மற்றும் நேர்மாறான வரி அடிப்படையில் வழங்கலின் மதிப்பு மீதான விதிக்கப்பட்டவரி ஆகியவற்றை ஒட்டுமொத்த விற்றுமுதலுடன் சேர்க்கப்படவில்லை.

பணியை முடித்த பின், அந்த பொருள்களின் மதிப்பை பணி எடுத்து செய்பவரின் விற்றுமுதலுடன் சேர்க்கப்படவில்லை. முதலீட்டின் சரக்கு வழங்கலாகவே கருதப்படும். முதலீட்டின் விற்றுமுதலில் அவை சேர்க்கப்படும்

கேள்வி 6. எந்தெந்த வகைகளுக்கு பதிவு செய்ய வேண்டியது மிக அவசியம்?

பதில் :CGST/ SGST சட்டப்பிரிவு 24ன் படி, கீழ்கண்ட வகையான நபர்களுக்கு அவர்களின் தொடக்கநிலை வரம்பு எதுவாக இருந்தாலும், கட்டாயமாக பதிவு செய்ய வேண்டும்.

க) மாநிலங்களுக்கிடையிலான வழங்கலைச் செய்யும் நபர்கள்

ங) திட்டமிடாமல் வரி செலுத்தும் நபர்கள்

ச) நேர்மாறான வரி விதிப்பின் கீழ் வரி செலுத்த வேண்டிய நபர்கள்

ஞ) பிரிவு 9ன் உட்பிரிவு(5)ன் படி, மின்ன்னு வர்த்தகம் இயக்குபவர் வரி செலுத்த வேண்டியவர்

ட) இந்தியாவில் வசிக்காமல் வரி செலுத்த வேண்டியவர்கள்

ண) பிரிவு 51கீழ் வரி பிடித்தம் செய்ய வேண்டிய நபர்கள்

த) பதிவு செய்த வரி செலுத்தும் நபருக்கு பதிலாக ஒரு முகவரோ அல்லது வேறு யாரோ சரக்கு மற்றும்/அல்லது வழங்கல்களை செய்தால்

ந) உள்ளீட்டு சேவை விநியோகஸ்தர் (சட்டப்படி பதிவு செய்திருந்தாலும் அல்லது செய்யாவிட்டாலும்)

ப) பிரிவு 52ன் படி வரி வசூலிக்க வேண்டிய நபர்கள்

ம) ஒவ்வொரு மின்னணு வர்த்தகம் இயக்குபவர்

ய) பதிவு செய்யப்பட்ட நபரைத் தவிர, ஆன்லைன் தகவல்கள் மற்றும் தரவுதள மீட்பு சேவைகள் போன்றவற்றை வெளிநாட்டின் ஒரு இடத்திலிருந்து, இந்தியாவிலுள்ள ஒரு நபருக்கு வழங்கும் ஒவ்வொரு நபரும்.

ர) கவுன்சிலின் பரிந்துரையின்படி மத்திய அல்லது மாநில அரசுகளால் அறிவிக்கப்பட்ட அம்மாதிரி நபர்கள் அல்லது நபர்களின் வர்க்கம்

கேள்வி 7. GSTன் கீழ் பதிவு செய்வதற்கான கால வரம்பு என்ன?

பதில் : நிபந்தனைகளுக்குட்பட்டு பதிவு விதிகளின் கீழ் பரிந்துரைத்தப்படி பதிவு செய்ய வேண்டிய தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் ஒரு நபர் பதிவு செய்ய கடமைப்பட்டவர், ஒரு திட்டமிடப்படாத வரி செலுத்துபவர் மற்றும் இந்தியாவில்

வசிக்காமல் வரி செலுத்துபவர் ஆகியவர் வியாபாரம் தொடங்குவதற்கு குறைந்தது ஐந்து நாட்களுக்கு முன்பாவது பதிவு செய்வதற்கு விண்ணப்பித்திருக்க வேண்டும்.

கேள்வி 8. ஒரே PAN எண்ணை வைத்துக் கொண்டு, ஒரு நபர் வெவ்வேறு மாநிலங்களில் இயங்கிக் கொண்டிருக்கிறார். அவர் ஒரே ஒரு பதிவு செய்து, இயங்க முடியுமா?

பதில் : முடியாது. CGST/ SGSTன் சட்டப்பிரிவு 22ன் உட்பிரிவு (1)படி, ஒரு நபர் GST செலுத்த வேண்டியவராக இருந்தாலும், ஒரு வியாபாரம் செய்பவராக இருந்தாலும், அவர் எந்தெந்த மாநிலத்தில் செய்கின்றாரோ அந்தந்த இடத்தில் தனித்தனியாக பதிவு செய்ய வேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும்.

கேள்வி 9. ஒரே மாநிலத்தில் பல வியாபாரப் பகுதிகளை வைத்திருக்கும் ஒரு நபர், வெவ்வேறு இடத்தில் பதிவு செய்து கொள்ள முடியுமா?

பதில் : முடியும். சட்டப்பிரிவு 25ன் உட்பிரிவு(2)ன் விதிகளின்படி, பரிந்துரைத்த நிபந்தனைகளின்படி, பல வியாபாரப் பகுதிகளை ஒரே மாநிலத்தில் வைத்திருக்கும் ஒரு நபர் தனது ஒவ்வொரு வியாபாரத்தையும் தனித்தனியாக பதிவு செய்து கொள்ளலாம்.

கேள்வி 10, GST செலுத்தத் தேவையில்லாத நபர், தாமாகவே முன்வந்து பதிவு செய்து கொள்ள ஏதாவது வழிமுறைகள் உள்ளதா?

பதில் : பதிவு செய்து கொள்ள முடியும். சட்டப்பிரிவு 25ன் உட்பிரிவு(3)ன் விதிகளின்படி,வரி செலுத்த அவசியமில்லாத ஒரு நபர், பிரிவு 22கீழ் தாமாகவே முன்வந்து பதிவு செய்து கொள்ள முடியும். மேலும், ஒரு வரி செலுத்தும் நபருக்குரியசட்ட விதிமுறைகள் இவருக்கும் பொருந்தும்.

கேள்வி 11. PAN வைத்திருப்பவர்களுக்கும் பதிவு செய்வது கட்டாயமா?

பதில் :ஆமாம். வருமான வரி சட்டம், 96 (1961 ல் 43)கீழ் நிரந்தர கணக்கு எண் வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரும் CGST/ SGST சட்டப்பிரிவு 25(6)படி பதிவு செய்ய தகுதியுடையவர்கள் ஆவர்.

இருப்பினும், மேற்க்கூற்ப்பட்ட சட்டப்பிரிவு 25(6)படி, பிரவு 52 கீழ் ஒரு நபருக்கு வரி பிடித்தம் செய்ய்ய வேண்டுமானால், அவரிடம் PANக்கு பதிலாக, கூறப்பட்ட வருமான வரி சட்டத்தின் கீழ் ஒரு வரி பிடித்தம் மற்றும் வசூல் கணக்கு எண் இருந்தால் தான், பதிவு செய்யும் தகுதியே பெறுவார்.

கேள்வி 12. , அதற்குரிய அதிகாரியின் மூலமாக துறை, ஒரு நபர் மீது சுவோ மோட்டோ தொடர இந்த சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்ய முடியுமா?

பதில். முடியும். சட்டப்பிரிவு 25ன் உட்பிரிவு(8)ன் விதிகளின்படி, இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டிய ஒரு நபர் பதிவு செய்ய தவறினால், அதற்குரிய அதிகாரி, இந்த சட்டத்தின் கீழ் எந்த பாரபட்சமும் இல்லாமல் நடவடிக்கை எடுக்க முடியும் அல்லது பதிவு சட்டத்தில் பரிந்துரைத்துள்ளபடி, தற்போது அமலிலிருக்கும் வேறு ஏதாவது சட்டப்படி அந்த நபரின் மீதுவழக்கு தொடர பதிவு செய்யலாம்.

கேள்வி 13. அதற்குரிய அதிகாரிக்கும் பதிவுக்கான விண்ணப்பத்தை நிராகரிக்க முடியுமா?

பதில் : நிராகரிக்க முடியும். CGST/ SGSTன் சட்டப்பிரிவு 25ன் உட்பிரிவு 10வது விதியின்படி,அதற்குரிய அதிகாரி ஒரு விண்ணப்பத்தை சரிபார்த்தப் பிறகு நிராகரிக்க முடியும்.

கேள்வி 14. எந்த நபருக்கும் அனுமதிக்கப்பட்ட பதிவு நிரந்தரமா?

பதில் : ஆமாம். ஒப்படைத்தல், ரத்து செய்தல், இடைநீக்கம் செய்தல், அல்லது தள்ளுபடி செய்தல் போன்ற செயல்கள் நடைபெற்றாலொழிய. அனுமதிக்கப்பட்ட பதிவு சான்றிதழ் நிரந்தரமானது.

கேள்வி 15. ஐக்கிய நாடுகள் சபை GSTன் கீழ் பதிவு செய்வது அவசியமா?

பதில் : ஆமாம். CGST/ SGSTன் சட்டப்பிரிவு 25(9)ன் விதியின்படி, அறிவிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபைகள், தூதரகம் அல்லது அயல்நாட்டு தூதரகங்கள் மற்றும் அறிவிக்கப்பட்ட வேறு சில மற்ற நபர்கள் அனைவரும் GST

வலைவாயில் மூலமாக பிரத்யேக அடையாள எண்ணை (UIN) பெற வேண்டியது அவசியம். இந்த குறிப்பிட்ட அடையாள அமைப்பு, GSTIN அமைப்புடன் இணக்கமாக இருப்பதால். இது நாடு முழுக்க ஒரோ மாதிர சீராக இருக்கும். மத்திய, மாநில அரசுகளுக்கும் இதுவே பொதுவானதாகும். அவர்களால் அறிவிக்கப்பட்ட சரக்கு வழங்கல் மற்றும் சேவைகள் பெறப்பட்டதின் மீது செலுத்தப்பட்ட வரியை திரும்பப் பெற உரிமை கோரும்போது, இந்த UIN தேவைப்படுகின்றது.

கேள்வி 16. ஐக்கிய நாடுகள் சபைகளுக்கு வழங்கும் வரி செலுத்தும் நபரின் பொறுப்பு என்ன?

பதில் : இந்த மாதிரி அமைப்புகளுக்கு வழங்கும் வரி செலுத்தும் அனுப்புநர் அவர்களுடைய விலைப்பட்டியின் மீது UINஐ குறிப்பிட வேண்டும். மேலும், இந்த வழங்கல்கள் ஒரு அனுப்புநரிடமிருந்து மற்றொரு பதிவு செய்யப்பட்ட நபருக்குத்தான் வழங்க வேண்டும். அந்த விலைப்பட்டியை அனுப்புநரால் பதிவேற்றம் செய்யப்படும்.

கேள்வி 17. அரசு நிறுவனங்கள் பதிவு செய்ய வேண்டியது அவசியமா?

பதில் :UIN என்ற அடையாள எண்ணை அரசு அதிகாரிகள் மற்றும் GST சரக்குகளை வெளியூர் வழங்கலில் ஈடுபடாத ஆனால். மாநிலத்திற்குள் வாங்கலிலி ஈடுபடும் பொதுத் துறை நிறுவனங்களுக்கு, சம்பந்தப்பட்ட மாநில வரி அதிகாரிகளால், GST வலைவாயில் வழியாக வழங்கப்படும்.

கேள்வி 18.திட்டமிடாமல் வரி செலுத்துபவர்கள் யார்?

பதில் :CGST/ SGSTன் சட்டப்பிரிவு 2(20)ல் திட்டமிடாமல் வரி செலுத்தும் நபர் பற்றி விளக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் அல்லது யூனியன் பிரதேசத்திலோ ஒரு நிலையான வர்த்தக அலுவலகம் வைத்துக் கொள்ளாமல் இருக்கும. ஒரு நபர் சரக்கு மற்றும் சேவைகள் வழங்கல் பரிமாற்றத்தில் எப்பொழுதாவது ஈடுபட்டாலோ, அல்லது வர்த்தகத்திற்கு உதவி செய்தாலோ, அல்லது முதலீடு

செய்தாலோ, அல்லது முகவரோ, அல்லது வேறு ஏதாவது வழியில்வர்த்தகம் செய்பவர்கள் என்று பொருள்.

கேள்வி 19. இந்தியாவில் வசிக்காமல்/வர்த்தகம் இடமில்லாமல் வரி செலுத்துபவர் யார்?

சரக்குகள் மற்றும் சேவைகள் வழங்கலில் முதலீடு செய்தவர் அல்லது முகவர் அல்லது வேறு ஏதாவது வழியிலோ, இந்தியாவில் வசிக்காமல் அல்லது நிலையான வர்த்தக விலாசமில்லாமல் எப்பொழுதாதவது வர்த்தகத்தை செய்பவர்களுக்கு CGST/ SGSTன் சட்டப்பிரிவு 2(77)ன் படி இந்தியாவில் வசிக்காமல்/வர்த்தகம் இடமில்லாமல் வரி செலுத்துபவர் என்று பொருள்.

கேள்வி 20. இந்தியாவில் வசிக்காமல்/வர்த்தகம் இடமில்லாமல் வரி செலுத்துபவர் மற்றும் திட்டமிடாமல் வரி செலுத்துபவர்களுக்கு வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ்செல்லுபடியாகும் காலவரம்பு என்ன ?

பதில் : பதிவு விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள காலம் அல்லது பதிவு செய்த நாட்களிலிருந்து தொன்னூறு நாட்கள் வரை காலவரம்பாகும். இருந்தாலும், இதில் எது முன்னதாக காலாவதியாகிறதோ அதுவே இந்தியாவில் வசிக்காமல்/வர்த்தகம் இடமில்லாமல் வரி செலுத்துபவர் மற்றும் திட்டமிடாமல் வரி செலுத்துபவர்களுக்கு வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ்செல்லுபடியாகும் காலவரம்பாகும். வரி செலுத்துபவரின் கோரிக்கையை ஏற்று, அதற்குரிய அதிகாரி, தொன்னூறு நாட்கள் என்று மேலேக் கூறப்பட்ட காலவரம்பை மேலும், தொன்னூறு நாட்களுக்கு மிகாமல் காலநீட்டிப்பு செய்யலாம்.

கேள்வி 21. இந்தியாவில் வசிக்காமல்/வர்த்தகம் இடமில்லாமல் வரி செலுத்துபவர் மற்றும் திட்டமிடாமல் வரி செலுத்துபவர்கள் இந்த சிறப்பு வகையின் கீழ் பதிவு செய்யும் போது ஏதாவது முன்கூட்டிய வரி செலுத்தப்பட வேண்டுமா?

பதில் :முன்கூட்டிய வரி செலுத்து வேண்டும். சாதாரண வரி செலுத்துபவருக்கு பதிவின் போது முன்பணம் செலுத்தத் தேவையில்லை. ஆனால், பிரிவு 27(2)ன் படி,திட்டமிடாத வரி செலுத்துபவர் மற்றும் இந்தியாவில் வசிக்காமல்/வர்த்தகம்

இடமில்லாமல் வரி செலுத்துபவர்களுக்கு, விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள காலத்திற்கு செலுத்த வேண்டிய வரி பாக்கிக்கு இணையான பணத்தை, பதிவு விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது முன்பணமாக செலுத்த வேண்டும். குறிப்பிட்ட காலக்கெடுவான தொன்னூறு நாட்களுக்கு பிறகு நீட்டிக்கப்பட்டு பதிவு செய்தால். குறிப்பிடப்பட்ட நீட்டிப்பு காலக்கெடுவான தொன்னூறு நாட்களுக்கு, செலுத்தப்பட வேண்டிய வரி பாக்கிக்கு இணையான பணத்தை கூடுதல் முன்பணமாக செலுத்தப்பட வேண்டும்.

கேள்வி 22. பதிவுச் சான்றிதழ் திருத்தம் செய்தலுக்கு அனுமதிக்கப்படுமா?

பதில் :பிரிவு 28ன் படி, விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 15 சாதாரண வேலை நாட்களுக்குள், பதிவுக்கு விண்ணப்பித்தவர் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர், திருத்தம் செய்ய வேண்டி சமர்ப்பித்த தகவல்களை திருத்தம் செய்வதற்கு அனுமதிக்கவோ அல்லது நிராகரிக்கவோ அதற்குரிய அதிகாரிக்கு அதிகாரம் உள்லது.

சில குறிப்பிட்ட முக்கியமான இடத்திலுள்ள தகவல்களை மட்டுமே திருத்தம் செய்ய அதற்குரிய அதிகாரிக்கு அனுமதியுண்டு என்பது குறிப்பிட்த்தக்கது. இருப்பினும், GST சாதாரண வலைவாயில் வழியாக பதிவு சாண்றிதழின் மற்ற இடங்களில் திருத்தம் செய்வதற்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கு திருத்த செய்ய அனுமதியுண்டு.

கேள்வி 23 பதிவுச் சான்றிதழை ரத்து செய்ய அனுமதியுண்டா?

பதில் :ரத்து செய்ய முடியும்,. CGST/ SGSTன் சட்டப்பிரிவு 29ல் குறிப்பிட்டுள்ளபடி சில சந்தர்ப்பங்களில் அதற்குரிய அதிகாரி சட்டத்தின்படி அனுமதிக்கப்பட்ட பதிவு ரத்து செய்யும் அதிகாரம் உள்ளது. குறிப்பிடப்பட்டுள்ளக் காலக்கெடுவுக்குள், இறந்த நபர் குறித்த வழக்கில், பதிவு செய்யப்பட்ட வரி செலுத்துபவராலோ அல்லது அவரின் சட்ட வாரிசுகளால் வழங்கப்பட்ட ஒரு விண்ணப்பத்தின் அடிப்படையிலோ அல்லது தனது சொந்த நடவடிக்கையினாலோ. பதிவுச் சான்றிதழை அதற்குரிய அதிகாரியால் ரத்து செய்ய முடியும். பதிவுகள் விதிகளின்படி, பதிவு செய்யப்பட்ட வரி செலுத்துபவராலோ அல்லது அவரின்

சட்ட வாரிசுகளாலோ பதிவுச் சான்றிதழை ரத்துச் செய்யக் கோரி சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தினாலும் அல்லது அதற்குரிய அதிகாரி தன்னிச்சையாக பதிவு சான்றிதழை ரத்து செய்ய எடுக்கப்பட்டமுடிவானாலும், SCNக்கு பதில் கிடைத்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் பதிவுச் சான்றிதழ் ரத்து செய்ய வேண்டும்.

**கேள்வி 24. CGSTன் கீழ் பதிவு ரத்தாகும் போது SGSTன் கீழும் ரத்தாகுமா?**

பதில் : ஆமாம், ரத்தாகும். ஒரு சட்டத்தின் (CGST) கீழ் ரத்தாகும் பதிவு, மற்றொரு சட்டத்தின்(SGST) கீழும் ரத்தானதாகவே கருதப்படும். (பிரிவு 29(4))

கேள்வி 25. பதிவுகளை தன்னிச்சையாக அதற்குரிய அதிகாரிகள் ரத்து செய்ய முடியுமா?

பதில் :முடியும். CGST/ SGST சட்டப்பிரிவு 29(2)ன் கீழ் சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் அதற்குரிய அதிகாரிகள் பதிவை தன்னிச்சையாக ரத்து செய்ய முடியும். ஒரு தொகுப்பு வர்த்தகர் வருமான வரி தாக்கலை குறிப்பிட்ட காலத்திற்குள் தொடர்ந்து மூன்று முறை செய்யாதிருத்தல், ஒழுங்காக வரி செலுத்துபவர் தொடர்ந்து ஆறு மாதங்கள் வரை வருமான வரி தாக்கல் செய்யாதிருத்தல், மற்றும் தானாகவே பதிவு செய்த தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் எந்த வர்த்தகமும் செய்யாதிருத்தல் போன்ற சந்தர்ப்பங்களில் பரிந்துரைக்கப்பட்ட விதிகளைமீறிய காரணங்களுக்காக CGST சட்டவிதிகளின் கீழ் தன்னிச்சையாக நடவடிக்கை எடுக்க முடியும். ஒரு அதிகாரி ரத்த செய்யும் நடவடிக்கை எடுப்பதற்குமுன் முறையான சில வழக்கமான சட்டக் கொள்கைகளை பின்பற்ற வேண்டும். (பிரிவு 29(2)(e)விதி).

கேள்வி 26. பதிவு செய்யப்படும் போது, தெரிந்தே தவறான தகவல்களை தருதல், மோசடி, மற்றும் உண்மைகளை மறைத்தல் போன்றவற்றின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

பதில் : அம்மாதிரி வழக்குகளில், கடந்த கால நிகழ்வுகளுக்கும் பொருந்தக்கூடிய வகையில் பதிவை அதற்குரிய அதிகாரியால் ரத்து செய்ய முடியும்.(பிரிவு 29(2)(e) விதி).

கேள்வி 27. GST சட்டத்தின் கீழ் சேவைகளுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட பதிவை தெரிவு செய்ய முடியுமா?

பதில் : முடியாது. ஒவ்வொரு மாநிலத்திலிருந்து செய்யப்படும் வரிக்குட்பட்ட வழங்கலை அவர் செய்யும் போது தனித்தனியான பதிவுகள் செய்ய வேண்டும்.

கேள்வி 28. ஒரு மாநிலத்தில் பல்வேறு பகுதியில் தன்னுடைய வர்த்தகப் பகுதியை வைத்திருக்கும் ஒரு வரி செலுத்துபவர், ஒரே தன்னுடைய ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியான பதிவை செய்ய வேண்டுமா?

பதில் :தேவையில்லை. இருப்பினும், CGSTன் சட்டம் 2017, பிரிவு 29(2)ன் படி, வரி செலுத்துபவர் தன்னுடைய வெவ்வேறான வர்த்தகப் பகுதிக்கு தனித்தனியாக பதிவு செய்ய தெரிவு செய்ய முடியும்.

கேள்வி 29. ISD என்பவர் யார்

பதில் :ISD என்றால் உள்ளீட்டு சேவை விநியோகஸ்தர் என்று பொருள். CGST/ SGST சட்டப்பிரிவு 2 (61)ன் படி அதற்கு விளக்கமும் தரப்பட்டுள்ளது. உள்ளீட்டு சேவைகளுக்கான பெறும்போது தரப்படும் வரி விலைப்பட்டியை பெறுவதற்கும், அதன் சலுகையைஅனுப்புநர் பகுதிக்கு (ஒரே PAN வைத்திருப்பவர்கள்)சம்மான அளவில் பங்கீட்டுக் கொடுப்பதற்கான் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒரு அலுவலகம் ஆகும்.

கேள்வி 30. வரி செலுத்துபவர் ஏற்கனவே வேறொன்றுக்காக பதிவு செய்திருந்தாலும், ISDக்காக தனியாக பதிவு செய்ய வேண்டுமா?

பதில் : ஆமாம். ISD பதிவு என்பது சாதாரண பதிவிலிருந்து வேறுபட்ட, வரி செலுத்துபவரின் ஒரு அலுவலகத்திற்கு மட்டுமே ஆகும்.

கேள்வி 31. வரி செலுத்துபவருக்கு பல ISDக்கள் வைத்துக் கொள்ளலாமா?

பதில் : வைத்துக் கொள்ளலாம். வெவ்வேறு அலுவலகங்களுக்கு வரி செலுத்துபவர் ISDக்காக பதிவு செய்ய விண்ணப்பிக்கலாம்.

கேள்வி 32. வர்த்தகத்தை மாற்றும் போது பதிவுத் தொடர்பாக செய்ய வேண்டியது என்ன?

பதில் : வர்த்தகத்தை மாற்றிக் கொள்ளும் தேதியிலிருந்தோ அல்லது வாரிசுரிமை பெறும் தேதியிலிருந்தோ, பதிவு செய்ய வேண்டியது மாற்றிக் கொள்பவர் அல்லது வாரிசுதாரரின் பொறுப்பாகும். மேலும், மாற்றும் தேதியிலிருந்தோ, வாரிசுரிமை பெறும் தேதியிலிருந்தோ புதியதாக பதிவு செய்ய வேண்டும்.

கேள்வி 33. மத்திய சுங்க/சேவை வரி மதிப்புக் கூட்டு வரி சட்டத்தின் கீழ் பதிவு செய்த வரி செலுத்துபவர்/விற்பனையாளர்கள் புதிதாக பதிவு செய்ய வேண்டுமா?

பதில் :தேவையில்லை. அனைத்து வரி செலுத்துபவர்/விற்பனையாளர்கள் GSTNலிருத்து GSTIN நெட்வொர்க்கிற்கு மாற்ற முடியும். நியமிக்கப்பட்ட நாளன்று, GSTIN எண்ணுடன் ஒரு தற்காலிக பதிவுச் சான்றிதழை வழங்கும். துறை அதிகாரிகளால் ஆறு மாதத்திற்குள் பரிசோதனை செய்த பின் இறுதியான பதிவுச் சான்றிதழ் வழங்கப்படும். தற்காலிக பதிவிலிருந்து இறுதி பதிவுக்கு மாற்றம் செய்வதற்கு தேவையான அனைத்து ஆவணங்கள் மற்றும் தகவல்களை குறிப்பிட்டக் காலத்திற்குள் பதிவு செய்த விண்ணப்பதாரர் சமர்ப்பிக்க வேண்டும். அப்படி சமர்ப்பிக்க தவறியதன் விளைவாக தற்காலிக GSTIN எண் வழங்குதல் ரத்து செய்யப்படும்.

எங்கேயெல்லாம் அவர்கள் வர்த்தகம் செய்கிறார்களோ அந்தந்த மாநிலங்களில் புதிதாக விண்ணப்பிக்க சேவை வரி செலுத்துபவர்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட பதிவு உள்ளது.

கேள்வி 34. பணி எடுத்து செய்பவர்கள் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டுமா?

பதில் :வேண்டாம். ஒரு பணி எடுத்து செய்பவர் என்பவர் சேவைகளை வழங்குபவர். பரிந்துரைக்கப்பட்ட வருடாந்திர தொடக்கநிலை வரம்பான 20/10 லட்சத்தை அவர் கடக்கும்போது, பதிவு செய்ய வேண்டியது அவசியம்.

கேள்வி 35. பணி எடுத்து செய்பவர் வர்த்தகம் செய்யும் இடத்திலிருந்து சரக்குகளை வழஙகுவதற்கு அனுமதி உண்டா ?

பதில் : அனுமதி உண்டு. ஆனால், பணி எடுத்து செய்பவர் பதிவு செய்த இடத்திலிருந்து மட்டும், அல்லது, தனது கூடுதல் வர்த்தகம் செய்யும் இடம் என்று தன்னுடைய பிரதான வர்த்தகம் செய்யும் இடத்தை அறிவிக்காத வரை.

கேள்வி 36. பதிவு செய்யப்படும்போது, வரி செலுத்துபவர் தனது அனைத்து வர்த்தக இடங்களையும் அறிவிக்க வேண்டும்?

பதில் : ஆமாம். தனது பிரதான வர்த்தகம் செய்யும் இடம் மற்றும் வர்த்தக செய்யும் இடம் என்று அனைத்தையும் தனித்தனியாக CGST/ SGSTன் கீழ் முறையே பிரிவு 2(89) மற்றும் பிரிவு 2(85)ல் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. வரி செலுத்துபவர் தன்னுடைய பிரதான வர்த்தக செய்யும் இடத்தையும்..மற்ற வர்த்தக இடங்களின் கூடுதல் விவரங்களையும் பதிவு செய்யும் படிவத்தில் அறிவிக்க வேண்டும்.

கேள்வி 37. தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பும் இல்லாத விற்பனையாளர்கள் அல்லது சிறு விற்பனையாளர்களுக்கு என்று ஏதேனும் எளிமையான முறை உள்ளதா?

பதில் :வரி செலுத்துபவர்கள், ITஆர்வலராக இல்லாததால், அவர்களுடைய தேவையை பூர்த்தி செய்யும் வகையில், பின்வரும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

வருமான வரி தாக்கல் தயாரித்தல் (TRP): ஒரு வரி செலுத்தும் நபர் தன்னுடைய பதிவு விண்ணப்பம்/வருமான வரி தாக்கலை தானாகவோ அல்லது TRPன் துணையுடனோ தயார் செய்து கொள்ளலாம். வரி செலுத்துபவர் தரும் தகவலகளின் அடிப்படையில் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் வருமான வரி தாக்கலோ அல்லது சொல்லப்பட்ட பதிவு ஆவணங்களையோ TRP தயார் செய்த தரும். TRPயினால் தயார் செய்யப்பட்ட படிவத்தில் ஏதேனும் தவறுகள் இருந்தால், அதற்கான சட்டரீதியான பொறுப்பு வரி செலுத்துபவரை மட்டுமே

சாரும். அப்படி ஏதேனும் தவறுகள் அல்லது தவறான தகவல்களுக்காக தரப்பட்டதற்காக TRP எந்த வகையிலும் பொறுப்பேற்க முடியாது.

வசதி மையம் (FC): டிஜிட்டிலாக்கம், மற்றும்/அல்லது படிவங்கள் பதிவேற்றம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி கையெழுத்திட்ட சுருக்க தாளுடன் கூடிய ஆவணங்களை போன்றவற்றிற்கு பொறுப்பாகும். மேலும், வரி செலுத்துபவர்களக்கு அதை வழங்குவதும் அவர்கள் பொறுப்பாகும். அடையாள குறியீடு மற்றும் கடவுச் சொல்லை பயன்படுத்தி தரவுகளை பதிவேற்றம் செய்தபின், ஒப்புகைக்காக அந்த பதிவேற்ற ஆவணங்களை ஒரு காகிதத்தில் அச்செடுத்து, அதில் FC கையொப்பமிட்டு, வரி செலுத்துபவரிடம் அவருடைய பதிவேடுக்காக ஒப்புவிக்க வேண்டும். FC ஸ்கேன் செய்து, பதிவேற்றம் செய்த சுருக்கத் தாள்களில் கையொப்பமிட அங்கீகரிக்கப்பட்டவர்கள் கையொப்பமிடுவார்கள்.

கேள்வி 38. GSTN பதிவில் டிஜிட்டல் கையொப்பமிடும் வசதி ஏதாவது உள்ளதா?

பதில் :வரி செலுத்துபவர் கையொப்பமிட்ட விண்ணப்பத்துடன் சரியான டிஜிட்டல் கையொப்பத்தை பயன்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தில் மின்னணு கையொப்பமிடுதலுக்கு இரு தெரிவு முறைகள் உள்ளது அல்லது மற்ற சமர்ப்பித்தல் ஆதார் எண் பயன்படுத்தி மின்னணு கையொப்பம், அல்லது DSC வழியாக சமர்ப்பிக்கலாம். அதாவது, GST வலைவாயில் வழியாக வரி செலுத்துபவருடைய டிஜிட்டல் கையொப்ப சான்றிதழை பதிவு செய்தல் ஆகும். இருப்பினும், கம்பெனிகள் அல்லது குறைந்த முதலீட்டில் கூட்டு வியாபாரம் செய்பவர்கள் DSC வழியாக மட்டுமே கையொப்பமிட வேண்டும் என்பது கட்டாயம். கையொப்ப தேவைகளுக்காக DSC சான்றிதழ்கள் 2 மற்றும் 3ம் நிலைக்கு மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்வி 39. ஆன்லைன் பதிவுகள் மீதான முடிவுகள் எடுப்பதற்கான காலவரை என்ன?

பதில் : தகவல்கள் மற்றும் பதிவேற்றம் செய்யப்பட்ட தரவுகள் அனைத்தும் சரியாக இருந்தால், மாநிவ மற்றும் மத்திய அதிகாரிகள் விண்ணப்பத்திற்கு 3

சாதாரண வேலை நாட்களுக்குள் பதிலுரைக்க வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள், விண்ணப்பத்தில் தரப்பட்ட தகவல்களில் ஏதேனும் குற்றம், குறைகளிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தால், தகவல் தெரிவிக்கப்பட்ட 7 நாட்களுக்குள் விண்ணப்பதாரர் அந்த குற்றம் குறைகளை நீக்கி சரிசெய்து தர வேண்டும். அதன்பிறகு, வரி செலுத்துபவர் குறைகளை நீக்கி கொடுத்த தேதியிலிருந்து 7 நாட்களில் மாநில மற்றும் மத்திய அதிகாரிகள் அந்த விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ வேண்டும். ஒரு வேளை குறிப்பிட்ட காலவரம்பிற்குள் துறை அதிகாரிகளிடமிருந்து எந்தவித பதிலும் கிடைக்கப்பெறவில்லையெனில், பதிவு நடைமுறைகளை வலைவாயில் தானாகவே இயங்கும்.

கேள்வி 40. ஆன்லைனில் விண்ணப்பிக்கப்படும் மனுவின் மீது எழுப்பப்படும் சந்தேகங்களுக்கு, எத்தனை நாட்களுக்குள் விண்ணப்பதாரர் பதிலுரை வழங்க வேண்டும்?

பதில் :பரிசோதனை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, ஒரு வரி அதிகாரி மனுவின் மீது சந்தேகத்தை எழுப்பினாலோ, ஏதாவது தவறுகளை கண்டறிந்தாலோ, அதை உடனே GSTன் பொது வலைவாயில் வழியாக 3 நாடகளுக்குள், சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரருக்கு தெரிவிப்பதோடு மட்டுமல்லாமல் மற்ற வரி அதிகாரிகளுக்கும் தெரிவிக்க வேண்டும். குறைபாடுகள் குறித்த தகவல் கிடைத்த தேதியிலிருந்து 7 நாட்களுக்குள், சந்தேகத்துக்கான பதிலுரை/தவறை திருத்துதல்/கேள்விக்கான பதிலை விண்ணப்பதாரர் தெரிவிக்க வேண்டும்.

கூடுதல் ஆவணங்கள் அல்லது தெளிவுரைகள் கிடைக்கப் பெற்றவுடன்.சம்பந்தப்பட்ட அதிகாரி தெளிவரை கிடைத்த தேதியிலிருந்து சாதாரண 7 வேலை நாட்களுக்குள் பதிலுரைக்க வேண்டும்.

கேள்வி 41. பதிவை மறுப்பதற்கான நடைமுறைகள் என்ன?

பதில் :ஒரு வேளை பதிவு மறுக்கப்பட்டால், சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரருக்கு அந்த நிராகரிப்புக்கான காரணத்தை வாய்மொழி உத்தரவின் மூலம்

தெரிவிக்கப்படும். விண்ணப்பதாரர் அதிகாரியின் முடிவை எதிர்த்து மேல்முறையீடு செய்யலாம். CGSTன் சட்டப்பிரிவு 26ன் உட்பிரிவு (2)ன் படி, CGST சட்டம்/ SGST சட்டத்தின் கீழ்ஒரு அதிகாரியால் பதிவு மனு நிராகரிக்கப்பட்டால், SGSTசட்டம்/ UTGSTசட்டம்/CGST சட்டத்தின் கீழ் அந்த பதிவு மனுமற்ற வரி அதிகாரிகளாலும் நிராகரிக்கப்பட்டதாகவே கருதப்படும்,

கேள்வி 42. மனு நீக்கம் தொடர்பான தகவல்கள் தெரிவிக்கப்படுமா?

பதில் :GSTன் பொது வலைவாயிலால், குறுஞ்செய்தியாகவோ அல்லது ஈமெயில வழியாகவோ மனுவை அங்கீரித்தது அல்லது நிராகரித்த காரணத்தை விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்படும். இந்த நிலையில், சட்டரீதியான தகவல்களையும் மனுதாரருக்கு வழங்கப்படும்.

கேள்வி 43. GSTN வலைவாயில் வழியாக பதிவுச் சான்றிதழை பதிவிறக்கம் செய்து கொள்ள முடியுமா?

பதில் :பதிவுகள் அங்கீகரிக்கப்பட்ட நிலையில், மனுதாரர் பதிவுச் சான்றிதழை GST பொது வலைவாயில் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

கேள்வி 44. . பதிவு ரத்து ஆணையை ரத்து செய்ய முடியுமா?

பதில் :ரத்து செய்ய முடியும். ஒரு வேளை அதற்குரிய அதிகாரி தன்னிச்சையாக முடிவெடுக்கும் முறையிலோ, வரி செலுத்துபவர் அல்லது வாரிசுதாரர் விண்ணப்பிக்காத நிலையில் முதலில் ரத்து செய்யப்பட்டிருந்தால். ரத்தாணையை ரத்து செய்ய முடியும். தன்னிச்சையாக முடிவெடுக்கும் முறையில் பதிவு ரத்து செய்யப்பட்டிருந்தால், ரத்தாணை கிடைத்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் அதற்குரிய அதிகாரியிடம் ரத்தானையை ரத்து செய்யக் கோரி மனு அளிக்க வேண்டும். ரத்தாணையை ரத்த செய்வதற்கான மனுவோ அல்லது தகவல்களோ / தெளிவரையோ கிடைத்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள், அதற்குரிய அதிகாரி பதிவு ரத்தாணையை ரத்து செய்யலாம் அல்லது பதிவு ரத்தாணையை ரத்து செய்யக் கோரிய மனுவை நிராகரிக்கலாம்.

கேள்வி 45. ஒரு நபரின் பதிவை ரத்து செய்யப்படும் போது, அந்த நபர் வரி விலக்குகாக செய்திருந்த பதிவும் ரத்த செய்யப்படுமா?

பதில் : ஆமாம். CGST / SGST சட்டப்பிரிவு29(5)ன் படி, பதிவு ரத்தான ஒவ்வொரு வரி செலுத்தும் நபரும், மின்ன்னு பண வர்த்தனை/கடன் பதிவேட்டின் மூலமாகவோ ஒரு தொகையை செலுத்த வேண்டும். உள்ளீட்டில் தேங்கிய கையிருப்பு அளவைப் பொறுத்து உள்ளீட்டு வரியின் வரவுக்கு இணையான தொகை, பாதி வேலை நிறைவுப் பெற்ற நிலையில் உள்ளீடுகள், நிறைவு பெற்ற நிலையிலுள்ள பொருட்களின் கையிருப்பு அல்லது பதிவு ரத்து செய்யப்பட்ட தேதிக்கு முன் தெரிவிக்கப்பட்ட பொருட்களின் முதலீடு மற்றும் இயந்திரங்கள் அல்லது அம்மாதிரி பொருட்களின் மீது செலுத்த வேண்டிய வெளியீடு வரி, இதில் எது அதிகமாக உள்ளதோ அந்தத் தொகைக்கு இணையானத் தொகையை செலுத்த வேண்டும்.

கேள்வி 46. திட்டமிடாமல் வரி செலுத்தும் நபருக்கும், இந்தியாவில் வசிக்காமல்/வர்த்தக இடமில்லாமல் வரி செலுத்தும் நபருக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் என்ன?

பதில் :திட்டமிடாமல் வரி செலுத்தும் நபர் மற்றும் இந்தியாவில் வசிக்காமல் / வர்த்தக இடமில்லாமல் வரி செலுத்தும் நபர்கள் பற்றி CGST/SGST சட்டங்கள் முறையே பிரிவு 2(20), பிரிவு 2(77)ல் தனித்தனியாக விளக்கம் தரப்பட்டுள்ளது.

| திட்டமிடாமல் வரி செலுத்தும் நபர் | இந்தியாவில்வசிக்காமல்/வர்த்தக இடமில்லாமல் வரி செலுத்தும் நபர் |
|---|---|
| எந்த ஒரு நிலையான வர்த்தக இடமும் இல்லாமல் ஒரு மாநிலத்திற்குள் அல்லது யூனியன் பிரதேசத்திற்குள், சரக்குகள் மற்றும் சேவைகள் வழங்கலில் எப்பொழுதாவது | இந்தியாவிவ எந்த ஒரு நிலையான வர்த்தக இடமோ அல்லது இருப்பிடமோ இல்லாமல், சரக்குகள் மற்றும் சேவைகள் வழங்கலில் எப்பொழுதாவது ஈடுபடுபவர்கள் |

| | |
|---|---|
| ஈடுபடுபவர்கள் | |
| PAN எண் உடையவர் | PAN எண் கிடையாது. அப்படி PAN எண்ணிருந்தால், திட்டமிடாமல் வரி செலுத்தும் நபர் போல் பதிவு செய்து பெற வேண்டும். |
| சாதாரண வரி செலுத்தும் நபருக்காந பதிவுப் படிவமான GST REG-01 என்ற அதேப் படிவமே இதற்கும் பொருந்தும் | இந்தியாவில் வசிக்காமல்/வர்த்தக இடமில்லாமல் வரி செலுத்தும் நபருக்கென்று GSTல் தனிப்பட்ட பதிவு படிவம் உள்ளது. |
| வணிக,வர்த்தக பரிமாற்றம் மற்றும் பரிவர்த்தனைகள் நிச்சயம் மேற்கொள்ள வேண்டும். | எந்த விதமான வரையறுக்கப்பட்ட வர்த்தக சோதனையும் கிடையாது. |
| சாதாரணமான GSTR-1, GSTR-2 மற்றும் GSTR-3 போன்ற சாதாரணமான வருமான வரி தாக்கல்களை செய்ய வேண்டும். | GSTR-5 என்ற தனிப்பட்ட எளிதாக்கப்பட்ட வருமான வரி தாக்கலை செய்ய வேண்டும். |
| அனைத்து உள்ளீடுகளுக்கான உள்ளீட்டு வரிச் சலுகையை(ITC) பெற உரிமைக் கோர முடியும். | இறக்குமதி செய்யப்பட்டவைகளுக்கு மட்டுமே உள்ளீட்டு வரிச் சலுகை (ITC)பெற முடியும் |

## 4. வழங்கல் என்ற சொல்லின் பொருளும் வீச்சும்

கே 1. ஜிஎஸ்டியின் கீழ் வரி விதிப்புக்குரிய நிகழ்வு என்றால் என்ன?

பதில். ஜிஎஸ்டியின் கிழ் வரிவிதிப்புக்குரிய நிகழ்வு என்பது வியாபாரத்திலோ வியாபாரத்தின் முன்னேற்றத்துக்கோ நிகழ்த்தப்படும் சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டையும் ஏதேனும் ஒரு மறுபயனுக்காக வழங்குதல் ஆகும். நடப்பில் உள்ள மறைமுக வரிச் சட்டங்களின் கீழ் வரிவிதிப்புக்குரிய நிகழ்வுகளாகக் கருதப்படும் உற்பத்தி, விற்பனை அல்லது சேவையாற்றுதல் ஆகியவை 'வழங்கல்' என்ற வரிவிதிப்புக்குரிய நிகழ்வின் கீழ் உட்படுத்தப்பட்டுவிட்டன.

கே 2. ஜிஎஸ்டி சட்டத்தின் கீழ் 'வழங்கல்' என்பதன் குறியிலக்கு என்ன?

பதில். 'வழங்கல்' என்ற சொல் விரிவான பொருளைக் கொண்டது. வியாபாரத்தில் ஈடுபடும் ஒரு நபர் ஏதேனும் ஒரு மறுபயனுக்காக சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டையும், விற்பனை, இடமாற்றம், பண்டமாற்றம், பரிமாற்றம், உரிமம், வாடகை, குத்தகை ஆகியவற்றுக்கு விடுதல் ஆகியவற்றைச் செய்தல் அல்லது செய்வதாக ஒப்புக்கொள்தல் ஆகியவற்றை இது உள்ளடக்குகிறது. சேவைகளை இறக்குமதி செய்வதையும் உள்ளடக்குகிறது. ஜிஎஸ்டி சட்ட மாதிரி, மறுபயன் எதையும் பெற்றுக்கொள்ளாமல் செய்யப்படும்

கே 3. வரி விதிப்புக்குரிய வழங்கல் என்றால் என்ன?

பதில். 'ஜிஎஸ்டி சட்டத்தின் கீழ், சரக்குகள் மற்றும் சேவைகள் வரியை ஈர்க்கும் சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டையும் வழங்கல் தான் 'வரி விதிப்புக்குரிய' வழங்கல் எனப்படும்.

கே 4. சிஜிஎஸ்டி / எஸ்சிஜிஎஸ்டி சட்டத்தின் கீழ் வழங்கல் என்பதை வரையறுக்கத் தேவையான அத்தியாவசியக் கூறுகள் யாவை?

பதில். 'வழங்கல்' என்று வரையறுக்கப்பட பின்வரும் கூறுகள் நிறைவேறப்பட்டிருக்க வேண்டும், அதாவது-

(i) நிகழும் செயல்பாடு சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டையும் வழங்கியதை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

(ii) வேறு வகையில் குறிப்பிடப்படாதவரை, அந்த வழங்கல் ஒரு மறுபயனுக்காக நிகழ்த்தப்பட்டதாக இருக்க வேண்டும்.

(iii) வியாபாரத்தின் பகுதியாகவோ அல்லது வியாபார முன்னேற்றத்துக்காகவோ வழங்கல் நிகழ்த்தப்பட்டிருக்க வேண்டும்.

(iv) வரி விதிப்புக்குரிய நிலப் பகுதிக்குள் வழங்கல் நடந்திருக்க வேண்டும்.

(v) வழங்கல் வரி விதிப்புக்குரிய வழங்கலாக இருக்க வேண்டும்: மற்றும்

(vi) வரி விதிப்புக்குரிய நபரால் வழங்கல் நிகழ்த்தப்பட்டிருக்க வேண்டும்.

கே 5. மேற்சொன்ன அளவுகோல்களில் ஒன்றோ அல்லது அதற்கு மேலானவையோ நிறைவேற்றப்படாத ஒரு பரிவர்த்தனையை ஜிஎஸ்டியின் கீழ் வழங்கல் என்று கருத முடியுமா?

பதில். ஆம். வியாபரமாகவோ அல்லது அதன் முன்னேற்றத்துக்கு உட்பட்டோ உட்படாமலோ (பிரிவு 7(1) (பி)), மறுபயனுக்காக சேவைகளை இறக்குமதி செய்தல் உள்ளிட்ட சில சந்தர்பங்களில், அல்லது சிஜிஎஸ்டி./எஸ்ஜிஎஸ்டி சட்டத்தின் அட்டவணை-1ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி மறுபயனில்லாமல் நிகழ்த்தப்படும் வழங்கல் ஆகியவற்றில் கேள்வி எண் 4க்கான பதில்யில் குறிப்பிடப்பட்டுள்ள கூறுகள் ஒன்றோ அதற்கு மேலானவையோ நிறைவேற்றப்படவில்லை என்றாலும் அவை வழங்கலாகக் கருதப்பட்டு ஜிஎஸ்டி வரி விதிப்புக்குள்ளாகலாம்.

கே 6 பிரிவு 7ல் சரக்குகள் இறக்குமதி குறிப்பிடப்படவே இல்லையே. ஏன்?

பதில். சரக்குகள் இறக்குமதி, சுங்கச் சட்டம் 1962ன் கீழ் தனியாகக் கையாளப்படுகிறது. அதன்படி, சுங்கக் கட்டணச் சட்டம் 1975ன் கீழான அடிப்படை சுங்க வரியுடன், கூடுதல் சுங்க வரியாக ஐஜிஎஸ்டி விதிக்கப்படுகிறது,

கே 7 ஜிஎஸ்டியின் கீழ் சுய-வழங்கல்கள் வரி விதிப்புக்குரியவையா?

பதில். கையிருப்புச் சரக்கு இட மாற்றங்கள், ஒரு கிளையிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றுதல் அல்லது அனுப்புச் சரக்கு விற்பனை ஆகிய சுய-வழங்கல்கள் இரண்டு மாநிலங்களுக்கிடையில் நடக்கும் சுய -வழங்கல்கள், அந்தப் பரிவர்த்தனைகளால் மறுபயன் எதுவும் கிடைக்கப்போவதில்லை என்றாலும் ஐஜிஎஸ்டி வரி விதிப்புக்குரியவை தான். ஜிஎஸ்டி சட்டத்தின் 22ஆவது பிரிவின்கீழ் ஒரு வழங்குனர், சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டையும் வரிவிதிப்புக்குரிய வழங்கலாக நிகழ்த்தும்போது அதை எங்கிருந்து செய்கிறாரோ அந்த மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்தின் ஜிஎஸ்டி சட்டத்தின் கீழ் பதிவுசெய்துகொள்ள வேண்டும். ஒரே மாநிலத்துக்குள் நிகழும் சுய-வழங்கல்கள் வர்த்தகப் பகுதியாகப் பதிவு செய்யாமல் இருந்தால் வரி விதிப்புக்குரியதல்ல.

கே 8. ஒரு பரிவர்த்தனை சரக்குகள் வழங்கல் என்று கருதப்பட சட்ட உரிமை மற்றும் / அல்லது உடைமை மாற்றம் அவசியமா?

பதில்: உரிமை, உடைமை ஆகிய இரண்டும் மாற்றப்பட்டால் தான் ஒரு பரிவர்த்தனையை சரக்குகள் வழங்கல் என்று கருத முடியும். ஒருவேளை உரிமை மாற்றப்படவில்லை என்றால், அட்டவணை II (1) (பி)யின்படி அது சேவை வழங்கலாகவே கருதப்படும். சில நேர்வுகளில் உடைமை உடனடியாக மாற்றப்பட்டுவிடும், உரிமை எதிர்காலத்தில் தான் மற்றப்படும். உதாரணமாக ஏற்பின் அடிப்படையிலான விற்பனை மற்றும் தவணை முறை விற்பனை ஆகியவை. இதுபோன்ற பரிவர்த்தனைகள் சரக்குகள் வழங்கல் என்றே கருதப்படும்.

கே 9. வியாபாரத்தின்போதோ அல்லது அதன் முன்னேற்றத்துக்காகவோ நடத்தப்படும் வழங்கல்" என்றால் என்ன?

பதில். பிரிவு 2(17)ல் வரையறுக்கப்பட்டுள்ளபடி, பணம் சார்ந்த பயனுக்காகவோ அது இல்லாமலோ நிகழ்த்தப்படும் வணிகம், வர்த்தகம், உற்பத்தி, தொழில்,

உள்ளிட்ட அனைத்தும் “வியாபாரம்” ஆகும். அதொடு மேலே குறிப்பிட்ட செயல்பாடுகளின் இடைநிகழ்வாக அல்லது அவற்றுக்குத் துணையாக நிகழும் செயல்பாடுகள் அல்லது பரிவர்த்தனைகளும் வியாபாரத்தில் அடங்கும். மேலும், மத்திய அரசு அல்லது ஒரு மாநில அரசு அல்லது உள்ளாட்சி அமைப்பு ஒரு பொது அதிகார மையம் என்ற நிலையிலிருந்து செய்யும் எந்த ஒரு செயல்பாட்டையும் வியாபாரம் என்று பொருள்கொள்ளலாம். மேலே சொன்னவற்றிலிருந்து, வியாபாரத்தை முன்னேற்றுதல் என்பதற்கான வரையறைக்கு உட்பட்ட அனைத்து செயல்பாடுகளும் ஜிஎஸ்டி சட்டத்தின்படி வழங்கல் என்று வகைப்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

கே 10. ஒரு நபர், சொந்தப் பயன்பாட்டுக்காக வாங்கிய காரை ஒரு ஆண்டுக்குப் பிறகு ஒரு வணிகரிடம் விற்றுவிடுகிறார். இந்தப் பரிவர்த்தனை சிஜிஎஸ்டி / எஸ்ஜிஎஸ்டி-யின் கீழ் வழங்கல் என்று கருதப்படுமா? காரணங்களுடன் விளக்குக.

பதில். இல்லை ஏனென்றால் அந்த நபரால் ஒரு வியாபாரமாகவோ வியாபாரத்தின் முன்னேற்றத்துக்காகவோ அந்த வழங்கல் நிகழ்த்தப்படவில்லை. மேலும் அந்தக் கார், வியாபாரத்துடன் தொடர்பில்லாத பயன்பாட்டுக்காக வாங்கப்பட்டதால் அதை வாங்குகையில் அதற்கு உள்ளீட்டு வரி வரவு அனுமதிக்கப்பட்டிருக்காது.

கே 11. ஒரு குளிரூட்டி வணிகர், தனது சரக்குக் கையிருப்பிலிருந்த ஒரு குளிரூட்டியைத் தனது சொந்த பயன்பாட்டுக்காக நிரந்தரமாக வீட்டில் போட்டுவிடுகிறார். இந்த பரிவர்த்தனை வழங்கல் என்று கருதப்படுமா?

பதில்: ஆம். அட்டவணை-1 தொடர் எண் 1ன்படி, உள்ளீட்டு வரி வரவு பெறப்பட்ட வியாபாரச் சொத்துகளின் நிரந்தர பயன் மாற்றம் அல்லது விற்பனை, அவற்றால் எந்த மறுபயனும் பெறப்படவில்லை என்றால் ஜிஎஸ்டி இன் கீழ் வழங்கல் என்றே கருதப்படும்.

கே 12. ஒரு மன்றம் அல்லது சங்கம் அதன் உறுப்பினர்களுக்கு வழங்கும் சேவை அல்லது சரக்குகள் வழங்கல் என்று கருதப்படுமா இல்லையா?

பதில். ஆம். மன்றம், சங்கம், சமூகக் குழு உள்ளிட்ட அமைப்புக்ளால் அவற்றின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அனைத்து வசதிகளும் வழங்கல் என்று கருதப்பட வேண்டும். இது சிஜிஎஸ்டி / எஸ்ஜிஎஸ்டி சட்டத்தின் பிரிவில் 2(17). 'வியாபாரம்' என்பதன் வரையறைக்குள் வருகிறது.

கே 13. ஜிஎஸ்டி சட்டத்தின்படி வழங்கல் என்பதன் வகைகள் என்னென்ன?

பதில். (i) வரி விதிப்புக்குரிய அல்லது வரி விலக்கு பெறக்கூடிய வழங்கல்கள். (ii இரண்டு மாநிலங்களுக்கிடையில் அல்லது ஒரே மாநிலத்துக்குள் நடக்கும் வழங்கல்கள். (iii) தொகுப்பு மற்றும் கலப்பு வழங்கல்கள் மற்றும் (iv) பூஜ்ய வரிவிகித வழங்கல்கள்.

கே 14. இரண்டு மாநிலங்களுக்கிடையிலான வழங்கல்கள் மற்றும் ஒரே மாநிலத்துக்குள் நிகழும் வழங்கல்கள் என்பவை யாவை?

பதில். இரண்டு மாநிலங்களுக்கிடையிலான வழங்கல்கள் மற்றும் ஒரே மாநிலத்துக்குள் நிகழும் வழங்கல்கள் ஆகியவை முறையே ஐஜிஎஸ்ட் சட்டத்தின் பிரிவு 7(1), 7(2) மற்றும் 8(1), 8(2) ஆகியவற்றில் வரையறுக்கப்பட்டுள்ளன. பொத்வுஆக வழங்குபவர் இருக்கும் இடமும் வழங்கல் நடைபெறும் இடமும் ஒரே மாநிலம் என்றால் அது ஒரே மாநிலத்துக்குள் நிகழும் வழங்கல். வெவ்வேறு மாநிலங்கள் என்றால் அது இரண்டு மாநிலங்களுக்கிடையிலான வழங்கல்.

கே 15. ஒரு சரக்கைப் பயன்படுத்தும் உரிமையை வேறொருவருக்கு அளிப்பது சரக்கு வழங்கல் என்று கருதப்படுமா சேவை வழங்கல் என்று கருதப்படுமா? ஏன்?

பதில். ஒரு சரக்கைப் பயன்படுத்தும் உரிமையை வேறொருவருக்கு அளிப்பது சேவை வழங்கல் என்றே கருதப்படும் ஏனென்றால் இப்படிப்பட்ட வழங்கலில்

பொருளின் உரிமையாளர் மாற்றப்படவில்லை. இதுபோன்ற பரிவர்த்தனைகள், சிஜிஎஸ்டி / எஸ்ஜிஎஸ்டி சட்டத்தின் அட்டவணை-IIன்படி சேவை வழங்கல் என்றே குறிப்பிடப்பட்டுள்ளன.

கேள்வி 16. பணிகள், ஒப்பந்தங்கள் மற்றும் கேட்டரிங் சேவைகள் சரக்கு வழங்கலாகக் கருதப்படுமா சேவை வழங்களாகக் கருதப்படுமா?

பதில்: பணிகள், ஒப்பந்தங்கள் மற்றும் கேட்டரிங் சேவைகள் ஆகியவை சேவை வழங்கலாகவே கருதப்படும். அவை இரண்டும், மாதிரி ஜிஎஸ்டி சட்டத்தின் அட்டவணை-IIன் தொடர் எண் 6 (ஏ) மற்றும் (பி)) ஆகியவற்றில் இவை இரண்டும் குறிப்பிடப்பட்டுள்ளன.

கேள்வி 17. மென்பொருள் வழங்கல், ஜிஎஸ்டி சட்டத்தின் கீழ் சரக்கு வழங்கலாகக் கருதப்படுமா சேவை வழங்கலாகக் கருதப்படுமா?

பதில்: தகவல் தொழில்நுட்ப மென்பொருளை வளர்த்தெடுத்தல், வடிவமைத்தல், ப்ரோக்ராமிங், தவகவமைத்தல், தழுவல், தரம் உயர்த்துதல், மேம்படுத்துடதல், செயல்படுத்துதல் ஆகியவை சேவை வழங்கல் என்று, மாதிரி ஜிஎஸ்டி சட்டத்தின் அட்டவணை-IIஇன் தொடர் எண் (2) (டி)இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

கேள்வி 18. தவணைக் கொள்முதல் திட்டத்தில் வழங்கப்படும் சரக்குகள் சரக்கு வழங்கலாகக் கருதப்படுமா சேவை வழங்களாகக் கருதப்படுமா? ஏன்?

பதில்: தவணைக் கொள்முதல் திட்டத்தில் வழங்கப்படும் சரக்குகள், சரக்கு வழங்கலாகவே கருதப்படும். ஏனெனில் அதில் வருங்காலத் தேதியிலாவது பொருளின் உரிமையாளர் மாற்றம் நிகழ்கிறது.

கேள்வி 19. சிஜிஎஸ்டி / எஸ்ஜிஎஸ்டி / யுடிஜிஎஸ்டி சட்டத்தின் கீழ் தொகுப்பு வழங்கல் என்றால் என்ன?

பதில்: வரி விதிப்புக்குரிய நபர், பெறுநருக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சரக்கு மற்றும் சேவை அல்லது அவற்றின் ஏதாவது ஒரு சேர்க்கையை வழங்குவதே தொகுப்பு வழங்கல் எனப்படும். இவை இயல்பாக ஒன்றுக்கொண்டு

இணைப்புகொண்ட ஒன்றாக கட்டப்பட்டு வழங்கப்படும், ஏதேனும் ஒன்று முதன்மை வழங்கலாக இருக்கும். உதாரணமாக சரக்குகள் கட்டப்பட்டு ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு காப்பீட்டுடன் அனுப்பப்படும்போது, சரக்குகள் வழங்கல், கட்டுவதற்கான பொருட்கள், போக்குவரத்து மற்றும் காப்பீட்டு ஆகியவை தொகுப்பு வழங்கல் ஆகும். இவறில் சரக்கு வழங்கல்தான் முதன்மை வழங்கல்.

கேள்வி 20. தொகுப்பு வழங்கலுக்கான வரிப் பொறுப்பு ஜிஎஸ்டியின் கீழ் எப்படி நிர்ணயிக்கப்படுகிறது?

பதில்: இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வழங்கல்களை உள்ளடக்கிய தொகுப்பு வழங்கலில் அவற்றில் ஒன்று முதன்மை வழங்கலாக இருக்கையில் அந்த முதன்மை வழங்கல் எதுவோ அதுவே வழங்கல் என்று கருதப்படும்.

கேள்வி 21. கலவை வழங்கல் என்றால் என்ன?

பதில்: கலவை வழங்கல் என்பது சரக்குகள் மற்றும் சேவைகளின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிப்பட்ட வழங்கல்கள் அல்லது இது போன்ற ஏதுனும் ஒரு சேர்க்கை. இது ஒரு வரிவிதிப்புக்குரிய நபரால் ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டு ஒரே விலைக்கு அளிக்கப்பட்டிருக்க வேண்டும். இத்தகு வழங்கல் தொகுப்பு வழங்கலாக இல்லாமல் இருக்க வேண்டும். உதாரணமாக அடைக்கப்பட்ட உணவுகள், இனிப்புகள், சாக்லேட்கள், கேக்குகள், உலர் கனிகள், காற்றூட்டப்பட்ட குளிர்பானங்கள் மற்றும் பழரசங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு மூட்டையில் ஒரே விலைக்கு வழங்கப்படுவது கலவை வழங்கல் எனப்படும். இதில் ஒவ்வொரு பொருளையும் தனியாகவும் வழங்க முடியும். ஒன்றை மற்றொன்று சார்ந்திருக்கவில்லை.

கேள்வி 22. கலவை வழங்கல் மீதான வரிப் பொறுப்பு ஜிஎஸ்டியின் கீழ் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது?

பதில்: இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வழங்கல்களை உள்ளடக்கிய கலவை வழங்கல், எந்தப் பொருளின் வழங்கல் ஆகப் பெரிய வரி விகிதத்துக்குரியதோ அதன் வழங்கலாகவே கருதப்படும்.

கேள்வி 23. சரக்கு வழங்கலாகவும் கருதப்படாத சேவை வழங்கலாகவும் கருதப்படாத செயல்பாடுகள் ஏதேனும் உள்ளனவா?

பதில்: ஆம். மாதிரி ஜிஎஸ்டி சட்டத்தின் அட்டவணை- III சில செயல்பாடுகளை பட்டியலிடுகிறது. (i) ஒரு வேலையாள் வேலை நிமித்தமாகவோ அல்லது வேலையுடன் தொடர்புடையதாகவோ வேலைகொடுத்தவருக்குச் செய்யும் சேவைகள், (iiசட்டப்படி அமைக்கப்பட்ட நீதிமன்றங்கள் அல்லது தீர்ப்பாயங்களின் சேவைகள், (iii) நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர்கள், அரசியலமைப்பு பணியாளர்கள் ஆகியோரின் பணிகள் (iv) தகனம், அடக்கம், சுடுகாடு அல்லது பிணவறைச் சேவைகள் மற்றும் (v) நில விற்பனை மற்றும் (vi) லாட்டரி, பந்தயம் மற்றும் சூதாட்டம் அல்லாத உரிமைக் கோரிக்கைகள் ஆகியவை சரக்கு வழங்கலும் இல்லை சேவை வழங்கலும் இல்லை என்றே கருதப்படும்.

கேள்வி 24. ஜிஎஸ்டியின் கீழ் பூஜ்ய விகித வழங்கல் என்றால் என்ன?

பதில்: சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்குபவர் அல்லது சிறப்புப் பொருளாதார மண்டலப் பிரிவுக்காக சரக்குகள் மற்றும் / அல்லது சேவைகளை ஏற்றுமதி செய்வது அல்லது சரக்குகள் மற்றும் / அல்லது சேவைகளை வழங்குதல் ஆகியவை பூஜ்ய விகித வழங்கல் எனப்படும்.

கேள்வி 25. மறுபயன் இல்லாத சேவை இறக்குமதி ஜிஎஸ்டியின் கீழ் வரிவிதிப்புக்குரியதா?

பதில்: ஜிஎஸ்டியின் பிரிவு 7ல் குறிப்பிட்டுள்ளபடி, மறுபயன் இல்லாமல் சேவைகளை இறக்குமதி செய்வது வழங்கல் அல்ல. ஆனால் அட்டவணை I-இன் தொடர் எண் 4இல் குறிப்பிட்டுள்ளபடி, ஒரு வரிவிதிப்புக்குரிய நபர், வியபார முன்னேற்றத்தின் பகுதியாகத் தொடர்புடைய நபரிடமிருந்தோ அல்லது வெளிநாட்டில் இருக்கும் தன்னுடைய வேறொரு நிறுவனத்திலிருந்தோ சேவைகளை இறக்குமதி செய்வது அதற்கு மறுபயன் எதுவும் பெறவில்லை என்றாலும் வழங்கல் என்றே கருதப்படும்.

--------------

## 5. சப்ளை நேரம்

கேள்வி 1: சப்ளை செய்யப்பட வேண்டிய நேரம் எது?

பதில்: சப்ளை செய்யப்படும் நேரமானது சப்ளைக்கான ஜிஎஸ்டி வரி செலுத்தப்படும்போது செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டும். மேலும் ஜிஎஸ்டி வரிச் சட்டம் எப்போது சப்ளை செய்யப்பட வேண்டும் என்பதையும் குறிக்கிறது. சிஜிஎஸ்டி/எஸ்ஜிஎஸ்டி சட்டம் பொருட்கள் மற்றும் சேவைகள் சப்ளை செய்யப்பட வேண்டிய நேரங்களைத் தனித்தனியாக விளக்குகிறது.

கேள்வி 2: பொருட்கள் மற்றும் சேவைகள் சப்ளை செய்யப்படும் நேரம் மற்றும் ஜிஎஸ்டி வரி செலுத்த வேண்டிய நேரம் எது?

பதில்: சிஜிஎஸ்டி/எஸ்ஜிஎஸ்டி சட்டம் பிரிவு 12, 13 பொருட்கள் சப்ளை செய்ய வேண்டிய நேரத்தை கூறுகிறது. பொருட்கள் சப்ளை செய்ய வேண்டிய நேரம் பின்வருவனவற்றிற்கு முன் நடைபெறும்.

(i) சப்ளையர் இன்வாய்ஸ் வழங்கிய தேதி அல்லது பிரிவு 31ன் கீழ் சப்ளைக்கான இன்வாய்ஸ் கொடுக்க அவருக்கு விதிக்கப்பட்டுள்ள கடைசி தேதி;

(ii) சப்ளைக்கான பணத்தைப் பெறும் தேதி

கேள்வி 3: பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வவுச்சர்கள் கொடுக்கப்பட்டிருக்கும்பட்சத்தில் சப்ளை செய்ய வேண்டிய நேரம் எது?

பதில்: பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வவுச்சர்கள் கொடுக்கப்பட்டிருக்கும்பட்சத்தில் சப்ளை செய்ய வேண்டிய நேரமானது,

அ) வவுச்சர் வழங்கப்பட்ட தேதி, சப்ளை அந்தச் சமயத்தில் நடக்க முடிந்தால் சப்ளை செய்யலாம். அல்லது,

ஆ) மற்ற எல்லாச் சமயங்களிலும் வவுச்சர் பெறப்படும் தேதி.

கேள்வி 4: சப்ளை நேரத்தை கண்டுபிடிக்க முடியாத சூழ்நிலைகளான சிஜிஎஸ்டி/எஸ்ஜிஎஸ்டி சட்டம் பிரிவு 12 அல்லது 13ன் துணைப்பிரிவு 2,3,4 ஆகியவற்றின் போது சப்ளை நேரத்தை எப்படி முடிவு செய்வது?

பதில்: பிரிவு 12(5) மற்றும் 13 (5) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது போல, குறிப்பிட்ட கால இடைவெளியில் கணக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தால், அந்த பிரியாடிக்கல் தாக்கலுக்கான தேதி சப்ளைக்கான நேரமாக இருக்கும். மற்ற சமயங்களில் CGST/SGST/IGST போன்ற வரிகள் செலுத்தப்படும் தேதியாக இருக்கும்.

கேள்வி 5: ‘பணம் செலுத்துதல் சீட்டு தேதி’ என்பது என்ன?

பதில்: பணம் செலுத்தலை சப்ளையரின் கணக்குப் புத்தகத்தில் பதிவு செய்வதற்கு முந்தைய தேதி அல்லது பணம் அவரது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும் தேதி ஆகும்.

கேள்வி 6: ஒருவேளை, பகுதியளவு முன்பணம் தரப்பட்டிருந்தால் அல்லது பகுதி பணத்துக்கான இன்வாய்ஸ் தரப்பட்டிருந்தால் சப்ளை செய்யப்படும் நேரத்தில் முழுமையாக சப்ளை செய்யப்படுமா?

பதில்: இல்லை. இன்வாய்ஸில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது பெறப்பட்ட பகுதியளவு பணத்தின் அளவுக்கு மட்டுமே சப்ளை இருக்கும்.

கேள்வி 7: செலுத்தப்பட்ட்ட வரியைத் திரும்ப பெறும் நிகழ்வுகளில் பொருட்களின் சப்ளை நேரம் என்ன?

பதில்: சப்ளை நேரங்கள் பின்வரும் தேதிகளுக்கு முன் இருக்கும்:

அ) பொருட்களின் சீட்டில் உள்ள தேதி

ஆ) பணம் செலுத்தப்பட்ட தேதி

இ) சப்ளையர் வழங்கிய இன்வாய்ஸ் தேதியிலிருந்து 30 நாட்களுக்குள்

கேள்வி 8: செலுத்தப்பட்ட்ட வரியைத் திரும்பப் பெறும் நிகழ்வுகளில் சேவைகளின் சப்ளை நேரம் என்ன?

பதில்: சப்ளை நேரங்கள் பின்வரும் தேதிகளுக்கு முன் இருக்கும்

அ) பணம் செலுத்தப்பட்ட தேதி

ஆ) சப்ளையர் வழங்கிய இன்வாய்ஸ் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள்

கேள்வி 9: ஒருவேளை சப்ளையருக்குச் செலுத்த வேண்டிய தொகையில் வட்டி, தாமதக் கட்டணம் அல்லது அபராதம் அல்லது தவறவிட்ட முந்தைய கட்டணங்கள் ஏதேனும் சேர்க்கப்பட்டிருக்கும்பட்சத்தில் சப்ளையின் நேரம் என்பது என்னவாக இருக்கும்?

பதில்: சப்ளையருக்குச் செலுத்த வேண்டிய தொகையில் வட்டி, தாமதக் கட்டணம் அல்லது அபராதம் அல்லது தவறவிட்ட முந்தைய கட்டணங்கள் ஏதேனும் சேர்க்கப்பட்டிருக்கும்பட்சத்தில் சப்ளை நேரம் என்பது சப்ளையர் அந்தக் கூடுதல் கட்டணங்களைப் பெறும் தேதியில் இருக்கும்.

கேள்வி 10: வரி விகிதங்களில் மாற்றம் செய்யப்படுவதற்கு முன்போ பின்போ சப்ளை நடந்திருந்தால், அந்த சப்ளையின் நேரத்தில் மாற்றம் இருக்குமா?

பதில்: ஆம். அந்தச் சமயங்களில் பிரிவு 14ன் விதிமுறை செயல்படுத்தப்படும்.

கேள்வி 11: வரி விகிதங்களில் மாற்றம் செய்யப்படுவதற்கு முன்போ பின்போ சப்ளை நடந்திருந்தால், அந்த சப்ளையின் நேரம் என்னவாக இருக்கும்?

பதில்: இது போன்ற சமயங்களில் சப்ளையானது,

(i) வரி விகிதங்களில் மாற்ற செய்யப்பட்ட பிறகு சப்ளைக்கான இன்வாய்ஸ் வழங்கப்பட்டு அதற்கான பணமும் பெறப்பட்டிருந்தால், பணம் பெறப்பட்டதற்கான சீட்டின் தேதி அல்லது இன்வாய்ஸ் வழங்கப்பட்ட தேதி இரண்டில் முன்னதாக வரும் தேதி.

(ii) வரி விகிதங்களில் மாற்றம் செய்யப்படுவதற்கு முன் இன்வாய்ஸ் வழங்கப்பட்டு ஆனால் வரி விகிதங்களில் மாற்றம் செய்யப்பட்ட பிறகு பணம் பெறப்பட்டிருந்தால் சப்ளையானது, இன்வாய்ஸ் வழங்கப்பட்ட தேதியில் நடக்கும்.

(iii) வரி விகிதங்களில் மாற்றம் செய்யப்படுவதற்கு முன் பணம் பெறப்பட்டு ஆனால் வரி விகிதங்களில் மாற்றம் செய்யப்பட்ட பிறகு இன்வாய் வழங்கப்பட்டிருந்தால் சப்ளையானது, பணம் பெறப்பட்ட சீட்டில் உள்ள தேதியில் நடக்கும்.

கேள்வி 12: வரி விகிதங்களில் மாற்றம் செய்யப்பட்ட பிறகு சப்ளை செய்யப்பட்டிருந்தால், சப்ளை நேரம் என்ன?

பதில்: இது போன்ற சமயங்களில் சப்ளையானது,

(i) வரி விகிதங்களில் மாற்றம் செய்யப்படுவதற்கு பின் பணம் பெறப்பட்டு ஆனால் வரி விகிதங்களில் மாற்றம் செய்யப்படுவதற்கு முன் பிறகு இன்வாய் வழங்கப்பட்டிருந்தால் சப்ளையானது, பணம் பெறப்பட்ட சீட்டில் உள்ள தேதியில் நடக்கும்.

(ii) வரி விகிதங்களில் மாற்றம் செய்யப்படுவதற்கு முன் இன்வாய் வழங்கப்பட்டு, பணமும் பெறப்பட்டிருந்தால் சப்ளை தேதியானது, பணம் பெறப்பட்ட சீட்டில் உள்ள தேதி அல்லது இன்வாய்ஸ் வழங்கப்பட்ட தேதி இரண்டில் முன்னதாக உள்ள தேதி.

(iii) வரி விகிதங்களில் மாற்றம் செய்யப்பட்ட பின் இன்வாய் வழங்கப்பட்டு, ஆனால் வரி விகிதங்களில் மாற்றம் செய்யப்படுவதற்கு முன் பணம் பெறப்பட்டிருந்தால் சப்ளை தேதியானது, இன்வாய்ஸ் வழங்கப்பட்ட தேதி ஆகும்.

கேள்வி 13: வரி விகிதமானது 18 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதமாக 1.6.2017 தேதியிலிருந்து உயர்த்தப்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். இந்த மாற்றம் நடப்பதற்கு முன் ஏப்ரல் 2017ல் சேவை வழங்கப்பட்டு அதற்கான இன்வாய்ஸும் வழங்கப்பட்டிருக்கிறது, ஆனால் அதற்கான பணம் ஜூன் 2017இல் வரி

விகிதத்தில் மாற்றம் செய்யப்பட்ட பிறகு பெறப்படுகிறது என்றால் எந்த வரி விகிதம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்?

பதில்: 1.6.2017க்கு முன்பு வழங்கப்பட்ட சேவைகள் என்பதால் பழைய வரி விகிதமான 18 சதவிகிதம் தான் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

கேள்வி 14: வரி விகிதமானது 18 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதமாக 1.6.2017 தேதியிலிருந்து உயர்த்தப்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். வரி விகிதத்தில் மாற்றம் செய்யப்பட்ட பிறகு ஜுன் 2017இல் சப்ளை செய்யப்பட்டு, இன்வாய்ஸும் வழங்கப்பட்ட பொருட்களுக்கான முழுப் பணமும் முன்பணமாக ஏப்ரல் 2017இலேயே பெறப்பட்டிருந்தால் என்ன வரி விகிதம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்?

பதில்: பொருட்களும், இன்வாய்ஸும் 1.6.2017 தேதிக்குப் பின்னரே வழங்கப்பட்டிருப்பதால் புதிய வரி விகிதமான 20 சதவீதம்தான் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

கேள்வி 15: சப்ளை செய்யப்படும் பொருட்களுக்கான இன்வாய்ஸ் வழங்குவதற்கான கால அளவு என்ன?

பதில்: சிஜிஎஸ்டி/எஸ்ஜிஎஸ்டி சட்டம் பிரிவு 31ன் படி பதிவு செய்யப்பட்ட வரிச் செலுத்துபவர் பொருட்கள், அளவு, மற்றும் பொருட்களின் மதிப்பு, செலுத்த வேண்டிய வரி, மற்றும் பிற விவரங்கள் படி பின்வரும் சமயங்களில் இன்வாய்ஸ் வழங்க வேண்டும்:

(அ) பொருட்கள் அனுப்பப்படுவதற்காக எடுக்கப்படும்போது, அதாவது பொருட்கள் சப்ளைக்காக அனுப்பப்படும்போது;

(ஆ) பொருட்கள் டெலிவரி செய்யப்படும் போது அல்லது பிற சமயங்களில் பெறுபவருக்கு பொருட்கள் கிடைக்கும்போது.

கேள்வி 16: சப்ளை செய்யப்படும் சேவைகளுக்கான இன்வாய்ஸ் வழங்குவதற்கான கால அளவு என்ன?

பதில்: சிஜிஎஸ்டி/எஸ்ஜிஎஸ்டி சட்டம் பிரிவு 31ன் படி பதிவு செய்யப்பட்ட வரிச் செலுத்துபவர், சர்விஸ் வழங்குவதற்கு முன் அல்லது பின், ஆனால் இதில் குறிப்பிடப்பட்ட கால அளவுக்குள் இன்வாய்ஸ் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இன்வாய்ஸ் ஆனது சேவைகள் குறித்த விவரங்கள், அவற்றின் மதிப்பு, செலுத்த வேண்டிய வரி மற்றும் குறிப்பிட்ட பிற விவரங்களுடன் வழங்கப்பட வேண்டும்.

கேள்வி 17: பொருட்கள் தொடர்ச்சியாக சப்ளை செய்யப்பட்டுவரும் பட்சத்தில் இன்வாய்ஸ் வழங்குவதற்கான கால அளவு என்ன?

பதில்: பொருட்கள் தொடர்ச்சியாக சப்ளை செய்யப்பட்டு வரும் பட்சத்தில், அவற்றுக்கான கணக்கு அறிக்கைகள் அல்லது பெறப்பட வேண்டிய பணம் ஆகியவற்றை வெற்றிகரமாகச் செயல்படுத்தி இருந்தால், அவற்றுக்கான இன்வாய்ஸ் ஒவ்வொரு சப்ளைக்குமான கணக்கு அறிக்கை செயல்படுத்தும்போது அல்லது பணம் பெறப்படும்போது அல்லது அவற்றுக்கு முன்போ வழங்கப்பட வேண்டும்.

கேள்வி 18: சேவைகள் தொடர்ச்சியாக சப்ளை செய்யப்பட்டு வரும் பட்சத்தில் இன்வாய்ஸ் வழங்குவதற்கான கால அளவு என்ன?

பதில்: சேவைகள் தொடர்ச்சியாக சப்ளை செய்யப்பட்டு வரும் பட்சத்தில்,

(அ) காண்ட்ராக்ட்டில் பணம் பெறுவதற்கான கெடு தேதி குறிப்பிடப்பட்டிருக்கும் பட்சத்தில் சேவையைப் பெறுபவர் தர வேண்டிய பணத்தை தரும் தேதிக்கு முன் அல்லது பின் இன்வாய்ஸ் வழங்க வேண்டும். ஆனால் அதே சமயத்தில் சர்வீஸ் சப்ளை செய்தவர் தனக்கு பணம் வருகிறதோ இல்லையோ இதற்காக குறிப்பிடப்பட்டுள்ள கால இடைவெளியில் இன்வாய்ஸ் வழங்கப்பட வேண்டும்.

(ஆ) காண்ட்ராக்ட்டில் பணம் பெறுவதற்கான கெடு தேதி குறிப்பிடாத பட்சத்தில் ஒவ்வொரு முறை சப்ளை செய்யப்பட்ட சேவைகளுக்கான பணம்

பெறப்படுவதற்கு முன் அல்லது பின் வழங்கலாம் ஆனால் இதற்காக குறிப்பிடப்பட்டுள்ள கால இடைவெளியில் வழங்கப்பட வேண்டும்.

(இ) செலுத்தப்பட்ட பணம் நிறைவுபெற்ற சப்ளையோடு தொடர்புடையதாக இருந்தால், அதற்கான இன்வாய்ஸ் சப்ளை நிறைவு பெறுவதற்கு முன் அல்லது பின் வழங்கலாம் ஆனால் இதற்காக குறிப்பிடப்பட்டுள்ள கால இடைவெளியில் இன்வாய்ஸ் வழங்கப்பட வேண்டும்.

கேள்வி 19: இன்வாய்ஸ் வழங்குவதற்கும் பொருட்கள் அனுப்பப்படுவதற்கு அல்லது விற்பனைக்கான அனுமதி கிடைப்பதற்குமான கால அளவு என்ன?

பதில்: சப்ளைக்கு அனுப்பப்பட்ட அல்லது விற்பனைக்கான அனுமதி பெற்ற அல்லது திரும்ப எடுத்துக்கொள்ளப்படும் சப்ளையின் போது அல்லது சப்ளைக்கு முன்பு அல்லது அனுமதி செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் இருக்கும்.

----------------------

## 6. ஜிஎஸ்டி மதிப்பிடுதல்

கே 1. ஜிஎஸ்டி வரி விதிப்பு முறையில் வரி விதிக்கப்படும் பொருளின் மதிப்பு என்னவாக இருக்கும்?

பதில்: வழக்கமாக, வரி விதிக்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளின் மதிப்பு 'பரிவர்த்தனை மதிப்பு' அதாவது அந்தப் பொருளுக்கான விலை, பரிவர்த்தனையில் ஈடுபவர்பவர்களுடைய தொடர்பில்லாமல், கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் அதன் விலை மட்டுமே அதன் மதிப்பு ஆகும். சிஜிஎஸ்டி / எஸ்ஜிஎஸ்டி சட்டத்தின் பிரிவு 15 பரிவர்த்தனை மதிப்புகளின் வரையறைக்குள் வரும் விஷயங்களையும், விதிவிலக்குகளையும் பற்றி மேலும் விரிவாகச் சொல்கிறது. உதாரணத்துக்கு, பரிவர்த்தனை மதிப்பு வரையறைக்குள் திருப்பி அளிக்கப்படும் கணக்குகள், பொருட்கள் சப்ளை செய்யப்படும்போது அல்லது அதற்கு முன்பு சில நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படும் கழிவுகள் ஆகியவை சேர்க்கப்பட மாட்டாது.

கே 2. பரிவர்த்தனை மதிப்பு என்றால் என்ன?

பதில். பரிவர்த்தனை மதிப்பு என்பது வழங்கப்படும் பொருள் அல்லது சேவைக்கு வழங்கப்படும் விலை அல்லது வழங்கப்பட வேண்டிய விலை ஆகும். இதில் விற்பவர் மற்றும் வாங்குபவர் ஆகிய இருவரின் தொடர்பு எதுவும் இருக்காது. வழங்கப்படும் பொருளுக்கான விலை மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். இதில் சப்ளையர் வழங்க வேண்டிய தொகையும் சேர்க்கப்படும். ஆனால் அதுவும் சப்ளை செய்ததற்காக வாங்கியவர் கொடுத்ததில் சேர்ந்ததாக மட்டுமே இருக்கும்.

கே 3. சிஜிஎஸ்டி, எஸ்ஜிஎஸ்டி மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகள் ஆகியவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக மதிப்பீடு வசதிகள் இருக்கிறதா?

பதில். இல்லை, பிரிவு 15 இந்த மூன்று வகை வரிகளுக்கும், பொருட்கள் மற்றும் சேவைகளுக்கும் பொதுவானதே.

கே 4. கான்ட்ராக்ட் விலை சப்ளை செய்யப்படும் பொருளுக்கான மதிப்பைத் தீர்மானிப்பதற்கு போதுமானதாக இல்லையா?

பதில். கான்ட்ராக்ட் விலையானது மிகக் குறிப்பாக 'பரிவர்த்தனை மதிப்பு' என்றே குறிப்பிடப்படுகிறது. மேலும் வரியைக் கணக்கிடுவதற்கு இதுவே அடிப்படையாகவும் உள்ளது. ஆனாலும், பொருளின் விலையானது, பரிவர்த்தனையில் ஈடுபடுபவர்களின் தலையீடுகளால் அல்லது குறிப்பிட்ட பரிவர்த்தனைகளில் விலையில்லாத சப்ளை நடக்கும்போது தாக்கத்துக்குட்பட்டால் அதற்கான மதிப்பானது ஜிஎஸ்டி மதிப்பிடுதல் விதிகளின்படி நிர்ணயிக்கப்படும்.

கே 5. ஜிஎஸ்டி மதிப்பிடுதல் விதிகள் எல்லாச் சமயங்களிலும் தேவைப்படுமா?

பதில். இல்லை, பிரிவு 15ன் துணை பிரிவு (1)ன் கீழ் மதிப்பு கண்டறிய முடியாத சமயங்களில் மட்டுமே ஜிஎஸ்டி மதிப்பிடுதல் விதிகள் தேவைப்படும்.

கே 6. பிரிவு 15இன் துணைப் பிரிவு (1)இன் கீழ் நிர்ணயிக்கப்படும் பரிவர்த்தனை மதிப்பு ஏற்றுக்கொள்ளத் தக்கதா?

பதில். ஆம், ஆனால் பிரிவு 15(2)இல் உள்ள வரையறைகளைச் சரிபார்த்த பின்பே ஏற்றுக்கொள்ளப்படும். மேலும், வழங்குபவர் மற்றும் பெறுபவர் இருவரும் பரிவர்த்தனை மதிப்பில் தொடர்புடையவர்களாக இருந்தாலும், அவர்களுடைய தலையீடு விலையில் தாக்கத்தை ஏற்படுத்தாத பட்சத்தில் அந்தப் பரிவர்த்தனை மதிப்பும் ஏற்றுக்கொள்ளத் தக்கதே.

கே 7. சப்ளைக்குப் பிறகான கழிவுகள் அல்லது ஊக்கச் சலுகைகள் பரிவர்த்தனை மதிப்பில் சேர்க்கப்படுமா?

பதில். ஆம். ஒப்பந்தத்தின்படி வழங்கப்படும் சப்ளைக்குப் பிறகான கழிவுகள் சப்ளையின்போதோ அல்லது சப்ளைக்கு முன்போ அறியப்பட்டு அந்தக் கழிவுகள் சம்பந்தப்பட்ட இன்வாய்ஸில் சேர்க்கப்படும். பொருளைப் பெறுபவர் அந்தக்

கழிவுகளுக்கான வரியைச் செலுத்தினால் இந்த கழிவுகள் ஜிஎஸ்டி சட்டம் பிரிவு 15ன் கீழ் விலக்கு அளிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

கே 8. சப்ளையின் போதோ அல்லது அதற்கு முன்பாகவோ வழங்கப்படும் சப்ளைக்கு முந்தைய கழிவுகள் பரிவர்த்தனை மதிப்பில் சேர்க்கப்படுமா?

பதில். இல்லை, வழக்கமான வர்த்தக முறைகளின்படி இந்தக் கழிவுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை இன்வாய்ஸில் முறையாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.

கே 9. எப்போதெல்லாம் மதிப்பிடுதல் விதிகள் பயன்படுத்தப்படுகின்றன?

பதில். மதிப்பிடுதல் விதிகள் (i) முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பணத்தின் வரையறைகளில் இல்லாமல் இருந்தால்; (ii) பரிவர்த்தனையில் ஈடுபடுபவர்கள் தலையீடு இருந்தால் அல்லது குறிபிப்ட்ட வகை சப்ளையரின் சப்ளையாக இருந்தால்; மற்றும் (iii) நிர்ணயிக்கப்பட்ட பரிவர்த்தனை மதிப்பு நம்பகமானதாக இல்லாமல் இருந்தால்.

கே 10. பிரிவு 15(2) ல் குறிப்பிடப்பட்டுள்ள, பரிவர்த்தனை மதிப்பில் சேர்க்கப்படுவதற்கான வரையறைகள் என்னென்ன?

பதில். பிரிவு 15(2) ல் குறிப்பிடப்பட்டுள்ள, பரிவர்த்தனை மதிப்பில் சேர்க்கப்படுவதற்கான வரையறைகள்:

அ) பொருளை வாங்குபவரிடம் சப்ளையர் வாங்கும், எஸ்ஜிஎஸ்டி / சிஜிஎஸ்டி சட்டம் மற்றும் ஜிஎஸ்டி (மாநிலங்களின் வருவாய் இழப்புக்கான ஈட்டுத்தொகை) சட்டம் அல்லாத பிற சட்டங்களின் கீழ் விதிக்கப்படும் எந்தவொரு வரி, கலால் வரி, செஸ், மற்றும் கட்டணங்கள்

ஆ) குறிப்பிட்ட பொருளின் சப்ளைக்கு, சப்ளையர் தர வேண்டிய எந்த ஒரு தொகையும் இதில் அடங்கும். ஆனால் இவை பொருளை வாங்கியவரிடம் தான்

பெறப்படும், பொருள்/சேவைகளின் உண்மையான விலையை தவிர்த்த பிற கட்டணங்கள்.

இ) தற்செயல் செலவுகள், அதாவது பொருளை வாங்குபவரிடம் சப்ளையர், பொருட்கள் அல்லது சேவையை வழங்கும்போதோ அல்லது வழங்குவதற்கு முன்னரோ பெறும் கமிஷன் மற்றும் பேக்கிங் செலவு போன்ற எந்தவொரு தொகையும்.

ஈ) எந்த ஒரு சப்ளைக்கும் தாமதப்படுத்தப்படும் பரிவர்த்தனைகளுக்கு விதிக்கப்படும் வட்டி அல்லது தாமத கட்டணம் அல்லது அபராதம் ஆகியவை.

உ) மத்திய மற்றும் மாநில அரசுகள் தரும் மானியங்கள் தவிர்த்து, நேரடியாக விலையுடன் தொடர்புடைய பிற மானியங்கள்.

----------------------

## 7. ஜிஎஸ்டி வரி செலுத்துதல்

கேள்வி 1: ஜிஎஸ்டி வரிமுறையில் என்னென்ன வரிகள் செலுத்த வேண்டியிருக்கின்றது?

பதில்: ஜிஎஸ்டி வரிமுறையில், மாநிலங்களுக்கிடையில் நடக்கும் எந்த ஒரு சப்ளைக்கும் மத்திய ஜிஎஸ்டி வரி செலுத்தப்பட வேண்டும், (CGST- இது மத்திய அரசின் கணக்கில் வரவு வைக்கப்படும்) மற்றும் மாநிலம்/யூனியன் பிரதேசம் ஜிஎஸ்டி வரி செலுத்தப்பட வேண்டும் (SGST, இது மாநில அரசின் கணக்கில் வரவு வைக்கப்படும்). ஒரு மாநிலத்துக்குள்ளேயே நடக்கும் எந்த ஒரு சப்ளைக்கும் ஒருங்கிணைக்கப்பட்ட ஜிஎஸ்டி (IGST) வரியை செலுத்த வேண்டும், இது சிஜிஎஸ்டி, எஸ்ஜிஎஸ்டி இரண்டின் அம்சங்களையும் கொண்டிருக்கும். கூடுதலாக, குறிப்பிட்ட வகைகளின் கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பவர்கள் ஆதாரத்தில் பிடிக்கப்பட்ட வரி(TDS), ஆதாரத்தில் சேர்க்கப்பட்ட வரி(TCS) ஆகியவற்றையும் அரசுக்குச் செலுத்த வேண்டியிருக்கும். மேலும் வட்டி, அபராதம், கட்டணங்கள் மற்றும் பிற பரிவர்த்தனைகள் செலுத்த வேண்டிய பட்சத்தில் அவையும் செலுத்தப்பட வேண்டும்.

கேள்வி 2: யார் ஜிஎஸ்டி வரியைச் செலுத்த வேண்டும்?

பதில்: பொதுவாக, பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குபவர் ஜிஎஸ்டி வரியைச் செலுத்த வேண்டும். ஆனாலும், சில குறிப்பிட்ட வகைகளில், அதாவது இறக்குமதி மற்றும் பிற குறிப்பிடத்தக்க சப்ளை போன்றவற்றில் வரி பொருட்களைப் பெறுபவர், ரிவர்ஸ் சார்ஜ் மெக்கானிசத்தின் கீழ் செலுத்த வேண்டியிருக்கும். மேலும், சில குறிப்பிட்ட மாநிலங்களுக்கிடையிலான சேவைகள் வழங்குதல் விஷயங்களில், ஜிஎஸ்டி வரி இ-காமர்ஸ் ஆப்ரேட்ட்டர்கள் தாங்கள் செய்யும் சேவை சப்ளையின் வழியே செலுத்த வேண்டியிருக்கும். மேலும் அரசு துறைகள், குறிப்பிட்ட வரம்புக்கு மேலான பரிவர்த்தனைகளுக்கு [S.51(1)(d)இன் கீழ் ஒரு காண்ட்ராக்ட் ரூ. 2.5 லட்சம்] அதன்

மொத்த மதிப்பில் பிடிக்கப்படும் வரிப் பிடித்தம் வெண்டார்களுக்கு வழங்கப்பட வேண்டும். இ-காமர்ஸ் ஆப்ரேட்டர்கள் அவர்கள் மூலம் செய்யப்படும் சப்ளைகளுக்கான வரி சேகரிக்கப்பட்டு அரசு கணக்கில் வரவு வைக்கப்படும் [மொத்த மதிப்பு - வரி செலுத்தப்பட வேண்டிய பொருட்கள் அல்லது சேவைகளின் ஒருங்கிணைக்கப்பட்ட மதிப்பு ஆனால் சி ஜிஎஸ்டி சட்டம் 2017 ஜிஎஸ்டி பிரிவு 9(5)இன் கீழ் சர்வீஸ் ஆபரேட்டர் செலுத்த வேண்டிய சேவைகளின் மதிப்பு இதில் சேர்க்கப்பட மாட்டாது]

கேள்வி 3: எப்பொழுது ஜிஎஸ்டி வரிகள் செலுத்த வேண்டியிருக்கிறது?

பதில்: பிரிவு 12ன் கீழ் பொருட்கள் சப்ளை செய்யப்படும்போது, பிரிவு 13ன் கீழ் சேவைகள் சப்ளை செய்யப்படும் போது ஜிஎஸ்டி வரிகள் செலுத்தப்பட வேண்டும்.

வரி செலுத்தும் நேரம் என்பது பொதுவாக, பணம் பெறும்போது, இன்வாய்ஸ் கொடுக்கும்போது அல்லது சப்ளை முழுமையடையும் போது ஆகிய மூன்று நிகழ்வுகளின்போது வரும். எதிர்பாராத வெவ்வேறு சுழ்நிலைகள் மற்றும் வெவ்வேறு வரி முறைகள் மேற்குறிப்பிடப்பட்ட பிரிவுகளில் விளக்கப்பட்டிருக்கின்றன.

கேள்வி 4: ஜிஎஸ்டி வரி செலுத்தல் முறையின் முக்கிய அம்சங்கள் என்னென்ன?

பதில்: ஜிஎஸ்டி சட்டங்களின் கீழ் செய்யப்படும் பணம் செலுத்தல் முறைகளின் அம்சங்கள் பின்வருமாறு:

• ஜிஎஸ்டியின் பொது இணையதளத்தில் அனைத்து வகையான வரி செலுத்தல்களுக்கும் மின்னணு விண்ணப்பங்கள் உருவாக்கப்படுகின்றன. எனவே கையால் பூர்த்தி செய்யும் விண்ணப்பங்களின் தேவை இல்லை.

• வரி செலுத்துபவருக்கான வசதிகள் எளிமையாகவும், எந்த நேரத்திலும், எங்கிருந்தும் வரி செலுத்தும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளன.

• ஆன்லைன் மூலம் வரி செலுத்தும் வசதி;

• லாஜிக்கல் வரி பரிவர்த்தனை விவரங்கள் மின்னணு வடிவில் உள்ளன;

• வரி வருவாய் அரசுக் கணக்கு மிக விரைவாக அனுப்பப்படுகின்றது.

• காகிதங்கள் அல்லாத பரிவர்த்தனைகள்;

• வேகமான கணக்கு நிர்வகிப்பு மற்றும் அறிக்கையிடல்;

• அனைத்து பரிவர்த்தனை சீட்டுகளும் மின்னணு வடிவில் கிடைக்கின்றன.

• வங்கிகளுக்கான செயல்முறைகள் எளிமைப்படுத்தப்பட்டுள்ளன.

• டிஜிட்டல் விண்ணப்பச் சீட்டுகளுக்கான கிடங்கு வசதி.

கேள்வி 5: எப்படி வரி செலுத்தலாம்?

பதில்: பின்வரும் முறைகளில் வரி செலுத்தலாம்;

(i) பொதுவான தளத்தில் வரி செலுத்துபவர் நிர்வகித்துவரும் கடன் புத்தகத்திலிருந்து செலுத்தலாம். இதன் மூலம் வரி மட்டுமே செலுத்த முடியும். வட்டி, அபராதம் மற்றும் பிற கட்டணங்கள் கடன் புத்தகத்திலிருந்து செலுத்த முடியாது. வரி செலுத்துபவர்கள் செலுத்தப்பட்ட வரிகளை இன்புட் டேக்ஸ் கிரெட்டாக எடுத்துக்கொள்ளவும், அவற்றை அவுட்புட் டேக்ஸ் செலுத்தலுக்காகப் பயன்படுத்திக்கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனாலும், சிஜிஎஸ்டியின் எந்தவொரு இன்புட் டேக்ஸ் கிரெடிட்டும், எஸ்ஜிஎஸ்டி வரிச் செலுத்தலுக்காகப் பயன்படுத்த முடியாது. அதேபோல் இதன் மாற்று வழிமுறையும்

அனுமதிக்கப்பட மாட்டாது. ஐஜிஎஸ்டி கிரெடிட்டை ஐஜிஎஸ்டி, சிஜிஎஸ்டி மற்றும் எஸ்ஜிஎஸ்டி என்ற வரிசையில் பயன்படுத்திக்கொள்ளலாம்.

(ii) பொதுத் தளத்தில் வரி செலுத்துபவர் நிர்வகித்து வரும் பணப் புத்தகத்தில் இருந்து பணமாகச் செலுத்தலாம். பணப் புத்தகத்தில் மின்னணு பரிவர்த்தனைகள் (இண்டர்நெட் பேங்கிங், கிரெடிட் கார்டு, டெபிட் கார்டு) மூலம் பணம் வைப்பு வைக்க வேண்டும்; மற்றும் ஆர்டிஜிஎஸ்,/நேஷனல் எலக்ட்ரானிக் ஃபண்ட் ட்ரான்ஸ்பர் (நெஃப்ட்); அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளில் பணமாகச் செலுத்துவதன் மூலமும் ஜிஎஸ்டி வரியைச் செலுத்தலாம்.

கேள்வி 6: எப்பொழுது சப்ளையர் செலுத்த வேண்டிய வரி பெறப்படும்?

பதில்: சாதாரண வரி செலுத்துபவர் ஒருவர் செலுத்த வேண்டிய வரியானது மாத அடிப்படையில் அடுத்து வரும் மாதத்தின் 20ஆம் தேதியில் செலுத்தப்பட வேண்டும். பணமாக செலுத்துவதாக இருந்தால் முதலில் பணப் புத்தகத்தில் அவை வைப்பு வைக்கப்பட வேண்டும். வரி செலுத்தும்போது அதிலிருந்து செலுத்திக்கொள்ளலாம். ஒவ்வொரு வரி செலுத்தலின்போதும் எடுக்கப்படும் தொகை பதிவு செய்யப்படும். முன்பே குறிப்பிட்டது போல்,கடன் புத்தகத்திலிருந்தும் வரி செலுத்தலாம். மார்ச் மாதத்துக்கான வரி ஏப்ரல் மாதம் 20ஆம் தேதி செலுத்தப்பட வேண்டும். நிறுவனம் சார்பாக வரி செலுத்துவோர் காலாண்டு அடிப்படையில் வரி செலுத்த வேண்டும்.

கேள்வி 7: வரி செலுத்துவதற்கான கால வரம்பு நீட்டிக்கப்படவும் அல்லது தவணை முறையில் செலுத்தவும் வாய்ப்பிருக்கிறதா?

பதில்: இல்லை, இவை செல்ஃப்-அசெஸ்டு வரிச் செலுத்தலில் அனுமதிக்கப்படுவதில்லை. பிற நிகழ்வுகளில், கால வரம்பும், தவணை முறை வரி செலுத்தலும் சிஜிஎஸ்டி / எஸ்ஜிஎஸ்டி சட்டம் பிரிவு 80ன் படி அனுமதிக்கும் அதிகாரம் ஆணையத்துக்கு உண்டு.

கேள்வி 8: வரி செலுத்துபவர் வரிக் கணக்கு தாக்கல் செய்து, வரிச் செலுத்தாமல் இருந்தால் என்ன ஆகும்?

பதில்: அதுபோன்ற சமயங்களில், தாக்கல் செய்யப்பட்ட கணக்கு, கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. பிரிவு 2 (117) ஆனது பிரிவு 39இன் துணைப் பிரிவு (1) தாக்கல் செய்யப்பட்ட கணக்குக்கான முழு வரியையும் செலுத்தியிருந்தால் மட்டுமே அது ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்குத் தாக்கல் ஆகும். அந்தக் கணக்குத் தாக்கலில் மட்டுமே பொருட்களைப் பெறுபவர் இன்புட் டேக்ஸ் கிரெடிட்டைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்படுவார். வேறு வார்த்தைகலில் சொன்னால், சப்ளையர் வரிக் கணக்கு தாக்கல் செய்து, முழு செல்ஃப்-அசெஸ்டு வரியையும் செலுத்தினால் மட்டுமே, பொருளைப் பெற்றவர் தாக்கல் செய்த வரிக்கான இன்புட் டேக்ஸ் கிரெடிட் வசதி ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வி 9: காசோலை வழங்கப்பட்ட தேதி அல்லது பரிவர்த்தனை செய்யப்பட்ட தேதி அல்லது அரசுக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட தேதி ஆகிய இரண்டில் எந்தத் தேதி செலுத்த வேண்டிய வரிக்கான டெபாசிட் தேதியாக எடுத்துக்கொள்ளப்படும்?

பதில்: அரசுக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட தேதி கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

கேள்வி 10: இ-லெட்ஜர்கள் என்றால் என்ன?

பதில்: மின்னணு லெட்ஜர்கள் அல்லது இ-லெட்ஜர்கள் என்பவை பதிவு செய்யப்பட்ட வரி செலுத்துபவரின் பணப் பரிவர்த்தனைகள் மற்றும் இன்புட் டேக்ச் கிரெடிட் ஆகியவற்றின் அறிக்கைகளாகும். மேலும், ஒவ்வொரு வரி செலுத்துவோருக்கும் மின்னணு வரி விவர அறிக்கைகள் உண்டு. ஜிஎஸ்டிஎன் என்ற பொது தளத்தில் ஒருமுறை வரி செலுத்துபவர் பதிவு செய்துவிட்டால், இரண்டு இ-லெட்ஜர்கள் (பணம் மற்றும் இன்புட் டேக்ஸ் கிரெடிட் லெட்ஜர்) மற்றும் மின்னணு செலுத்தப்பட வேண்டிய வரி அறிக்கை ஆகியவை

தானாகவே உருவாகிவிடும். அவை நம்முடைய டேஷ்போர்டில் எப்போதும் பார்க்கும் வகையில் இருக்கும்.

கேள்வி 11: செலுத்தப்பட வேண்டிய வரி அறிக்கை என்பது என்ன?

பதில்: செலுத்தப்பட வேண்டிய வரி அறிக்கை என்பது வரி செலுத்துபவர் செலுத்த வேண்டிய குறிப்பிட்ட மாதத்துக்கான மொத்த வரி விவரங்களையும் கொண்டிருக்கும்

கேள்வி 12: கேஷ் லெட்ஜர் என்பது என்ன?

பதில்: கேஷ் லெட்ஜர் என்பது பணம் மூலம் செய்யப்பட்ட அனைத்து வைப்புகள், மற்றும் வரி செலுத்துபவரின் கணக்கில் செய்யப்பட்டுள்ள டிடிஎஸ் / டிசிஎஸ் ஆகியவற்றின் விவரங்களும் அடங்கிய அறிக்கை ஆகும். இந்தத் தகவல்கள் நிகழ் நேரத்தில் (Real Time) செயல்படுத்தப்படுகின்றன. இந்த லெட்ஜரை ஜிஎஸ்டி கணக்கில் செய்யத்தக்க எந்தப் பரிவர்த்தனைகளுக்கும் பயன்படுத்திக்கொள்ளலாம்.

கேள்வி 13: இன்புட் டேக்ஸ் கிரெடிட் லெட்ஜர் என்பது என்ன?

பதில்: மாத கணக்குத் தாக்கலில் செல்ஃப்-அசெஸ்டு செய்யப்பட்ட இன்புட் டேக்ஸ் கிரெடிட் விவரங்கள் இன்புட் டேக்ஸ் கிரெடிட் லெட்ஜரில் இடம்பெறும். இந்த லெட்ஜரில் உள்ள கிரெடிட் ஆனது வரி செலுத்துவதற்காக மட்டுமே பயன்படுத்தப்படும் மற்றும் வட்டி, அபராதம், மற்றும் பிற கட்டணங்கள் செலுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட மாட்டாது.

கேள்வி 14: ஜிஎஸ்டிஎன் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் இடையிலான தொடர்பு என்ன?

பதில்: ஜிஎஸ்டிஎன் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் (சிபிஎஸ்) இடையிலான தொடர்பானது ரியல் டைமில் செயல்படும். சிபிஜஎன் (CPIN)

ஆனது தானாகவே வங்கி வழியாக மின்னணு சரிபார்த்தல் நிகழ்வுக்காக அனுப்பப்படும் மற்றும் வரி மற்றும் கட்டணங்களைப் பெறுவது மற்றும் பரிவர்த்தனை விண்ணப்பச் சீட்டு எண் (CIN) வங்கிகள் தானாகவே ஜிஎஸ்டிஎன் பொதுத்தளத்துக்கு அனுப்பப்பட்டு பரிவர்த்தனை விண்ணப்பத்தின் ஒப்புதல் நிறைவுசெய்யப்பட்டதை உறுதி செய்யும். இந்த செயல்முறையில் வங்கி காசாளர், கணக்காளர் அல்லது வரி செலுத்துபவர் உட்பட எந்த மனிதத் தலையீடும் இருக்காது.

கேள்வி 15: வரி செலுத்துபவர் பல முறை பரிவர்த்தனை விண்ணப்பங்களைச் செய்ய முடியுமா?

பதில்: ஆம், வரி செலுத்துபவர் பரிவர்த்தனை விண்ணப்பச் சீட்டுகளைப் பகுதியாக நிரப்பி, தற்காலிகமாக சேமித்து வைத்துக்கொண்டு பின்னர் கூட நிறைவு செய்ய முடியும். சேமிக்கப்பட்ட விண்ணப்பம் நிறைவு செய்வதற்கு முன் ‘திருத்தம்’ செய்வதற்கும் அனுமதிக்கப்படுகிறது. வரி செலுத்துபவர் விண்ணப்பத்தை நிறைவு செய்த பிறகு, வரி செலுத்துவதற்கான பரிவர்த்தனையைச் செய்ய விண்ணப்பத்தை ஜென்ரேட் செய்யலாம். பணம் செலுத்துபவர் அந்த விண்ணப்பத்தைத் தனது பதிவுக்காக அச்சு எடுத்துக்கொள்ளும் வசதியும் உள்ளது.

கேள்வி 16: ஆன்லைனில் உருவாக்கப்பட்ட விண்ணப்பத்தை திருத்த முடியுமா?

பதில்: முடியாது. பரிவர்த்தனை விண்ணப்பத்தை உருவாக்க வரி செலுத்துபவர் அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட நபர் ஜிஎஸ்டிஎன் தளத்தில் உள்நுழைந்த பிறகு வரி செலுத்த வேண்டிய விவரங்களை உள்ளிட வேண்டும். பின்னர் நிறைவு செய்தாக இருந்தால் இடையில் விண்ணப்பத்தை சேமித்துக்கொள்ள முடியும். ஆனால் ஒருமுறை விண்ணப்பம் நிறைவு செய்யப்பட்டு சிபிஐஎன் எண் உருவாக்கப்பட்டுவிட்டால், பிறகு எந்த மாற்றங்களையும் அதில் செய்ய முடியாது.

கேள்வி 17: பரிவர்த்தனை விண்ணப்பச் சீட்டுக்கு வாலிட்டி காலம் இருக்கிறதா?

பதில்: ஆம், பரிவர்த்தனை விண்ணப்பச் சீட்டு உருவாக்கப்பட்டதிலிருந்து 15 நாட்களுக்கு அதன் வாலிட்டி இருக்கும். பின்னர் சிஸ்டத்திலிருந்து நிக்கப்பட்டுவிடும். ஆனாலும், தேவையென்றால் வரி செலுத்துபவர் வசதிக்கேற்ப மற்றொரு விண்ணப்பச் சீட்டை உருவாக்கிக் கொள்ளலாம்.

கேள்வி 18: சிபிஜஎன் என்பது என்ன?

பதில்: சிபிஜஎன் என்பதன் விரிவாக்கம் பொது தள அடையாள எண் (Common Portal Identification Number -CPIN). இது பரிவர்த்தனை விண்ணப்பச் சீட்டு உருவாக்கத்தின் போது வழங்கப்படும். 14 இலக்க எண் கொண்ட இந்த சிபிஜஎன் எண்ணை வைத்து விண்ணப்பச் சீட்டை அடையாளம் காண முடியும். மேலே குறிப்பிட்டது போல, சிபிஜஎன் எண்ணும் 15 நாட்கள் மட்டுமே வாலிட்டி கொண்டது.

கேள்வி 19: சிஜஎன் என்பது என்ன, அதன் வேலை என்ன?

பதில்: சிஜஎன் என்பதன் விரிவாக்கம் விண்ணப்ப அடையாள எண் (CIN- Challan Identification Number). 17 இலக்க எண் கொண்ட இதன் இதில் 14 இலக்கங்கள் சிபிஜஎன் மற்றும் 3 இலக்கமானது வங்கியின் அடையாள எண் ஆகும். சிஜஎன் என்பது அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள்/ ரிசர்வ் வங்கி ஆகியவற்றால் பரிவர்த்தனை நிறைவடைந்து, அரசு கணக்கில் வரவு வைத்த பிறகு உருவாக்கப்படுகின்றது. இந்த எண் உருவாக்கம் தான் பரிவர்த்தனை நடந்ததற்கும், அரசுக் கணக்கில் வரவு வைத்ததற்குமான அடையாளம். சிஜஎன் எண் வரி செலுத்துபவருக்கும், ஜிஎஸ்டிஎன் தளத்துக்கும் வங்கி தரப்பிலிருந்து தெரிவிக்கப்படும்.

கேள்வி 20. வரி செலுத்துபவர் முந்தைய மாதங்களுக்கான வரிகளையும் செலுத்த வேண்டும் எனில், வரி செலுத்துதலின் வரிசைகள் என்பது என்னவாக இருக்கும்?

பதில்: பிரிவு 49(8) நடப்பு வரிக் கணக்கு தாக்கல் தாண்டி செலுத்தப்பட வேண்டிய வரி விவரங்களின் வரிசைகளை நிர்ணயிக்கிறது. அதன்படி, செலுத்தப்பட வேண்டிய வரி வரிசைகள் பின்வருமாறு; முதலில் செல்ஃப்-அசெஸ் செய்யப்பட்ட வரி மற்றும் முந்தைய காலங்களின் பாக்கி கட்டணங்கள்; அதன் பிறகு நடப்பு செல்ஃப் அசெஸ்டு வரி மற்றும் பிற கட்டணங்கள்; பின்னர் பிரிவு 73 அல்லது 74இன் கீழ் செலுத்த வேண்டியது உட்பட வேறு ஏதேனும் கட்டங்கள் செல்த்த வேண்டியிருந்தால் செலுத்தப்பட வேண்டும். இந்த வரிசையில் தான் பரிவர்த்தனைகள் செயல்படுத்தப்பட வேண்டும்.

கேள்வி 21: மேலே குறிப்பிடப்பட்டுள்ள "பிற கட்டணங்கள்" என்பது எதைக் குறிக்கிறது?

பதில்: "பிற கட்டணங்கள்" என்பது வட்டி, அபராதம், கட்டணங்கள் மற்றும் சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் செலுத்தப்பட வேண்டிய பிற கட்டணங்கள் ஆகியவற்றைக் குறிக்கிறது.

கேள்வி 22: இ-எஃப்பிபி (E-FPB) என்றால் என்ன?

பதில்: இ-எஃப்பிபி என்பது எலக்ட்ரானிக் ஃபோகல் பாயிண்ட் பிரான்ச்சின் சுருக்கம். இவை ஜிஎஸ்டி வரி கட்டணங்களைப் பெறுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் கிளைகள் ஆகும். ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட வங்கியும், இந்தியா முழுவதுமான பரிவர்த்தனைகளுக்கு ஒரே ஒரு இ-எஃப்பிபி கிளையை மட்டுமே வைத்திருக்க வேண்டும். இந்த இ-எஃப்பிபி கிளை ஒவ்வொரு அரசு துறைகளின் தலைமை அலுவலகத்துக்கும் ஒரு கணக்கைத் தொடங்க வேண்டும். மொத்தம் 38 கணக்குகள் (சிஜிஎஸ்டி, ஐஜிஎஸ்டி கணக்குகள் மற்றும் மாநிலங்கள்/யூனியன் பிரதேச அரசுகளுக்கான எஸ்ஜிஎஸ்டி கணக்குகள்) தொடங்கப்பட வேண்டும். இ-எஃப்பிபி மூலம் பெறப்படும் வரி மற்றும் கட்டணங்கள், அந்த இ-எஃப்பிபி கிளை வசம் வைத்துள்ள சரியான ஜிஎஸ்டி கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும். நெஃப்ட் / ஆர்டிஜிஎஸ் பரிவர்த்தனைகளுக்கு ரிசர்வ் வங்கி இ-எஃப்பிபி கிளையாக செயல்படும்.

கேள்வி 23: டிடிஎஸ் (TDS) என்பது என்ன?

பதில்: டிடிஎஸ் (TDS) என்பது ஆதாரத்தில் கழிக்கப்படும் வரி ஆகும். பிரிவு 51 படி, அரசு மற்றும் அரசு மேற்பார்வையில் மற்றும் பிற குறிப்பிட்ட நிறுவனங்கள் காண்ட்ராக்ட் பரிவர்த்தனைகளைச் செயல்படுத்துகிறது. அதாவது ரூ. 2.5 லட்சத்துக்கும் மேலான சப்ளைக்கான மொத்த மதிப்பும் காண்ட்ராக்ட் பரிவர்த்தனைகளில் தான் செயல்படுத்தப்படும். இதுபோன்ற காண்ட்ராக்ட்டுகளின் கீழ் செய்யப்படும் பரிவர்த்தனைகளின் போது, குறிப்பிட்ட அரசு/ஆணையம் சப்ளையின் மொத்த மதிப்பில் 1% கழிக்கப்பட்டு, குறிப்பிட்ட ஜிஎஸ்டி கணக்கில் வரவு வைக்கப்படும்.

கேள்வி 24: இந்த டிடிஎஸ் செயல்முறையில் சப்ளையர் தன்னுடைய வரிக் கணக்கு தாக்கல் செய்யும்போது எத்தகைய பங்கு வகிக்கிறார்?

பதில்: டிடிஎஸ்-ஆக காட்டப்படும் எந்தவொரு தொகையும் குறிப்பிட்ட சப்ளையரின் மின்னணு கேஷ் லெட்ஜரில் குறிப்பிடப்படும். அவர் இந்த தொகையை அவர் தன்னுடைய வரி, வட்டி மற்றும் பிற கட்டணங்களைச் செலுத்தப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

கேள்வி 25: டிடிஎஸ் செயல்முறைக்கான கணக்கைச் செயல்படுத்த விரும்புபவர் அதனை எப்படிச் செயல்படுத்துவது?

பதில்: டிடிஎஸ் செயல்முறைக்கான கணக்கை பின்வரும் வழிகளில் செயல்படுத்தலாம்:

1. டிடிஎஸ் செயல்முறைக்கான கணக்கைச் செயல்படுத்த விரும்புபவர் சிஜிஎஸ்டி / எஸ்ஜிஎஸ்டி சட்டம் பிரிவு 24ன் கீழ் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டும்.

2. பெறப்பட்ட டிடிஎஸ் தொகையை அடுத்து வரும் மாதத்தின் 10வது நாள் ஜிஎஸ்டிஆர் 7இன் படி வரவு வைக்க வேண்டும்.

3. டிடிஎஸ் என்று டெபாசிட் செய்யப்பட்ட விவரங்கள் சப்லையரின் எலக்ட்ரானிக் கேஷ் லெட்ஜரில் குறிப்பிடப்பட வேண்டும்.

4. அரசுக் கணக்கில் டிடிஎஸ் தொகையை வரவு வைத்த பிறகு 5 நாட்களில் அதற்கான சான்றிதழை டிடிஎஸ் கழிக்கப்பட்டவருக்கு வழங்க வேண்டும். தவறினால் ஒரு நாளைக்கு ரூ. 100 வீதம், ரூ. 5000 வரை டிடிஎஸ் கணக்கைச் செயல்படுத்துபவர் கட்ட வேண்டியிருக்கும்.

கேள்வி 26: ஆதாரத்தில் சேர்க்கப்பட்ட வரி (TCS) என்பது என்ன?

பதில்: சிஜிஎஸ்டி / எஸ்ஜிஎஸ்டி சட்டம் பிரிவு 52இன்படி இது இ-காமர்ஸ் ஆபரேட்டர்களுக்கு மட்டுமே பொருந்தும். அனைத்து இ-காமர்ஸ் ஆபரேட்டர்கள், ஏஜெண்டுகள் அல்லாதவர்கள் கணக்கிடப்பட்ட தொகை, "சப்ளையின் மொத்த மதிப்பில்" ஒரு சதவிகிதத்துக்கு மிகாமல் சேகரிக்கப்படும். மாத அடிப்படையில் அந்தத் தொகை இ-காமர்ஸ் ஆபரேட்டர்கள் மூலம் குறிப்பிட்ட ஜிஎஸ்டி கணக்கில் அடுத்துவரும் மாதத்தின் 10ஆம் தேதியில் வரவு வைக்கப்பட வேண்டும். டிசிஎஸ் ஆக வைப்பு வைக்கப்படும் தொகையானது சப்ளையரின் எலக்ட்ரானிக் கேஷ் லெட்ஜரில் பதிவு செய்யப்படும்.

கேள்வி 27: "வரி செலுத்துவதற்குட்பட்ட சப்ளையின் மொத்த மதிப்பு" என்றால் என்ன?

பதில்: "வரி செலுத்துவதற்குட்பட்ட சப்ளையின் மொத்த மதிப்பு" என்பது வரி செலுத்துவதற்குட்பட்ட பொருட்கள் அல்லது சேவைகள் ஒரு மாதம் முழுவதும் ஆபரேட்டரின் வழியாக பதிவு செய்யப்பட்ட வரி செலுத்துவோர் செய்யும் அனைத்து சப்ளைகளின் ஒருங்கிணைக்கப்பட்ட மொத்த மதிப்பாகும். பிரிவு 9(5)ன் கீழ் குறிப்பிடப்பட்ட சேவைகள் மட்டும் இதில் விலக்கு அளிக்கப்படுகிறது. மொத்த மதிப்பில் இவற்றின் மதிப்பு கழிக்கப்பட்டு சப்ளையரிடம் கொடுக்கப்படும்.

கேள்வி 28: ஜிஎஸ்டிஎன் தளத்தில் ஜிஎஸ்டி பரிவர்த்தனைகளுக்காக கிரெடிட் கார்டு விவரங்கள் முன்கூட்டியே பதிவு செய்யப்பட வேண்டியது அவசியமா?

பதில்: ஆம். வரி செலுத்துபவர் தன்னுடைய கிரெடிட் கார்டு விவரங்களை பொது ஜிஎஸ்டிஎன் தளத்தில், வரி செலுத்துவதற்கும் முன் பதிவு செய்ய வேண்டும். ஜிஎஸ்டிஎன் தரப்பிலிருந்து, வரி செலுத்துபவரின் கிரெடிட் கார்டு விவரங்கள், அந்த சேவையை வழங்கும் வங்கிகள் மூலம் சரிபார்க்கப்பட்டு உறுதி செய்யப்படும். கிரெடிட் கார்டு பயன்படுத்தி செய்யும் பரிவர்த்தனைகள், தொழில்கள் தடையில்லாமல் நடக்க வேண்டும் என்பதற்காக எந்தவித வரம்பும் இல்லாமல் அனுமதிக்கப்படுகிறது.

-------------

## 8. மின்னணு வர்த்தகம்

**கேள்வி** 1. **மின்னணு வர்த்தகம் என்றால் என்ன**?

**பதில்**: எண்ணியமாக்கப்பட்ட பொருட்கள் உள்ளிட்ட சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டையும் மின்னணு நெட்வொர்க் மூலம் சப்ளை செய்வதே மின்னணு வர்த்தகம் என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

**கேள்வி** 2. **மின்னணு வர்த்தக ஆபரேட்டர் என்பவர் யார்**?

**பதில்**; மின்னணு வர்த்தகத்தின் பின்னணியில் எண்ணியமான/மின்னணு வசதியைச் சொந்தமாக வைத்துள்ளவர்/செயல்படுத்துபவர்/நிர்வகிப்பவர் மின்னணு வர்த்தக ஆபரேட்டர் எனப்படுவார்.

**கேள்வி** 3. **மின்னணு வர்த்தக ஆபரேட்டர் பதிவு செய்துகொள்ள வேண்டியது அவசியமா**?

**பதில்**: ஆமாம். ஆரம்ப விலக்கின் ஆதாயம் மின்னணு வர்த்தக ஆபரேடருக்கு இருக்காது; மேலும் அவர்கள் சப்ளை செய்யும் பொருட்களின் மதிப்பு எப்படி இருந்தாலும் அவர்கள் பதிவு செய்து கொள்ள வேண்டியதாக இருக்கும்.

**கேள்வி** 4. **சரக்குகள்/சேவைகளை மின்னணு வர்த்தகம் மூலம் சப்ளை செய்யும் ஆபரேட்டருக்கு ஆரம்பகால விலக்கு கிடைக்குமா**?

**பதில்**: கிடைக்காது. சப்ளை செய்யும் பொருட்களின் மதிப்பு என்னவாக இருந்தாலும் ஆரம்பகால விலக்கு இந்த சப்ளையர்களுக்குக் கிடைக்காது. மின்னணு வர்த்தகம் மூலம் ஆபரேட்டர் சப்ளை செய்திருந்தால் மட்டுமே இத்தேவை பூர்த்தியாகும்; இதற்கான வரையையும் அவர் பெற்றுக் கொள்வார்.

**கேள்வி** 5. **வழக்கமான சப்ளையருக்குப் பதிலாகத் தான் சப்ளை செய்யும் பொருட்கள்/தரும் சேவைக்கான வரியை மின்னணு வர்த்தக ஆபரேட்டர் செலுத்துவாரா**?

**பதில்**: ஆம்; ஆனால் சில குறிப்பிடப்பட்ட சேவைகளுக்கு மட்டும்தான் இப்படி. அவ்வாறான சமயங்களில் சேவைகள் மின்னணு வர்த்தகம் மூலம் பெறப்பட்டால் அவற்றைத் தரும் ஆபரேட்டரால் வரி கட்டப்படும்; தரப்படும் சேவக்கும் வரிகட்டும் இத்தகைய மின்னணு வர்த்தக ஆபரேட்டருகளுக்கு சட்டத்தின் அனைத்துப் பிரிவுகளும் பொருந்தும்.

**கேள்வி** 6. **குறிப்பிடப்பட்ட சில சேவைகளை வழங்கி**, **வரி கட்ட வேண்டிய நிலையிலிருக்கும் மின்னணு வர்த்தக ஆபரேட்டர்களுக்கு ஆரம்பகால விலக்கு இருக்குமா**?

**பதில்**: இருக்காது. குறிப்பிடப்பட்ட சில சேவைகளை வழங்கி, வரி கட்ட வேண்டிய நிலையிலிருக்கும் மின்னணு வர்த்தக ஆபரேட்டர்களுக்கு ஆரம்ப கால வரி விலக்கு தரப்பட மாட்டாது.

**கேள்வி** 7. **வரி வசூலிக்கும் சோர்ஸ்** (TCS) **என்றால் என்ன**?

**பதில்**: மின்னணு வர்த்தக முறையில் சப்ளை செய்யப்படும் பொருட்களின் நிகர மதிப்பின் ஒரு சதவீதத் தொகையை மின்னணு வர்த்தக ஆபரேட்டர் தானே வசூல் செய்து கொள்ளலாம்; இவ்வித சப்ளைகள் மூலம் வசூலிக்கப் படும் இத்தொகையே 'வரி வசூலிக்கும் சோர்ஸ்' (TCS) எனப்படுகிறது.

**கேள்வி** 8. **மின்னணு வர்த்தகத்தில் வாடிக்கையாளர்கள் தாம் வாங்கும் பொருட்களை நிராகரிப்பது மிகப் பொதுவானது**. **இவ்வாறாத் திரும்பத் தரப்படும் பொருட்களை நிறுவனங்கள் எவ்வாறு அட்ஜஸ்ட் செய்கின்றன**?

**பதில்**: ஒரு மின்னணு வர்த்த நிறுவனம் தனது சப்ளைகளின் நிகர மதிப்பின் மீது கணக்கிட்டுத்தான் வரியை வசூலிக்கிறது. வேறு விதமாகக் கூறினால் நிராகரிக்கப்படும் சப்ளைகள் வரி விதிக்கப்பட வேண்டிய சப்ளைகளின் சராசரி மதிப்பில் அட்ஜஸ்ட் செய்யப்படுகின்றன.

**கேள்வி** 9. '**வரி விதிக்கப்படும் சப்ளைகளின் நிகர மதிப்பு**' **என்றால் என்ன**?

**பதில்**: 'சப்ளைகளின் நிகர மதிப்பு' என்பது வரி விதிக்கப்பட வேண்டிய பொருட்கள் அல்லது/மற்றும் சேவைகளின் சப்ளையின் சராசரி மதிப்பாகும்; மின்னணு வர்த்தக ஆபரேட்டரால் வரி முழுவதும் செலுத்தப்பட வேண்டிய தன்மையுடைய சேவைகள் இதில் அடங்காது. குறிப்பிட்ட மாதத்தில் சப்ளையர்களிடம் திருப்பி அனுப்பப்பட்ட (வரி உள்ள) சப்ளைகளின் சராசரி மதிப்பைக் கழித்த பின் வரும் இத்தொகையானது அனைத்து பதிவு பெற்ற நபர்களாலும் மின்னணு வர்த்தக ஆபரேட்டர் மூலம் அம்மாதத்தில் செலுத்தப் பட்டிருக்கலாம்.

**கேள்வி** 10. **சப்ளையர்களின் சார்பில் ஒவ்வொரு மின்னணு வர்த்தக ஆபரேட்டரும் வரியை வசூலித்தே ஆக வேண்டுமா**?

**பதில்**: ஆம்; சப்ளையின் அடிப்படையின் மின்னணு வர்த்தக ஆபரேட்டரால் வசூலிக்கப்படும் வரியை ஒவ்வொரு மின்னணு வர்த்தக ஆபரேட்டரும் வசூலித்தே ஆக வேண்டும்.

**கேள்வி** 11. மின்னணு வர்த்தக ஆபரேட்டர் **அவ்வாறு வரியை வசூலிக்க உகந்த நேரம்** (**காலம்**) **எது**?

**பதில்**: சப்ளை டெலிவரி செய்யப்படும் மாதத்திலேயே அதற்கான வரியை மின்னணு வர்த்தக ஆபரேட்டர் வசூலிக்கலாம்.

**கேள்வி** 12. **வசூலாகும்** TCS **தொகையை அரசாங்கக் கணக்கில் செலுத்த மின்னணு வர்த்தக ஆபரேட்டருக்கு இருக்கும் கால அளவு என்ன**?

**பதில்**: மின்னணு வர்த்தக ஆபரேட்டரால் வசூலிக்கப்படும் தொகையானது தொகை வசூலிக்கப்பட்ட மாதம் முடிந்து 10 நாட்களுக்குள் பொருத்தமான அரசாங்கக் கணக்கில் செலுத்தப்பட்டாக வேண்டும்.

**கேள்வி** 13: TCS **தன்னால்தான் உருவாகிறது என்று சப்ளையர்கள் எப்படி நினைத்துக்கொள்ள முடியும்**?

**பதில்**: பொருத்தமான அரசுக் கணக்கில் மின்னணு வர்த்தக ஆபரேட்டரால் செலுத்தப்படும் TCS தொகை மின்னணு வர்த்தக ஆபரேட்டர் சமர்ப்பிக்கும் அறிக்கையின் அடிப்படையில் பதிவு பெற்ற சப்ளையரின் (வரி செலுத்தப்பட்ட வங்கிக் கணக்கின் சொந்தக்காரர்) பணக் கொள்கலனில் (cash ledger) காட்டப்பட வேண்டும். சப்ளைகள் அடிப்படையில் சப்ளையர் வரியைச் செலுத்துகையில் இது பயன்படுத்தப்பட வேண்டும்.

**கேள்வி** 14. **மின்னணு வர்த்தக ஆபரேட்டர் ஏதாவது அறிக்கையைச் சமர்ப்பித்தாக வேண்டுமா**? **எந்தெந்த விஷயங்கள் அவ்வறிக்கையில் இடம் பெற்றாக வேண்டும்**?

**பதில்**: ஆம்; மின்னணு மூலம் தரப்பட்ட சரக்குகள்/சேவைகள், சரக்கு/ சேவைகளின் வெளிப்புற சப்ளை, நிராகரிக்கப்பட்ட சரக்கு/சேவைகள் மற்றும் ஒவ்வொரு சப்ளை மாதத்திற்குப் பின்வரும் மாதத்தின் முதல் 10 நாட்களுக்குள் TCS-ஆக வசூலிக்கப்ப்ட்ட தொகை போன்ற விவரங்களை ஒவ்வொரு மின்னணு வர்த்தக ஆபரேட்டரும் ஒரு மின்னணு அறிக்கையின் மூலம் தெரிவித்தாக வேண்டும். ஒவ்வொரு ஆண்டிலும் நிதியாண்டு முடிந்த பின் வரும் டிசம்பர் 31-ஆம் தேதிக்குள் ஆண்டின் நிலவரத்தைக் கூறும் ஆண்டறிக்கையைச் சமர்ப்பிப்பதும் ஆபரேட்டரின் கடமையாகும்.

**கேள்வி** 15. **மின்னணு வர்த்தகத் துறையில் 'மேட்சிங்' என்பதன் கோட்பாடு என்ன**; **அது எவ்வாறு வேலை செய்யும்**?

**பதில்**: சப்ளை விவரங்கள் மற்றும் ஒவ்வொரு ஆபரேட்டரும் தன் அறிக்கையில் அம்மாதத்தில் வசூலானதாகக் கூறும் தொகை ஆகியவை சப்ளையர்கள் அம்மாதத்திற்கோ அல்லது முந்தைய மாதத்திற்கோ சமர்ப்பிக்கும் வெளிப்புற சப்ளை தொடர்பான விவரங்களோடு மேட்சிங் செய்யப்படும். வரி வசூலைக்கப்பட்ட வெளிப்புற சப்ளை பற்ற ஆபரேட்டர் தன் அறிக்கையில்

தந்துள்ள தகவல்கள் அது தொடர்பாக சப்ளையரிடம் உள்ள விவரங்களுடன் ‘மேட்சிங்’ ஆகவில்லையெனில் இப்பிரசினை பற்றி இரு தரப்பினருக்கும் தெரிவித்துவிடவேண்டும்.

**கேள்வி** 16. **விவரங்கள் ‘மேட்சிங்’ ஆகாமல் இருந்தால் என்ன நிகழும்**?

**பதில்**: செலுத்தப்பட்ட தொகைக்கு எதிரான சப்ளையின் மதிப்பு - அது தொடர்பான குறை சுட்டிக்காட்டப்பட்டு சப்ளையரால் அது அவரது மாதாந்திர ரிடர்னில் திருத்திக்கொள்ளப்படாமல் இருந்தால் - குறை பற்றி சப்ளையருக்குத் தெரிவிக்கபப்ட்ட மாதத்தின் அடுத்த மாதம் அவர் செலுத்த வேண்டிய தொகையுடன் இது கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளப்படும். அவரது நிலுவைத் தொகையில் இது சேர்க்கப்பட்ட பின் அந்த சப்ளையர் செலுத்தும் தேதியில் குறிப்பிடப்படும் குறிப்பிட்ட சப்ளைக்கான தொகையை வரியுடனும் வட்டியுடனும் செலுத்துவார்.

**கேள்வி** 17. **வருமான வரி அதிகாரிகளுக்குக் கூடுதலான அதிகாரங்கள் ஏதேனும் உள்ளனவா**?

**பதில்**: துணை ஆய்வாளர் பதவிக்குக் குறையாத பதவியில் இருக்கும் எந்த அதிகாரியும் குறிப்பிட்ட தகவல்களைக் கோரி மின்னணு ஆபரேட்டருக்கு நோட்டிஸ் பெறப்படும் தேதியிலிருந்து 15 வேலை நாட்களுக்குள் தகுந்த பதில் அனுப்பும்படி கோரும் நோட்டீஸை அனுப்பலாம்.

-------------------

## 9. வேலைப் பணி

கேள்வி 1: வேலைப் பணி என்றால் என்ன?

பதில்: வேலை என்றால் வேறொரு பதிவு செய்துள்ள, வரி செலுத்தும் நபரின் சரக்குகள் மீது ஒருரால் புரியப்படும் நிகழ்முறை (அ) செய்முறையைப் பற்றிப் புரிந்து கொள்வதாகும். வேறொருவரின் சரக்குகளைக் கையாளும் அல்லது ப்ராசஸ் செய்யும் நபர் 'வேலைப் பணியாளர்' என்றும் சரக்குகளுக்குச் சொந்தக்காரர் 'பணி அளிப்பவர்' என்றும் அழைக்கப்படுகின்றனர்.

23.03.1986 தேதியிட்ட அறிவிக்கை எண்.214/86-CE-ல் உள்ள வரையறையை விட மேற்சொன்ன வரையறை மிக விரிவானதாகும். இந்த அறிவிக்கையில் வேலைப் பணி என்றாலே உற்பத்திதான் எனப் பொருள் கூறும் விதத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. எனவே, 'வேலைப் பணி' என்பதன் வரையறை இப்போது அமல்படுத்தப்படப் போகும் GST வரி பின்னணியில் வேலைப்பணி தொடர்பான வரி விதித்தலின் அடிப்படைத் திட்டத்தில் உள்ள மாற்றங்களைப் பிரதிபலிக்கிறது.

கேள்வி 2: வரி செலுத்துபவரிடமிருந்து ஒரு வேலைப் பணியாளருக்கு அனுப்பப்படும் சரக்கு சப்ளையாகவும், GST வரிக்குட்பட்டதாகவும் ஆகுமா? ஆம் என்றால் ஏன் அப்படி ஆகிறது?

பதில்: சப்ளை என்பது விற்பனை, இடமாற்றம் உள்ளிட்ட அனைத்து சப்ளை வடிவங்களையும் உள்ளடக்கியதால் இது சப்ளையாகக் கருதப்படும். ஆயினும் நிபந்தனைகளுடன் கூடிய தகவல் தெரிவிக்கப்பட்ட்ட பதிவு செய்த வரி செலுத்தும் நபர் (பணி அளிப்பவர்) எவ்வளவு இன்புட்கள் மற்றும்/அல்லது கேபிடல் சரக்குகளையும் வரியின்றி வேலைப் பணிக்காக வேலைப்பணியாளருக்கு அனுப்பலாம்; அங்கிருந்து அது பிற வேலைப்பணியாளர்களுக்குச் செல்லலாம்; வரி செலுத்துபவர் அந்த இன்புட்களையும் கேபிடல் சரக்குகளையும் வேலைப் பணியாளர் தொழில் புரியும் இடத்திலிருந்து வேலை முடிந்த பின்னரோ அல்லது அவை அனுப்பப்பட்ட 1 வருடம்/3 வருடங்களுக்குள் இந்தியாவுக்குள் என்றால் வரி

செலுத்தியோ அல்லது ஏற்றுமதிச் சரக்கு என்றால் வரி செலுத்தாமலோ அதைத் திரும்ப எடுத்துக் கொண்டு வரலாம்.

கேள்வி 3: வேலைப் பணியாளர் கட்டாயம் பதிவு செய்தாக வேண்டுமா?

பதில்: ஆம்; வேலைப் பணி ஒரு சேவை என்பதால், அவரது நிகர லாபம் எதிர்பார்க்கப்படும் ஆரம்ப நிலையை விட அதிகமாக இருக்கும் பட்சத்தில் வேலைப் பணியாளர் கட்டாயம் பதிவு செய்ய வேண்டிய நிலையில் உள்ளார்.

கேள்வி 4: வேலைப் பணியாளரின் இடத்திலிருந்து நேரடியாக சப்ளை செய்யப்படும் பணி அளிப்பவரின் சரக்குகள் வேலைப் பணியாளரின் நிகர லாபக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுமா?

பதில்: மாட்டாது; அவை பணி அளிப்பவரின் நிகர லாபக் கணக்கில்தான் வரும். ஆயினும், வேலையைச் செய்து முடிக்க வேலைப் பணியாளர் பயன்படுத்தும் சரக்குகள் / சேவைகளின் மதிப்பு வேலைப் பணியாளர் சப்ளை செய்யும் சேவைகளின் மதிப்பில் சேர்த்துக்கொள்ளப்படும்.

கேள்வி 5: இன்புட்கள் கேபிடல் சரக்குகளையும் தனது இடத்திற்குக் கொண்டுவராமல் நேரடியாக வேலைப் பணியாளரின் இருப்பிடத்திற்கு பணி அளிப்பவர் அனுப்புவாரா?

பதில்: ஆம், பணி அளிப்பவர் அவ்வாறு செய்ய அவருக்கு அனுமதி உண்டு. அத்தகைய சூழலில் இன்புட் (அ) கேபிடல் சரக்கின் மீது பணி அளிப்பவரால் வரிக்கடன் பெறப்படும். இன்புட் / கேபிடல் சரக்குகளை 1-3 ஆண்டுகளுக்குள் திரும்பப் பெற்றாக வேண்டும்; அவ்வாறு பெறாவிட்டால் ஒரிஜினல் வர்த்தகப் பரிமாற்றம் சப்ளையாகக் கருதப்பட்டு அதற்கேற்ற வரியை பணி அளிப்பவர் செலுத்த நேரிடும்.

கேள்வி 6: இன்புட்கள் கேபிடல் சரக்குகளையும் வேலைப் பணியாளரின் இருப்பிடத்திலிருந்து தனது இடத்திற்குக் கொண்டு வராமல் நேரடியாக பணி அளிப்பவர் சப்ளை செய்வாரா?

பதில்: ஆம். பதிவு செய்யாத ஒரு வேலைப் பணியாளரின் முகவரியைத் தான் தொழில் புரியும் கூடுதல் இடமாக பணி அளிப்பவர் அறிவித்திருந்தால் அவ்வாறு செய்யலாம். வேலைப் பணியாளர் பதிவு செய்தவராக இருந்தால், சரக்குகள் அவரது இருப்பிடத்திலிருந்தே சப்ளை செய்யப்படலாம். ஆணையாளர் அறிவிக்கும் வேலைப் பணிக்கான சரக்கை நேரடியாக வேலைப் பணியாளரின் இருப்பிடத்திலிருந்து சப்ளை செய்யலாம்.

கேள்வி 7: வேலைப் பணியாளரின் இருப்பிடத்தைத் தனது கூடுதல் தொழில் புரியும் இடமாக அறிவிக்காமல் எத்தகைய சூழலில் பணி அளிப்பவரால் சரக்கை நேரடியாக வேலைப் பணியாளரின் இருப்பிடத்திலிருந்து சப்ளை செய்ய முடியும்?

பதில்: வேலைப் பணியாளர் தொழில் புரியுமிடத்தைத் தனது கூடுதல் தொழில் புரியுமிடமாக அறிவிக்காமல் சரக்கை இருவித சூழல்களில் பணி அளிப்பவரால் நேரடியாக சப்ளை செய்யமுடியும்: வேலைப் பணியாளர் பதிவு பெற்ற வரி செலுத்தும் நபராக இருந்தால் (அல்லது) ஆணையாளரின் அறிவிப்பின்படி அத்தகைய சரக்குகளை சப்ளை செய்வதில் பணி அளிப்பவர் ஈடுபட்டிருந்தால்.

கேள்வி 8: வேலைப் பணியாளருக்கு அனுப்பப்படும் இன்புட்/கேபிடல் சரக்கை ITC-ஆக எடுக்கத் தேவைப்படும் சட்டப் பிரிவுகள் யாவை?

பதில்: இன்புட்/கேபிடல் சரக்கைத்தான் தொழில் புரியுமிடத்தில் பெற்று பின் அதைத் திருப்பி அனுப்பினாலும் அவை முதலில் தனது இடத்திற்கு வராமல் வேலைப்பணியாளரின் இடத்துக்கே நேரடியாக அனுப்பப்பட்டாலும், வேலைப்பணியாளருக்கு அனுப்பப்படும் இன்புட்/கேபிடல் சரக்கின் மீதான வரியைக் கடனாகப் பெற பணி அளிப்பவருக்கு உரிமை உண்டு. ஆயினும் வேலைப் பணியைச் செய்து முடித்தவுடன் அவை அனுப்பப்பட்ட 1-3

ஆண்டுகளுக்குள் இன்புட்/கேபிடல் சரக்குகள் மீண்டும் திரும்பப் பெற்றாக வேண்டும் அல்லது வேலைப் பணியாளரின் இடத்திலிருந்து சப்ளை செய்யப்பட்டாக வேண்டும்.

கேள்வி 9: குறிப்பிட்ட கால அளவுக்குள் வேலைப் பணியாளரின் இடத்திலிருந்து இன்புட்/கேபிடல் சரக்குகள் திரும்பப் பெறப்படாவிட்டால் அல்லது சப்ளை செய்யப்படாவிட்டால் என்ன நிகழும்?

பதில்: குறிப்பிட்ட கால அளவுக்குள் வேலைப் பணியாளரின் இடத்திலிருந்து இன்புட்/கேபிடல் சரக்குகள் திரும்பப் பெறப்படாவிட்டால் (அ) சப்ளை செய்யப்படாவிட்டால் அவைகள் பணி அளிப்பவரால் வேலைப் பணியாளருக்கு பணி அளிப்பவரி வெளியே அனுப்பிய அதே தினத்தில் (அல்லது இன்புட்/கேபிடல் சரக்குகள் வேலைப் பணியாளரின் இடத்துக்கு நேரடியாக அனுப்பப்பட்டு அவரால் பெறப்பட்ட தேதியில்) சப்ளை செய்யப்பட்டதாக அர்த்தம். ஆகவே, பணி அளிப்பவர் இதற்கு வரி செலுத்த நேரிடும்.

கேள்வி 10. கருவி/பொருட்கள் உள்ளிட்ட சில கேபிடல் சரக்குகளை ஒரு முறை பயன்படுத்தினால் மீண்டும் பயன்படுத்த முடியாது; பொதுவாக அவற்றை ஸ்கிராப்பாக விற்கப்படுகின்றன. வேலைப் பணி சட்டங்களில் இதுபோன்ற சரக்குகளை எப்படிக் கையாளுகின்றனர்?

பதில்: கேபிடல் சரக்குகளை மூன்றாண்டுகளுக்குள் திருப்பிக் கொண்டு வரும் சட்ட நிபந்தனை மோல்டுகள், சாயங்கள், கருவிகள்/பொருட்கள் அல்லது சிறு கருவிகளுக்குப் பொருந்தாது.

கேள்வி 11. வேலைப் பணியில் உருவாகும் கசடு/ஸ்கிராப்பை எப்படிக் கையாள்வது?

பதில்: வேலைப் பணியாளர் தான் தொழில் புரியும் இடத்திலிருந்து வரி செலுத்தப்படும் பட்சத்தில் அவர் பதிவு பெற்றவராக இருந்தால் வேலைப்

பணியில் உருவாகும் கசடு/ஸ்கிராப்பை நேரடியாக சப்ளை செய்யலாம்; அவ்வாறு பதிவு செய்யாதபட்சத்தில் அவை வரி செலுத்தப்பட்ட பின் பணி அளிப்பவரால் சப்ளை செய்யப்படும்.

கேள்வி 12. இடைவழிச் சரக்குகளும் வேலைப் பணிக்கு அனுப்பப்படுமா?

பதில்: ஆம். வேலைப் பணியில் 'இன்புட்' என்றால் வேறு நிகழ்முறையைச் சார்ந்த இடைவழிச் சரக்குகள் அல்லது இன்புட்களில் பணி அளிப்பவர் (அ) வேலைப் பணியாளர் செய்யும் செய்முறை ஆகியவை அடங்கும்.

கேள்வி 13. வேலைப் பணியுடன் தொடர்புடைய கணக்கைப் பராமரிப்பது யாருடைய பொறுப்பு?

பதில்: வேலைப் பணியுடன் தொடர்புடைய இன்புட்/கேபிடல் சரக்குகளின் முறையான கணக்குகளைப் பராமரிக்கும் பொறுப்பு பணி அளிப்பவருடையதாகும்.

கேள்வி 14: வேலைப் பணி தொடர்பான சட்டப் பிரிவுகள் அனைத்து வகைச் சரக்குகளுக்கும் பொருந்துமா?

பதில்: பதிவு பெற்ற வரிசெலுத்தும் நபர் வரிக்கான சரக்கை அனுப்பும்போதுதான் வேலைப்பணி தொடர்பான சட்டப்பிரிவுகள் பொருந்தும். வேறு வகையில் சொன்னால், விலக்கு பெற்ற வரியற்ற சரக்குகளுக்கு (அ) பதிவு செய்த வரிசெலுத்தும் நபர் தவிர வேறொருவர் சரக்கை அனுப்பினால் இவ்விதிமுறைகள் பொருந்தாது.

கேள்வி 15: வேலைப் பணி தொடர்பான சட்டப் பிரிவுகளை முதலாமவர் பின்பற்ற வேண்டியது கட்டாயமான ஒன்றா?

பதில்: இல்லை. சிறப்பான செய்முறையைப் பின்பற்றாமல் GST தொகையைச் செலுத்தியப் பின் இன்புட்/கேபிடல் சரக்குகளை பணி அளிப்பவர் அனுப்பலாம். அச்சமயத்தில் வேலைப் பணியாளர் இன்புட் வரிக்கடனை எடுத்து ப்ராசஸ்

செய்யப்பட்ட சரக்குகளை (வேலைப் பணி முடிந்தவுடன்) GST செலுத்தப்பட்ட பின்னர் சப்ளை செய்வார்.

கேள்வி 16. வேலைப் பணியாளரும் பணி அளிப்பவரும் ஒரே மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்தில்தான் இருந்தாக வேண்டுமா?

பதில்: வேலைப் பணிக்கான சட்டப் பிரிவுகள் IGST சட்டட்திலும் UTGST சட்டத்திலும் பின்பற்றப்பட்டுள்ளதால் இதற்கு அவசியம் இல்லை. எனவே, பணி அளிப்பவரும் வேலைப் பணியாளரும் ஒரே மாநிலத்தில்/யூனியன் பிரதேசத்தில் இருக்கலாம் (அ) வெவ்வேறு மாநிலம்/யூனியன் பிரதேசத்தில் இருக்கலாம்.

---------------------------

## 10. இன்புட் வரிக்கடன்

**கேள்வி 1. இன்புட் வரி என்றால் என்ன?**

**பதில்**: பதிவு பெற்ற ஒருவருக்கு சப்ளை செய்யப்படும் சரக்குகள் அல்லது/மற்றும் சேவைகளின் மீது விதிக்கப்படும் மத்திய வரி (CGST), மாநில வரி (SGST), ஒருங்கிணைந்த வரி (IGST) அல்லது யூனியன் பிரதேச வரியே (UTGST) இன்புட் எனப்படும். இதில் தலைகீழ் கட்டண முறையில் செலுத்தப்படும் வரி, ஒருங்கிணப்பு வரிச் சரக்கு, இறக்குமதி செய்யப்படும் சரக்குகளின் மீதான சேவை வரி ஆகியவை அடங்கும். தொகுப்பு வரியில் செலுத்தப்பட்ட வரி இதில் அடங்காது.

**கேள்வி 2. தலைகீழ் கட்டண முறையில் செலுத்தப்படும் GST இன்புட் வரியாகக் கருதப்படுமா?**

**பதில்:** ஆம். இன்புட் வரி பற்றி வரையறுக்கும்போது தலைகீழ் கட்டணமாகச் செலுத்தப்பட்ட வரியும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

**கேள்வி 3: இன்புட் வரியில் இன்புட் சரக்குகள், இன்புட் சேவைகள் மற்றும் கேபிடல் சரக்குகளின் மீது செலுத்திய வரி (CGST/IGST/SGST) அடங்குமா?**

**பதில்:** ஆம்; இதில் இன்புட் சரக்குகள், இன்புட் சேவைகள் மற்றும் கேபிடல் சரக்குகளின் மீது செலுத்திய வரி அடங்கும். கேபிடல் சரக்குகளின் மீது செலுத்தப்பட்ட வரிக்கடனை ஒரே தவணையில் செலுத்த அனுமதி உண்டு.

**கேள்வி 4: சரக்குகள்/சேவைகள் சப்ளைக்காக செலுத்தப்படும் அனைத்து இன்புட் வரிக்கான கடனும் GST-யில் அனுமதிக்கப்படுகிறதா?**

**பதில்:** சரக்குகள் அல்லது/மற்றும் சேவைகள் மீது சுமத்தப்படும் இன்புட் வரி மீதான கடனை எடுத்துக் கொள்ள பதிவு செய்த ஒருவருக்கு உரிமை உண்டு; சில நிபந்தனைகள்/கட்டுப்பாடுகளின் பேரில் தொழில் முன்னேற்றத்துக்காகப் பயன்படுத்தப்படும் (அ) அதற்கெனப் பயன்படுத்தும் நோக்கம் வெளிப்படும்.

**கேள்வி 5: ITC பெறுவதற்குத் தேவையான நிபந்தனைகள் என்னென்ன?**

**பதில்:** ITC பெறுவதற்குப் பதிவுபெற்ற வரி செலுத்தும் நபர் பின்வரும் நான்கு நிபந்தனைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும்:

(அ) வரி விலைப்பட்டி (அ) கடன் விவரம் (அ) வேறு ஏதாவது வரி செலுத்திய ஆவணங்கள் (குறிப்பிடப்பட்டுள்ளது போல்) அவரிடம் இருக்க வேண்டும்;

(ஆ) சரக்குகள் அல்லது/மற்றும் சேவைகளை அவர் பெற்றிருக்க வேண்டும்;

(இ) அரசுக்கு சப்ளை செய்த சரக்கின் மீதான வரியை சப்ளையர் செலுத்தி இருக்க வேண்டும்;

(ஈ) பிரிவு 39-ன் கீழ் ரிடர்ன்களை அவர் சமர்ப்பித்திருக்க வேண்டும்.

**கேள்வி 6. விலைப்பட்டிக்கு எதிரான சரக்குகள் மொத்தமாக அல்லது தவணைகளில் பெறப்பட்டால் பதிவுபெற்ற நபர் ITC பெற எவ்வாறு தகுதி பெறுவார்?**

**பதில்:** கடைசி தவணை சரக்கு வந்த பின்புதான் பதிவு செய்த நபர் கடன் பெறும் தகுதி பெறுவார்.

**கேள்வி 7. இன்புட் வரிக்கடனை சப்ளைக்கான வரியை சப்ளையருக்குச் செலுத்தாமல் யாராலாவது பெற முடியுமா?**

**பதில்:** ஆம், அவர் ITC-ஐப் பெறலாம்; ஆனால் விலைப்பட்டி வெளியிடப்பட்ட 180 நாட்களுக்குள் மீதத்தை வரியுடன் அவர் செலுத்தியாக வேண்டும். தலைகீழ் கட்டண அடிப்படையில் வரி செலுத்தப்படும்போது இந்நிபந்தனை பொருந்தாது.

**கேள்வி 8. விலைப்பட்டி வெளியிடப்பட்ட 180 நாட்களுக்குள் மீதத்தை வரியுடன் அவர் செலுத்தாமல் ITC-ஐ பெற்றுக்கொண்டால் என்ன நிகழும்?**

**பதில்:** ITC தொகை அந்நபரின் அவுட்புட் வரி மீதத்துடன் சேர்க்கப்பட்டு விடும். அத்துடன் வட்டியையும் அவர் செலுத்தியாக வேண்டும். ஆயினும், மீதத்தை வரியுடன் செலுத்திய பின் அவர் ITC-ஐப் பெற்றுக் கொள்ளலாம்.

**கேள்வி 9. வரி செலுத்தும் நபரைத் தவிர வேறொருவருக்கு சரக்குகள் டெலிவரி செய்யப்பட்டால் ITC யாருக்குக் கிடைக்கும்?**

**பதில்:** வரி செலுத்தும் நபர் கேட்டுக் கொண்டதன் பேரில் வேறொருவருக்கு சரக்குகள் டெலிவரி செய்யப்பட்டாலும் பதிவு செய்துள்ள நபர் பெற்றதாகவே பொருள் கொள்ளப்படும். எனவே, யாருடைய கோரிக்கையின் பேரில் 3-வது பார்ட்டிக்கு சரக்கு டெலிவரி செய்யப்பட்டதோ அவருக்கே ITC கிடைக்கும்.

**கேள்வி 10. ITC-ஐப் பெற்றுக் கொள்ள இருக்கும் கால அளவு என்ன; அதற்கான காரணங்கள் யாவை?**

**பதில்:** சரக்குகள்/சேவைகளை சப்ளை செய்ததற்கான விலைப்பட்டி (அ) கடன் குறிப்பிற்கெதிராக பிரிவு 39-ன் கீழ் அதற்கான தேதி முடிந்த பின் ரிடர்னை நிதியாண்டு முடிந்த பின் வரும் செப்டம்பரில் சமர்ப்பித்தாலும் (கடன் குறிப்புடன் தொடர்புடைய விலைப்பட்டி இருந்தாலும்) பதிவு செய்த நபரால் ITC-ஐப் பெறமுடியாது; எனவே; அடுத்த நிதியாண்டின் அக்டோபர் 20 அல்லது வருடாந்திர ரிடர்னை சமர்ப்பிக்கும் தேதி (இரண்டில் எது முன் வருகிறதோ) ITC-ஐப் பெற இறுதிநாள் ஆகும்.

இக்கட்டுப்பாட்டுக்குப் பின்னணியில் இருக்கும் கட்டுப்பாடு என்னவென்றால் சமர்ப்பிக்கப்பட்ட ரிடர்னை அடுத்த நிதியாண்டு செப்டம்பருக்குப் பின் மாற்ற முடியாது. வருடாந்தர ரிடர்னை செப்டம்பருக்கு முன் சமர்ப்பித்திருந்தால், அவ்வாறு சமர்ப்பித்த பின் எவ்வித மாற்றமும் செய்ய முடியாது.

**கேள்வி 11. பதிவு செய்த வரி செலுத்தும் நபர் கேபிடல் சரக்குகளின் செலவுக்கான வரி அம்சத்தைத் தேய்மானமாக வருமான வரிச்சட்டம் 1961-ன் கீழ் காட்டினால், அப்போது அவருக்கு ITC கிடைக்குமா?**

**பதில்:** தேய்மானம் காட்டப்படும் மேற்சொன்ன வரி அம்சத்துக்கு இன்புட் கடன் வசதி தரப்பட மாட்டாது.

**கேள்வி 12. வரி செலுத்தும் சரக்கு அல்லது/மற்றும் சேவை சப்ளைக்காகப் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு இன்புட் மீதும் GST-யின் கீழ் வரிக்கடன் செலுத்தியாக வேண்டுமா?**

**பதில்:** ஆம்; ஆனால் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிறு விலக்கப்பட்டியலில் உள்ள பொருட்களைத் தவிர, அனைத்துப் பொருட்களுக்கும் கடன் வசதி உண்டு. அந்தரங்கப் பயன்பாடு தொடர்புடைய பல பொருட்கள் பட்டியலில் உள்ளன; அவற்றின் இன்புட் பயன்பாடு (ஆலை, இயந்திரம் தவிர), தகவல் தொடர்பு கோபுரங்கள், தொழிற்சாலைகளுக்கு வெளியே அதையொட்டிச் செல்லும் பைப்லைன்கள் போன்ற புதிய அசையா சொத்தை உருவாக்க உதவுகிறது. வரி ஏய்ப்பில் பிடிபட்டு பின்னர் செலுத்தப்பட்ட வரிகளும் இதில் அடங்கும்.

**கேள்வி 13. தகவல் தொழில்நுட்பத்துறையில் இருக்கும் வரி செலுத்தும் ஒரு நபர் நிர்வாக இயக்குநர்களின் பயன்பாட்டுக்காக மோட்டார் வாகனம் வாங்குகிறார். அவ்வாகனம் வாங்கும்போது GST-க்குப் பதிலாக ITC-யைச் செலுத்த முடியுமா?**

**பதில்:** முடியாது. பயணிகள் பயணிக்கும்/சரக்குகள் பரிமாறும் (அ) மோட்டார் வாகனப் பயிற்சி தரும் போக்குவரத்துத் துறையில் இருந்தால் மட்டுமே ஒருவரால் மோட்டார் வாகனத்தின் மீது ITC-ஐப் பெற முடியும்.

**கேள்வி 14. சிலசமயம் பல்வேறு காரணங்களால் சரக்குகள் அழிந்து, தொலைந்து விடுகின்றன. அவ்வாறு நிகழ்ந்தால் அச்சரக்குகளின் மீது ITC கிடைக்குமா?**

**பதில்:** கிடைக்காது; தொலைந்த, திருடப்பட்ட, அழிந்து போன அல்லது தள்ளுபடியான சரக்குகளின் மீது ஒருவருக்கு ITC கிடைக்காது. கூடுதலாக, பரிசாக (அ) இலவச சாம்பிளாகத் தரப்படும் சரக்குகளுக்கும் ITC கிடைக்காது.

**கேள்வி 15. பதிவு செய்துள்ள நபர் தொழில் நடத்தச் செய்யும் கட்டுமானப் பணியில் பயன்படுத்தப்படும் சரக்குகள்/சேவைகள் மீது ITC கிடைக்குமா?**

**பதில்:** அசையாச் சொத்துக்களைக் கட்டுவதற்கு (ஆலை, இயந்திரம் தவிர) ITC கிடைக்காது. ஆலை/இயந்திரம் ஆகியவை பூமியுடன் அல்லது கட்டமைப்புடன் பொருத்தப்பட்ட கருவிகள்/உபகரணங்கள் (அ) இயந்திரங்கள் மட்டும் இதில் அடங்கும். இவற்றில் நிலமும் கட்டிடமும் அடங்காது.

**கேள்வி 16. ITCல் புதிதாகப் பதிவு செய்ய ஒருவர் என்ன செய்ய வேண்டும்?**

**பதில்:** பதிவுக்கு விண்ணப்பிக்கும் நபர் ஸ்டாக், இன்புட் வடிவத்தில் பாதி/முழுதும் முடிந்த நிலையில் இருக்கும் ஸ்டாக்குகள் மீது இன்புட் வரிக்கடனைப் பெறலாம்; இவ்விண்ணப்பம் பதிவு கிடைக்கப் பெறும் நாளுக்கு ஒரு நாள் முன்னதாகவே தரப்பட வேண்டும். பதிவு பெறும் நபர் அந்தக் குறிப்பிட்ட நாளிலிருந்து 30 நாட்கள் வரை பதிவுக்கு விண்ணப்பித்திருந்தால், ஸ்டாக்/இன்புட் முடிந்த/முடியாத நிலையில் இருக்கும் சரக்குகளின் வடிவில் வைத்திருக்கும் இன்புட் வரிக்கடனைப் பதிவு பெறுவதற்கு ஒரு நாள் முன்னதாகவே பெற்றுக் கொள்ளலாம்.

**கேள்வி 17. ஒரு நபர் 01 ஆகஸ்டு, 2017 அன்று வரி செலுத்தியாக வேண்டும்; அவர் பதிவை 15 ஆகஸ்ட், 2017 அன்று பெற்றிருந்தால் அவர் ஸ்டாக் வடிவில் இருக்கும் இன்புட் வரிக்கடனைப் பெறத் தகுதியானவராக ஆவார்:**

**(அ) 01 ஆகஸ்டு, 2017 முதல்**

**(ஆ) 31 ஜூலை, 2017 முதல்**

**(இ) 15 ஆகஸ்டு, 2017 முதல்**

**(ஈ) கடந்த காலத்தின் அடிப்படையில் அவர் கடன் பெற முடியாது**

**பதில்:** 31 ஜூலை, 2017 முதல்

**கேள்வி 18. தானகவே விருப்பத்துடன் முன்வந்து பதிவு செய்யும் நபரின் ஸ்டாக்கில் இருக்கும் இன்புட்டுகள் மீதான இன்புட் வரிக்கடனுக்கு என்ன தகுதி தேவை?**

**பதில்:** தானாகவே முன்வந்து பதிவு செய்யும் நபரின் ஸ்டாக்கில் இருக்கும் இன்புட்டுகள் மீதும் பாதி முடிக்கப்பட்ட/முடிக்கப்பட்ட சரக்குகளுக்கும் பதிவு செய்வதற்கு முந்தைய தினம் இன்புட் வரிக்கடனுக்குத் தகுதியுள்ளவர்தான்.

**கேள்வி 19. பதிவு செய்த நபரின் கட்டமைப்பில் ஏதாவ்து மாற்றமிருந்தால் அப்போது இன்புட் வரித் தகுதி எப்படி நிர்ணயிக்கப்படும்?**

**பதில்:** இழப்பை இடமாற்றம் செய்ய சிறப்பு வசதி இருக்கும் பட்சத்தில் பதிவு செய்த நபரால் தன் மின்னணு கடன் லெட்ஜரில் மீதமிருக்கும் இன்புட் வரிக்கடனைப் புதிய கணக்குக்கு மாற்ற முடியும்.

**கேள்வி 20. வரி கட்டும் நபர் சரக்குகள் அல்லது/மற்றும் சேவைகளை வரிகட்டும், வரிகட்டாத சப்ளைக்காகப் பெறும்போது பதிவு பெற்ற வரிகட்டும் நபருக்கு இன்புட் வரிக்கடன் கிடைக்குமா?**

**பதில்:** வரி இருக்கும் சப்ளைகளுக்கான சரக்கு அல்லது/மற்றும் சேவைக்கான இன்புட் வரிக்கடன் பதிவு செய்த நபருக்குக் கிடைக்கும். அவருக்குரிய கடன் வசதி விதிமுறைப்படி கணக்கிட்டு முடிவு செய்யப்படும்.

**கேள்வி 21. வரி இருக்கும் சப்ளைகளுக்கான சரக்கு அல்லது/மற்றும் சேவைகளுக்கு மட்டும் இன்புட் கடன் வசதி தரப்பட்டால், ஏற்றுமதி செய்யப்படும் சப்ளைகள் மீது விலக்கு தரப்பட்டு தனால் பெரும் இன்புட் கடன் வசதி இழப்பு ஏற்படாதா?**

**பதில்:** இன்புட் கடன் வசதியை அனுமதிக்க ஜீரோ தர சப்ளைகள் வரி இருக்கும் சப்ளைகளுக்குள் வரும்படி அமைக்கப்பட்டுள்ளன. ஜீரோ தர சப்ளையின் வீச்சு பற்றிய விவரம் ஒருங்கிணந்த GST சட்டத்தில் விலக்கு அளிக்கப்பட்டுள்ள சப்ளைகளின் விவரங்களுடன் சேர்த்துத் தரப்பட்டுள்ளது.

**கேள்வி 22. கடன் வசதியைப் பெற வரி இருக்கும் சப்ளைகளுக்கான கணக்கிடுதலில் பின்வரும் எவற்றைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்?**

(அ) ஜீரோ-தர சப்ளைகள்

(ஆ) விலக்கு சப்ளைகள்

(இ) இரண்டும்

**பதில்:** ஜீரோ-தர சப்ளைகள்

**கேள்வி 23. பதிவு பெற்ற ஒரு நபரால் பெறப்படும் சரக்குகள்/சேவைகள் ஒரு பகுதி தொழிலுக்காகவும் மீதம் வேறு நோக்கத்துக்காகவும் பயன்படுத்தப்பட்டால், அந்நபருக்கு இன்புட் வரிக் கடன் கிடைக்குமா?**

**பதில்:** பதிவு செய்த நபர் சரக்கு அல்லது/மற்றும் சேவையின் இன்புட் வரிக் கடனைப் பெறத் தகுதியானவர். அவருக்குரிய கடன் வசதி விதிமுறைப்படி கணக்கிட்டு முடிவு செய்யப்படும்.

**கேள்வி 24. தொகுப்பு வரியல்லாத நிலையில் வரி செலுத்தும் ஒரு நபர் ஆரம்பகால நிலையைத் தாண்டி இயல்பான வரிசெலுத்தும் நபராகிறார். அவருக்கு ITC கிடைக்குமா; அப்படியானால் எந்தத் தேதியிலிருந்து கிடைக்கும்?**

**பதில்:** அவருக்கு ஸ்டாக்கில் இருக்கும் இன்புட்டுகள்/பாதி முடிக்கப்பட்ட அல்லது முடிக்கப்பட்ட இன்புட்டுகள் மற்றும் கேபிடல் சரக்குகளின் அடிப்படையில் (பரிந்துரைக்கப்பட்ட சதவீதப் புள்ளிகளால் குறைக்கப்பட்ட) தொகுப்பு வரிக்கு அவர் தகுதி இழக்கும் தேதிக்கு ஒரு நாள் முன்பு வரை ITC வசதி கிடைக்கும். அவருக்குரிய கடன் வசதி விதிமுறைப்படி கணக்கிட்டு முடிவு செய்யப்படும்.

**கேள்வி 25. வங்கிகளுக்கு ஏதேனும் சிறப்பான பிரிவுகள் இருக்கின்றனவா?**

**பதில்:** வங்கி அல்லது குறிப்பிட்ட சிறப்பான சேவைகளை சப்ளை செய்யும் வங்கியில்லாத நிதி நிறுவனத்திற்கு விகிதாசார கடன் வசதி அல்லது அதன் தகுதிக்கேற்ற இன்புட் வரிக்கடனில் 50% கிடைக்கும்.

**கேள்வி 26. பதிவு செய்த திரு 'அ' தொகுப்பு வரியை 30.07.2017 வரை செலுத்திவந்தார். ஆனால் 1.07.2017 முதல் முறையான திட்டத்தில் வரி செலுத்த வேண்டிய நிலைக்கு வந்து விட்டார். அவருக்கு ITC கிடைக்குமா?**

**பதில்:** திரு 'அ' ஸ்டாக்கிலுள்ள இன்புட்டுக்ளின் இன்புட் வரிக்கடனுக்கும் பாதி முடிக்கப்பட்ட/முடிக்கப்பட்ட சரக்குகளுக்கும் கேபிடல் சரக்குகளின் அடிப்படையில் (பரிந்துரைக்கப்பட்ட சதவீதப் புள்ளிகளால் குறைக்கப்பட்ட) தொகுப்பு வரிக்கும் 30.07.2017 அன்று முழுத் தகுதியுள்ளவராவார்

**கேள்வி 27, திரு 'ஆ' தாமாகவே முன்வந்து விண்ணப்பப் படிவத்தை 05.06.2017 அன்று பூர்த்தி செய்து பதிவை 22.06.2017 அன்று பெற்றுவிடுகிறார். திரு 'ஆ' ஸ்டாக்கிலிருக்கும் இன்புட் வரிக்கடனைப் பெற ___ அன்று தகுதி பெறுவார்.**

**பதில்:** திரு 'ஆ' ஸ்டாக்கிலிருக்கும் இன்புட்டுகள் மீதும் பாதி முடித்த/முத்த இன்புட்டுகளின் மீதுமான வரிக்கடனைப் பெற 21.06.2017 முதல் தகுதி பெற்றாவராவார். ஆனால் கேபிடல் சரக்குகளின் மீதான இன்புட் வரிக்கடன் அவருக்குக் கிடைக்காது.

**கேள்வி 28. பதிவு செய்துள்ள ஒருவரால் சப்ளை செய்யப்படும் சரக்குள் மற்றும்/அல்லது சேவைகள் விலக்குப் பெற்றவையாக இருந்து அவர் தொகுப்புவரித் திட்டத்தை நாடினால் இன்புட் வரிக்கடன் என்ன ஆகும்?**

**பதில்:** பதிவு செய்தவர் தான் விருப்பம் தெரிவிக்கும் நாளுக்கு முந்தைய நாள் தன்னிடமிருக்கும் ஸ்டாக்குகளின் அடைபடையில் (அ) விலக்கு பெறும் நாளுக்கு முந்தைய நாள் அடிப்படையில் இன்புட் வரிக்கடனுக்கு நிகரான தொகையைச் செலுத்த வேண்டும். கேபிடல் சரக்குகளைப் பொறுத்தவரை செலுத்த வேண்டிய தொகை சதவீதப் புள்ளியைக் கழித்துக் கணக்கிடப்படும். கடன் லெட்ஜரின் கணிசமான தொகை மீதமிருந்தால் மின்னணு கடன் லெட்ஜரிலிருந்தும்/கேஷ் லெட்ஜரிலிருந்தும் தொகையைப் பிடித்தம் செய்து கொள்ளலாம். கிரெடிட் லெட்ஜரில் இருக்கும் மீதித்தொகை காலாவதியாகிவிடும்.

**கேள்வி 29. ITC-ஐப் பெற ஏதாவது குறிப்பிட்ட கால அளவு இருக்கிறதா?**

**பதில்:** புதிய பதிவைப் பொறுத்தவரை தொகுப்பு வரியிலிருந்து சாதாரண திட்டத்துக்கு மாறினால் - விலக்கு பெற்றதிலிருந்து வரி செலுத்தும் சப்ளைக்கு மாறினால், சம்பந்தப்பட்ட நபர் அந்த சப்ளைக்கான வரி விலைப்பட்டி வெளியான தேதியிலிருந்து ஓராண்டு முடிந்த பின்தான் ITC-ஐப் பெற முடியும்.

**கேள்வி 30. பெறுபவர் சமர்ப்பிக்கும் உட்புற சப்ளை விவரங்கள் சப்ளையர் சமர்ப்பிக்கும் ரிடர்னில் உள்ள வெளிப்புற சப்ளை விவரங்களுடன் ஒத்துப்போகாத பட்சத்தில் என்ன ஆகும்?**

**பதில்:** அவ்வாறு நிகழ்ந்தால் இரு பார்ட்டிகளுக்கும் தகவல் தெரிவிக்கப்படும். ஒத்துப்போகாத பிரச்சினை சரிசெய்யப்படாவிட்டால், அவ்வாறு பிரசினை தெரிவக்கப்பட்ட மாதத்தின் அடுத்த மாதம் அவர் சமர்ப்பிக்கும் ரிடர்னில் பெறுபவர் கணக்கில் அதற்கான தொகை சேர்க்கப்பட்டுவிடும்.

**கேள்வி 31. ஒத்துப்போனபின் இன்புட் கடன் வசதி தரப்படுமா?**

**பதில்:** மாட்டாது. இன்புட் கடன் வசதி தற்காலிகமாக 2 மாதங்களுக்குத்தான் தரப்படும். சப்ளை விவரங்களைக் கட்டமைப்பே சோதித்து குறைபாடுகள் பற்றி சப்ளையருக்கும் பெறுபவருக்கும் தெரிவித்துவிடும். குறைபாடுகள் அதன் பின்னும் தொடர்ந்தால், தரப்பட்ட ITC தானாகவே திரும்பப் பெறப்படும்.

**கேள்வி 32. தற்காலிகமாகத் தரப்பட்ட ITC-ஐ எல்லாக் கடனையும் அடைக்கப் பயன்படுத்தலாமா?**

**பதில்: கூடாது.** சமர்ப்பிக்கப்படும் ரிடர்னில் சுய மதிப்பீடு செய்யப்பட்ட அவுட்புட் வரியைச் செலுத்த மட்டுமே தற்காலிக ITC-யைப் பயன்படுத்தலாம்.

**கேள்வி 33. ITC பெறப்பட்ட கேபிடல் சரக்குகள் வரிசெலுத்தும் நபரால் சப்ளை செய்யப்படும்போது வரியின் தாக்கம் எப்படி இருக்கும்?**

**பதில்: இன்புட் கடன் வசதி** கேபிடல் சரக்குகள் அல்லது ஆலை/இயந்திரம் மீது பெறப்பட்டால் பதிவு செய்தவர் கேபிடல் சரக்குகள் (அ) ஆலை/இயந்திரம் மீதான

இன்புட் கடன் வசதிக்கு நிகரான, சதவீதப் புள்ளி அடைப்படையில் குறைக்கப்பட்ட தொகையையோ அல்லது கேபிடல் சரக்குகள் பரிமாற்றத்தின் மீதான வரியையோ (எது அதிகமோ அதை) செலுத்துவார்.

**கேள்வி 34. கேபிடல் சரக்குகள் மீது ITC பெற்ற பதிவு செய்தவர் கேபிடல் சரக்குகளை சப்ளை செய்தால் வரியின் தாக்கம் என்னவாக இருக்கும்?**

**பதில்:** பதிவு செய்தவர் ITC-க்கு நிகரான, சதவீதப் புள்ளி அடைப்படையில் குறைக்கப்பட்ட தொகையையோ அல்லது கேபிடல் சரக்குகள் பரிமாற்றத்தின் மீதான வரியையோ (எது அதிகமோ அதை) செலுத்துவார்; ஆனால் பலன் தராத செங்கற்கள், மோல்டுகள்/சாயங்கள், கருவிகள்/உபகரணங்களைப் பொறுத்தவரை, அவை ஸ்கிராப்பாக சப்ளை செய்யப்பட்டால் அந்நபர் பரிமாற்ற மதிப்பிற்கான வரியைச் செலுத்த வேண்டும்.

-----------------------

## 11. GST-யில் உள்ளீட்டு சேவை பகிர்பவர் பற்றிய கோட்பாடு

**கேள்வி 1. உள்ளீட்டு சேவை பகிர்பவர் (ISD) என்றால் என்ன?**

**பதில்:** ISD என்பது சரக்குகள் மற்றும்/அல்லது சேவைகளுக்கான, உள்ளீட்டு சேவைகளைப் பெறுவதற்கான வரி விலைப்பட்டியைப் பெறவும், சரக்குகள் அல்லது/மற்றும் சேவைகள் மீது விதிக்கப்படும் மத்திய வரி (CGST), மாநில வரி (SGST), ஒருங்கிணைந்த வரி (IGST) அல்லது யூனியன் பிரதேச வரி (UTGST) பற்றிய குறிப்பிட்ட ஆவணங்களை வெளியிடவும், ஒரே PAN/ISD உள்ளவர்களுக்காகவும் உள்ள ஒரு அலுவலகம்.

**கேள்வி 2. ISD-யில் பதிவு பெறத் தேவையான தகுதிகள் என்ன?**

**பதில்:** ஏற்கனவே பதிவு செய்திருந்தாலும் ISD-யாகப் பதிவுபெறத் தனியாகப் பதிவு செய்தாக வேண்டும். பதிவுகளுக்கான ஆரம்பகால எல்லை ISD-க்குப் பொருந்தாது. தற்போதையை திட்டத்தின் கீழ் (அதாவது சேவை வரி) ISD பதிவு GST திட்டத்திற்கு மாற்றப்பட மாட்டாது. இருக்கும் ISD-க்கள் அனைவரும் ISD ஆகச் செயல்பட விரும்பினால் புதிய திட்டத்தின் கீழ் புதிதாகப் பதிவுசெய்துகொண்டாக வேண்டும்.

**கேள்வி 3. ISD கடன் வசதியைத் தர தேவையான் ஆவணங்கள் என்ன?**

**பதில்** இதற்கென தனியாக வடிவமைக்கப்பட்டுள்ள ஒரு ஆவணத்தின் மூலம் கடன் வசதி தரப்படும். இந்த ஆவணத்தில் தரப்படும் உள்ளீட்டு கடன் வசதித் தொகை குறிப்பிடப்பட்டிருக்கும்.

**கேள்வி 4. ISD எல்லா சப்ளையர்களுக்கும் உள்ளீட்டு கடன் வசதி தருமா?**

**பதில்:** தராது. பதிவு பெற்ற, உள்ளீட்டு சேவைகளைத் தமது தொழில் முன்னேற்றத்துக்குப் பயன்படுத்தும் நபர்களுக்கு மட்டுமே உள்ளீட்டு சேவைகள் மீதான கடன் வசதி தரப்படும்.

**கேள்வி 5. தொழிலை மேம்படுத்துவது, அதற்கான உள்ளீட்டு சேவைகளின் அளவு இரண்டையும் இணைப்பது சப்ளையர்களுக்குப் பெரும்பாலும் ஒரு**

**சவாலாகவே இருக்கிறது. அந்நிலையில் ISD-யால் ITC பகிரல் எப்படிச் செய்யப்படும்?**

**பதில்:** இச்சூழலில் பகிரல் ஒரு சூத்திரத்தின் அடிப்படையில் செய்யப்படும். முதலாவதாக, உள்ளீட்டு சேவை தரப்பட்டு உள்ளீட்டு கடன் வசதி பெறுபவர்கள் மட்டும் இப்பகிரலால் பலனடைவர். இரண்டாவதாக, ஆபரேஷனல் யூனிட்கள் மத்தியில் மட்டும் பகிரப்படும். மூன்றாவது, ஒரு மாநிலம்/யூனியன் பிரதேசத்தில் பெறுபவரின் லாபத்துக்கும் உள்ளீட்டு சேவை பகிரப்படும் அனைவரின் சராசரிக்கும் உள்ள விகித அடிப்படையில் பகிரப்படும். இறுதியாக, பகிரப்படும் கடன் வசதி இதற்கான எல்லையை மீறக்கூடாது.

**கேள்வி 6. ISD-க்காகப் பயன்படுத்தப்படும் இலாபம் எவ்வளவு?**

**பதில்:** ISD-க்காகப் பயன்படுத்தப்படும் லாபத்தில் எவ்வித வரியோ அல்லது அரசியலமைப்புச் சட்டம் ஏழாவது பிரிவின் கீழ் பட்டியல் 1-ல் நுழைவு 84/பட்டியல் 2-. நுழைவு 51, 54இல் சுமத்தப்படும் எவ்வித வரியோ அடங்காது.

**கேள்வி 7. ISD ரிடர்னை ஃபைல் செய்ய வேண்டுமா?**

**பதில்:** ஆம்; ISD ரிடர்னை அடுத்த மாதம் 13-ஆம் தேதிக்குள் சமர்ப்பித்தாக வேண்டும்.

**கேள்வி 8. ஒரு நிறுவனம் பல்வேறு ISD-க்களை வைத்திருக்கலாமா?**

**பதில்:** ஆம்; மார்க்கெட்டிங் பிரிவு, பாதுகாப்புப் பிரிவு உள்ளிட்ட பல்வேறு அலுவலகங்கள் தனித்தனி ISD-க்கு விண்ணப்பித்து அவற்றைப் பெறலாம்.

**கேள்வி 9. ISD-யால் தவறாக/உபரியாகத் தரப்பட்ட கடனை மீட்பதற்கான சட்டப் பிரிவுகள் என்ன?**

**பதில்:** உபரியாக/தவறாகத் தரப்பட்ட கடன் அதைப் பெற்றவர்களிடமிருந்து வட்டியுடன் பிரிவு 73 (அ) 74-ன் கீழ் மீட்கப்படலாம்.

**கேள்வி** 10. CGST, IGST **கடன் வசதிகள்** ISD-**யால்** IGST **கடனாக பல்வேறு மாநிலங்களில் இருப்பவர்களுக்குத் தரப்படலாமா?**

**பதில்:** முடியும். CGST கடன் வசதி IGST ஆகவும், IGST கடன் வசதி CGST ஆகவும் பல்வேறு மாநிலங்களில் இருப்பவர்களுக்கு ISD-யால் தரப்படலாம்.

**கேள்வி** 11. SGST/UTGST **கடன் வசதிகள்** IGST **கடன் வசதியாக** ISD-**யால் பல்வேறு மாநிலங்களில் இருப்பவர்களுக்குத் தரப்படலாமா?**

**பதில்:** ஆம்; SGT/UTGST கடன் வசதி IGST கடன் வசதியாகப் பல்வேறு மாநிலங்களில் இருப்பவர்களுக்கு ISD-யால் தரப்படலாம்.

**கேள்வி** 12. CGST/IGST **கடன் வசதியை** CGST **கடனாக** ISD **தருமா?**

**பதில்:** ஆம்; ஒரே மாநிலத்தில் இருப்பவர்களுக்கு CGST/IGST கடன் CGST கடனாக ISD-யால் தரப்படலாம்.

**கேள்வி** 13. SGST/UTGST **மற்றும்** IGST **கடன் வசதி** SGST/UTGST **கடனாகத் தரப்படலாமா?**

**பதில்:** தரப்படலாம்; SGST/IGST கடனை SGST/UTGST கடனாக ஒரே மாநிலத்தில் இருப்பவர்களுக்கு ISD-யால் தரப்படலாம்.

**கேள்வி** 14. ISD-**யின் கடன் பெறும் அனைவருக்கும் பொதுவான கடனாக இதை எப்படித் தருவது?**

**பதில்:** பொதுக்கடான அனைவராலும் பயன்படுத்தப்படும் கடனை ISD 'புரோ ரேட்டா' அடிப்படையில் - அதாவது அதைப் பெறும் ஒவ்வொருவரின் லாபம், அனைவரின் லாப சராசரி ஆகியவற்றின் அடிப்படையில் - தரலாம்.

**கேள்வி 15. ISD-யானது CGST/IGST கடன் வசதியை வெளி மாநிலத்தில் இருப்பவர்க்ளுக்கு ______ ஆகத் தரலாம்:**

**(அ) IGST**

**(ஆ) CGST**

**(இ) SGST**

**பதில்:** (அ) **IGST**

**கேள்வி 16. CGST கடன் வசதியை மாநிலத்துக்குள் ISD _____ஆகத் தரும்:**

**(அ) IGST**

**(ஆ) CGST**

**(இ) SGST**

**(ஈ) இதில் ஏதாவது ஒன்று**

**பதில்:** (ஆ) **CGST**

**கேள்வி 17. உள்ளீட்டு சேவைகளைப் பயன்படுத்தும் ஒன்றுக்கும் மேற்பட்ட சப்ளையர்கள் செலுத்தும் வரி மீதான கடன் ________**

**(அ) ஒரு மாநிலத்தில் புரோ ரேட்டா அடிப்படையில் உள்ளீட்டு சேவைகளைப் பயன்படுத்திய சப்ளையர்களுக்கு மட்டும் இது பகிரப்படும்**

**(ஆ) எல்லா சப்ளையர்களுக்கும் சமமாகத் தரப்படும்**

**(இ) ஒரே ஒரு சப்ளையருக்கு மட்டும் தரப்படும்**

**(ஈ) அந்த மாநிலத்தில் புரோரேட்டா அடிப்படையில் உள்ளீட்டு சேவைகளைப் பயன்படுத்திய சப்ளையர்களுக்கு மத்தியில் மட்டும் இது பகிரப்படும்**

**பதில்:** (அ) ஒரு மாநிலத்தில் புரோ ரேட்டா அடிப்படையில் உள்ளீட்டு சேவைகளைப் பயன்படுத்திய சப்ளையர்களுக்கு மட்டும் இது பகிரப்படும்

**கேள்வி 18. தரப்பட்ட உபரிக் கடனை ISD-யிடமிருந்து துறையினரால் மீட்க முடியுமா?**

**பதில்:** முடியாது. தரப்பட்ட உபரிக்கடனை வட்டியுடன் பெற்றவர்களிடமிருந்து திரும்ப மீட்கலாமே தவிர ISD-யிடமிருந்து அல்ல. பிரிவு 73 (அ) 74-ன் கீழ் உள்ள விதிக்ளின்படி தரப்பட்ட கடன் திரும்ப மீட்கப்படும்.

**கேள்வி 19. சட்டப் பிரிவுகளில் சொல்லப்பட்டதற்குப் புறம்பான வழிகளில் தரப்பட்ட கடன் என்ன ஆகும்?**

**பதில்:** சட்டத்திற்குப் புறம்பான வழிகளில் தரப்பட்ட கடன் அது யாருக்குத் தரப்பட்டதோ அவரிடமிருந்து வட்டியுடன் மீட்கப்படும்.

------------------

## 12. வருமான வரி தாக்கல் செயல்முறைகள் மற்றும் உள்ளீட்டு வரி கடன்

**கே. 1. வருமான வரி கணக்குத் தாக்கல் செய்யும் நோக்கம் என்ன?**

**பதில்**

அ) வரி நிர்வாகத்திற்கு தகவல் பரிமாற்ற முறைமை;

ஆ) வரி நிர்வாகத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு நடப்பதை சரிபார்க்கும் திட்டம்;

இ) வரையறுக்கப்பட்ட கால எல்லைக்குள் வரி செலுத்துவோரின் வரிப்பொறுப்புகள் இறுதி செய்யப்படுதல்; ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்கான வரிப்பொறுப்புகளை அறிவிக்க;

ஈ) கொள்கை முடிவெடுத்தல்களுக்குத் தேவையான உள்ளீடுகளை வழங்குதல்;

உ) வரி நிர்வாகத்தின் தணிக்கை மற்றும் ஏய்ப்புக்கு எதிரான திட்டங்கள் மேலாண்மை.

**கே. 2. ஜி.எஸ்.டி. ரெஜீமில் யார் வருமான வரி தாக்கல் செய்ய வேண்டும்?**

பதில். ஜி.எஸ்.டி.யின் கீழ் பதிவு செய்திருக்கும் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் வருமான வரி கணக்குத் தாக்கல் செய்ய வேண்டும். பதிவு செய்துள்ள ஒரு நபர், மாதம் ஒரு முறை (சாதாரண வழங்குபவர்) அல்லது காலாண்டு அடிப்படையில் சர்வு திட்டத்தை (composition scheme) தேர்வு செய்யும் வழங்குபவர் வருமான வரி கணக்குத் தாக்கல் செய்ய வேண்டும். ஒரு ஐ.எஸ்.டி., மாதாந்திர வருமான வரி கணக்குத் தாக்கல் செய்ய வேண்டும். அதில் அந்தக் குறிப்பிட்ட மாதத்தில் விநியோகிக்கப்பட்ட கடன் விவரங்கள் காட்டப்பட வேண்டும். வரியை பிடித்தம் செய்ய வேண்டிய நபர் (டி.டி.எஸ்.) மற்றும் வரி வசூலிக்க வேண்டிய நபர் (டி.சி. எஸ்.) இருவருமே மாதாந்திர வருமான வரி கணக்குத் தாக்கல் செய்ய வேண்டும். இதில் பிடித்தம் செய்யப்பட/வசூலிக்கப்பட வேண்டிய தொகைகள் மற்றும் பிற விவரங்கள் பரிந்துரைக்கப்படலாம். குடியுரிமை பெறாத வரிசெலுத்த வேண்டிய நபரும்கூட தான் செயல்பட்ட காலகட்டத்திற்கான வருமான வரி கணக்குத் தாக்கல் செய்ய வேண்டும்.

**கே. 3 வெளிப்புற விநியோகத்தின் எந்த வகை விவரங்கள் வருமான வரி கணக்கில் தாக்கல் செய்யப்பட வேண்டும்?**

**பதில்** ஒரு சாதாரண பதிவு பெற்ற வரிமானவரி செலுத்தும் நபர், ஒரு மாதத்தில் பதிவு செய்த நபர்களுக்கு வெளிப்புற வழங்கல்கள், பதிவு செய்யாதவர்களுக்கான வெளிப்புற வழங்கல்கள் (வாடிக்கையாளர்கள்), வரவு/பற்று குறிப்புகள், பூஜ்ஜியமாக ரேட் செய்யப்பட்டவை, விதிவிலக்கு அளிக்கப்பட்ட மற்றும் ஜி.எஸ்.டி. அல்லாத வழங்கல்கள், ஏற்றுமதிகள், மற்றும் எதிர்கால வழங்கலுக்காகப் பெறப்பட்ட முன்பணம், மேற்கொண்ட வெளிப்புற வழங்கல்கள் போன்ற பல்வேறு வழங்கல்களை, வெளிப்புற விநியோக விவரங்களை ஜி.எஸ்.டி.ஆர்-1-ல் தாக்கல் செய்ய வேண்டும்.

**கே 4 ஜி.எஸ்.டி.ஆர்-1-னுடன் ஸ்கேன் செய்யப்பட்ட விலைப்பட்டிகள் பதிவேற்றம் செய்யப்பட வேண்டுமா?**

**பதில்.** ஸ்கேன் செய்யப்பட்ட விலைப்பட்டிகள் எதையும் பதிவேற்றம் செய்யத் தேவையில்லை. விலைப்பட்டிகளில் உள்ள சில குறிப்பிட்ட பரிந்துரைக்கப்பட்ட தகவல் பகுதிகள் மட்டுமே பதிவேற்றம் செய்யப்படவேண்டும்.

**கே 5 அனைத்து விலைப்பட்டிகளும் பதிவேற்றம் செய்யப்பட வேண்டுமா?**

பதில்: வேண்டாம். அது B2B அல்லது B2Cயா என்பதைப் பொருத்தும் இந்த வழங்கல்கள் மாநிலத்திற்குள்ளா அல்லது மாநிலங்களுக்கு இடையேயா என்பதைப் பொருத்தும் அமையும்.

B2B வழங்கல்களுக்கு, இதன் வழங்கல்கள் மாநிலத்திற்குள்ளே அல்லது மாநிலங்களுக்கு இடையேயிலானவை என எதுவாக இருந்தாலும் அனைத்து விலைப்பட்டிகளும் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். ஏன் அப்படி? ஏனென்றால், பெறுபவர்கள் ஐ.டி.சி. எடுப்பார்கள் என்பதால், அது விலைப்பட்டியுடன் ஒப்பிடப்படப்பட வேண்டும்.

B2C வழங்கல்களுக்கு, பொதுவாக வாங்குபவர் ஐ.டி.சி. எடுக்க மாட்டார்கள் என்பதால், பதிவேற்றம் தேவைப்படாமல் இருக்கலாம். ஆனால் போய்ச்சேருமிடம் அடிப்படையிலான கொள்கையை நடைமுறைப்படுத்த, மாநிலங்களுக்கு இடையேயான, B2C வழங்கல்களில் 2.5 லட்சத்திற்கும் மேல் மதிப்புள்ள விலைப்பட்டிகள் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். மாநிலங்களுக்கு இடையேயான 2.5 லட்சத்திற்கும் குறைவான மதிப்புள்ள விலைப்பட்டிகள் மற்றும் அனைத்து மாநிலத்திற்குள்ளான விலைப்பட்டிகளுக்கு, மாநிலவாரியான சுருக்கமான குறிப்பு போதும்.

**கேள்வி 6 விலைப்பட்டியில் உள்ள ஒவ்வொரு பொருளுக்குமான விவரங்கள் அனைத்தும் பதிவேற்றம் செய்யப்பட வேண்டுமா?**

பதில். வேண்டாம். உண்மையில், விவரங்கள் பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய தேவையிருக்காது. பொருள்களை வழங்குதலுக்கான ஹெச்.எஸ்.என். குறியீடு மற்றும் சேவைகள் வழங்குதலுக்கான கணக்கியல் குறியீடு மட்டுடே பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். பூர்த்திசெய்பவர் பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய குறைந்தபட்ச இலக்க எண்கள் கடந்த ஆண்டில் அவரது விற்றுமுதலைப் பொருத்து அமையும்.

**கே 7. ஒவ்வொரு பரிவர்த்தனையும் அளிக்கப்பட வேண்டுமா? எந்த சலுகையும் அளிக்கப்படவில்லை என்றால் என்ன ஆகும்?**

பதில். ஆம். மதிப்பு மட்டுமல்லாமல் வரிவிதிக்கப்பட வேண்டிய மதிப்பும்கூட அளிக்கப்பட வேண்டும். சில சமயங்களில், இரண்டும் வெவ்வேறாக இருக்கலாம். எந்த சலுகையும் அளிக்கப்படவில்லை, ஆனால் வழங்கல் அட்டவணை 1-ன் நெறிகளின்படி என்றால், பரிந்துரையின்படி வரிவிதிக்கப்பட வேண்டிய மதிப்பும்கூட கணக்கிடப்பட்டு, பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

**கே 8. ஒரு பெறுனர் தனது ஜி.எஸ்.டி.ஆர்.-2-ல் வழங்குபவர் தவறவிட்ட தகவலை வழங்க முடியுமா?**

பதில். முடியும், தனது வழங்குனர் பதிவேற்றம் செய்யாத விலைப்பட்டிகளைப் பெறுனர் தானே வழங்க முடியும். இந்த மாதிரியான விலைப்பட்டிகளில் கடனும் தற்காலிகமாக வழங்கப்டும் ஆனால், அது ஒப்பீடுட்டுக்கு உட்படுத்தப்படும். ஒப்பிடும்போது, வழங்குபவர் விலைப்பட்டியை பதிவேற்றம் செய்யவில்லை என்றால், இருவருக்கும் இது குறித்து தெரிவிக்கப்படும். இந்தப் பொருந்தாத்தன்மை சரிசெய்யப்பட்டால், தாற்காலிக கடன் உறுதிசெய்யப்படும். ஆனால், பொருந்தாத்தன்மை தொடர்ந்து இருந்துவந்தால், இந்தத் தொகை, பெறுபவரின் வெளியீடு வரி பொறுப்பில், முரண்பாடு வெளிப்பட்டுள்ள அந்த மாதத்திற்கு அடுத்த மாதத்திற்கான வருமான வரி கணக்குத் தாக்கலில் சேர்க்கப்படும்

**கே. 9 வருமான வரிவிதிக்கப்படக்கூடிய ஒரு நபர் தனது ஜி.எஸ்.டி.ஆர்.-2-ல் ஏதாவது வழங்க வேண்டுமா அல்லது எல்லாமே ஜி.எஸ்.டி.ஆர்.-1லிருந்து தானாகவே விரிவடையுமா (auto- populated)?**

பதில். ஜி.எஸ்.டி.ஆர்.-2விலிருந்து ஒரு பெரும் பகுதி விரிவடையும் அதே நேரத்தில், பெறுநரால் மட்டுமே பூர்த்தி செய்ய முடிகிற இறக்குமதிகள் ஏற்றுமதி விவரங்கள், பதிவு செய்யாத அல்லது கலந்த வழங்குனர்கள் மற்றும் விதிவிலக்கு/ ஜி.எஸ்.டி-அல்லாத/ஒன்றுமில்லாத ஜி.எஸ்.டி வழங்கல்கள் முதலிய சில வாங்கியதற்கான விவரங்கள்.

**கே. 10 விலைப்பட்டிகள் பொருந்தாவிட்டால் என்னாகும்? ஐ.டி.சி. கொடுக்கப்பட வேண்டுமா அல்லது மறுக்கப்பட வேண்டுமா? மறுக்க வேண்டும் என்றால், வழங்குபவருக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்?**

பதில். ஜி.எஸ்.டி.ஆர்.-2 ல் உள்ள விலைப்பட்டி இதன் எதிர்தரப்பு ஜி.எஸ்.டி.ஆர்-1னோடு பொருந்தாவிட்டால், இந்தப் பொருத்தமின்மை குறித்து வழங்குபவருக்கு தெரிவிக்கப்படும். பொருத்தமின்மை இரண்டு காரணங்களால் ஏற்படலாம். முதலில், பெறுபவர் செய்யும் தவறால் இது ஏற்படலாம், அப்படி என்றால், மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் தேவையில்லை. இரண்டாவதாக, குறிப்பிட்ட அந்த விலைப்பட்டி வழங்குனரால் அளிக்கப்பட்டிருக்கலாம் ஆனால், அதை அவர்

பதிவேற்றம் செய்யவில்லை. மேலும் அதற்கான வரி செலுத்தியிருக்கிறார். இப்படிப்பட்ட சூழலில், பெறுபவர் பயன்படுத்தியிருக்கும் ஐ.டி.சி. அவரது வெளியீட்டு வரி பொறுப்பில் சேர்க்கப்படும், சுருக்கமாக சொல்லப்போனால், வழங்குனர் ஒரு பொருளை வழங்கிவிட்டு அதற்கான வரியை செலுத்தவில்லை என்றால், அனைத்துப் பொருந்தாமைகளும் நடவடிக்கைகளுக்குத்தான் வழிகோலும்.

**கே 11. வழங்குபவர் பின்னர் தவறை உணர்ந்து தகவலை அளித்துவிட்டால், திருத்தம் செய்யப்பட்ட உள்ளீட்டு வரிக்கடன் தொடர்பான சட்டபூர்வ நிலை என்னவாக இருக்கும்?**

பதில். எந்த கட்டத்திலும், ஆனால் அடுத்து நிதியாண்டின் செப்டம்பர் மாதத்துக்கு முன்பாக வழங்குனர் தனது ஜி.எஸ்.டி.ஆர்.-3ல் ஏற்கெனவே பதிவேற்றம் செய்யத் தவறிய மாதத்திற்கான விலைபட்டிகளுக்கான வரியும் வட்டியும் செலுத்தி பதிவேற்றம் செய்யலாம். வழங்குனர் தனது பொருந்தாமயை சரிசெய்திருக்கும் தொகை அளவுக்கு, பெறுபவர் தனது வெளியீட்டு வரி பொறுப்பை கழித்துக்கொள்ளலாம். திருத்தம் செய்யப்படும் நேரத்தில் பெறுநரால் வழங்கப்பட்ட வட்டித் தொகையும் அவரது மின்னணு பண பேரேட்டில் தொகையை வரவு வைப்பதன் மூலம் அவருக்குத் திருப்பி அளிக்கப்படும்.

**கே. 12 ஜி.எஸ்.டி.ஆர்.-2வின் சிறப்பு அம்சம் என்ன?**

பதில். ஒரு பெறுபவர் பெறும் வழங்கல்கள் அவரது எதிர்தரப்பான வழங்குனர் தனது ஜி.எஸ்.டி.ஆர்.-1ல் பூர்த்திசெய்திருக்கும் விவரங்களின் அடிப்படையில் தானாகவே விரிவடையும் என்பதுதான் ஜி.எஸ்.டி.ஆர்.-2ன் சிறப்பு அம்சம்.

**கே 13. சர்வு திட்டத்தின் (composition scheme) கீழ் உள்ள வரி செலுத்துபவர்களும் கூட ஜி.எஸ்.டி.ஆர்.-1 மற்றும் ஜி.எஸ்.டி.ஆர்.-2-வை தாக்கல் செய்ய வேண்டுமா?**

பதில். வேண்டாம். சர்வு வரி செலுத்துபவர்கள், வெளியீடு அல்லது உள்ளீது வழங்கலுக்கான எந்த அறிக்கையையும் தாக்கல் செய்ய வேண்டாம். இவர்கள் ஜி.எஸ்.டி.ஆர்.-4 படிவத்தில் காலாண்டு முடிந்து அடுத்து வரும் மாததின் 18-ம்

தேதிக்குள் காலாண்டு வருமான வரி கணக்குத் தாக்கல் செய்ய வேண்டும். இவர்களுக்கு உள்ளீடு வரிக் கடனுக்கு தகுதி இல்லாதவர்கள் என்பதால், இவர்களுக்கு ஜி.எஸ்.டி.ஆர்-2 வோடு எந்தத் தொடர்பும் கிடையாது மேலும் வரிக்கடன் சர்வு வரியின் கீழ் செலுத்தப்படுவதால், இவர்களுக்கு ஜி.எஸ்.டி.ஆர்-1 னோடும் எந்தத் தொடர்பும் கிடையாது. இவர்களுடைய வருமான வரி கணக்குத் தாக்கலில் இவர்கள் வரி செலுத்தும் விவரங்களோடு தங்கள் வெளியீட்டு வழங்கல்களின் விவரங்களின் சுருக்கத்தை அறிவிக்க வேண்டும். தங்களது காலாண்டு வருமான வரி கணக்குத் தாக்கல் செய்யும்போதே தங்களுடைய கொள்முதல் விவரங்களையும் வழங்க வேண்டும், இவற்றில் பெரும்பாலானவை தாமாகவே விரிவடையும்.

**கே. 14 உள்ளீட்டு சேவை விநியோகஸ்தர்கள் (ஐ.எஸ்.டி.க்கள்) தங்கள் வருமான வரி கணக்குத் தாக்கலில் உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு வழங்கல்களின் தனி அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டுமா?**

பதில் : வேண்டாம். ஐ.எஸ்.டி.க்கள், ஜி.எஸ்.டி.ஆர்-6 படிவத்தில் மட்டுமே தங்கள் வருமான வரி கணக்குத் தாக்கல் செய்ய வேண்டும். சேவை வழங்குவோரிடமிருந்து தாங்கள் பெற்ற கடன் விவரங்கள் மற்றும் பெறுனர் யூனிட்களுக்கு தாங்கள் விநியோகித்த கடன் விவரங்கள் வருமான வரி கணக்குத் தாக்கலில் இருக்க வேண்டும். இவர்களது வருமான வரி கணக்குத் தாக்கலிலேயே இந்த அம்சங்கள் இடம்பெற்றுவிடுவதால், உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு வழங்கல்களுக்கு தனியாக எந்த அறிக்கையும் தாக்கல் செய்ய வேண்டிய தேவையில்லை.

**கே. 15. வரி செலுத்துபவரிடமிருந்து அவரது சம்பளம் அல்லது வருமானத்தில் பிடித்தம் செய்யப்படும் வரியை எப்படித் திரும்பப் பெறுவார்? இதைத் திரும்பப் பெறுவதற்கு பணம் பிடித்தவரிடமிருந்து பெறப்பட்ட டி.டி.எஸ். சான்றிதழை அவர் தாக்கல் செய்ய வேண்டுமா?**

பதில். ஜி.எஸ்.டி.யின் கீழ், பணம் பிடித்தம் செய்பவர், தான் யாரிடமிருந்து பணம் பிடித்தம் செய்கிறாரோ அவரது விவரங்களையும் தன்னால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து பிடித்தங்களையும் குறித்த விவரங்களையும் தனது ஜி.எஸ்.டி.ஆர்-7 படிவத்தில் பிடித்தங்கள் மேற்கொள்ளப்பட்ட மாதத்திற்கு அடுத்த மாதம் 10-ம் தேதிக்குள் பூர்த்தி செய்து வருமான வரி கணக்குத் தாக்கல் அறிக்கையில் அளிப்பார். பிடித்தம் செய்பவர் பதிவேற்றம் செய்யும் பிடித்தங்கள் குறித்த விவரங்கள் யாரிடம் பிடித்தம் செய்யப்படுகிறதோ அவரது ஜி.எஸ்.டி.ஆர்-2 படிவத்தில் தானாகவே விரிவடையும். தன் சார்பில் பிடித்தம் செய்யப்பட்ட தொகையைப் பெறுவதற்கு பிடித்தம் செய்யப்பட்டவர் தனது ஜி.எஸ்.டி.ஆர்-2 படிவத்தில் இந்த விவரங்களை உறுதி செய்ய வேண்டும் இந்த தொகையை பெறுவதற்காக அவர் எந்த சான்றிதழ் அல்லது மின்னணு படிவங்களையுயோ சமர்ப்பிக்கத் தேவையில்லை. சான்றிதழும்கூட வரி செலுத்துபவர் ஆவணங்களை பத்திரப்படுத்துவதற்காக மட்டுமே தேவை, இதை இவர் பொது வலைவாயிலில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

**கே. 16 எந்த வகையான வரிசெலுத்துவோர் வருடாந்திர வருமான வரி கணக்குத் தாக்கல் செய்ய வேண்டும்?**

பதில் ஜி.எஸ்.டி.ஆர்-1 முதல் ஜி.எஸ்.டி.ஆர்-3 படிவம்வரை பூர்த்திசெய்யும் வருமான வரி கணக்குத் தாக்கல் செய்யும் அனைத்து வரிசெலுத்துவோர், ஐ.டி.எஸ். தவிர, முறைமைக்குட்படாத/ குடியுரிமை பெறாத, சர்வு திட்டத்தின் கீழ் வரி செலுத்துபவர்கள், டி.டி.எஸ்./ டி.சி.எஸ். பிடித்தம் செய்பவர்கள் ஆகிய அனைவரும் வருடாந்திர வருமான வரி கணக்குத் தாக்கல் செய்ய வேண்டும். குடியுரிமை பெறாத ஐ.டி.எஸ்.கள் மற்றும் சம்பளம் அல்லது வருமானத்தில் வரி பிடித்தம் / வசூல் செய்ய அதிகாரம் பெற்ற நபர்கள் வருடாந்தர வருமான வரி தாக்கல் செய்ய வேண்டாம்.

**கே. 17 ஆண்டு வருமான வரி கணக்குத் தாக்கலும் இறுதி வருமான வரி கணக்குத் தாக்கலும் ஒன்றுதானா?**

பதில் இல்லை. ஆண்டு வருமான வரி கணக்குத் தாக்கலை சாதாரண வரி செலுத்துவோராகப் பதிவு செய்துள்ள ஒவ்வொருவரும் சமர்ப்பிக்க வேண்டும். இறுதி வருமான வரி கணக்குத் தாக்கலை பதிவை ரத்து செய்வதற்காக விண்ணப்பிக்கும் நபர்கள் தாக்கல் செய்ய வேண்டும். இந்த இறுதி வருமான வரி கணக்குத் தாக்கல், கான்சல் செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் அல்லது ரத்து செய்யும் உத்தரவு பிறப்பிக்கப்படும் தேதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

**கே. 18. வருமான வரி கணக்குத் தாக்கல் செய்யப்பட்ட பிறகு, ஏதாவது திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்றால் அதை எவ்வாறு செய்ய வேண்டும்?**

பதில்: ஜி.ஸ்.டி.யில் தனிப்பட்ட பரிவர்த்தனைகளின் விவரங்களிலிருந்து வருமான வரி கணக்குத் தாக்கல் செய்யப்படுகிறது என்பதால், திருத்தப்பட்ட வருமான வரி கணக்குத் தாக்கலுக்கு எந்த தேவையும் ஏற்படாது. விலைப்பட்டிகள் அல்லது பற்று/வரவு குறிப்பு தொகுப்புகள் மாற்றப்பட வேண்டும் என்றால் மட்டுமே ஒரு வருமான வரி கணக்குத் தாக்கலில் ஏதாவது மாற்றங்கள் தேவைப்படும். ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்ட வருமான வரி கணக்கு அறிக்கையில் திருத்தங்கள் செய்வதற்கு பதில், அந்தப் பரிவர்த்தனைகளின் (விலைப்பட்டிகள் அல்லது பற்று/வரவு குறிப்பு தொகுப்புகள்) மாற்றப்பட வேண்டிய விவரங்களை மட்டும் மாற்றிக்கொள்ளும் வசதியை அமைப்பு வழங்குகிறது. இவை குறிப்பாக, ஏற்கெனவே அறிவித்த விவரங்களில் மாற்றங்கள் செய்துகொள்வதற்காகவே உள்ள எந்த எதிர்கால ஜி.எஸ்.டி.ஆர்.1 அல்லது 2 அட்டவணைகளின் எதில் வேண்டுமானாலும் மாற்றிக்கொள்ளலாம்.

**கே. 19 வரி செலுத்துவோர் தங்கள் வருமான வரிக் கணக்கை எவ்வாறு தாக்கல் செய்ய வேண்டும்?**

பதில்: வரி செலுத்துவோர் வருமான வரிக் கணக்கு அறிக்கைகள் மற்றும் வருமான வரி கணக்குத் தாக்கல்களை பல்வேறு வழிமுறைகளில் மேற்கொள்ளலாம். முதலில், அவர்கள் தங்களது வருமானம் மற்றும் செலவு விவரங்களை நேரடியாக பொதுவான இணையதள வலைவாயிலில் தாக்கல் செய்யலாம். ஆனால், ஏராளமான விலைப்பட்டிகளை இணைக்க வேண்டியிருப்பதால், வரி செலுத்துவோருக்கு இது சலிப்பூட்டும் வேலையாகவும் அதிகமான நேரம் செலவிட வேண்டியதாகவும் இருக்கும். இப்படிப்பட்ட வரி செலுத்துவோருக்கு, தானாகவே வரக்கூடிய விவரங்களை பதிவிறக்கம் செய்த பிறகு, இணையதளம் வாயிலாக அல்லாத வசதியைப் பயன்படுத்தி வருமானம் மற்றும் செலவு விவரங்களைத் தயார் செய்து, அவற்றைப் பொதுவான வலைவாயிலில் பதிவேற்றம் செய்யலாம். ஜி.எஸ்.டி.என். உருவாக்கியுள்ள ஜி.எஸ்.டி. சுவிதா வசதி, பொதுவான வலைவாயிலுடன் இணைக்கும்.

**கே. 20 ஜி.எஸ்.டி-யின் கீழ் வரும் விதிகளை எந்த சிக்கலும் இல்லாமல் பின்பற்றுவதற்கு வரிசெலுத்தும் ஒருவர் எந்த மாதிரியான முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்?**

பதில் வழங்கல் விவரங்களை ஜி.எஸ்.டி.ஆர்-1 படிவத்தில் அடுத்த மாதம் 10-ம் தேதிக்குள் தவறாமல் பதிவேற்றம் செய்வது ஜி.எஸ்.டி. விதிகளில் மிக முக்கியமான ஒரு விதியாகும். எந்தளவுக்கு இது மிக சிறந்த முறை என்பது வரி செலுத்துவோர் வழங்கும் B2B விலைப்பட்டிகளின் எண்ணிக்கையைப் பொருத்தது. இந்த எண்ணிக்கை குறைவானதாக இருந்தால், வரி செலுத்துவோர் அனைத்து தகவல்களையும் ஒரே தடவையில் பதிவேற்றம் செய்துவிடலாம். ஆனால், விலைப்பட்டிகளின் எண்ணிக்கை அதிகமானதாக இருந்தால், அவற்றை (அல்லது பற்று / வரவு குறிப்பேடுகள்) முறையான கால இடைவெளியில் பதிவேற்றம் செய்ய வேண்டும். விலைப்பட்டிகளை அவ்வப்போது பதிவேற்றம் செய்ய ஜி.எஸ்.டி.என். இடம் தரும். வருமான, செலவு விவர அறிக்கை இறுதியாக

தாக்கம் செய்யப்படும் வரையில், பதிவேற்றம் செய்யப்பட்ட விலைப்பட்டிகளை வரி செலுத்துவோர் மாற்றி அமைப்பதற்கு ஜி.எஸ்.டி.என். அமைப்பில் வசதி உள்ளது. எனவே, முறையாக விலைப்பட்டிகளை பதிவேற்றம் செய்வதற்கு இது எப்போதுமே வரி செலுத்துவோருக்குப் பலன் தரக்கூடியதாக இருக்கும். கடைசிநேர நெருக்கடியால் பதிவேற்றம் செய்வது சிக்கலாகும் இதனால் விடுபடுதல், தவறுகள் என கடும் இடருக்கு ஆளாக நேரிடும். தங்களுக்கு சரக்குகள், பொருட்களை வழங்குவோரிடமிருந்து கொள்முதல் செய்ததற்கான விலைப்பட்டிகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதை வரி செலுத்துவோர் தொடர்ந்து சரிபார்த்து உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். எந்த வித நெருக்கடியும் தாமதமும் இல்லாமல் உள்ளீட்டு வரி சலுகையைப் பயன்படுத்திக்கொள்வதை உறுதிசெய்வதற்கு இது உதவியாக இருக்கும். கொள்முதல் செய்வோர், தங்களுக்கு சரக்குகளை விற்பனை செய்வோர், கெடு தேதியிலோ அல்லது அதற்கு ஓரிரு தினங்கள் முன்னதாகவோ விலைப்பட்டிகளை பதிவேற்றம் செய்வதை விடுத்து முறையான கால இடைவெளியில் பதிவேற்றம் செய்யுமாறு, கொள்முதல் செய்வோர் விற்பனையாளர்களை ஊக்குவிக்க வேண்டும். தங்களுக்கான விலைப்பட்டிகளை விற்பனையாளர்கள் பதிவேற்றம் செய்துள்ளார்களா என்பதை கொள்முதல் செய்வோர் சரிபார்த்துக்கொள்ளவும் வசதி உள்ளது. வரி செலுத்துபவர் எந்தளவு முழுமையான அனைத்து தகவல்களையும் வழங்கியுள்ளார் என்பது குறித்த விவரங்கள், குறிப்பாக சரியான நேரத்தில் அவர் தனது வழங்கல் விலைப்பட்டிகளை பதிவேற்றம் செய்வது தொடர்பான விவரங்கள், விற்பனையாளரால் வழங்கப்பட்ட விலைப்பட்டிகளில் தானாகவே நிகழும் திருத்தங்கள் குறித்த விவரங்களின் பதிவுகளையும் ஜி.எஸ்.டி.என். அமைப்பு வழங்கும். ஜி.எஸ்.டி-ன் பொதுவான வலைவாயில் ஒரு இடத்தில் பான் இந்தியா தரவைக் கொண்டிருக்கும் இவை வரிசெலுத்துவோருக்கு மதிப்பு வாய்ந்த சேவைகளை பெறுவதற்கு வழிவகுக்கும். முறையான கால இடைவெளிகளில் எவ்வளவு சுலபமாக முடியுமோ அவ்வளவு சுலபமாக விலைப்பட்டிகளைப் பதிவேற்றம் செய்வதற்கான முனைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான

ஈகோ-அமைப்பு உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜி.எஸ்.டி-யின் கீழ் வரும் விதிகளை எந்த சிக்கலும் இல்லாமல் பின்பற்றுவதற்கு இந்த ஈகோ அமைப்பை வரி செலுத்துவோர் திறனுடன் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

**கே 21: வரிசெலுத்துவோர் தானாகவே வருமானம் மற்றும் செலவு விவரங்களை தாக்கல் செய்ய வேண்டுமா?**

பதில்: வேண்டாம். பதிவுசெய்துகொண்ட வரிசெலுத்துவோர்கூட தனது வருமானம் மற்றும் செலவு விவரங்களை, மத்திய அல்லது மாநில வரி நிர்வாகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வருமான வரி கணக்கு அறிக்கை தயாரிக்கும் ஒருவர் மூலம் தாக்கல் செய்யலாம்.

**கே. 22 குறிப்பிட்ட தேதிக்குள் வருமான வரி கணக்கு அறிக்கைத் தாக்கல் செய்யாவிட்டால் என்ன விளைவுகள் ஏற்படும்?**

பதில்: பதிவு செய்துள்ள ஒரு நபர் குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு, வருமான வரி கணக்குத் தாக்கல் செய்தால், தாமதக் கட்டணமாக தாமதித்த ஒவ்வொரு நாளும் நூறு ரூபாய் வீதம் செலுத்த வேண்டும். இது அதிகபட்சம் ஐந்தாயிரம் வரை போகலாம். கெடு தேதிக்குள் வருடாந்தர வரவு செலவு கணக்கு அறிக்கை தாக்கல் செய்யத் தவறினால், ஒவ்வொரு நாளும் நூறு ரூபாய் தாமதக் கட்டணம் செலுத்த வேண்டும். அந்த சமயத்தில் அறிக்கை தாக்கல் செய்வது தொடர்ந்து தாமதம் செய்யப்பட்டால், அதிகபட்சமாக அவரது மொத்த ஒரு மாநிலத்தில் இவரது விற்றுமுதல் தொகையிலிருந்து கால் சதவிகிதம் (0.25%) கணக்கிடப்பட்டு வசூலிக்கப்படும்.

**கே. 23 ஒன்றுக்கும் மேற்பட்ட தடவை ஒரே ஆவணத்தின் அடிப்படையில் ஐ.டி.சி. எடுக்கப்பட்டால் என்ன ஆகும்?**

பதில்: ஒன்றுக்கும் மேற்பட்ட தடவை ஒரே ஆவணத்தின் அடிப்படையில் ஐ.டி.சி. எடுக்கப்பட்டிருப்பதை (உரிமைகோரலின் நகலெடுப்பு) அமைப்பு கண்டறிந்தால், அப்படிப்பட்ட வரி சலுகை பெறுநரின் வருமான வரி கணக்குத் தாக்கலில் உற்பத்தி வரி பொறுப்பில் சேர்க்கப்படும்.

**கே. 24 ஜி.எஸ்.டி.ஆர்-1 மற்றும் ஜி.எஸ்.டி.ஆர்-2 விற்கு இடையே காணப்படும் பொருந்தாமைதன்மையை அமைப்பு கண்டறிந்து உற்பத்தி வரியாக பிடித்தம் செய்யப்பட்டு மீட்கப்பட்ட, தொகையை உரிமை கோர முடியுமா?**

பதில்: முடியும், தவறு கண்டறியப்பட்ட விலைப்பட்டிகள் அல்லது பற்று குறிப்புகள் எதுவாக இருந்தாலும் அவற்றின் விவரங்களை தனது தனது மாதாந்தர / காலாண்டு செல்லுபடியாகும் வருமான வரி கணக்குத் தாக்கலில் அறிப்பதன் மூலம் வழங்குனரால் பொருந்தாமை சரிசெய்யப்பட்ட பிறகு . இந்த தொகை, அடுத்து வரும் வரி செலுத்தும் காலகட்டத்தில் உற்பத்தி வரி பொறுப்பிலிருந்து குறைக்கப்படுவதன் மூலம் மறுஉரிமை கோர முடியும். [பிரிவு 42 (7)]. விற்பனையாளரால் வழங்கப்பட்ட வரவு குறிப்புகளைப் பொருத்தவரையில் சட்டப் பிரிவு 43-ல் இதே போன்ற விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

----------------------

## 13. மதிப்பீடு மற்றும் தணிக்கை

கேள்வி 1: சட்டத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய வரிகளை மதிப்பீடு செய்யும் பொறுப்பு யாருக்கு உள்ளது?

பதில்: சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அனைவருமே தான் ஒரு வரி காலகட்டத்தில் எவ்வளவு வரி செலுத்த வேண்டும் தாமாகவே மதிப்பீடு செய்து கொள்ளலாம், அப்படி மதிப்பீடு செய்த பிறகு சட்டப் பிரிவு 39-ன் கீழ் தேவைப்படும் வருமானம் மற்றும் செலவு விவரங்களை தாக்கல் செய்யலாம்.

கேள்வி 2: வரி செலுத்த வேண்டிய ஒரு நபர் தாற்காலிக அடிப்படையில் எப்போது வரி செலுத்த முடியும்?

பதில்: வரி செலுத்த வேண்டிய ஒருவர் சுய-மதிப்பீடு அடிப்படையில் வரி செலுத்த வேண்டும், தாற்காலிக அடிப்படையில் வரி செலுத்துவதற்கான கோரிக்கை வரி செலுத்துபவரிடமிருந்து வரவேண்டும், பின்னர் அது உரிய அலுவலரால் அனுமதிக்கப்படும். வேறு விதமாக சொல்வதென்றால், எந்த அதிகாரியும் தற்காலிக அடிப்படையில் வரி செலுத்த வேண்டும் என்று தானாகவே உத்திரவிட முடியாது. இது சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி சட்டத்தின் 60-வது பிரிவின்படி நிர்வகிக்கப்படுகிறது. உரிய அதிகாரி தானே பிறப்பித்த உத்தரவு மூலம் அனுமதித்த பிறகே தற்காலிக அடிப்படையில் வரி செலுத்தப்படலாம். இந்த நோக்கத்திற்காக, வரிசெலுத்த வேண்டிய நபர் உரிய அதிகாரிக்கு, தான் தற்காலிகமாக வரி செலுத்த வேண்டியதற்கான காரணத்தை விளக்கி எழுத்து மூலம் ஒரு கோரிக்கை அனுப்ப வேண்டும். ஒரு நபர் பின்வரும் விஷயங்களைத் தீர்மானிக்க முடியாத சந்தர்ப்பங்களில் மட்டுமே இப்படிப்பட்ட கோரிக்கையை விடுக்கலாம்:

(அ) தான் வழங்க வேண்டிய பொருள்கள் மற்றும் சேவைகளின் மதிப்பு, அல்லது

(ஆ) தான் வழங்க வேண்டிய பொருள்கள் மற்றும் சேவைகளுக்குத் தான் செலுத்த வேண்டிய வரி விகிதத்தின் மதிப்பைத் தீர்மானிப்பது.

இந்த சந்தர்ப்பங்களில் வரி செலுத்த வேண்டிய நபர் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில், ஒரு பத்திரத்தை உரிய அதிகாரி, பொருத்தமாக கருதும் வகையில் உறுதி பத்திரம் அல்லது ஈட்டு பத்திரத்துடன் தயார்செய்ய வேண்டும்.

கேள்வி 3: இறுதி மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டிய சமீபத்திய காலம் என்ன?

பதில்: தற்காலிக மதிப்பீட்டிற்கான உத்தரவின் தேதியிருந்து ஆறு மாத காலத்திற்குள் இறுதி மதிப்பீடுக்கான உத்தரவை உரிய அதிகாரி பிறப்பிக்க வேண்டும். ஆனால், போதுமான காரணங்கள் காட்டப்பட்டு, காரணங்கள் எழுத்தில் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதால், மேலே குறிப்பிட்ட ஆறு மாத காலகட்டம் பின்வருபவர்களால் நீட்டிக்கப்படலாம்:

(அ) இணை / கூடுதல் ஆணையர் மூலம் மேலும் ஆறு மாத காலத்திற்கு மிகாமல், மேலும்

(ஆ) இந்த நீட்டிக்கப்பட்ட காலம் ஆணையர் பொருத்தமானது என கருதும் மேலும் நான்கு ஆண்டு காலத்திற்கு மிகாமல்.

எனவே தற்காலிக மதிப்பீடு தாற்காலிகமாகவே அதிகபட்சம் ஐந்து ஆண்டு காலத்திற்கு நீடிக்கலாம்.

கேள்வி 4: இறுதி மதிப்பீட்டின்படி வரி பொறுப்பு தற்காலிக மதிப்பீட்டைவிட அதிகமாக இருந்தால், வரிசெலுத்துவோருக்கு அதற்கான வட்டி செலுத்த வேண்டிய பொறுப்பு உள்ளதா?

பதில்: ஆம். வரி செலுத்த வேண்டிய தேதியிலிருந்து அவர் வரி செலுத்திய தேதி வரையிலும் அதற்கான வட்டியை செலுத்தும் பொறுப்பு உள்ளது.

கேள்வி 5: சி.ஜி.எஸ்.டி சட்டம் 61-வது பிரிவின் கீழ், அதிகாரி ஒருவர், மீளாய்வு செய்யும் சமயத்தில், தாக்கல் செய்யப்பட்டுள்ள வருமானம் மற்றும் செலவு விவரங்களில் கண்டறியப்பட்ட முரண்பாடுகளுக்கான உரிய விளக்கம் அளிக்கப்படவில்லை என்றால், வேறு என்ன மாற்று வழி உள்ளது?

பதில்: வரி செலுத்த வேண்டிய நபர், தகவல் தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் (சம்பந்தப்பட்ட அதிகாரியால் நீட்டிக்கப்படலாம்) திருப்திகரமாக விளக்கம் வழங்கவில்லை என்றால், அல்லது முரண்பாடுகளை ஏற்ற பின் முரண்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாதத்தில் வருமானம் மற்றும் செலவு அறிக்கையில் அவற்றை சரிசெய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறினால், உரிய அதிகாரி பின்வரும் விதிகளில் ஏதாவது ஒரு மாற்று வழியைத் தேர்ந்தெடுப்பார்:

(அ) சட்டப் பிரிவு 65இன் கீழ் கணக்குத் தணிக்கை நடத்துதல்

(ஆ) சட்டப் பிரிவு 66இன் கீழ் இந்த நோக்கத்திற்காகவே ஆணையரால் நியமிக்கப்பட்ட ஒரு பட்டயக் கணக்காளர் செலவு கணக்காளர் அல்லது ஒரு விசேஷ கணக்குத் தணிக்கை நடத்த வழிகாட்டுதல்; அல்லது,

(இ) சட்டப் பிரிவு 67இன் கீழ் ஆய்வு மேற்கொள்தல், தேடல், பறிமுதல் ஆகிய நடைமுறைகளைப் பின்பற்றுதல்; அல்லது

(ஈ) சட்டப் பிரிவு 73 அல்லது 74-ன் கீழ் வரி மற்றும் பிற நிலுவைகள் குறித்து தீர்மானிப்பதற்கான அடுத்த நடவடிக்கையைத் தொடங்குதல்.

கேள்வி 6: வரி செலுத்த வேண்டிய ஒருவர், சட்டப்படி [(சட்டப்பிரிவு 39 (மாதாந்தர/காலாண்டு)] அல்லது 45 (இறுதி வருமான வரி கணக்குத் தாக்கல்) வருமானம் மற்றும் செலவு விவரங்களைத் தாக்கல் செய்யத் தவறினால், வரி அதிகாரி சட்டபூர்வமான மாற்று வழி என்ன?

பதில்: வருமானம் மற்றும் செலவு விவரங்களைத் தாக்கல் செய்யத் தவறிய வரி செலுத்த வேண்டிய நபருக்கு முதலில் உரிய அதிகாரி சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி சட்டத்தின் 45-வது பிரிவின் கீழ் பதினைந்து நாட்களுக்குள் வருமான வரி கணக்கை தாக்கல் செய்யச் சொல்லி ஒரு அறிக்கையை அனுப்புவார். கொடுக்கப்பட்டுள்ள காலகட்டத்திற்குள் வரிசெலுத்த வேண்டிய நபர் வருமான வரிகணக்கைத் தாக்கல் செய்யத் தவறினால், உரிய அதிகாரி தன்னிடம் இருக்கும் இது தொடர்பான அனைத்து விஷயங்களையும் கருத்தில் கொண்டு வருமான

வரிக்கணக்குத் தாக்கல் செய்யத் தவறியவரிடமிருந்து வரவேண்டிய வரித் தொகையை பெறுவதற்காக தானாகவே முடிவுசெய்து நடவடிக்கைகளை எடுப்பார். (சட்டப்பிரிவு 62).

கேள்வி 7: சட்டப் பிரிவு 60இன் கீழ் துல்லியமாக கணிக்கப்பட்ட மதிப்பீட்டு உத்தரவு எந்த சந்தர்ப்பங்களில் திரும்பப் பெறப்படும்?

பதில்: உரிய அதிகாரி சி. ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி சட்டத்தின் 62-வது பிரிவின் படி உரிய அதிகாரியால் வழங்கப்பட்ட துல்லியமாக கணிக்கப்பட்ட மதிப்பீட்டு உத்தரவு பெறப்பட்ட முப்பது நாட்களுக்குள் பெறுனர், தவறவிட்ட காலகட்டத்திற்கான ஒரு செல்லுபடியாகக்கூடிய வருமான வரி கணக்கைத் தாக்கல் செய்து விட்டால், உத்தரவு தானாகவே வாபஸ் ஆகிவிடும்.

கேள்வி 8: மதிப்பீட்டு உத்தரவை பிறப்பிப்பதற்கான கால வரையறை சட்டப்பிரிவு 62-ன் கீழ் (பெஸ்ட் ஜட்ஜ்மன்ட்) மற்றும் 63-வது பிரிவின் கீழ் (தாக்கல்செய்யாத) என்ன?

பதில்: சட்டப் பிரிவு 62 அல்லது 63-ன்படி மதிப்பீட்டு உத்தரவை பிறப்பிப்பதற்கான கால வரையறை, வருடாந்திர வரவு செலவு அறிக்கை தாக்கல் செய்வதற்கான கெடு தேதியிலிருந்து ஐந்து ஆண்டு காலம்.

கேள்வி 9: வரி செலுத்த வேண்டிய ஒருவர், பதிவு பெறத் தவறினால் அவருக்கு சட்ட ரீதியில் என்ன மாற்று வழி உள்ளது?

பதில்: இப்படிப்பட்ட நிலையில் சம்பந்தப்பட்ட நபர் செலுத்த வேண்டிய வரியை உரிய அதிகாரி சி. ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி சட்டத்தின்படி தனது துல்லியமான கணிப்பின் அடிப்படையில் வரிவிதிப்பு காலத்திற்கு மதிப்பீடு செய்து உத்தரவு பிறப்பிக்கலாம். ஆனால், இந்த உத்தரவு, வரி செலுத்தப்படாத நிதி ஆண்டுக்கான வருடாந்திர வரவு செலவு அறிக்கை தாக்கல் செய்யப்படுவதற்கான கெடு தேதியிலிருந்து ஐந்தாண்டுகளுக்குள் பிறப்பிக்கப்பட வேண்டும்.

கேள்வி 10: எப்படிப்பட்ட சூழ்நிலைகளில் ஒரு வரி அதிகாரி சுருக்கமான மதிப்பீட்டை தொடங்கலாம்?

பதில்: சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி சட்டத்தின் 64-வது பிரிவின் கீழ், வருமானத்தின் சார்ந்த நலனைப் பாதுகாப்பதற்காக பின்வரும் நிலைகளில் சுருக்கமான மதிப்பீடு தொடங்கப்பட வேண்டும்:

(அ) சட்டப்படி வரி விதிப்புக்கு உள்ளாகும் ஒரு நபருக்கு சட்டப்படி வரி செலுத்த வேண்டிய பொறுப்பு உள்ளது என்பதற்கான ஆதாரம் உரிய அதிகாரியிடம் இருக்கும்போது

(ஆ) மதிப்பீடு உத்தரவைப் பிறப்பிப்பதில் ஏற்படும் தாமதத்தால் வருவாய் சார்ந்த நலன் மோசமாக பாதிக்கப்படும்போது,

கூடுதல் ஆணையர்/ இணை ஆணையரிடமிருந்து அனுமதி கோரப்பட்ட பிறகு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும்.

கேள்வி 11: சுருக்கமான மதிப்பீட்டு உத்தரவுக்கு எதிராக வரிசெலுத்துபவருக்கு மேல்முறையீட்டு தீர்வு தவிர வேறு மாற்று வழிகள் என்ன உள்ளது?

பதில்: சுருக்கமான மதிப்பீட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட வரி செலுத்த வேண்டிய ஒரு நபர், அந்த உத்தரவு பெறப்பட்ட முப்பது நாட்களுக்குள் தனது பகுதியின் அதிகார எல்லைக்குள் உள்ள கூடுதல்/இணை ஆணையரிடம் அதை வாபஸ் பெறுமாறு கோரலாம். மேற்குறிப்பிட்ட அதிகாரி உத்தரவு பிழையாக இருப்பதாக உணர்ந்தால், அதை அவர் வாபஸ் பெறச்செய்து, உரிய அதிகாரியிடம் சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி சட்டத்தின் 73 அல்லது 74 வது பிரிவுகளின்படி வரி பொறுப்பைத் தீர்மானிக்கும் பணியை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தலாம். சுருக்கமான மதிப்பீட்டு உத்தரவு தவறு என்பதைக் கண்டறிந்தால், கூடுதல்/இணை ஆணையர் இதே மாதிரியான நடவடிக்கையைப் பின்பற்றி தானாகவே சட்டப்படி நடவடிக்கையை மேற்கொள்ளலாம். (சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி சட்டத்தின் 64-வது பிரிவு).

கேள்வி 12: வரி செலுத்த வேண்டிய ஒரு நபருக்கு எதிராக சுருக்கமான மதிப்பீட்டு உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமா?

பதில்: இல்லை. ஒரு சில சமயங்களில், பொருள்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு வந்து கொண்டிருந்தால் அல்லது கிடங்கில் சேமிக்கப்பட்டுள்ள நிலையில் வரி செலுத்த வேண்டிய ஒரு நபருக்கான வரியை இப்படிப்பட்ட பொருள்களின் அடிப்படையில் உறுதிசெய்யப்பட முடியாது, இந்தப் பொருள்களுக்கு பொறுப்பேற்றுள்ள ஒரு நபர்தான் வரிசெலுத்தப்பட வேண்டிய நபராக கருதப்பட்டு செலுத்தப்பட வேண்டிய வரி மதிப்பிடப்பட வேண்டும் (சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி சட்டத்தின் 64-வது பிரிவு).

கேள்வி 13. வரிலுத்துவோருக்கான கணக்குத் தணிக்கையை யார் மேற்கொள்ள முடியும்?

பதில்: கீழே விளக்கப்பட்டுள்ளது போல ஜி. எஸ்.டி சட்டத்தில்(ங்களில்) நான்கு வகை கணக்குத் தணிக்கை பரிந்துரைக்கப்பட்டுள்ளது:

(அ) பட்டயக் கணக்காளர் அல்லது செலவு கணக்காளரால் மேற்கொள்ளப்படும் கணக்குத் தணிக்கை: பதிவு பெற்றுள்ள பரிந்துரைக்கப்பட்ட வரையறைக்கு மேல் வருமானம் ஈட்டும் ஒவ்வொரு நபரும், தனது கணக்குகளை ஒரு பட்டயக் கணக்காளர் அல்லது செலவு கணக்காளரைக் கொண்டு கணக்குத் தணிக்கை செய்துகொள்ள வேண்டும், (சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி சட்டத்தின் 35(5)-வது பிரிவு)

(ஆ) துறையினார் கணக்குத் தணிக்கை: சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி. அல்லது யு.டி. ஜி. எஸ்.டி. ஆணையர் அல்லது வேறு அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்ட பொதுவான அல்லது குறிப்பிட்ட உத்தரவின் பேரில் எந்த ஒரு பதிவு பெற்ற நபருக்கும் கணக்குத் தணிக்கை செய்யலாம். இதற்கான காலகட்டம் மற்றும் கணக்குத் தணிக்கை முறை உரிய நேரத்தில் பரிந்துரைக்கப்படும். (சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி. சட்டத்தின் 65-வது பிரிவின்படி)

(இ) விசேஷ கணக்குத் தணிக்கை: மீளாய்வு, விசாரணை, ஆய்வு அல்லது வேறு எந்த நடவடிக்கையின் எந்த ஒரு கட்டத்திலும் துறையின் கருத்துப்படி மதிப்பு சரியானபடி அறிவிக்கப்படவில்லை அல்லது பெறப்பட்ட கடன் சாதாரண வரையறைகளுக்குள் இல்லை என்றால், துறையால் நியமிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர் அல்லது செலவு கணக்காளரை விசேஷ கணக்குத் தணிக்கை செய்யுமாறு துறை உத்தரவிடலாம். (சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி. சட்டத்தின் 66-வது பிரிவின்படி)

கேள்வி 14: கணக்குத் தணிக்கை மேற்கொள்ளப்படுவதற்கு முன் ஏதாவது முன்கூட்டிய தகவல் தெரிவிக்கப்பட வேண்டுமா?

பதில்: ஆமாம். கணக்குத் தணிக்கை மேற்கொள்ளப்படுவதற்கு குறைந்தது 15 வேலை நாட்களுக்கு முன்பாகவாவது வரி செலுத்துபவருக்கு முன்கூட்டிய தகவல் தெரிவிக்கப்பட வேண்டும்.

கேள்வி 15: கணக்குத் தணிக்கை பூர்த்தி செய்யப்பட வேண்டிய கால அவகாசம் என்ன?

பதில்: கணக்குத் தணிக்கைத் தொடங்கப்பட்ட 3 மாத காலத்திற்குள் கணக்குத் தணிக்கை பூர்த்திசெய்யப்பட வேண்டும். இந்த கால அவகாசம், அதிகபட்சம் 6 மாதங்களுக்கு ஆணையரால் நீட்டிக்கப்பட முடியும்.

கேள்வி 16: தணிக்கை துவக்கம் என்றால் என்ன?

தணிக்கை துவக்கம் என்ற வார்த்தை மிகவும் முக்கியம், காரணம், கணக்குத் தணிக்கைத் தொடங்கப்பட்ட இந்த தேதியிலிருந்து வழங்கப்பட்டுள்ள கால வரையறைக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். தணிக்கை துவக்கம் என்பது பின்வருவனவற்றைக் குறிக்கும்:

(அ) எந்தத் தேதியில் ஆவணங்கள்/கணக்குகள் கணக்குத் தணிக்கை அதிகாரிகளிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்ற ஆணை பிறப்பிக்கப்படுகிறதோ, அல்லது

(ஆ) வரி செலுத்துபவர் வியாபாரம் செய்யும் இடம்தான் கணக்குத் தணிக்கை நடைபெறும் நிறுவனம்

கேள்வி 17: கணக்கு தணிக்கை அறிவிப்பைப் பெறும், வரி செலுத்தும் நபரின் கடமைகள் என்னென்ன?

பதில்: வரி செலுத்த வேண்டியநபர் பின்வருவனவற்றை மேற்கொள்ள வேண்டும்:

(அ) கையில் இருக்கும் அல்லது அதிகாரிகள் கோரிய கணக்குகள்/ஆவணங்களை சரிபார்ப்பதற்கு வசதி ஏற்படுத்தித் தரவேண்டும்,

(ஆ) கணக்குத் தணிக்கை மேற்கொள்வதற்காக அதிகாரிகளுக்குத் தேவைப்படும் தகவல்களை வழங்க வேண்டும், மேலும்

(இ) கணக்குத் தணிக்கை சரியான நேரத்தில் பூர்த்தியடைய வேண்டிய உதவிகளை செய்தல்.

கேள்வி 18: கணக்குத் தணிக்கை முடிந்த பிறகு உரிய அதிகாரி மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை என்ன?

பதில்: கணக்குத் தணிக்கை முடிந்த 30 நாட்களுக்குள் வரிசெலுத்த வேண்டிய நபருக்கு தனது கண்டுபிடிப்புகள், அதற்கான காரணங்கள் மற்றும் அந்த கண்டுபிடிப்புகள் குறித்த வரிசெலுத்த வேண்டிய நபரின் உரிமைகள் மற்றும் கடமைகள் ஆகியவற்றைப் பற்றிய தகவல்களைத் தெரிவிக்க வேண்டும்.

கேள்வி 19: எந்தச் சூழலில் விசேஷ கணக்குத் தணிக்கை நிறுவப்படலாம்?

பதில்: மீளாய்வு, விசாரணை முதலிய வரையறைக்குட்பட்ட சூழல்களில் ஒரு விசேஷ கணக்குத் தணிக்கை ஏற்பாடு செய்யப்படலாம். இதில் ஒரு விஷயம் சிக்கலானது அல்லது வருவாய் இழப்பு மிக அதிகமாக இருந்தால், இது கவனத்திற்கு வரும். இந்த அதிகாரம் சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி. சட்டத்தின் 66-வது பிரிவின்படி வழங்கப்பட்டுள்ளது.

கேள்வி 20: விசேஷ கணக்குத் தணிக்கைக்கான அறிவிப்புக்கான தகவலை யார் வழங்க முடியும்?

பதில்: ஆய்வாளரின் முன்கூட்டிய அனுமதி பெற்ற பிறகே உதவி / துணை ஆய்வாளர் விசேஷ கணக்குத் தணிக்கைக்கான அறிவிப்பை வழங்க வேண்டும்.

கேள்வி 21: விசேஷ கணக்குத் தணிக்கையை யார் மேற்கொள்வார்?

பதில்: ஆய்வாளரால் நியமிக்கப்பட்ட ஒரு பட்டயக்கணக்காளர் அல்லது ஒரு செலவு கணக்காளர் இந்த கணக்குத் தணிக்கையை மேற்கொள்ளலாம்.

கேள்வி 22: கணக்குத் தணிக்கை அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டிய கால வரையறை என்ன?

பதில்: கணக்குத் தணிக்கையாளர் 90 நாட்களுக்குள் அல்லது மேலும் நீட்டிக்கப்பட்ட 90 நாட்களுக்குள் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கேள்வி 23: விசேஷ கணக்குத் தணிக்கைக்கான செலவை யார் ஏற்பார்கள்?

பதில்: தணிக்கையாளருக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம் உள்பட ஆய்வு மற்றும் கணக்குத் தணிக்கைக்கான செலவை தீர்மானிப்பதும், ஏற்றுக்கொள்வதும் ஆய்வாளர்தான்.

கேள்வி 24: விசேஷ கணக்குத் தணிக்கைக்குப் பின் வரிவிதிப்பு அதிகாரிகள் என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம்?

பதில்: சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி. சட்டத்தின் 73 அல்லது 74-வது பிரிவின்படி விசேஷ தணிக்கையில் கண்டறிந்த / ஆராய்ந்த விஷயங்களின் அடிப்படையில் நடவடிக்கைத் தொடங்கப்படலாம்.

------------------

## 14. பணம் திரும்பப் பெறுதல்

கேள்வி 1: பணம் திரும்பப் பெறுதல் என்றால் என்ன?

பதில்: சி.ஜி.எஸ்.டி / எஸ்.ஜி. எஸ்.டி. சட்டத்தின் 54 பிரிவில் பணம் திரும்பப் பெறுதல் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது.

“பணம் திரும்பப் பெறுதலில்” பின்வருவன உள்ளடங்கியுள்ளன:

(அ) மின்னணு பண பேரேட்டில் மீதமிருப்பதாக வரவு செலவு அறிக்கையில் உரிமை கோரப்பட்ட எந்தத் தொகை,

(ஆ) பின்வரும் நிலையில் பயன்படுத்தப்படாத, விதை, உரம் மற்றும் பண்ணை சாதனங்களுக்கான வரிச் சலுகை (1) வரி விதிக்கப்படாத பொருள்கள் விற்பனையில் செலுத்தப்படாத வரி, அல்லது (2) உற்பத்திப் பொருள்களுக்கான (வரி விதிக்கப்படாத அல்லது முழுமையாக விலக்கு அளிக்கப்பட்ட பொருள்கள் அல்லாத) வரி விகிதத்தைவிட கொள்முதல் பொருள்களுக்கான வரிவிகிதம் அதிகமாக இருப்பதால், கடன் மொத்தமாக சேர்ந்திருத்தல்,

(ஆ) எந்த மாதிரியான கொள்முதலுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அந்தஸ்து பெற்ற அமைப்பு, அல்லது ஐக்கிய நாடுகள் சபை (பிரிவிலேஜஸ் மற்றும் இம்யூனிட்டீஸ்) சட்டம் 1947-ன்படி பட்டியலிடப்பட்ட பல்வேறு நாடுகளின் அரசு நிதி நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள், வெளிநாடுகளின் இணை தூதரகம், அல்லது தூதரகம் வரி செலுத்தியிருத்தல்

கேள்வி 2 : பயன்படுத்தப்படாத கொள்முதல் வரிக்கான கடன் திரும்பப் பெறப்படும் தொகையாக அனுமதிக்கப்படுமா?

பயன்டுத்தப்படாத கொள்முதல் வரிக்கான கடன் தொகையைப் பின்வரும் சூழ்நிலைகளில் சட்டப் பிரிவு 54-ன் துணைப் பிரிவு (3)-ன் விதிகளின்படி திரும்பப் பெறுவதற்கு அனுமதிக்கப்படும்:-

(1) வரி செலுத்தாமல், வரி விதிக்கப்படாத பொருள்களை விற்பனை செய்யும்போது;

(2) உற்பத்திப் பொருள்களுக்கான (வரி விதிக்கப்படாத அல்லது முழுமையாக விலக்கு அளிக்கப்பட்ட பொருள்கள் அல்லாத) வரி விகிதத்தைவிட கொள்முதல் பொருள்களுக்கான வரிவிகிதம் அதிகமாக இருப்பதால், கடன் மொத்தமாக சேர்ந்திருக்கும்போது,

ஆனால், ஏற்றுமதி வரிக்கு உட்பட்ட பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும்போதும், சேவை அல்லது பொருள் வழங்குநர் அல்லது இரண்டையும் வழங்குபவர் தனது சேவை அல்லது பொருளுக்காக மத்திய வரியைத் திரும்பப் பெற்றாலோ, அத்தகைய பொருள் / சேவைக்காகச் செலுத்தப்பட்ட ஒருங்கிணைந்த வரியைத் திரும்பப் பெறும்போதோ பயன்படுத்தப்படாத கொள்முதல் வரிக்கான கடனை திரும்பப் பெற முடியாது.

கேள்வி 3: ஏற்றுமதி தீர்வை உட்பட்ட பொருள்களை இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும்போது பயன்படுத்தப்படாத கொள்முதல் வரிக்கான கடன் தொகையைத் திரும்பப் பெற முடியுமா?

பதில்: சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி. சட்டத்தின் 54-வது பிரிவு, 3-வது உட்பிரிவின்படி ஏற்றுமதி தீர்வை உட்பட்ட பொருள்களை இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும்போது பயன்படுத்தப்படாத கொள்முதல் வரிக்கான கடன் தொகையைத் திரும்பப் பெற முடியாது.

கேள்வி 4: பயன்படுத்தப்படாத கொள்முதல் வரிக்கடன் தொகையை நிதியாண்டின் முடிவில் திரும்பப் பெற முடியுமா? (ஜி.எஸ்.டி. அறிமுகம் ஆன பிறகு)

பதில்: இப்படிப்பட்ட பயன்படுத்தப்படாத கொள்முதல் வரிக்கடன் தொகையை நிதியாண்டின் முடிவில் திரும்பப் பெறும் விதிமுறை எதுவும் ஜி.எஸ்.டி. விதியில் இல்லை. அது அடுத்த நிதியாண்டுக்குக் கொண்டு செல்லப்படும்.

கேள்வி 5: வரி விதிக்கப்பட வேண்டிய ஒரு நபர், மாநிலங்களுக்கு இடையே/ மாநிலத்திற்குள் தான் வழங்கிய பொருள்களுக்கு ஐ.ஜி.எஸ்.டி/ சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி.எஸ்.டி தவறுதலாகச் செலுத்திவிட்டார், ஆனால் இதைத் தொடர்ந்து இந்தத் தவறு தெளிவாக்கப்பட்டுவிட்டது. சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி.எஸ்.டி தொகை தவறாக செலுத்தப்பட்ட ஐ.ஜி.எஸ்.டி. தொகையில் சமன் செய்யப்படுமா அல்லது தவறாக செலுத்தப்பட்ட எஸ்.ஜி.எஸ்.டி /ஐ.ஜி.எஸ்.டி தொகை, சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி.எஸ்.டி. தொகையில் சமன் செய்யப்படுமா?

பதில்: வரி செலுத்த வேண்டிய ஒரு நபர் சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி.எஸ்.டி அல்லது தவறாக செலுத்தப்பட்ட ஐ.ஜி.எஸ்.டி அல்லது சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி.எஸ்.டி தொகையில் சமன் செய்துகொள்ள முடியாது. ஆனால், அவ்வாறு தவறாக செலுத்தப்பட்ட வரியை திரும்பப் பெறும் உரிமை பெற்றுள்ளார் - சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி.எஸ்.டி சட்டத்தின் 77-வது பிரிவின்படி.

கேள்வி 6: தூதரகங்கள் அல்லது ஐக்கிய நாடுகள் சபையால் மேற்கொள்ளப்பட்ட கொள்முதல்களுக்கு வரிவிதிக்கப்படுமா அல்லது விலக்கு அளிக்கப்படுமா?

பதில்: தூதரகங்கள் அல்லது ஐக்கிய நாடுகள் சபையால் மேற்கொள்ளப்பட்ட கொள்முதல்களுக்கு வரிவிதிக்கப்படும், இது பின்னர் சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி.எஸ்.டி சட்டத்தின் 54-வது பிரிவின் 2-வது உட்பிரிவின்படி பணம் திரும்பப் பெறுவதற்காகக் கோரப்படலாம். இந்தக் கோரிக்கை சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி.எஸ்.டி.யின் பணம் திரும்பப் பெறும் விதிமுறைகளில் பரிந்துரைக்கப்பட்ட முறையில் பொருள்கள் பெறப்பட்ட மாதத்தின் கடைசி தேதியிலிருந்து ஆறு மாதங்கள் முடிவடைவதற்குள் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

[ஐக்கிய நாடுகளின் அமைப்பு மற்றும் வெளிநாடுகளின் இணை தூதரகம் அல்லது தூதரகங்கள் (சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி. சட்டத்தின் 26 பிரிவின் 1-வது உட்பிரிவின்படி) தனிப்பட்ட அடையாள எண்ணை (Unique Identity Number) பெற வேண்டும். மேலும் இந்த அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்ட கொள்முதல்கள்,

விற்பனையாளர்(களின்) உற்பத்தி வழங்கல்கள் வருமான வரி கணக்குத் தாக்கலில் இவர்களது தனிப்பட்ட அடையாள எண்ணில் காட்டப்படும்]

கேள்வி 7: பணம் திரும்பப் பெறுவதற்கான கால வரையறை என்ன?

பதில்: சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி. சட்டத்தின் 54-வது பிரிவில் வழங்கப்பட்டுள்ள விளக்கத்தின்படி "பொருத்தமான தேதி" யிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிவடைவதற்குள் பணம் திரும்பப் பெறுவதற்கான கோரிக்கையை ஒரு விண்ணப்பதாரர் கோர வேண்டும்.

கேள்வி 8: நியாயமற்ற முறையில் வேறொருவர் பலன்பெறும் கோட்பாடு (principle of unjust enrichment) பணம் திரும்பப் பெறுதலில் பொருந்துமா?

பதில்: பணம் திரும்பப் பெறுதலில் பின்வரும் ஒருசில சந்தர்ப்பங்களைத் தவிர மற்ற அனைத்து சந்தர்ப்பங்களுக்கும் நியாயமற்ற முறையில் வெறொருவர் பலன்பெறும் கோட்பாடு பொருந்தும்:

1) வரி விதிக்கப்படாத பொருள்கள் அல்லது சேவைகள் அல்லது இரண்டுமே அல்லது வரி விதிக்கப்படாத விற்பனைப் பொருள்கள் உற்பத்தி செய்யப் பயன்படும் கொள்முதல்கள் அல்லது கொள்முதல் சேவைகளுக்கு செலுத்தப்பட்ட வரியைத் திருப்பி வழங்குதல்

(2) பின்வருவன தொடர்பான பயன்படுத்தப்படாத கொள்முதல் வரிக்கடன் (அ) வரி விதிக்கப்படாத, வரிசெலுத்தப்படாத விற்பனைகள், அல்லது,

(ஆ) உற்பத்திப் பொருள்களுக்கான வரி விகிதத்தைவிட கொள்முதல் பொருள்களுக்கான வரிவிகிதம் அதிகமாக இருப்பதால், கடன் மொத்தமாக சேர்ந்திருக்கும்போது,

(இ) வழங்கப்படாத விலைப்பட்டி வழங்கப்படாத, விற்பனைக்காக, செலுத்தப்பட்ட வரியை முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியாகவோ திருப்பிக் கொடுத்தல்;

(ஈ) சி.ஜி.எஸ்.டி / எஸ்.ஜி.எஸ்.டி சட்டத்தின் 77-வது பிரிவின் படி தவறாக வசூலிக்கப்பட்டு, மாநில அல்லது மத்திய அரசிடம் செலுத்தப்பட்ட வரியை திருப்பிக் கொடுத்தல்

(உ) வரிச்சுமை அல்லது செலுத்தப்பட்ட வட்டி வேறு எந்த நபருக்கும் மாற்றப்படவில்லை என்றால்;

(ஊ) அரசு அறிவிக்கக்கூடிய வரிச்சுமையை ஏற்றுக்கொண்ட இப்படிப்பட்ட வேறு வகையான நபர்கள்

கேள்வி 9: வரி செலுத்துவது நுகர்வோருக்கு மாற்றப்படும் நிலையில், பணம் திரும்பப் பெறுவதற்கு அனுமதி வழங்கப்படுமா?

பதில்: ஆம், அவ்வாறு திரும்ப வழங்கப்பட்ட தொகை நுகர்வோர் நல நிதியில் வரவு வைக்கப்படும். - சி.ஜி.எஸ்.டி / எஸ்.ஜி.எஸ்.டி. சட்டத்தின் 57-வது பிரிவின்படி.

கேள்வி 10: பணம் திரும்ப வழங்கப்படுவதற்கான ஏதாவது கால வரையறை உண்டா?

பதில்: ஆம், அனைத்து வகையிலும் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் பெறப்பட்ட 60 நாட்களுக்குள் பணம் திரும்ப வழங்கப்பட வேண்டும். இந்தக் குறிப்பிட்ட 60 நாட்களுக்குள் பணம் திரும்ப வழங்கப்படாவிட்டால், சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி. சட்டத்தின் 57-வது பிரிவின்படி அறிவிக்கப்பட்ட வட்டி விகித்துடன் பணம் வழங்கப்பட வேண்டும்.

ஆனால், தாற்காலிகமாகப் பணம் திரும்பப் பெறுதலில் சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி. சட்டத்தின் 54-வது பிரிவின் துணைப் பிரிவு 6-ன் ஒரு சில பிரிவுகளில் பதிவுபெற்ற நபர்களால் மேற்கொள்ளப்பட்ட வரி விதிக்கப்படாத விற்பனைகளில், உரிமை கோரப்பட்ட தொகையில் 90% திரும்ப வழங்கக்கூடிய சூழ்நிலையில், இந்த தாற்காலிகமாக பணம் திரும்பப் பெறுவதற்கான கோரிக்கை ஏற்கப்பட்ட 7 நாட்களுக்குள் அந்தத் தொகை வழங்கப்பட வேண்டும்.

கேள்வி 11: பணம் திரும்ப வழங்கப்படுவது வருமான வரித்துறையினரால் நிறுத்தி வைத்துக்கொள்ள முடியுமா?

பதில்: முடியும். பின்வரும் சூழல்களில் பணம் திரும்ப வழங்கப்படுவது நிறுத்தி வைக்கப்படலாம்:

1. அத்தகைய வருமான வரி கணக்கைத் தாக்கல் செய்யும்வரை எந்த வித வருமான வரி கணக்குத் தாக்கலையும் செய்ய அவர் தவறியிருந்தால்;

2. பதிவு செய்த வரி விதிக்கப்பட வேண்டிய நபர் ஏதாவது வரி, வட்டி, அல்லது அபராதம் செலுத்த வேண்டியிருந்தால், அது மேல் முறையீட்டு ஆணையம்/தீர்ப்பாயம்/ நீதிமன்றத்தால் நிறுத்திவைக்கப்படாமல் இருந்தால், அப்படிப்பட்ட வரி, வட்டி, அல்லது அபராதத் தொகையை அவர் செலுத்தும் வரையில்;

உரிய அதிகாரி, சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி. சட்டத்தின் 54-வது பிரிவின் துணைப் பிரிவு 10 (d)-ன்படி, செலுத்தப்படாத வரிகள், வட்டி, அபராதம், தாமதக்கட்டணம் ஏதாவது இருந்தால் அவற்றை திரும்ப வழங்க வேண்டிய தொகையிலிருந்து கழித்துக்கொள்ளலாம்.

3. ஆணையர், பணம் திரும்ப வழங்கும் உத்தரவு மேல் முறையீட்டின் கீழ் இருந்தாலோ அப்படி திரும்ப வழங்கும் தொகையால் சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி. சட்டத்தின் 54-வது பிரிவின் துணைப் பிரிவு 11-ன்படி தவறான செயல்பாடுகள் அல்லது மோசடி செயல்கள் இந்த மேல் முறையீட்டின் வருமானத்தை மோசமாக பாதிக்கும் என்று இவர் கருதினாலோ திரும்ப வழங்க வேண்டிய எந்த வகையான தொகையையும் நிறுத்தி வைத்துக்கொள்ளலாம்.

கேள்வி 12: சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி. சட்டத்தின் 54-வது பிரிவின் துணைப் பிரிவு 11-ன்படி பணம் திரும்ப வழங்கப்படுவது நிறுத்தி வைத்துக்கொள்ளப்பட்டால், வரி விதிக்கப்பட வேண்டிய நபருக்கு வட்டித் தொகை வழங்கப்படுமா?

பதில்: மேல் முறையீட்டின் அல்லது மேற்கொண்டு நடவடிக்கையின் விளைவாக வரி விதிக்கப்பட வேண்டிய நபர் பணம் திரும்பப் பெறுவதற்கு உரிமை உள்ளவராக மாறினால், சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி. சட்டத்தின் 54-வது பிரிவின் துணைப் பிரிவு 12-ன்படி வட்டித்தொகைப் பெறவும் உரிமை பெறுகிறார்.

கேள்வி: 13. பணம் திரும்பப் பெறுவதற்கு ஏதாவது குறைந்தபட்ச ஆரம்பத்தொகை என்று உள்ளதா?

பதில்: சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி. சட்டத்தின் 54-வது பிரிவின் துணைப் பிரிவு 14-ன்படி தொகை 1000 ரூபாய்க்கும் குறைவாக இருந்தால், எந்த தொகையும் திரும்ப வழங்கப்பட மாட்டாது.

கேள்வி 14: இப்போதைய சட்டப்படி திரும்ப செலுத்த வேண்டிய தொகை எவ்வாறு செலுத்தப்படும்?

பதில்: இப்போதைய சட்டப்படி திரும்ப செலுத்த வேண்டிய தொகையை தற்போதைய சட்டத்தின் விதிமுறைகளின்படி பணமாக செலுத்தப்பட வேண்டும், அது ஐ.டி.சி.யாக கிடைக்காது.

கேள்வி 15: ஆவணங்கள் சரிபார்பார்க்கப்படுவதற்கு முன் பணம் திரும்ப வழங்கப்படுமா?

பதில்: வரி விதிக்கப்படாத பொருள்கள் அல்லது சேவைகள் அல்லது இரண்டையும் (அறிவிக்கப்படக்கூடிய பதிவுபெற்ற நபர்கள் அல்லாதவர்கள்) விற்பனை செய்த பதிவு செய்யப்பட்ட ஒரு நபர் பணம் திரும்பப் பெறக் கோரிக்கை விடுக்கும்போது, 90% தொகையை தற்காலிக அடிப்படையில் சரிபார்ப்பதற்கு முன்னரே திரும்பப்பெற அனுமதிக்கப்படலாம். சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி. சட்டத்தின் 54-வது பிரிவின் உட் பிரிவு 6-ன்படி விதிக்கப்படக்கூடிய நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, இந்த அனுமதி வழங்கப்படும்.

கேள்வி 16: ஏற்றுமதிகளில் பணம் திரும்பப் பெற வேண்டிய நிலையில், இதற்கான அனுமதிக்கு பி.ஆர்.சி. அவசியமா?

பதில்: ஏற்றுமதி பொருள்களுக்கான பணம் திரும்பப் பெறுதலில், இதற்கான விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்ய பி.ஆர்.சி. ஆவணம் அவசியம் என்று பணம் திரும்பப் பெறுவதற்கான விதிமுறைகளில் பரிந்துரைக்கப்படவில்லை. ஆனால், ஏற்றுமதி சேவைகளுக்கான பணம் திரும்பப் பெறுதல் விண்ணப்பத்துடன் பி.ஆர்.சி. விவரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியது அவசியம்.

கேள்வி: 17 சிறப்புப் பொருளாதார மண்டலத் தொழிற்கூடங்களுக்கு ஏற்றுமதி செய்யும்போதும் விற்பனை செய்யும்போதும், நியாயமற்ற முறையில் வேறொருவர் பலன்பெறும் கோட்பாடு பொருந்துமா?

பதில்: வரி விதிக்கப்படாத பொருள்களை விற்பனை செய்யும்போது நியாயமற்ற முறையில் வேறொருவர் பலன்பெறும் கோட்பாடு பொருந்தாது (அதாவது சிறப்புப் பொருளாதார மண்டல தொழிற்கூடங்களுக்கு ஏற்றுமதி செய்யும்போதும் விற்பனை செய்யும்போதும்).

கேள்வி 18: தன்னைப் பொருத்தவரையில் இந்தக் கோட்பாடு, பொருந்தாது என்பதை விண்ணப்பதாரர் எவ்வாறு நிரூபிப்பார்?

பதில்: திரும்பப் பெறுவதற்கான கோரிக்கையில் இடம்பெற்றுள்ள தொகை 2 லட்சம் ரூபாய்க்கும் குறைவாக இருந்தால். விண்ணப்பதாரர், தன்னிடமுள்ள ஆவணம் அல்லது வேறு எந்த சான்றுகளின் அடிப்படையில், ஒரு அறிவிப்பை சமர்ப்பிக்க வேண்டும். இதில், வரிச்சுமையை வேறு யாருக்கும் தான் மாற்றிக்கொடுக்கவில்லை என்பதால், பணத்தை திரும்பப் பெறுவதற்குத் தனக்குத் தகுதி உள்ளது என அவர் சான்றளிக்க வேண்டும். ஆனால், திரும்பப் பெறும் தொகை 2 லட்சத்திற்கும் அதிகமாக இருந்தால், வரிச்சுமை வேறு யாருக்கும் மாற்றப்படவில்லை என்பதற்கான ஒரு பட்டயக் கணக்காளர் அல்லது செலவுக் கணக்காளரின் சான்றிதழை விண்ணப்பதாரர் சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்வி 19: வாட்/சி.எஸ்.டி. விதியின் கீழ் தற்போது தொழில்முறை ஏற்றுமதியாளர்கள், ஒரு அறிவிப்பு படிவத்தை சமர்ப்பித்து, வரிசெலுத்தாமல் பொருள்களை வாங்க முடியும். இந்த முறை ஜி. எஸ்.டி.யில் இடம்பெற்றுள்ளதா?

பதில்: ஜி. எஸ்.டி. சட்டத்தில் இப்படிப்பட்ட சலுகை இடம்பெறவில்லை. அவர்கள் வரி செலுத்திப் பொருள்களைக் கொள்முதல் செய்ய வேண்டும். சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி. சட்டத்தின் 54-வது பிரிவின் உட்பிரிவு 1, 54-வது பிரிவின் உட்பிரிவு 3-ன்படி செலுத்தப்பட்ட வரி அல்லது பயன்படுத்தப்படாத கொள்முதல் வரிக்கான கடன் தொகையை திரும்பப் பெறுவதற்கு கோரிக்கை விடுக்கலாம்.

கேள்வி 20: தற்போதைய மத்திய சட்டத்தின்படி, ஏற்றுமதியாளர்கள் வரி செலுத்தப்பட்ட கொள்முதலைப் பெறவும், அதில் ஐ.டி.சி.யை பயன்படுத்தி பொருள்களை ஏற்றுமதி செய்யவும் (ஐ.டி.சி.யைப் பயன்படுத்திய பின்) அவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். அதன் பிறகு ஏற்றுமதிகளில் செலுத்தப்பட்ட வரித் தொகையை திரும்பப் பெற கோரலாம். இந்த முறை ஜி.எஸ்.டி.யிலும் தொடருமா?

பதில்: இந்த வழிமுறை ஜி.எஸ்.டி.யிலும் இடம்பெற்றுள்ளது. ஐ. ஜி.எஸ்.டி சட்டம் 16-வது பிரிவின்படி, பதிவு செய்யப்பட்ட, வரி செலுத்தும் ஒரு நபர் பின்வரும் இரண்டு வாய்ப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்யலாம். ஐ. ஜி.எஸ்.டி செலுத்தாமல் பத்திரம் அல்லது கடிதம் வாயிலான உத்திரவாதம் கொடுத்து பொருள்கள்/சேவைகளை ஏற்றுமதி செய்யலாம், ஐ.டி.சி. தொகையைத் திரும்பப் பெற கோரிக்கை விடுக்கலாம். அல்லது ஐ. ஜி.எஸ்.டி செலுத்தி பொருள்களை/சேவைகளை அவர் ஏற்றுமதி செய்யலாம். இப்படி செலுத்தப்பட்ட ஐ. ஜி.எஸ்.டி தொகையைத் திரும்பப் பெற கோரிக்கை விடுக்கலாம்.

கேள்வி 21: பணம் திரும்பப் பெறும் கோரிக்கை தொடர்பான ஒப்புகை எவ்வளவு கால அவகாசத்திற்குள் அளிக்கப்பட வேண்டும்?

பதில்: சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி. சட்டத்தின் 49-வது பிரிவின் உட்பிரிவு 6-ன்படி ஒரு விண்ணப்பதாரர் மின்னணு ரொக்க பதிவேட்டிலிருந்து பணம் திரும்பப் பெறுவது தொடர்பான கோரிக்கையை உரிய வரி செலுத்தும் காலத்திற்கான வரவு செலவு அறிக்கையின் மூலம் சமர்ப்பிக்கும்போது, இதற்கான ஒப்புகை இந்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட உடனேயே அனுப்பப்படும். மற்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் பணம் திரும்பப் பெறும் கோரிக்கைக்கான ஒப்புகை, இந்த

விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் விண்ணப்பதாரருக்கு அனுப்பப்படும்.

கேள்வி 22: தற்காலிகமாக பணம் திருப்பிக்கொடுக்கப்படுவதற்கான கால அவகாசம் என்ன?

பதில்: சி.ஜி.எஸ்.டி/ எஸ்.ஜி. எஸ்.டி. சட்டத்தின் 54-வது பிரிவின் உட்பிரிவு 6-ன்படி வரி விதிக்கப்படாத பொருள்கள் விற்பனையைப் பொருத்தவரையில், பணம் திரும்பப் பெறுவதற்காக கோரப்பட்ட தொகையில் 90% வரையில், இதற்கான விண்ணப்பம் பெறப்பட்ட 7 நாட்களுக்குள் தற்காலிகமாக வழங்கப்படும்.

கேள்வி 23: பணம் திரும்பப் பெறுவதற்காக தாக்கல் செய்யும் படிவத்திற்கு குறிப்பிட்ட ஏதாவது வடிவம் உள்ளதா?

பதில்: பணம் திரும்பப் பெறுவதற்காக தாக்கல் செய்யும் ஒவ்வொரு கோரலும் ஜி.எஸ்.டி. ஆர்.எ.ஃப்.டி.1 படிவத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். ஆனால், மின்னணு ரொக்க பேரேட்டில் உள்ள மீதமிருக்கும் தொகையைத் திரும்பப் பெறுவதற்காக கோரல், மாதாந்திர/ காலாண்டு வரவு செலவு தாக்கல் படிவம் பொருத்தமான ஜி.எஸ்.டி.ஆர்3, ஜி.எஸ்.டி.ஆர்4 அல்லது ஜி.எஸ்.டி.ஆர்7 இவற்றில் காலத்திற்கு பொருத்தமான படிவத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

கேள்வி 24: பணம் திரும்பப் பெறுவதை அனுமதிப்பதற்கு குறிப்பிட்ட ஏதாவது வழிமுறை உள்ளதா?

பதில்: பணம் திரும்பப் பெறுவதற்கான கோரிக்கை முறையாக இருந்தால், உரிய அதிகாரி ஜி.எஸ்.டி. ஆர்.எ.ஃப்.டி-06 படிவம் வாயிலாக பணம் வழங்குவதை அனுமதிப்பார். ஜி.எஸ்.டி. ஆர்.எ.ஃப்.டி-05 படிவம் வாயிலாக அனுமதி ஆலோசனை வழங்கப்படும். திரும்ப வழங்கப்பட வேண்டிய தொகை விண்ணப்பதாரருக்கு அவர் கொடுத்த வங்கிக் கணக்கில் மின்னணு பணப் பட்டுவாடா முறையில் வரவு வைக்கப்படும்.

கேள்வி 25: பணம் திரும்பப் பெறும் கோரலில் குறைபாடுகள் இருந்தால் என்ன ஆகும்?

பதில்: பணம் திரும்பப் பெறுவதற்கான கோரிக்கையில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால், அது குறித்து 15 நாட்களுக்குள் சுட்டிக்காட்டப்பட வேண்டும். ஜி.எஸ்.டி. ஆர்.எ.ஃப்.டி-03 படிவம் வாயிலாக உரிய அதிகாரி, குறைபாடுகளை விண்ணப்பதாரருக்குச் சுட்டிக்காட்டி இவற்றை நிவர்த்தி செய்த பிறகு, பணம் திருப்பப் பெறுவதற்கான படிவத்தைத் தாக்கல் செய்யும்படி, பொதுவான இணையதள வலைவாயில் மூலமாக கேட்டுக்கொள்ள வேண்டும்.

கேள்வி 26: எந்தக் காரணமும் சொல்லாமல் பணம் திரும்பப் பெறும் கோரிகைகைய நிராகரிக்க முடியுமா?

பதில்: நிராகரிக்க முடியாது. இந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என உரிய அதிகாரி முடிவுசெய்தால் அவர் ஜி.எஸ்.டி. ஆர்.எ.ஃப்.டி-08 படிவம் வாயிலாக விண்ணப்பதாரருக்கு ஒரு நோட்டீஸ் அனுப்ப வேண்டும். ஜி.எஸ்.டி. ஆர்.எ.ஃப்.டி-09 படிவத்தில் இதற்கான பதிலை அளிக்கும்படி விண்ணப்பதாரரை கேட்டுக்கொள்ள வேண்டும். விண்ணப்பதாரரின் பதிலை பரிசீலித்தப் பிறகு 15 நாட்களுக்குள் இந்த அதிகாரி பணம் திரும்பப் பெறுவதற்கான கோரிகையை ஏற்றக்கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம். இதற்கான உத்தரவை ஜி.எஸ்.டி. ஆர்.எ.ஃப்.டி-06 படிவம் வாயிலாக மட்டுமே அவர் பிறப்பிப்பார்.

---------------

## 15 கோரிக்கைகள் மற்றும் மீட்பு

கேள்வி 1: குறைவாக செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படாத வரி அல்லது தவறாக திருப்பி கொடுக்கப்பட்ட தொகை அல்லது கொள்முதல் வரிக்கான கடனை தவறாகப் பெற்றது அல்லது பயன்படுத்திக்கொண்டது தொடர்பான நடவடிக்கைகளுக்கான சட்டப் பிரிவுகள் எவை?

பதில்: மோசடியில் ஈடுபடுதல், தகவல்களை மறைத்து வைத்தல், தவறான அறிக்கை கொடுத்தல் ஆகியவற்றுக்கு இடமளிக்காதபட்சத்தில் சட்டப் பிரிவு 73இன்படி நடவடிக்கை எடுக்கலாம்.

மோசடியில் ஈடுபடுதல், தகவல்களை மறைத்து வைத்தல், தவறான அறிக்கை கொடுத்தல் ஆகிய குற்றங்களை ஈடுபட்டிருக்கும்பட்சத்தில் சட்டப் பிரிவு 74இன்படி நடவடிக்கை எடுக்கலாம்.

கேள்வி 2: வரிவிதிப்புக்கு உள்ளாகக்கூடிய நபர், சட்டப் பிரிவு 73இன்படி விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்படுவதற்கு முன்னரே வட்டியுடன் சேர்த்து பணம் செலுத்தியிருந்தால் என்ன நடக்கும்?

பதில்: இந்த மாதிரியான சூழலில் உரிய அதிகாரி நோட்டீஸ் அனுப்ப மாட்டார். சட்டப் பிரிவு 73 உட்பிரிவு 6.

கேள்வி 3: சட்டப் பிரிவு 73இன்படி விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டு, அதன் பிறகு இந்த நோட்டீசைப் பெற்றவர் உரிய வட்டியுடன் பணம் செலுத்தி இருந்தால், இது தொடர்பாக, தீர்ப்பு வழங்க வேண்டிய தேவை உள்ளதா?

பதில்: நோட்டீஸ் அனுப்பப்பட்ட 30 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட நபர் வட்டியுடன் சேர்த்து வரி செலுத்தியிருந்தால், எந்த அபராதமும் கட்ட வேண்டியதில்லை மேலும் அந்த நோட்டீஸ் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் முடிந்துவிட்டன என்று கருதப்படும். (சட்டப் பிரிவு 73 உட்பிரிவு 8)

கேள்வி 4: விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்புவதற்கான உரிய தேதி எது?

பதில்: (1) சட்டப் பிரிவு 73-ஐப் பயன்படுத்தக்கூடிய நிலையில், (மோசடி, உண்மைகளை மறைத்தல், வேண்டுமென்றே தவறான வரவு செலவு அறிக்கையைத் தாக்கல் செய்தல் ஆகியவற்றில் ஈடுபடாத சூழலில்), சம்பந்தப்பட்ட நிதியாண்டுக்கான வருடாந்திர வரவு செலவு அறிக்கையை தாக்கல் செய்வதற்கான கெடு தேதியிலிருந்து, விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்புவதற்கான தேதி கணக்கிடப்படும்.

விளக்கம் கேட்டு அனுப்பப்பட்ட நோட்டீஸ் தொடர்பான தீர்ப்பு வருடாந்திர வரவு செலவு அறிக்கை தாக்கல் செய்வதற்கான கெடு தேதியிலிருந்து மூன்று வருட காலத்திற்குள் வழங்கப்பட வேண்டும். தீர்ப்பு வழங்குவதற்கான கால வரையறைக்கு குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு முன்னதாக விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட வேண்டும். (சட்டப் பிரிவு 73, உட்பிரிவு 2 & 10)

(ii) சட்டப் பிரிவு 74-ஐ பயன்படுத்தக்கூடிய நிலையில், (மோசடி, உண்மைகளை மறைத்தல், வேண்டுமென்றே தவறான வரவு செலவு அறிக்கையைத் தாக்கல் செய்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள சூழலில்), சம்பந்தப்பட்ட நிதியாண்டுக்கான வருடாந்திர வரவு செலவு அறிக்கையை தாக்கல் செய்வதற்கான கெடு தேதியிலிருந்து, விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்புவதற்கான தேதி கணக்கிடப்படும். விளக்கம் கேட்டு அனுப்பப்பட்ட நோட்டீஸ் தொடர்பான தீர்ப்பு, வருடாந்திர வரவு செலவு அறிக்கை தாக்கல் செய்வதற்கான கெடு தேதியிலிருந்து ஐந்து வருட காலத்திற்குள் வழங்கப்பட வேண்டும். தீர்ப்பு வழங்குவதற்கான கால வரையறைக்கு குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு முன்னதாக விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட வேண்டும். (சட்டப் பிரிவு 74, உட்பிரிவு 2 & 10)

கேள்வி 5: தீர்ப்பு வழங்குவதற்கு ஏதாவது கால வரையறை உள்ளதா?

பதில்: (i) சட்டப் பிரிவு 73-ஐ பயன்படுத்தக்கூடிய நிலையில், (மோசடி, உண்மைகளை மறைத்தல், வேண்டுமென்றே தவறான வரவு செலவு அறிக்கையைத் தாக்கல் செய்தல் ஆகியவற்றுக்கு இடம்கொடுக்காத சூழலில்),

தீர்ப்பு வழங்குவதற்கான கால வரையறை, சம்பந்தப்பட்ட நிதியாண்டுக்கான வருடாந்திர வரவு செலவு அறிக்கை தாக்கல் செய்யப்படுவதற்கான கெடு தேதியிலிருந்து அல்லது தவறாக பணம் திருப்பி அளிக்கப்பட்ட தேதியிலிருந்து/கொள்முதல் வரிக்கான கடனை தவறாகப் பயன்படுத்திக்கொண்ட தேதியிலிருந்து மூன்றாண்டுகள் ஆகும். (சட்டப் பிரிவு 73, உட்பிரிவு 10)

(ii) சட்டப் பிரிவு 74-ஐப் பயன்படுத்தக்கூடிய நிலையில், (மோசடி, உண்மைகளை மறைத்தல், வேண்டுமென்றே தவறான வரவு செலவு அறிக்கையைத் தாக்கல் செய்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள சூழலில்), தீர்ப்பு வழங்குவதற்கான கால வரையறை, சம்பந்தப்பட்ட நிதியாண்டுக்கான வருடாந்திர வரவு செலவு அறிக்கை தாக்கல் செய்யப்படுவதற்கான கெடு தேதியிலிருந்து அல்லது தவறாகப் பணம் திருப்பி அளிக்கப்பட்ட தேதியிலிருந்து/கொள்முதல் வரிக்கான கடனை தவறாகப் பயன்படுத்திக்கொண்ட தேதியிலிருந்து ஐந்தாண்டுகள் ஆகும். (சட்டப் பிரிவு 74, உட்பிரிவு 10)

கேள்வி 6: வரிவிதிப்புக்கு உள்ளாகக்கூடிய நபர், மோசடி, உண்மைகளை மறைத்தல், வேண்டுமென்றே தவறான வரவு செலவு அறிக்கையைத் தாக்கல் செய்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள சூழலில் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்புவதற்கு முன்பாக உரிய வட்டியுடன் பணம் செலுத்தியிருந்தால் அவருக்கு ஏதாவது விலக்கு அளிக்கப்படுமா?

பதில்: அளிக்கப்படும். வரி விதிப்புக்கு உள்ளாகக்கூடிய நபர், தான் செலுத்த வேண்டிய தொகையை வட்டி மற்றும் தானாகவே அல்லது உரிய அதிகாரியால் தீர்மானிக்கப்பட்ட, செலுத்தப்பட வேண்டிய வரித் தொகையின் 15% அபராதத் தொகையையும் சேர்த்துக் கட்டலாம் என்ற வாய்ப்பு அளிக்கப்படுகிறது, இவ்வாறு தொகை செலுத்தப்பட்ட பிறகு அவ்வாறு செலுத்தப்பட்ட வரி தொடர்பாக எந்த நோட்டீசும் வழங்கப்பட மாட்டாது. (சட்டப் பிரிவு 74, உட்பிரிவு 6).

கேள்வி 7: சட்டப் பிரிவு 74இன்படி விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டு, அதன் பிறகு இந்த நோட்டீசைப் பெற்றவர் உரிய வட்டியுடன் பணம் செலுத்தி இருந்தால், இது தொடர்பாக, தீர்ப்பு வழங்க வேண்டிய தேவை உள்ளதா?

பதில்: சட்டப் பிரிவு 74இன் உட்பிரிவு 1இன் கீழ் நோட்டீஸ் அனுப்பப்பட்ட 30 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட நபர் வட்டியுடன் சேர்த்து அந்த வரித் தொகையின் 25% சமமான அபராதத் தொகையுடன் வரி செலுத்தியிருந்தால், அந்த நோட்டீஸ் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் முடிந்துவிட்டன என்று கருதப்படும். (சட்டப் பிரிவு 73 உட்பிரிவு 8)

கேள்வி 8: சட்டப் பிரிவு 74இன்படி நோட்டீஸ் தொடர்பான வழங்கப்பட்ட தீர்ப்பில் வரித்தொகை மற்றும் அபராதம் உறுதிசெய்யப்பட்டால், நோட்டீஸ் பெற்றவருக்கு அபராதம் குறைக்கப்படுவதற்கான ஏதாவது வாய்ப்பு உள்ளதா?

பதில்: உள்ளது. உத்தரவில் தீர்மானிக்கப்பட்ட வரித் தொகையை, வட்டி மற்றும் அத்தகைய வரித் தொகையின் 50% சமமான அபராதத் தொகையுடன் சேர்த்து உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் அந்த நபர் செலுத்திவிட்டால், அந்த நோட்டீஸ் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் முடிந்துவிட்டன என்று கருதப்படும். (சட்டப் பிரிவு 74 உட்பிரிவு 11)

கேள்வி 9: சட்டப் பிரிவுகள் 73 மற்றும் 74-ல் நோட்டீஸ் வழங்கப்பட்டு, தீர்ப்புக்காக குறிப்பிட்டுள்ள நேரப்படி உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்றால் என்ன ஆகும்?

பதில்: இந்த சட்டப் பிரிவுகளின்படி குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்றால், சட்டப் பிரிவு 75இன் உட்பிரிவு 10ன்படி தீர்ப்பு நடவடிக்கைகள் முடிந்துவிட்டன என்று கருதப்படும்.

கேள்வி 10: ஒரு நபர் வேறொரு நபரிடமிருந்து வரி வசூலிக்கிறார். ஆனால், வசூலித்த தொகையை அரசிடம் சமர்ப்பிக்கவில்லை என்றால் என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

பதில்: இந்தச் சட்டத்தின்படி வரியாக வசூலிக்கப்பட்ட தொகை அரசுக்குக் கட்டாயமாக செலுத்தப்பட வேண்டும். இத்தகைய தொகை செலுத்தப்படாமல் இருந்தால் உரிய அதிகாரி, அந்தத் தொகையை அவரிடமிருந்து பெறவும் அதே தொகைக்கு சமமான அபராதத் தொகைக்கும் விளக்கம் கேட்டு நோட்டீஸ் (எஸ்.சி.என்.) அனுப்புவார். (சட்டப் பிரிவு 74 உட்பிரிவு 1 மற்றும் 2)

கேள்வி 11: சட்டப் பிரிவு 76இன் உட்பிரிவை மீறும்வகையில் வசூலிக்கப்பட்டத் தொகை டெபாசிட் செய்யப்படவில்லை என்றால், எடுக்கப்பட வேண்டிய உரிய நடவடிக்கை என்ன?

பதில்: விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்படும், அவ்வாறு அனுப்பப்பட்டால், இந்த நோட்டீஸ் அனுப்பப்பட்ட ஓராண்டுக்குள் இயற்கை நீதி கோட்பாட்டைப் பின்பற்றி உத்தரவு பிறப்பிக்கப்படும். (சட்டப் பிரிவு 74 உட்பிரிவு 2 முதல் 6 வரை)

கேள்வி 12: சட்டப்பிரிவு 76இன்படி, வரி வசூலிக்கப்பட்டுள்ளது ஆனால், அரசுக்கு செலுத்தப்படவில்லை என்ற நிலையில் நோட்டீஸ் அனுப்புவதற்கான கால வரையறை என்ன?

பதில்: இதற்கு எந்தக் கால வரையறையும் இல்லை. இப்படிப்பட்ட விஷயம் நடைபெற்றது கண்டறியப்பட்ட உடன் எந்த கால வரையறையும் இல்லாமல் நோட்டீஸ் அனுப்பப்பட வேண்டும்.

கேள்வி 13: வரித்தொகையைப் பெறுவதற்காக உரிய அதிகாரியிடம் உள்ள வழிமுறைகள் என்னென்ன?

பதில்: வர வேண்டிய பாக்கியைப் பின்வரும் முறையில் உரிய அதிகாரி திரும்பிப் பெறுவார்:

(அ) அத்தகைய நபருக்குத் தருவதற்காக, வரி அதிகாரிகள் பிடித்தம் செய்து வைத்திருக்கும் தொகையிலிருந்து இந்த நிலிவைத் தொகை பிடித்துக்கொள்ளப்படும்.

ஆ) அப்படிப்பட்ட நபருக்குச் சொந்தமான பொருள்களை நிறுத்திவைத்துக்கொள்தல் அல்லது விற்பனைசெய்தல் மூலமாக திரும்பிப் பெறுதல்;

(இ) யாரிடமிருந்து நிலுவைத் தொகை வர வேண்டியுள்ளதோ அல்லது இனிமேல் நிலுவையாக இருக்குமோ அந்த நபர் அல்லது யார் பணத்தை வைத்திருக்கிறாரோ அவரிடமிருந்து, அவருக்கான பணத்தை அல்லது கணக்கை வைத்திருப்பவருப்பவர் மூலம் மத்திய அல்லது மாநில அரசுக்கு உரிய கடன் தொகையைப் பெற்றுத்தர வேண்டும்.

(ஈ) இப்படிப்பட்ட நபருக்குச் சொந்தமான அசையும் அல்லது அசையா சொத்துகளை அந்தத் தொகை திரும்பச் செலுத்தப்படும்வரை நிறுத்தி வைத்துக்கொள்ளுதல். 30 நாட்களுக்குள் நிலுவைத் தொகை திருப்பிச் செலுத்தப்படாவிட்டால், இந்தச் சொத்துகள் விற்கப்படும். இந்த விற்பனை நடவடிக்கைகளுக்கு ஆகும் செலவு மற்றும் அவர் செலுத்த வேண்டிய தொகை இந்த விற்பனை மூலம் திரும்பப் பெறப்படும்.

(உ) இத்தகைய நபர் சொந்தமாக சொத்து வைத்திருக்கும் அல்லது குடியிருக்கும் அல்லது வியாபாரம் நடத்தும் இடத்தின் மாவட்ட ஆட்சியாளர் மூலமாக, இந்தத் தொகை நில வருமான நிலுவை போல.

(ஊ) உரிய மாஜிடிரேட்டுக்கு விண்ணப்பிப்பதன் மூலம், அவர் தான் விதித்த அபராதம் போலவே இதைக் கருதித் தொகையைத் திரும்பப் பெறுவதற்கான நடவடிக்கை எடுப்பார்.

(எ) இந்தச் சட்டத்தின்படி

ஏ) சி.ஜி.எஸ்.டி. நிலுவைத் தொகை எஸ். ஜி.எஸ்.டி நிலுவையைப் போல திரும்பப் பெற முடியும், அதே போல எஸ். ஜி.எஸ்.டி நிலுவை தொகையை ஜி.எஸ்.டி. நிலுவைத் தொகை போல திரும்பப் பெற முடியும். (சட்டப் பிரிவு 79 உட்பிரிவு1, 2,3,4)

கேள்வி 14 செலுத்தப்பட வேண்டிய வரி பாக்கியைத் தவணைகளில் செலுத்தலாமா?

பதில்: இத்தகைய கோரிக்கை பார்வைக்கு வரும்போது, பணம் செலுத்துவதற்கான கால அளவை நீட்டிப்பதும் குறிப்பிட்ட நபரால் சுய மதிப்பீடு செய்யப்பட்டு ரிடர்னில் காட்டப்பட்டுள்ள இழப்பிற்கெதிரான தொகையை சட்டத்தின் கீழ் அதிகபட்சமாக 24 மாதத் தவணைகளில் எவ்வளவு வேண்டுமானாலும் செலுத்த அனுமதிப்பதும் (பிரிவு 50இன் கீழுள்ள வரையறைகள்/நிபந்தனைகளுக்கேற்ப கணக்கிடப்பட்ட வட்டியுடன் சேர்த்து) ஆணையாளர் (அ) முதன்மை ஆணையாளரின் விருப்பமாகும். ஆயினும், குறிப்பிட்ட தேதி வரை ஏதாவது ஒரு தவணைத் தொகையைச் செலுத்த முடியாமல் போனாலும் அத்தேதியில் இன்னும் செலுத்த வேண்டிய மொத்தத் தொகையும் முன்னறிவிப்பு ஏதுமின்றி பிடித்தம் செய்யப்பட்டு விடும் (பிரிவு 80).

கேள்வி 15: உறுதி செய்யப்பட்ட வரித் தொகை மேல் முறையீட்டில் / ரிவிஷன் நடவடிக்கைகளில் அதிகமானால் அதை வசூலிப்பதற்கான நடைமுறை என்ன?

பதில்: டிமாண்டுக்கான நோட்டீஸ் நிலுவையில் உள்ள தொகைக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும். இந்தத் தொகை ஏற்கெனவே மேல்முறையீடு /ரிவிஷன் பைசல் செய்யப்படுவதற்கு முன்பாகவே உறுதிசெய்யப்பட்டு விடுவதால், பணம் திரும்பப்பெறும் நடவடிக்கைகள் அந்த மேல்முறையீடு/ரிவிஷன் பைசல் செய்யப்படுவதற்கு முன்பாக தொடரலாம். (சட்டப் பிரிவு 84 (அ))

கேள்வி 16: வரி விதிப்புக்கு உள்ளாகும் ஒரு நபர், வரி பாக்கியுடன் அவரது தொழிலை இன்னொருவருக்கு மாற்றிக்கொடுத்தால், வரி பாக்கியின் நிலவரம் என்ன?

பதில்: இந்த நிலுவைத் தொகை இத்தகைய மாற்றத்திற்கு முன்பாகத் தீர்மானிக்கப்பட்டு செலுத்தப்படாமல் இருக்கறதா அல்லது மாற்றத்திற்குப் பிறகு தீர்மானிக்கப்பட்டதாக இருந்தாலும், யாருக்கு அந்தத் தொழில் மாற்றப்பட்டுள்ளதோ அந்த நபருக்கு, கூட்டாகவும் தனியாகவும் வரியைச்

செலுத்தும் பொறுப்பு உள்ளது, வரி, வட்டி அல்லது அபராத நிலுவையை வரி செலுத்த வேண்டிய நபர் தனது தொழிலை மற்றவருக்கு மாற்றிக்கொடுக்கும் வரையிலான காலத்திற்குச் செலுத்த வேண்டும். (சட்டப் பிரிவு 85இன் உட்பிரிவு 1)

கேள்வி 17: நிறுவனம் (வரி விதிக்கப்பட வேண்டிய நபர்) திவாலாகிவிட்டால், வரி நிலுவை என்னவாகும்?

பதில்: ஏதாவது ஒரு நிறுவனம் மூடப்படும்போது, சொத்துக்களை பராமரிப்பதற்காக நியமிக்கப்படும் அதிகாரியான ரிசீவர் (லிக்விடேட்டர்) தனது நியமனம் குறித்து ஆணையருக்கு 30 நாட்களுக்குள் தகவல் தெரிவிக்க வேண்டும். இந்தத் தகவல் கிடைக்கப் பெற்றதும் ஆணையர் செலுத்தப்பட வேண்டிய வரி/நிலுவைத் தொகை எவ்வளவு என்பதை லிக்விடேட்டருக்கு மூன்று மாதங்களுக்குள் அறிவிக்கக்கூடும். (சட்டப் பிரிவு 88இன் உட்பிரிவு 1,2)

கேள்வி 18: திவாலாகும்போது, நிறுவனத்தின் (வரி விதிக்கப்பட வேண்டிய நபர்) இயக்குநர்களுக்கு உள்ள பொறுப்பு என்ன?

பதில்: எந்த தனியார் நிறுவனமும் மூடப்படும்போது ஏதாவது வரியோ அல்லது வேறு நிலுவைகளோ நிறுவனம் திவாலாவதற்கு முன்னரோ அல்லது பின்னரோ முடிவு செய்யப்பட்டு, அவை வசூலிக்கப்படாமல் இருந்தால், வரி செலுத்தப்படாத காலத்தில் நிறுவனத்தின் இயக்குனராக இருந்த ஒவ்வொரு நபருக்கும் கூட்டாகவோ அல்லது தனியாகவோ நிலுவையை செலுத்தும் பொறுப்பு உள்ளது. ஆனால், நிலுவைத் தொகை செலுத்தப்படாமல் இருந்ததற்கு, கம்பெனி நடவடிக்கைகளில் எந்த விதமான கவனக் குறைவோ, கடமை தவறிய செயலோ அல்லது தங்கள் தரப்பில் இல்லை என்பதை ஆணையருக்குத் திருப்தி ஏற்படும் வகையில் நிரூபித்தால், இந்த நிலுவையைச் செலுத்த வேண்டியதில்லை.

கேள்வி 19: செலுத்தப்பட வேண்டிய வரி பாக்கியைச் செலுத்துவதில் பார்ட்னர்ஷிப் (partnership) நிறுவனத்தின் வரி செலுத்தும் பார்ட்னர்களது இழப்பு என்னவாக இருக்கும்?

பதில்: எந்த ஒரு கூட்டணி நிறுவனத்தின் கூட்டாளிகளாக (partners) இருந்தாலும் வரிபாக்கி, வட்டி (அ) அபராதத் தொகையைச் அனைவரும் சேர்ந்தே செலுத்தியாக வேண்டும்.

ஏதாவது ஒரு கூட்டாளியும் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது அது குறித்து ஆணையாளருக்கு ஒரு அறிவிக்கை மூலம் தெரிவிக்க வேண்டியது நிறுவனம் (அ) கூட்டாளிகளின் கடமை ஆகும்.

பணியிலிருந்து ஓய்வு பெறும் ஒரு கூட்டாளி aந்தத் தேதி வரை கட்டப்பட வேண்டிய வரிபாக்கி, வட்டி (அ) அபராதத் தொகையைச் (ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டாலோ அல்லது பிறகு நிர்ணயிக்கப்பட்டாலோ) செலுத்தக் கடமைப்பட்டவராவார்.

பணி ஓய்வு பெற்று ஒரு மாதத்துக்குள் இதுகுறித்த விவரம் எதுவும் அவருக்குத் தெரியப்படுத்தப்படவில்லை என்றால், ஆணையாளருக்கு இவ்விவரங்கள் தெரிவிக்கப்படும்வரை அத்தொகையை அவர் செலுத்தக் கடமைப்பட்டவர் என்று அர்த்தம் (பிரிவு 90).

கேள்வி 20: ஒருவரின் தொழிலைக் காப்பாளர் (guardian) அல்லது டிரஸ்டீ அல்லது அவர் மைனராக இருக்கும் பட்சத்தில் வேறொரு முகவர் (agent) எடுத்து நடத்தினால் செலுத்த வேண்டிய வரி எப்படி செலுத்தப்படும்?

பதில்: வரி பாக்கி இருக்கும் தொழிலை எடுத்து நடத்தும் காப்பாளர் (அ) டிரஸ்டீ (அ) மைனரின் முகவர் அல்லது இயங்க முடியாத நிலையில் இருக்கும் ஒருவரின் சார்பில் தொழில் புரிபவர் வரி/அபராதத் தொகையைச் செலுத்தக் கடமைப்பட்டவராவார்; செலுத்தாவிட்டால் அத்தொகையானது அவரிடமிருந்து மீட்கப்பட்டாக வேண்டும் (பிரிவு 91);

கேள்வி 21: தொழில் புரியும் ஒருவரின் தொழில் வளாகம் நீதிமன்றக் கட்டுப்பாட்டில் இருந்தால் என்ன ஆகும்?

பதில்: வரி பாக்கி/வட்டி/அபராதம் செலுத்த வேண்டிய, தொழில் புரிபவரின் தொழில் வளாகம் நீதிமன்றம்/நிர்வாக அலுவலர்/அதிகாரபூர்வ டிரஸ்டீ/ நீதிமன்ற ஆணையால் நியமிக்கப்பட்ட மேலாளரின் கட்டுப்பாட்டில் இருந்தால், இயல்பாக வரி செலுத்தும் ஒருவருக்கு நிர்ணயிக்கப்படுவது போல் அவரிடமிருந்து வரி/வட்டி/அபராதம் வசூலிக்கப்படும் (பிரிவு 92).

---------------------

## 16. ஜிஎஸ்டியில் முறையீடுகள், மறுஆய்வு மற்றும் சீராய்வு

கேள்வி 1: தனக்கெதிரான உத்தரவு அல்லது முடிவினால் பாதிக்கப்பட்டவர் அதை எதிர்த்து முறையீடு செய்ய உரிமை உள்ளதா?

பதில்: ஆம். ஜிஎஸ்டி சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட உத்தரவு அல்லது முடிவினால் பாதிக்கப்பட்டால், அவர் சட்டப் பிரிவு 107இன்படி அதை எதிர்த்து முறையிட உரிமை உண்டு. மேற்படி உத்தரவு அல்லது முடிவு, "சட்டபூர்வ உரிமை படைத்த அதிகாரியால்" அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

அதே சமயத்தில், சில முடிவுகள் மற்றும் உத்தரவுகள் (சட்டம் 121ன் தொடர்புடைய) முறையீடு செய்யப்பட முடியாதவை.

கேள்வி 2: மேல் முறையீடு ஆணையத்தில் முறையீடு செய்வதற்கான கால வரையறை என்ன?

பதில்: பாதிக்கப்பட்டவர், அதற்கான முடிவு அல்லது உத்தரவு கிடைக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் மேல் முறையீடு செய்ய வேண்டும். வருவாய்த் துறைக்குக் கால வரையறை, 6 மாதங்கள். இதற்குள்ளாக மறு ஆய்வு நடைமுறைகள் முடிக்கப்பட்டு, மேல் முறையீட்டு ஆணையத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

கேள்வி 3: மேல் முறையீட்டு ஆணையர், மேல் முறையீட்டு தாமத்தை அனுமதிக்க அதிகாரம் பெற்றிருக்கிறாரா?

பதில்: ஆம். சட்டம் 107(4)இல் குறிப்பிடப்பட்டுள்ள 'சரியான காரணிகளி'ன் அடிப்படையில் மேல் முறையீட்டுக்கான காரணங்கள் இருந்தால் ஆணையர், மேல் முறையீடு செய்ய வேண்டிய காலவரையறையின் கடைசித் தேதியிலிருந்து 1 மாதம் வரை அதாவது (3+1/6+1) தாமதத்தை அனுமதிக்கலாம்.

கேள்வி 4: மேல் முறையீட்டு மனுவில் கொடுக்கப்படாத கூடுதல் விவரங்களைத் தாக்கல் செய்ய அனுமதிக்க மேல் முறையீட்டு ஆணையருக்கு அதிகாரம் உள்ளதா?

பதில்: ஆம். கூடுதல் விவரங்கள் மனுவில் சேர்க்கப்படாததற்கு சரியான காரணம் இருக்கிறது என்பதைப் பற்றி அவர் திருப்தியடையும் பட்சத்தில் அவற்றை அனுமதிக்க அதிகாரம் உண்டு.

கேள்வி 5: மேல் முறையீட்டு ஆணையரின் உத்தரவு யாருக்கு தெரியப்படுத்தபட வேண்டும்?

பதில்: மேல் முறையீட்டு ஆணையத்தின் உத்தரவின் நகல்களை, மேல் முறையீடு செய்தவர், எதிர்த் தரப்பாளர், மற்றும தீர்ப்பாயத்தின் அதிகாரி ஆகியோருக்கும் ஜிஎஸ்டி மற்றும் எஸ்ஜிஎஸ்டி யுடிஜிஎஸ்டியின் நீதிபரிபாலன ஆணையருக்கும் அளிக்கப்பட வேண்டும்.

கேள்வி 6: ஒவ்வொரு முறை மேல் முறையீடு செய்யும் போதும், முன்வைப்புத் தொகையாக ஆணையத்திடம் அளிக்க வேண்டிய தொகை எவ்வளவு?

எந்த உத்தரவை எதிர்த்து மேல் முறையீடு செய்கிறாரோ அதில் அறிவிக்கப்பட்ட அபராதம், முழு வரி, அதற்கான வட்டி, அபராதத் தொகை, கட்டணங்கள் ஆகியவற்றுடன், அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்ட வரித் தொகையில் 10% சேர்த்து, முன்வைப்புத் தொகையாக மேல் முறையீட்டு ஆணையத்தில் செலுத்த வேண்டும்.

கேள்வி 7: முன்வைப்புத் தொகையை அதிகரிக்க வேண்டும் என்று மேல் முறையீட்டு ஆணையத்திடம் (AA) வரித் துறை முறையீடுசெய்ய முடியுமா?

பதில்: இல்லை. முடியாது.

கேள்வி 8: மீதியிருக்கும் தொகையை எப்படி மீட்டெடுப்பது?

பதில்: மேலே குறிப்பிட்டபடி முன்வைப்புத் தொகை அளிக்கப்பட்ட பின்னர், மீதியிருக்கும் தொகையை மீட்டெடுப்பது சட்டப் பிரிவு 107 (7)இன்படி தடை செய்யப்பட்டதாகக் கருதப்படும்.

கேள்வி 9: மேல் முறையீட்டின்போது, AA ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட உத்தரவில் காணப்பட்ட வரி / அபராதம் / தண்டனை மற்றும் திருப்தியளிக்கும் தொகை / ITC -யைக் குறைப்பது ஆகியனவற்றிற்கு அதிகாரம் உள்ளதா?

பதில்: பறிமுதல் செய்வதற்குப் பதிலாக விதிக்கப்படும் தண்டனை / கட்டணம் / அபராதம் ஆகியனவற்றை உயர்த்துவதற்கும் அல்லது திருப்பி அளிக்க வேண்டிய தொகையைக் குறைப்பதற்கும், அல்லது அளிக்கப்பட்ட வரிக்கடன் தொகையைக் குறைப்பதற்கும் AA-விற்கு அதிகாரம் உண்டு. இதற்கு ஏற்கெனவே அளிக்கப்பட்ட தீர்ப்பாணைக்கு எதிராக, மனுதாரர் தகுந்த காரணங்களை அளித்திருக்க வேண்டும். (சட்டப் பரிவு 107 (11)இன்படி)

கேள்வி 10: எந்தக் காரணத்திற்காகவாவது, தன்னிடம் முறையீடு செய்யப்பட்ட வழக்கை மறுபடியும், தீர்ப்பாணையத்திற்கு அனுப்ப AA விற்கு அதிகாரம் உள்ளதா?

பதில்: இல்லை சட்டப் பிரிவு 107(11)இன்படி AA தான் விசாரித்த பின்பு, சரியானது, நீதி வரம்பிற்கு உட்பட்டது. முறையானது என்று தான் கருதும் தீர்ப்பை வழங்க வேண்டும். ஏற்கெனவே அளிக்கப்பட்ட தீர்ப்பை உறுதி செய்தோ திருத்தியோ அல்லது ரததுசெய்தோ எப்படியும் தீர்ப்பையும் வழங்கலாம்.ஆனால், வழக்கை ஏற்கெனவே தீர்ப்பு வழங்கிய ஆணையத்திற்குத் திருப்பி அனுப்பக் கூடாது.

கேள்வி 11: சிஜிஎஸ்டி / எஸ்ஜிஎஸ்டி அதிகாரி இந்தச் சட்டத்தின்படி ஏற்கெனவே அவரது கீழ் நிலை அதிகாரிகள் அறிவிந்த உத்தரவை மாற்ற முடியுமா?

பதில்: சட்டப் பிரிவு 2 (99)இன்படி நியமனம் செய்யப்பட்ட மறுஆய்வு அதிகாரி, சட்டப் பிரிவு 108இன்படி இந்த அதிகாரத்தைப் பெறுகிறார். சட்டப் பிரிவு 108இன்படி, இந்த அதிகாரி, தனது கீழ்நிலை அதிகாரிகளால் அளிக்கப்பட்ட உத்தரவுகள்.

முடிவுகள் ஆகியவற்றை ஆய்வு செய்வதற்கோ, தவறு என்ற முடிவெடுப்பதற்கோ அதிகாரம் படைத்தவர். இது வரி வருவாய்க்கு இடையூறு விளைவிப்பது சட்டத்திற்குப் புறம்பானது, முறையற்றது. குறிப்பிட்ட உண்மைத் தகவல்களை கணக்கில் எடுத்துக் கொள்ளாதிருந்து இவை, உத்தரவு வெளியிடப்பட்ட சமயத்தில் தெரிய வந்தாலும், இல்லாவிட்டாலும், இந்தியாவின் தலைமைக் கணக்குத் தணிக்கையாளரின் கண்டறி பதிவின் அடிப்படையில் விளைவாக இருந்தாலும், இவ்வாறான காரணங்களால், தேவையானால், சம்பந்தப்பட்டவர்களுக்கு விளக்கம் தர அனுமதித்த பிறகு, ஏற்கெனவே அளிக்கப்பட்ட உத்தரவை மாற்றலாம்.

கேள்வி 12: 'மறு ஆய்வு அதிகாரி' தனது கீழ்நிலை அதிகாரிகளால் அறிவிக்கப்பட்ட உத்தரவு நடைமுறைப்படுத்தக் கூடாது என்று ஆணை பிறப்பிக்க முடியுமா?

பதில்: ஆம், முடியும்.

கேள்வி 13: ஜிஎஸ்டி யின் படி மறுஆய்வு அதிகாரி தனது கீழ்நிலை அதிகாரிகளின் ஆணையை மாற்றும் அதிகாரத்திற்குத் தடைபோட ஷரத்துக்கள் உள்ளனவா?

பதில்: ஆம். மறுஆய்வு அதிகாரியினால், ஏற்கெனவே (a) வெளியிடப்பட்ட தீர்ப்பாணை, சட்டப் பிரிவு 107இன் கீழ்,அல்லது 112-ன் கீழ் அல்லது 117ன் கீழ் அல்லது 118ன் கீழ் வெளியிடப்பட்டால், மறு ஆய்வு அதிகாரி தலையிட முடியாது.

(b) 107(2) சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கால அவகாசம், முடிவுக்கு வராத நிலை, அல்லது தீர்ப்பானை வழங்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகள் கடந்த நிலை ஆகியன இருந்தாலும், மறு ஆய்வு அதிகாரி தலையிட முடியாது.

(c) இந்த உத்தரவு, இந்தச் சட்டப் பிரிவின் கீழ் ஏற்கெனவே மறு ஆய்வுக்காக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தாலும், மறுஆய்வு அதிகாரியால் தலையிட முடியாது.

கேள்வி 14: முறையீட்டு மனுவை ஏற்க மறுக்க, தீர்ப்பாயத்திற்கு எப்போது அல்லது எந்த சமயங்களில் அதிகாரம் உள்ளது?

பதில்: முறையீட்டு மனு, வரித்தொகை, அல்லது உள்ளீட்டு வரிக்கடன், அல்லது வரிவிதிப்பில் வித்தியாசம், அல்லது உள்ளீட்டு வரிக்கடனில் உள்ள வித்தியாசம், இந்த உத்தரவு தொடர்பான கட்டணம், அபராதம், இது போன்ற வழக்குகளில் வழக்கமாக முடிவாகும் தண்டனை அபராதத் தொகை ரூ. 50,000க்கு மிகாமல் இருக்க வேண்டும். இந்த நிலை இருந்தால்தான், சட்டப் பிரிவு 112(2)இன்படி தீர்ப்பாயம், வழக்கை விசரிக்க மறுக்கலாம்.

கேள்வி 15: தீர்ப்பாயத்திற்கு முன்பு முறையீடு செய்வதற்கான கால வரையறை என்ன?

பதில்: மனுதாரர் எந்த உத்தரவுக்கு எதிராக முறையீடு செய்கிறாரோ, அந்த உத்தரவு பெறப்பட்ட தேதியிலிருந்து, மூன்று மாதங்களக்குள் முறையீடு செய்ய வேண்டும். துறையைப் பொறுத்த மட்டில் மறுஆய்வு மூலம் பெறப்பட்ட உத்தரவை பரிசீலனை செய்த பின்பு, உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதத்திற்குள் முறையீடு செய்ய வேண்டும்.

கேள்வி 16: சட்டத்திற்க உட்பட்ட 3/6 மாதங்களுக்கு மேல் மேல் முறையீடு செய்தால், அந்த முறையீட்டை மன்னித்து ஏற்கத் தீர்ப்பாயத்திற்கு அதிகாரம் இருக்கிறதா?

பதில்: ஆம். குறிப்பிட்ட 3/6 மாதங்களைக் கடந்து அடுத்த மூன்ற மாதங்கள் வரை தாமதமாகத் தாக்கல் செய்யப்படும் முறையீட்டிற்கு தகுந்த காரணங்கள் இருந்தால், அதை ஏற்றுக்கொண்டு வழக்கு விசாரணை நடத்தத் தீர்ப்பாயத்திற்கு அதிகாரம் இருக்கிறது.

கேள்வி 17: தீர்ப்பாயத்தின் முன், குறுக்கு விசாரணை ஆட்சேபங்கள் அடங்கிய குறிப்பாணையை தாக்கல் செய்ய காலவரையறை என்ன?

பதில்: முறையீடு குறித்தான ஒப்புகைக் குறிப்பு பெற்ற தேதியில் இருந்து 45 நாட்கள்.

கேள்வி 18: திருப்பி அளிக்கப்படும் கூடுதல் தொகை மற்றும் முன் வைப்புத் தொகை ஆகியவற்றிற்கு வட்டி அளிக்கப்பட வேண்டுமா?

பதில்: ஆம். சட்டப் பிரிவு 115இன்படி, மனுதாரரால் 107இன் துணைப் பிரிவு (6), மற்றும் 112இன் துணைப் பிரிவு (8) ஆகியவற்றின் கீழ் வைப்பாக அளிக்கப்படும் தொகை, மற்றும மேல் முறையீட்டு தீர்ப்பாயத்தின், மேல் முறையீட்டு ஆணையத்தால் வழங்கப்படும், தீர்ப்பினால், கொடுக்கப்பட வேண்டிய தொகைக்கு சட்டப் பிரிவு 56 இல் குறிப்பிட்டபடி வட்டி விகிதத்துடன் அளிக்கப்பட வேண்டும். இந்தத் தொகை எப்போது பெறப்பட்டதோ அதிலிருந்து திரும்பி அளிக்கும் நாள் வரை கணக்கிட்டு அளிக்கப்பட வேண்டும்.

கேள்வி 19: தீர்ப்பாயத்தின் உத்தரவை எதிர்த்து எந்த அமைப்பின் முன், முறையீடு செய்யலாம்?

பதில்: வட்டார தீர்ப்பாயத்தின் மாநில அமர்வு அல்லது அமர்வு மன்றங்கள், உயர் நீதிமன்றங்கள், உயர் நீதிமன்றத்தின் கீழ் வரும் அதாவது, இம்மன்றங்களின் தீர்ப்பை எதிர்க்கும் மேல் முறையீட்டில் தீர்க்கப்பட வேண்டிய சட்டச் சிக்கல் அடங்கியுள்ளது என்று கருதினால், (சட்டப் பிரிவு 117(1) அந்த முறையீட்டை விசாரணைக்கு ஏற்கலாம். ஆனால் தேசிய அமர்வு மன்றம், மற்றும் பிராந்திய அமர்வு மன்றங்கள், உயர்நீதி மன்றத்தின் விசாரணை வரம்பின் கீழ் வராது. இம் மன்றங்கள் அளிக்கும் தீர்ப்பானையை எதிர்த்து முறையீடு செய்ய வேண்டுமானால் உச்ச நீதிமன்றத்தில்தான் செய்ய முடியும். (சட்டப் பிரிவு 109(5)இன்படி வழங்கலின் இடம் குறித்தான பிரச்சினைகளில் உருவாகும் மேல் முறையீடுகளை, தேசிய அமர்வு மற்றும் பிராந்திய அமர்வு மன்றங்களிலும் தீர்மானம் செய்ய முடியும்)

கேள்வி 20: உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு, செய்வதற்கான கால வரையறை என்ன?

பதில்: எந்த உததரவை எதிர்த்து முறையீடு செய்கிறாரோ அது தொடர்பான உத்தரவைப் பெற்ற நாளிலிருந்து 180 நாட்களுக்குள் மேல் முறையீடு செய்ய வேண்டும்.

--------------------

## 17. முன்னீட்டுத் தீர்ப்பு (**Advance Ruling**)

கேள்வி 1: முன்னீட்டுத் தீர்ப்பு என்றால் என்ன?

சிஜிஎஸ்டி/எஸ்ஜிஎஸ்டி சட்டப் பிரிவு 95இன்படியும், யுடிஜிஎஸ்டி சட்டப்பரிவு 12இன்படி முன்னீட்டு தீர்ப்பு என்றால், மேல் முறையீட்டு ஆணையத்திற்கு இருக்கும் அதிகாரத்தைப் பற்றியது. இதன்படி மனுதாரரின் முறையீடு, சட்டப் பிரிவு 97(2)இன் கீழ் வரும் கேள்விகள் பற்றியது என்றால், அல்லது சிஜிஎஸ்டி/எஸ்ஜிஎஸ்டி சட்டப் பிரிவு 100(1)ன் கீழ்வரும் கேள்விகள் என்றால், அதிலும் குறிப்பாக மனுதாரர் தொடர்புடைய சரக்கு வழங்கல் மற்றும்/அல்லது சேவை வழங்கல் தொடர்பான விஷயங்கள் இருந்தால், அவற்றிற்கான முடிவை, தீர்ப்பை, முன்னீடாக வழங்க மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு அதிகாரம் உள்ளது.

கேள்வி 2: எந்தெந்த கேள்விக்குப் பதிலாக முன்னீட்டுத் தீர்ப்பைக் கோர முடியும்?

(1) சரக்கு அல்லது சேவைகள் அல்லது இரண்டின் வகைப்பிரிவுகள் குறித்த முடிவு செய்வது.

(2) ஜிஎஸ்டி சட்டங்களின் ஷரத்துகளின் அடிப்படையில், வழங்கப்பட்ட அறிவிக்கைகளின் பொருந்து தன்மை பற்றி முடிவு செய்வது.

(3) வழங்கப்பட்ட சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இரண்டின் நேரம், மற்றும் மதிப்பீடு குறித்து முடிவு செய்வது

(4) செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்பட்டதாகக் கூறப்படும் உள்ளீட்டு வரிக் கடனை அனுமதிப்பது குறித்த முடிவு.

(5) இந்தச் சட்டத்தின் கீழ், சரக்குகள் மற்றும் சேவைகளுக்காக செலுத்த வேண்டிய வரிப் பொறுப்பேற்றல் குறித்து முடிவு செய்வது

(6) மனுதாரர், இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டுமா என்பது பற்றி முடிவு செய்வது.

(7) சரக்குகள் மற்றும் சேவைகள் தொடர்பாக மனுதாரர் செய்த குறிப்பிட்ட செயலைப் பற்றி முடிவு செய்வது.

சரக்குகள் வழங்கல் மற்றும் சேவைகள் அளித்தல் ஆகிய பதங்களுக்கு சட்டபூர்வமான அர்த்தங்களின் கீழ் அவை வருகின்றனவா என்பதை முடிவு செய்தல் ஆகியன.

கேள்வி 3: முன்னீட்டுத் தீர்ப்பு என்ற முறைமை இருப்பதன் நோக்கம் என்ன?

பதில்: இதுபோன்ற ஆணையம் உருவாக்க பொதுவான காரணங்கள்

(1) மனுதாரர் எடுத்துக்கொண்டிருக்கும் செயல்பாடு, அல்லது கோரிக்கை, தொடர்புடைய வரிக் கடன்பாடு பற்றி உறுதி செய்வதற்கு.

(2) நேரடி வெளிநாட்டு முதலீட்டைக் கவர்வதற்கு

(3) வழக்குகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு.

(4) தீர்ப்பு வழங்கு முறையை வெளிப்படையாக்கவும் விரைவாகவும் செலவு குறைவான முறையிலும் செய்வதற்கு.

கேள்வி 4: ஜிஎஸ்டியின் கீழ் முன்னீட்டுத் தீர்ப்பு வழங்கும் ஆணையத்தின் (AAR) அமைப்பு முறை என்ன?

பதில்: முன்னீட்டுத் தீர்ப்பாய ஆணையம் (AAR) சிஜிஎஸ்டியின் ஒரு உறுப்பினர் எஸ்ஜிஎல்டி/யுடிஜிஎஸ்டி யைச் சேர்ந்த ஒருவர், ஆகிய இருர், இவர்களை முறையே மாநில மற்றும் மத்திய அரசுகள் நியமிக்கும்.

கேள்வி 5: முன்னீட்டுத் தீர்ப்புக்காக முறையீடு செய்பவர்அதற்காகப் பதிவு செய்திருக்க வேண்டுமா?

பதில்: இல்லை. தேவையில்லை. ஜிஎஸ்டி சட்டங்களின் கீழ் பதிவு செய்திருக்கும் யார் வேண்டுமானாலும் முறையீடு செய்யலாம். இது தவிர, இவ்வாறு பதிவு செய்ய விரும்பும் நபரும் முறையீடு செய்யலாம் சட்டப் பிரிவு (95(b))

கேள்வி 6: முன்னீட்டுத் தீர்ப்பைப் பெற எப்போது விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்?

பதில்: முன்னீட்டு தீர்ப்பாணை பெறுவதற்கு, குறிப்பிட்ட வணிகத் தொடர்பு (சரக்குகள் வழங்கல் மற்றும் சேவைகள்) குறித்த பணியை ஏற்கும் முன்பாகவே விண்ணப்பிக்கலாம். அல்லது வழங்கல் தொடர்பான பணியை எடுத்துக்கொள்ளும் சமயத்தில், அது பற்றியும் இருக்கலாம். இதில் இருக்கும் ஒரே தடை அல்லது கட்டுப்பாடு என்னவென்றால், எழுப்பப்படும் கேள்வி ஏற்கெனவே விசாரணையில் இருக்கக்கூடாது. அதேபோல, விண்ணப்பதாரின் வேறு வழக்குகளில் இதே கேள்வி எழுப்பப்பட்டு, முடிவு செய்யப்படும் நிலையில் இருக்கக் கூடாது.

கேள்வி 7: முன்னீட்டு தீர்பாணை ஆணையம், எவ்வளவு காலத்திற்குள் தனது தீர்ப்பை வழங்க வேண்டும்?

பதில்: சிஜிஎஸ்டி/எஸ்ஜிஎஸ்டி சட்டம் பிரிவு 98(6)இன்படி மனுதாக்கல் செய்த தொன்னூறு நாட்களுக்குள் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும்.

கேள்வி 8: முன்னீட்டுத் தீர்ப்பாயத்திற்கு அடுத்தகட்ட மேல் முறையீட்டு முன்னீட்டுத் தீர்ப்பாயம் (AAAR) எது?

பதில்: முன்னீட்டு தீர்ப்பாயத்தின் மேல் முறையீட்டத் தீர்ப்பாயத்தை (AAAR) எஸ்ஜிஎஸ்டி/யுடிஜிஎஸ்டி) சட்டம் ஆகியவற்றின் கீழ் உருவாக்கலாம். இதுதான் குறிப்பிட்ட மாநிலம், யூனியன் பிரதேசத்திற்கான மேல் முறையீட்டத் தீர்ப்பாயமாக இருக்கும். முன்னீட்டுத் தீர்ப்பால் பாதிக்கப்பட்ட மனுதாரரோ, துறை சார்ந்த அதிகாரியோ மேல முறையீடு செய்யலாம்.

கேள்வி 9: ஜிஎஸ்டி சட்டத்தின் கீழ் எத்தனை AAR மற்றும் AAAR உருவாக்கப்படும்?

பதில்: ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு AAR மற்றும் ஒரு AAAR செயல்படும்.

கேள்வி 10: முன்னீட்டு தீர்ப்பு யாருக்குப் பொருந்தும்?

பதில்: AAR மற்றும் AAAR ஆகியவற்றின் தீர்ப்பாணை, சட்டப் பிரிவு 97(2)ன் கீழ் முறையீடு செய்திருந்து மனுதாரர் மற்றும் அவரது வரி விதிப்பு சட்ட வரம்பெல்லைக்குள் இருக்கும் வரித்துறை அதிகாரி ஆகியோரைக் கட்டுப்படுத்தும். இதற்குப் பொருள் என்னவெனில், மாநிலத்தில் பிற இடங்களில் இருக்கும் வரி விதிப்புக்கு உட்பட்ட நபர்களுக்குப் பொருந்தாது. முன்னீட்டு வரி விதிப்புக்கு உட்பட்ட நபர்களுக்குப் பொருந்தாது. முன்னீட்ட தீர்ப்பானைக்காக, மனு செய்தவரக்கு மட்டுமே அந்தத் தீர்ப்பாணை கட்டுப்படுத்தும்.

கேள்வி 11: முன்னீட்டு தீர்ப்பானைணக்கு உயர் நீதிமன்றம் அல்லது உச்ச நீதிமன்றம் தீர்ப்பில் குறிப்பிடும் அளவுக்கான முன்னுதாரண மதிப்புரிமை இருக்கிறதா?

பதில்: இல்லை. முன்னீட்டுத் தீர்ப்பாணையைப் பொறுத்தவரையில் அது எந்த விஷயத்திற்காக ஆணை பிறப்பிக்கப்படுகிறதோ, அதை மட்டும்தான் கட்டுப்படுத்தும். அதற்கு முன்னுதாரண மதிப்புரிமை கிடையாது. அதே சமயத்தில் மனுதாரரைத் தவிர மற்றவர்களையும் வலியுறுத்தும் மதிப்புரிமை பெற்றிருக்கிறது.

கேள்வி 12: முன்னீட்டுத் தீர்ப்பு எவ்வளவு காலத்திற்குப் பொருந்தும்?

பதில்: இதற்காக சட்டத்தில் குறிப்பிட்ட காலம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அதற்கு பதிலாக 103(2) சட்டப்பிரிவின்படி, முன்னீட்டுத் தீர்ப்பு, அது தொடர்புடைய சட்டம், உண்மை நிலை, அல்லது சூழ்நிலைகள், ஆகியன மாறாத அடிப்படைத் தீர்ப்புடன் ஒத்திசைவு இருக்கும் வரையில் பொருந்தும். அதாவது, ஒரு தீர்ப்பாணையை ஒட்டி ஒப்பந்தப் பரிமாற்றங்கள் நடக்கும் வரையிலும், அது தொடர்பான சட்டங்கள், உண்மை நிலை மற்றும் சூழ்நிலைகள் மாறாத வரையிலும், அது செல்லபடியாகும்.

கேள்வி 13: முன்னீட்டுத் தீர்ப்பாணையை செல்லத்தக்கதல்ல என்று அறிவிக்க முடியுமா?

பதில்: சட்டப் பிரிவு 104(1)இன்படி AAR அல்லது AAARஇன் முன்னீட்டுத் தீர்ப்பாணை செல்லாது என்று அறிவிக்கப்பட வேண்டுமானால் அந்தத் தீர்ப்பை, மனுதாரர் மோசடியான வழிகளில் பெற்றிருந்தால், ஆதாரங்களை மறைத்தும், உண்மை நிலையை திரித்தும் அல்லது தவறாக அர்த்தப்படுத்தியும் தீர்ப்பு பெறப்பட்டிருப்பது கண்டறியப்படும் நிலை எழும்போது தீர்ப்பை செல்லாது அறிவிப்பது சாத்தியம்தான் இது போன்ற சூழ்நிலையில் ஜிஎஸ்டி சட்டங்களில் உள்ள அனைத்து ஷரத்துக்களும், மனுதாரருக்குப் பொருந்தும் (ஆனால் முன்னீட்டத் தீர்ப்பு வழங்கப்பட்ட காலம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாது. இது, இந்தத் தீர்ப்பு செல்லாது என்று அறிவிக்கப்படும் வரை, தீர்ப்பு மனுதாரரை விசாரணை செய்த பிறகே வழங்க முடியும்.

கேள்வி 14: முன்னீட்டுத் தீர்ப்பைப் பெற வழிமுறைகள் என்ன?

பதில்: சட்டப் பிரிவுகள் 97 மற்றும் 98 ஆகியனவற்றில் முன்னீட்டுத் தீர்ப்பைப் பெறும் நடைமுறைகள் விளக்கப்பட்டு இருக்கின்றன. இதைப்பெற விரும்பும், மனுதாரர் அதற்கான படிவத்தை, முறையாகப் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க வேண்டும். அதை எப்படி பூர்த்தி செய்வது என்பது பற்றிய விவரமான குறிப்புகள், 'விதிமுறைகள்' பகுதியில் தரப்பட்டுள்ளன. விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்டதும், அதை சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு அது தொடர்பான ஆவணங்களைக் கேட்டுப் பெறும் விண்ணப்பத்துடன், அது தொடர்பான ஆவணங்களையும் வைத்து ஆய்வு செய்யும். தேவைப்பட்டால் விண்ணப்பதாரரையும் அழைத்து விசாரணை செய்யும். இதன் பிறகுஅந்த விண்ணப்பத்தை ஏற்பதா நிராகரிப்பதா என்பது முடிவு செய்யப்படும்.

கேள்வி 15: எந்தெந்தச் சூழ்நிலைகளில் முன்னீட்டு தீர்ப்பாணை கோரும் விண்ணப்பம் உறுதியாக நிராகரிக்கப்படும்?

பதில்: ஜிஎஸ்டி சட்டங்களின் ஷரத்துக்களில் எந்த அம்சத்தைப் பற்றிய கேள்வி, விளக்கத்தை, விண்ணப்பதாரர் எழுப்புகிறாரோ, அதே கேள்வி ஏற்கெனவே விசாரணைக்கென நிலுவையில் இருந்தால் அல்லது தகுதி பெற்ற மன்றங்களால் முடிவு செய்யப்பட்டு இருந்தால், விண்ணப்பதாரரின் மனு தள்ளுபடி செய்யப்படும் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் அதற்கான விளக்கங்களுடன் வாய்மொழி உத்தரவு மூலம் நிராகரிக்கப்படும்.

கேள்வி 16: விண்ணப்பம் முறையீடு ஆகியன AARஇல் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்பு என்ன நடைமுறைகள் பின்பற்றப்படும்?

பதில்: விண்ணப்பம் விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன் அதற்கான தீர்ப்பாணை, அதிலிருந்து 90 நாட்களுக்குள் அறிவிக்கப்பட வேண்டும். தீர்ப்பாணை வழங்கப்படும் முன்பு, விண்ணப்பத்தையும் அது தொடர்பான அதிகாரி அளித்த விளக்க ஆவணங்களையும் பார்த்து ஆய்வு செய்யும்.

தீர்ப்பு வழங்கப்படும் முன்பு, விண்ணப்பதாரர் அல்லது அவரது பிரதிநிதி ஆகியோரையும் வழக்குத் தொடர்பான அதிகாரிகளையும் சிஜிஎஸ்டி/எஸ்ஜிஎஸ்டி/யுடிஜிஸ்டி விசாரித்த பிறகே தீர்ப்பு வழங்கப்படும்.

கேள்வி 17: AAR உறுப்பினர்களிடையே தீர்ப்பாணை குறித்து வெவ்வேறான அபிப்பிராயங்கள் இருந்தால் என்ன நடக்கும்?

பதில்: AARஇன் இரண்டு உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடு இருந்தால், எந்த அம்சத்தில் அவ்வாறு கருத்து வேறுபாடு இருக்கிறதோ, அதை AAAR விசாரணைக்கு அனுப்பிவிடுவார்கள். ஒருவேளை AAAR உறுப்பினர்களும் இது பற்றி உறுதியான முடிவு எடுக்க முடியாது போனால் குறிப்பிட்ட கேள்வியைப் பற்றி முன்னீட்டுத் தீர்ப்பு வழங்க முடியாது என்று கருதப்படும்.

கேள்வி 18: AAR தீர்ப்பாணையை எதிர்த்து மேல் முறையீடு செய்ய அனுமதிக்கும் வழிமுறைகள் என்ன?

பதில்: AAARன் முன் மேல் முறையீடு செய்வதற்கான வழிமுறைகள், சிஜிஎஸ்டி/எஸ்ஜிஎஸ்டி சட்டம் 100 மற்றும் 101 பிரிவுகளிலும் யுடிஜிஎஸ்டி சட்டப் பிரிவு 14இலும் விளக்கப்பட்டுள்ளன.

AARன் தீர்ப்பினால் தான் பாதிக்கப்பட்டிருப்பதாக விண்ணப்பதாரர் நினைத்தால், AAARஇடம் மேல் முறையீடு செய்யலாம். அதேபோல, சிஜிஎஸ்டி / எஸ்ஜிஎஸ்டி / யுடிஜிஎஸ்டி யின் சட்ட வரம்பெல்லைக்கு உட்பட்ட அதிகாரியும் AARன் முடிவோடு ஒத்துப் போகாவிட்டால், அவரும் AAARஇடம் மேல் முறையீடு செய்யலாம். இதில் சிஜிஎஸ்டி/எஸ்ஜிஎஸ்டி அதிகாரி என்றால் சிஜிஎஸ்டி/எஸ்ஜிஎஸ்டி நிர்வாகத்தால் நியமிக்கப்பட்டவர் என்று பொருள். சாதாரணமான சூழ்நிலையில் விண்ணப்பதாரர் இருக்கும் சட்ட வரம்பெல்லைப் பகுதியில் உள்ள அதிகாரிதான் சிஜிஎஸ்டி/எஸ்ஜிஎஸ்டி யின் அதிகாரபூர்வ சட்டப்பிரதி ரீதியாக செயல்படுவார். முன்னீட்டுத் தீர்ப்பானை பெற்ற முப்பது நாட்களுக்குள், மேல் முறையீடு செய்யப்பட வேண்டு. இந்த விண்ணப்பம் அதற்கான விதிமுறைகளுக்கு உட்பட்டு, சரிபார்க்கப்பட்டு, அதன் பின் முறையீடு தாக்கல் செய்ய வேண்டும்.

இந்த முறையீடு தாக்கல் செய்த, 90 நாட்களுக்குள், இரு தரப்பினரையும் விசாரித்து, தீர்ப்பாணையை வழங்க வேண்டும். AAARஇன் உறுப்பினர்கள், தீர்ப்பு குறித்து கருத்து வேறுபாடுகள் எழுந்தால், அந்தக் குறிப்பிட்ட விஷயம் குறித்து எந்த முன்னீட்டுத் தீர்ப்பாணையும் வழங்கப்படாது என்று கருதப்படும்.

கேள்வி 19: முன்னீட்ட தீர்ப்பாணைகளை எதிர்த்து, உயர் நீதிமன்றம் அல்லது உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்ய முடியுமா?

பதில்: சிஜிஎஸ்டி/எஸ்ஜிஎஸ்டி சட்டத்தில் மேல் முறையீட்டு ஆணையத்தின் முன்னீட்டு தீர்ப்பாணையை எதிர்த்து முறையீடு செய்வதற்கு இடம் இல்லை.

அளிக்கப்பட்ட தீர்ப்பாணை விண்ணப்பதாரர் மற்றும் சட்ட வரம்பெல்லைக்கான அதிகாரியையும் கட்டுப்படுத்தும்.

அதே சமயத்தில் ரிட் மனு தொடர்பான சட்ட அதிகாரம் உயர் நீதிமன்றத்திடமும், உச்ச நீதிமன்றத்திடமும் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

கேள்வி 20: தீர்ப்பாணையில் தவறுகள் இருந்தால், அதைத் திருத்த AAR மற்றும் AAAR உத்தரவிட முடியுமா?

பதில்: ஆம். முடியும். AAR, AAAR ஆகிய இரண்டு ஆணையங்களுக்கும், தங்களது உத்தரவில் திருத்தங்கள் செய்ய அதிகாரம் இருக்கிறது. இதை, தவறு கண்டறியப்பட்ட ஆறு மாதங்களுக்குள்ளாகத் திருத்தப்பட வேண்டும். இந்தத் தவறை, ஆணையருமே தங்களது ஆவணங்கள் மூலம் கண்டறியலாம். விண்ணப்பத்தாரர் அதனைக் சுட்டிக் காட்டலாம் அல்லது இந்த தொடர்புடைய சிஜிஎஸ்டி/எஸ்ஜஎஸ்டி அதிகாரியும் தவறைக் கண்டறிந்து ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். இந்தத் திருத்தத்தினால் செலுத்த வேண்டிய வரித் தொகை அதிகமானாலோ அல்லது உள்ளீட்டு வரிக்கடன் குறைந்தாலோ, விண்ணப்பதாரர் மற்றும் சிஜிஎஸ்டி/எஸ்ஜிஎஸ்டி அதிகாரியையும் மறுபடியும் விசாரித்துவிட்டுத்தான் இறுதி உத்தரவு வழங்கப்பட வேண்டும்.

------------

18 - **பைசல் அமைப்பு** - நீக்கப்பட்டது (Omitted / Deleted)

## அத்தியாயம் -19 ஆய்வு, சோதனை, கையகப்படுத்தல் மற்றும் கைது

கேள்வி 1: 'சோதனை' என்ற சொல்லுக்குப் பொருள் என்ன?

சட்ட அகராதியில் உள்ளபடியும், பல்வேறு நீதிமன்றத் தீர்ப்பு அறிவிப்புகளின்படியும், 'சோதனை' என்பதற்கு எளிமையான பொருள், ஒரு குற்றச் செயலை, மறைப்பதற்காக ஒளிதது வைக்கப்படும் சாட்சி, ஆதாரத்தைக் கண்டுபிடிக்க அரசாங்க இயந்திரத்தால் பகுதி, வட்டாரம், நபர் போன்வற்றை கவனமாக சோதித்து அறிவது. இதன் தெடர்பான நபர், அவரது வாகனங்கள், வீடு அலுவலகம் ஆகியவற்றையும் சோதித்து அறிவது. தகுந்த சட்ட அங்கீகாரம் பெற்ற அதிகாரிதான் இதைச் செய்ய வேண்டும்.

கேள்வி 2: 'ஆய்வு' என்ற பதத்திற்கான பொருள் என்ன?

பதில்: சிஜிஎஸ்டி/எஸ்ஜிஎஸ்டி சட்டத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள ஷரத்து. இது சோதனையை விட கடுமை குறைவான நடவடிக்கை. இதன் மூலம், அதிகாரிகள், வரிவிதிப்புக்கு உட்பட்ட நபரின் தொழில் செய்யும் இடம், அல்லது பொருள் சேமிப்பு கிடங்குகள், சரக்குகளை வைக்கும் கிடங்குகள் ஆகியவற்றை ஆய்வு செய்ய முடியும்.

கேள்வி 3: 'ஆய்வு' செய்யலாம் என்பதை யார்,எந்த சூழ்நிலையில் உத்தரவிட முடியும்?

பதில்: சிஜிஎஸ்டி/எஸ்ஜிஎஸ்டி சட்டப் பிரிவு 67ன் படி அதன் அதிகாரி ஆய்வை மேற்கொள்ளலாம் என்பதற்கு எழுத்து மூலம் அதிகாரமும், உத்தரவும் அளிப்பதற்கு, இத்துறையின் இணை ஆணையர் அல்லது அதற்கு மேற்பட்ட அதிகாரிக்குத்தான் உரிமை உள்ளது.

எந்த இடத்தில் யாரைக் குறித்து ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான சரியான காரணங்கள் உள்ளன என்று அவர் நம்பினால், இந்த உத்தரவைப் பிறப்பிக்கலாம். அதற்கான காரணங்களாவன:

1. பொருள் வழங்கல் பரிமாற்றத்தில் விவரங்களை வேண்டுமென்றே மறைத்தல்

2. சரக்குக் கையிருப்பைப் பற்றிய விவரங்களை மறைத்தல்

3. மிக அதிகமான உள்ளீட்டு வரிக் கடனைக் கோரிப் பெற்றிருப்பது

4. வரி செலுத்தாமல் தப்பிக்க, அல்லது தவிர்க்க, சிஜிஎஸ்டி/எஸ்ஜிஎஸ்டி சட்டத்திலுள்ள ஷரத்துக்களைத் தவறாகப் பயன்படுத்தியிருப்பது.

5. சரக்குப் போக்குவரத்தை தொழிலாக மேற்கொண்டிருப்பவர், அல்லது சேமிப்பு கிடங்குகளின் உரிமையாளர், வரி செலுத்தாத சரக்குகளை வைத்திருத்தல் அல்லது வரி கொடுப்பதைத் தவிர்க்கும்படியான கணக்கைக் காட்டுவது, அல்லது சரக்குகளை மறைப்பது ஆகியன.

கேள்வி 4: இத்துறையில் முறையான அதிகாரம் பெற்ற அதிகாரி, இந்த சட்டப் பிரிவின் கீழ் சந்தேகத்துக்குள்ளாகும் நபரின், எல்லா வித சொத்துக்கள்/உரிமையுள்ள இடங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்ய அதிகாரம் அளிக்க முடியுமா?

பதில்:

1. வரிவிதிக்கத் தக்க நபரின் தொழில்/வர்த்தம் செய்யும் எல்லா இடங்களும்

2. சரக்குப் போக்குவரத்துத் தொழிலை செய்து வரும், நபரின் தொழில்/வர்த்தகம், வரி விதிக்கத்தக்க நபராக இருந்தாலும், பதிவு செய்யாவிட்டாலும், அவரது தொழில்/வர்த்தகப் பணியிடங்கள்.,

3. பொருள் சேமிப்புக் கிடங்குகள், சரக்கு சேமிப்பு கிடங்குகள் ஆகியவற்றை சொந்தமாக வைத்திருப்பவர் அல்லது அந்த இடத்தை நிர்வகிப்பவரின் ஆகியோரின் தொழில்/வர்த்தகம் நடைபெறும் அனைத்து இடங்கள் போன்ற அனைத்து இடங்களையும் ஆய்வு செய்யலம்.

கேள்வி 5: சிஜிஎஸ்டி சட்டத்தின் ஷரத்துக்களின்படி, சோதனை செய்வது, பறிமுதல் செய்வது ஆகியவற்றை நடத்துமாறு யார் உத்தரவிட முடியும்.

பதில்: இணை ஆணையர் அல்லது அதற்கும் மேல் பதவியில் உள்ள அதிகாரிதான், சோதனை செய்யவும், சரக்குகள், ஆவணங்கள், கணக்குப் புத்தகங்கள் அல்லது தொடர்புடைய பொருட்கள் ஆகியனவற்றை பறிமுதல் செய்யவதற்கும் எழுத்துபூர்வ உத்தரவை அளிக்கலாம். அவர், இவ்வாறு செய்வதற்குத் தகுந்த ஆதாரங்கள், காரணங்கள் ஆகியன இருக்கின்றன என்று நம்பினால் அவற்றைச் சோதனை செய்து தேடிக் கண்டறிந்து பறிமுதல் செய்ய உத்தரவிட அதிகாரம் உள்ளது.

கேள்வி 6: 'நம்புதற்கான காரணங்கள்' என்றால் என்ன?

பதில்: நம்புவதற்கான காரணங்கள் என்றால், குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றிய உண்மைகளைத் தெரிந்திருப்பதுதான்.இது நேரடியாகத் தெரிந்தவை இல்லையென்றாலும், சாதாரண காரண அறிவுள்ள எந்த மனிதரும் அதைப் பற்றி ஒரே விதமான முடிவுக்குத்தான் வருவார்கள்.

IPC சட்டப் பிரிவு 26 ன் படி, ஒருவர் குறிப்பிட்ட விஷயத்தை நம்பக் காரணம், அவரிடம அதைப் பற்றி வேறு விதமாக நம்புவதற்கு எந்த முகாந்திரமும் இல்லாதிருப்பததான். 'நம்புவதற்கான காரணம்' எதைக் குறிக்கிறது என்றால் அறிவுபூர்வமான அக்கறையுடன், குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றி, மிகக் கவனமான மதிப்பீடு செய்து, நோக்கத்தின் அடிப்படையிலான உறுதிப்பாட்டு நிலைக்கு வருவதுதான். இதை நேர்மையான, மற்றும் நியாயமான மனிதனுடைய முடிவாக, இது தொடர்பான சூழ்நிலைகள் மற்றும் பொருட்களின் அடிப்படையில் இருக்க வேண்டும்.

கேள்வி 7: சோதனை மற்றும் பரிமுதல் நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்குவதற்குமுன், அதற்கான நம்பத்தகுந்த காரணங்கள் இருக்கின்றனவா என்பதை அதற்குரிய அதிகாரி எழுத்துமூலம் பதிவு செய்ய வேண்டியது கட்டாயமா?

பதில்: இது போன்ற நம்பிக்கை குறித்தான காரணங்களை, அதிகாரி எழுதி பதிவு செய்த பின்னர்தான், ஆய்வு சோதனை மற்றும் பறிமுதலுக்கு ஆணை வழங்கப்படும் என்பதில்லை என்றாலும், அந்த அதிகாரி, எதை வைத்து அவ்வாறு நம்புகிறார் என்பதை வெளிப்படுத்த வேண்டும். ஒவ்வொரு வழக்கிலும் இதுபோல நம்புவதற்கான காரணங்களை பதிவு செய்யத் தேவையில்லை. ஆனாலும்கூட, பொருட்கள்/தகவல்கள் போன்றவை குறித்து பதிவு செய்த பின் சோதனைக்கான ஆணை வழங்குவது நல்லது.

கேள்வி 8: சோதனை செயலாணை என்றால் என்ன? அதில் என்னென்ன விவரங்கள் இருக்கும்?

பதில்: சோதனை நடத்த அதிகாரம் அளித்து வெளியிடப்படும் எழுத்து பூர்வ ஆவணம்தான் சோதனை செயலாணை. இதை அளிப்பதற்கு இணை ஆணையர் மற்றும் அவருக்கு மேற்பட்ட அதிகாரிகளுக்குத்தான் அதிகாரம் இருக்கிறது. சோதனை செயலாணையில், அவ்வாறு சோதனை நடத்துவதற்குத் தேவையான காரணங்கள் குறிப்பிடப்பட்டு இருக்க வேண்டும். சோதனைச் செயலாணையில், பின்வரும் விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

1. மீறப்பட்ட சட்டத்தின் குறிப்பு, பிரிவு ஆகிய விவரங்கள்.

2. சோதனைசெய்ய வேண்டிய இட விவரம்

3. இந்த சோதனை நடத்த அதிகாரம் உள்ள நபரின் பெயர் மற்றும் பதவி விவரங்கள்

4. இந்த சோதனைச் செயலாணையை வழங்கிய அதிகாரியின் பெயர் மற்றும் அவரது பதவியின் முழுவிவரம். இதனுடன் அவருக்கான அதிகார வட்ட முத்திரை.

5. ஆணை வழங்கப்பட்ட தேதியும் இடமும்

6. சோதனைச் செயலாணையின் தொடர் எண்

7. அந்த ஆணை செல்லுபடியாகும் தேதி, காலம் பற்றிய விவரம் (உ.ம்) ஒன்று அல்லது இரண்டு நாள் போன்ற விவரம்.

கேள்வி 9: சிஜிஎஸ்டி/எஸ்ஜிஎஸ்டி சட்டத்தின்படி பொருட்களை எந்தச் சூழ்நிலையில் பறிமுதல் செய்ய முடியும்?

பதில்: SGST/CGST சட்டத்தின் 130ஆவது பிரிவின்படி, பின்வரும் காரியங்களை/செயல்களை யாராவது செய்தால், பொருட்கள்/சரக்குகள் பறிமுதல் செய்யப்படும்.

1. வரி ஏய்ப்பு செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் சட்டத்தின் ஷரத்துக்களை மீறி சரக்குகளை வழங்குவதோ அல்லது பெறுவது போன்றவற்றைச் செய்தால், பறிமுதல் நடவடிக்கை இருக்கும்.

2. சரக்குகளுக்கு, இச்சட்டத்தின்படி செலுத்த வேண்டிய வரியை செலுத்தாமல் இருப்பது

3. எந்த சரக்காக இருந்தாலும், அதற்கான பதிவுகள் எதையும் செய்யாமல் பிறருக்கு வழங்குவது அதன் மூலம் வரிகட்டாமல் இருப்பது

4. CGST/SGST சட்டத்தின் அல்லது அதன் பிரிவுகள் மற்றும் விதிமுறைகளுக்கு எதிராக நடந்துகொண்டு, அதன் மூலம் வரியைச் செலுத்தாமல் இருப்பது.

கேள்வி 10: ஒரு முறையான சோதனையின்போது, அதை அமல்படுத்தும் அதிகாரி என்ன அதிகாரங்களைப் பயன்படுத்தலாம்?

பதில்: சோதனையை நடத்தும் அதிகாரி, பறிமுதல் செய்ய வேண்டிய சரக்கை, ஆவணங்கள், கணக்குப் புத்தகங்கள் அல்லது இது தொடர்பான பிற பொருட்கள் ஆகியவற்றைத் தேடிப் பறிமுதல் செய்யலாம்.

தேடலின்போது, குறிப்பிட்ட இடத்தில் நுழைய செய்ய அனுமதி மறுக்கப்பட்டால், அதை உடைக்க அதிகாரம் உண்டு. அதுபோல, சோதனைக்குள்ளாகும் இடத்தில் பூட்டப்பட்ட அலமாரி பீரோக்கள், பெட்டிகள் போன்றவற்றைத் திறக்கச் சொல்லி, மறுக்கப்படும் பட்சத்தில், அவற்றை உடைத்துத் திறக்கவும், அந்த இடத்தை மூடி, தடைக்காப்பு செய்யவும் அவருக்கு அதிகாரம் இருக்கிறது.

கேள்வி 11: சோதனை நடத்தும் வழிமுறைகள் என்ன?

CGST/SGST சட்டப்பிரிவு 67(10)ன்படி, சோதனைகள், 1975ஆம் ஆண்டைய சட்டப்பிரிவு 100ன் படி, குற்றவியல் நடைமுறை வழிகாட்டு நெறிகளின்படி நடத்தப்பட வேண்டும்.

கேள்வி 12: சோதனை நடவடிக்கையின்போது கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படை முறைமைகள் என்ன?

பதில்: சோதனைகளின்போது, பின்வரும் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

முறையான சோதனைச் செயலாணை இல்லாமல எந்த இடத்தையும் சோதனை செய்யக் கூடாது.

வீடுகளில் சோதனை செய்யும்போது, சோதனைக் குழுவில் ஒரு பெண் அதிகாரியாவது உடன் செய்ய வேண்டும்.

சோதனை ஆரம்பிக்கும் முன்னர், அதற்காகச் செல்லும் இடத்தில், சம்பந்தப்பட்டவருக்குத் தங்களது அடையாள அட்டைகளைக் காண்பிக்க வேண்டும்.

சோதனை துவங்கும் முன்னதாக, அந்த இடத்தின் உரிமையாளர் அல்லது நிர்வாகி ஆகியோரிடம் சோதனை செயலாணையைக் காண்பித்து அதை அவர் புரிந்துகொண்டதற்கு அடையாளமாக, அவரது கையொப்பத்தைப் பெற வேண்டும். அதனுடன்கூட இரண்டு சாட்சிகளின் கையெழுத்தையும் பெற வேண்டும்.

சோதனையை, தனிப்பட்ட இருவரது முன்னிலையில் செய்யப்பட வேண்டும். அந்த நபர்கள், அந்தப் பகுதியை சேர்ந்தவராக இருப்பது நல்லது. ஒருவேளை அப்படிப்பட்ட நபர்கள் கிடைக்கவில்லை/யாரும் முன்வரவில்லை/விருப்பமில்லை என்ற சூழ்நிலை இருந்தால், அதே இடத்திற்குப் பக்கத்தில் இருக்கும் பகுதியில் இருந்து நபர்களை அழைத்து வந்து சோதனைக்கு சாட்சிகளாக வைத்துக் கொள்ளலாம். யாராக இருந்தாலும், அவர்களிடம் சோதனைக்கான காரணத்தை சுருக்கமாகச் சொல்லிப் புரிய வைப்பது அவசியமானது.

சோதனைக்கு முன்பாக அதற்காக செல்லும் அதிகாரிகள் மற்றும் சாட்சிகள் ஆகியோர் அந்த இடத்தின் உரிமையாளர், நிர்வாகி, தங்களை சோதனை செய்ய அனுமதிக்க வேண்டும். அதுபோல, சோதனை முடிந்த பின்னரும், அதே போன்ற சோதனைக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டும்.

சோதனை எப்படி நடைபெறப் போகிறது என்ற திட்ட ஆவணம், அந்த இடத்தில் தயாரிக்கப்பட வேண்டியது அவசியமானது. அது போல, சோதனை முடிந்ததும், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் / பொருட்கள் / சரக்குகள் ஆகியன பட்டியலிடப்பட வேண்டும். இந்தப் பட்டியலில், அந்த இடத்தின் உரிமையாளர்/பொறுப்பாளர், பட்டியலில் உள்ளவற்றை தனித்தனியாக சோதித்து அறிந்து 'ஆம்' என்ற ஒப்புகையுடன் கையெழுத்திட வேண்டும். இதை சோதனை அதிகாரியின் முன் செய்ய வேண்டும்.

சோதனை முடிந்தவுடன் சோதனைச் செயலாணையை வெளியிட்ட அதிகாரிக்கு அந்த ஆணையின் அசல் பிரதியை, சோதனையின் விளைவு, விவரம் ஆகியவற்றின் விளக்க அறிக்கையையும் உடன் வைத்து, அவரிடம் வழங்க வேண்டும். இந்த அறிக்கையில் சோதனையில் பங்கு பெற்ற அதிகாரிகளின் பெயர் விவரங்களை சோனைச் செயலாணையின் பின்புறத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.

சோதனைச் செயலாணையை வழங்கும் அதிகாரி, அவரால் வழங்கப்பட்ட செயலாணைகளைப் பற்றிய விவரப் பதிவேட்டை பராமரிக்க வேண்டும்.

சோதனை நடத்தப்பட்ட விதம் குறித்த மகஜர் மற்றும் அதன் இணைப்பு ஆவணங்களை இடத்தின் உரிமையாளர்/பொறுப்பாளர் ஆகியோரிடம் ஒப்புகைச் சீட்டுடன் வழங்கப்பட வேண்டும்.

கேள்வி 13: CGST/SGST அதிகாரி வேறு எந்த சூழ்நிலைகளிலாவது குறிப்பிட்ட தொழிலகம்/அலுவலகத்தைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வர முடியுமா?

பதில்: ஆமாம். CGST/SGST சட்டப்பிரிவு 65 ன்படி, சம்பந்தப்பட்ட அதிகாரி குறிப்பிட்ட இடத்தைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர முடியும். இந்த சட்டத்தின் ஷரத்துப்படி CGST/SGST அல்லது C&AG அல்லது தகுதி பெற்ற செலவு கணக்காளர், அல்லது பட்டயக் கணக்காளர் ஆகியோர் அடங்கிய தணிக்கைக் குழுவை CGST/SGST சட்டத்தின் பிரிவு 66-ன்படி குறிப்பிட்ட தொழில்/வர்த்தக வளாகத்தைத் தங்களது உரிமையில் எடுத்துக்கொள்ள முடியும். இவர்கள் அந்த நிறுவனத்தில் வரவு செலவு கணக்குகள், ஆய்வுகள், சரிபார்த்தல் போன்றவற்றைச் செய்து, துறைக்கு வருவாய் வருவதை உறுதி செய்வது, மற்றும் பாதுகாப்பது போன்றவற்றைச் செய்கின்றனர். ஆனால் இதைச் செய்வதற்கு CGST/SGST யின் ஆணையர் அந்தஸ்தில் உள்ளவர் உத்தரவை வழங்க வேண்டும். இதன் மூலமாகத்தான், வரிவிதிப்பிற்கு உள்ளான நபரின் தொழில் மற்றும் வர்த்தகம் செய்யும் இடத்தில், அந்த இடத்தைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வர முடியும்.

அது மட்டுமின்றி அவரது கணக்கு ஆவணங்கள், கணக்குப் புத்தகங்கள், கணிணிகள் போன்றவற்றைத் தங்களது உரிமையில் எடுத்துக்கொள்ள முடியும்.

கேள்வி 14: பறிமுதல் செய்தல் என்றால் என்ன?

பதில்: GST மாதிரிச் சட்டத்தில், பறிமுதல் குறித்து, தனியாக விளக்கப்படவில்லை. சட்ட லெக்ஸிகன் அகராதியில், இந்தப் பதத்திற்கு பொருள் விளக்கம் அளிக்கப்பட்டு இருக்கிறது. சட்ட நடைமுறையின்படி, குறிப்பிட்ட சொத்து, சரக்கு ஆகியன, அவரது ஆளுகையின் கீழ் கொண்டு வருவதுதான். இதை இப்படிக் கொண்டு வருவது, சம்பந்தப்பட்டவரின் ஒப்புதல் இல்லாமல் பலவந்தமாக எடுத்துக் கொள்ளல் என்றும் கூறலாம். இதுதான் பறிமுதல் என்று குறிப்பிடப்படுகிறது.

கேள்வி 15: ஜிஎஸ்டி சட்டங்களின்படி, சரக்குகளையோ, போக்குவரத்து வாகனங்களையோ, பிடித்து வைக்க முடியுமா?

பதில்: ஆம். CGST/SGST சட்டப்பிரிவு 129-ன் படி, ஒரு அதிகாரிக்கு சரக்குகளையும், அவற்றை ஏற்றிக்கொண்டு செல்லும் வாகனங்களையும், நிறுத்தித் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர அதிகாரம் இருக்கிறது. மேற்படி சரக்குகள், வண்டிகள் ஆகியன, CGST/SGSTயின் சட்டங்களை மீறி சரக்குகள், இருப்புகள் ஆகியனவற்றை, கணக்கு எதுவும் காட்டாமல் சேமிப்பது, பதுக்குவது போன்றவற்றைக் கண்டறிந்தால், அத்தகைய சரக்குகளையும், அவற்றைக் கொண்டு செல்லப் பயன்படும் வாகனங்களையும் நிறுத்தித் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வர முடியும்.

கேள்வி 16: தடுத்து நிறுத்தல் மற்றும் பறிமுதல் ஆகிய இரண்டிற்கும் உள்ள சட்டரீதியிலான வேறுபாடுகள் என்ன?

பதில்: தடுத்து நிறுத்தல் என்றால், குறிப்பிட்ட நபர், சொத்து, சரக்கு, வாகனங்கள் ஆகியவற்றை உரிமையாளரின் கட்டுப்பாட்டிலிருந்து மீட்டு தடுத்து நிறுத்திக்

கொள்வதாகும். இதற்கான சட்டபூர்வ தாக்கீது அனுப்பிய பின் அதற்கான உரிமையுள்ள அதிகாரி இந்தப் பணியை மேற்கொள்வார். பறிமுதல் என்றால் துறை சார்ந்த அதிகாரிகள், சொத்துக்களைத் தங்களது கட்டுப்பாட்டில் நேரடியாகக் கொண்டு வருவதுதான். தடுத்து நிறுத்தல் என்பது, பறிமுதல் செய்ய வேண்டிய நிலையில் உள்ள பொருட்களைத் தடுத்து நிறுத்தித் தங்களது பொறுப்பில் எடுத்துக்கொள்வது பறிமுதல் என்றால், முறையான விசாரணைக்குப் பிறகு தவறு செய்திருக்கிறார் என்று உறுதி செய்யப்பட்ட பின்பு பொருட்களை, சரக்கு, வாகனைங்களைக் கையகப்படுத்துவதுதான் பறிமுதல்.

கேள்வி 17: GST சட்டங்களின்படி சோதனை மற்றும் பறிமுதலுக்கு நடவடிக்கைகளில் உள்ள பாதுகாப்பு அம்சங்கள் என்ன?

பதில்: CGST/SGST சட்டத்தில், சோதனை அல்லது பறிமுதல் தொடர்பான அதிகாரத்தில் உள்ள கட்டுப்பாடுகளாவன;

1. பறிமுதல் செய்யப்பட்ட சரக்குகள் அல்லது ஆவணங்கள் ஆகியனவற்றை சோதனை செய்ய வேண்டிய கால அளவுக்கு பின் நிறுத்தி வைத்திருக்கக் கூடாது.

2. பறிமுதல் செய்யப்படும் ஆவணங்களை, அவரது உரிமையாளர் நகல் எடுத்து வைத்துக்கொள்ளலாம்.

3. பறிமுதல் செய்யப்பட்ட சரக்குகள் குறித்தான நோட்டீஸ் அவற்றின் உரிமையாளருக்கு அனுப்பப்பட வேண்டும். அவ்வாறு அனுப்பாவிட்டால், பறிமுதல் செய்த சரக்குகள், ஆவணங்கள் போன்ற அனைத்தும் திருப்பி அளிக்கப்பட வேண்டும். இந்த கால நேரம், நியாயமான காரணங்கள் இருந்தால், மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்கலாம்

4. பறிமுதல் செய்யப்பட்ட சரக்குகள் முறையாகப் பட்டியலிடப்பட வேண்டும்.

5. GST சட்டங்களின்படி பறிமுதல் செய்யப்பட்ட சில வகைப்பட்ட சரக்குகளை (அழுகிப் போகக் கூடியன, மனிதருக்கு, சுற்றுச் சூழலுக்கு கேடு உண்டாகக்கூடியன) உடனடியாக அழித்துவிடலாம்.

6. சோதனை மற்றும் பறிமுதல் செய்வதற்கான முறைமை, 1973-ம் ஆண்டைய குற்றவியல் சட்ட நடைமுறை விதிகளின் படி பின்பற்றப்படும். ஆனால் இந்தச் சட்ட நடைமுறைப்படுத்தலில் மாற்றம் இருக்கும். குற்றவியல் நடைமுறைச் சட்ட விதிகளின் 165 பிரிவின் துணைப்பிரிவு (5)இன்படி சோதனையின் போது கைப்பற்றப் பொருட்களைப் பற்றிய பட்டியலை அருகிலிருக்கும் மாஜிஸ்டிரேட்டிடம் அனுப்பப் பட வேண்டும். ஆனால் CGST/SGST துறையைப் பொறுத்தவரை கைப்பற்றபட்ட, பறிமுதல் துறை சார்ந்த முதன்மை ஆணையர் அல்லது ஆணையர் ஆகியோருக்கு அனுப்பப்பட வேண்டும்.

கேள்வி 18: வரி செலுத்தப்பட வேண்டிய சரக்குகளை எடுத்துச் செல்லும்போது, அதனுடன் இருக்க வேண்டிய சிறப்பு ஆவணம் உள்ளதா?

பதில்: CGST/SGST யின் 68வது சட்டப்பிரிவின்படி, குறிப்பிட்ட மதிப்புக்கு அதிகமாக உள்ள சரக்குகளை எடுத்துச் செல்லுமபோது அதற்கான ஆவணங்களை எடுத்துச் செல்வது அவசியமானது.

கேள்வி 19: 'கைது' என்ற பதத்திற்கான பொருள் என்ன?

பதில்: CGST/SGST சட்டப் பிரிவுகளில் கைது என்றால் என்ன என்பதற்கான விளக்கம் எதுவும் அளிக்கப்படவில்லை. அதே நேரத்தில், நீதிமன்ற தீர்ப்புகளின்படி 'கைது' என்றால் சட்டபூர்வமான அதிகாரத்தின் கீழ் ஒரு நபரைக் கொண்டு வருவதுதான். வேறு விதமாய் சொல்வதென்றால், சட்டபூர்வமான அதிகார அமைப்பின் மூலம், அல்லது சட்டப்பூர்வமான பிடியாணை மூலம் ஒரு நபரின் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டது என்றால் அந்த நபர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று பொருள்.

கேள்வி 20: CGST/SGST சட்டத்தின்படி உரிய அதிகாரி குறிப்பிட்ட நபரைக் கைது செய்ய ஆணை பிறப்பிக்க முடியுமா?

பதில்: CGST/SGST யின் ஆணையர் ஒரு CGST/SGST அதிகாரிக்கு, குறிப்பிட்ட நபரைக் கைது செய்ய அதிகாரம் அளிக்க முடியும். அந்த நபர் CGST/SGST சட்டப் பிரிவு 132(1) (a), (b), (c), (d) அல்லது 132 (2) ஆகியவற்றின் படி தவறு செய்திருந்தால்

அவரைக் கைது செய்ய ஆணையிட முடியும். இவ்வாறு கைது செய்யப்பட அந்த நபர் ரூ. 2 கோடிகளுக்கு மேல் வரி ஏய்ப்பு செய்திருக்க வேண்டும் அல்லது ஏற்கெனவே CGST சட்டங்களின்படி குற்றவாளி என்று நிரூபணம் ஆகியிருக்க வேண்டும்.

கேள்வி 21: CGST/SGST சட்டத்தினபடி கைது செய்யப்பட்டவருக்கு உள்ள பாதுகாப்பு அம்சங்கள் என்ன?

பதில்: இந்த அம்சங்கள் சட்டப் பிரிவு 69இன் கீழ் இருக்கின்றன அவையாவன:

1. கைது செய்யப்பட வேண்டிய குற்றத்திற்காக, கைது செய்யப்படுகிறார் என்றால், அதற்கான காரணங்கள் அவருக்கு எழுத்துபூர்வமாக அளிக்கப்பட வேண்டும். அடுத்த 24 மணி நேரத்திற்குள் அவரை மாஜிஸ்டிரேட்டிடம் அழைத்துச் செல்ல வேண்டும்.

2. கைது செய்யப்பட்டாக வேண்டும் என்கிற அளவுக்கு குற்றம் செய்யாத அதே சமயம், கைது செய்வது அந்த சமயத்தில் தேவையானது என்ற நிலையில் கைது செய்யப்படும் நபரை CGST/SGST -யின் துணை ஆணையரே ஜாமினில் விடுதலை செய்ய முடியும். 1973 குற்றவியல் நடைமுறை செயல்பாட்டு விதிமுறைச் சட்டத்தின்படி (436) காவல்துறை அதிகாரிக்கும் இருக்கும் அதே அதிகாரம் CGST/SGST இணை/துணை ஆணையர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

3. அனைத்து கைது நடவடிக்கைகளும் 1973ஆம் ஆண்டைய குற்றவியல் நடைமுறைச் சட்ட விதிகளின்படி இருக்க வேண்டும்.

கேள்வி 22: கைது நடவடிக்கையின்போத கடைப்பிடிக்க வேண்டிய முன்னெச்சரிக்கைச் செயல்பாடுகள் என்ன?

பதில்: குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973 (1974ன் 2வது பிரிவு) விதிமுறைகளின்படி, சில நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். இதன்படி, CGST/SGST யின் அனைத்துக் கள அதிகாரிகளும் மேற்படி சட்டத்தைப் பற்றி மிக நன்றாக அறிந்திருக்க வேண்டும்.

இதில் இருக்கும் மிக முக்கியமான ஷரத்தான, பிரிவு 57இன் படி, யாராவது ஒருவரைப் பிடியாணை இல்லாமல் கைது செய்தால் நியாயமான காரணங்கள் இன்றி அதிக காலத்திற்குக் காவலில் வைக்கக் கூடாது. அப்படியே காரணங்கள் இருந்தாலும், 24 மணி நேரத்திற்கு அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். (கைது செய்யப்பட்ட நபரை அந்த இடத்திலிருநத அலுவலகத்திற்கு அழைத்து வரும் பயண நேரம் அதிகமாதல் தவிர) சட்டப் பிரிவு 56இன்படி கைது நடவடிக்கையை எடுத்த அதிகாரி, கைது செய்யப்பட்டவரை மாஜிஸ்டிரேட்டிம் அழைத்துச் செல்ல வேண்டும்.

D.K. பாஸு எதிர் மேற்கு வங்காள அரசாங்கம் இடையே நடந்த வழக்கில் மிக முக்கியமான தீர்ப்பு வழங்கப்பட்டத. இந்த வழக்கில் 1997(1) SCC 416ன் படி, மாட்சிமை தங்கிய உச்ச நீதிமன்றம் கைது நடவடிக்கைகளின்போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. இந்தத் தீர்ப்பு காவல்துறை தொடர்புடையதுதான் என்றாலும், கைது செய்ய அதிகாரம் உள்ள அனைத்துத் துறைகளும் இதைப் பின்பற்ற வேண்டும் என்பது அவசியமாகிறது. வழிகாட்டு நெறிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. கைது செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடும் காவல்துறை அதிகாரிகள், தங்களது அடையாளம், பெயர் தெளிவாகத் தெரிகிறார் போல அடையாள அட்டை அணிந்திருக்க வேண்டும். இவ்வாறு கைது செய்யப்பட்ட நபரை விசாரணை செய்யும் அதிகாரிகள் பெயர், அதற்கான குறிப்புப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.

2. கைது செய்யப்படும் நேரத்தில் அது பற்றிய விவரக் குறிப்பை சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரி தயாரிக்க வேண்டும். அதை, கைது செய்ப்படுபவரின் குடும்ப உறுப்பினர் அல்லது அநதப் பகுதியில் உள்ள மரியாதைக் குரிய நபர் ஒருவரின் சாட்சிக் கையெழுத்து பெறப்பட வேண்டும். இந்த விவரக் குறிப்பில் கைது செய்யப்படும் தேதி மற்றும் நேரம் குறிப்பிடபட வேண்டும்.

3. கைது செய்யப்பட்ட நபர், விசாரணைக்காக அழைத்து வரப்பட்டவுடன், அவரை எங்கு வைத்து விசாரணை செய்ய இருக்கிறீர்கள் என்பதை, அவரது நண்பர், குடும்ப உறுப்பினர், நலம் விரும்பி, அல்லது கைது செய்யப்பட்டபோது, அந்த விவரக் குறிப்பில் சாட்சி ஒப்பமிட்டவர் போன்றவர்களில் யாரிடமாவது விவரம் தெரிவிக்க வேண்டும்.

4. கைது செய்யப்பட்ட நேரம், இடம் குறித்து, அவரது நண்பர், குடும்ப உறுப்பினர் ஆகியோர் வெளி மாவட்டங்களில் இருந்தால் அவருக்குக் கைது பற்றிய தகவலை அந்த மாவட்ட சட்ட உதவி அமைப்பின் மூலம் தெரிவிக்க வேண்டும். கைது செய்ப்பட்டவரது ஊரில் உள்ள காவல் நிலையத்திலும் தகவல் தெரிவிக்க வேண்டும். இந்த தகவல், கைதான 8-12 மணி நேரங்களுக்குள்ளாகத் தெரிவிக்க வேண்டும்.

5. கைது செய்யப்படும் இடத்தில், காவல்துறை டைரியில் அது பற்றி விவரம், அதைப் பற்றி தெரிவிக்கப்பட்ட நபரின் பெயர், யாருடைய பொறுப்பில் கைது செய்பப்ட்டவர் இருப்பர் என்பது போன்ற விவரங்கள் பதிவு செய்யப்பட வேண்டும்.

6. கைது செய்யப்படுபவர் கேட்டுக்கொள்ளும் பட்சத்தில், அவர் மருத்துவ ரீதியாகப் பரிசோதிக்கப்பட வேண்டும். அவரது உடலில் சிறிய, பெரிய காயங்கள் இருந்தால், அவை, ஆய்வுக் குறிப்பில் பதிவு செய்ய வேண்டும். இதில் கைது செய்யப்பட்டவரின் ஒப்பம், கைத செய்யும் அதிகாரியின் ஒப்பம் ஆகியன இருக்க வேண்டும்.

7. கைது செய்யப்பட்டவருக்கு 48 மணி நேரங்களுக்கு ஒரு முறை மருத்துவப் பரிசோதனை செய்யப்பட வேண்டும். தகுதி வாய்ந்த மருத்துவர் குழாமை, அந்தந்த மாநில அல்லது மத்திய சுகாதாரத் துறை செயலர் நியமிப்பார்.

8. கைது செய்ததைப் பற்றிய அனைத்து ஆவணங்களும், மாஜிஸ்டிரேட்டிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

9. விசாரணையின்போது, கைது செய்யப்படுபவர், தனது வழக்கறிஞரைப் பார்க்க அனுமதிக்கப்பட வேண்டும். அதே சமயம் விசாரணை நடக்கும்போதெல்லாம் முழு நேரமும் இவ்வாறு சந்திக்க அனுமதிக்கத் தேவையில்லை.

10. கைது செய்ததும், அதைப் பற்றி காவல் துறை கட்டுப்பாட்டு அறைக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். அதில் கைத செய்யப்பட்டவர் விவரம், அவர் எங்கே வைத்து விசாரிக்கப்படுவார் போன்ற விவரத்தை, சம்பந்தப்பட்ட அதிகாரி, தெரிவிக்க வேண்டும். அங்கே, இந்த விவரங்கள் அனைவரும் அறியுமாறு அறிவிப்புப் பலகையில் காண்பிக்கப்பட வேண்டும்.

கேள்வி 23: CBEC-யில் கைது, செய்யப் பின்பற்றப்படும் வழிகாட்டு நெறிமுறைகள் என்ன?

பதில்: கைது செய்யப்பட வேண்டுமா என்ற முடிவு பல்வேறு அம்சங்களின் அடிப்படையில் எட்டப்படுகிறது. குற்றத்தின் தன்மை, வரி ஏய்ப்பு எந்த அளவுக்கு நடந்திருக்கிறது, வரிக்கடன், தவறான முறையில் எவ்வளவு பெற்றிருகிறார், ஆதாரங்களின் நம்பகத்தன்மை, மற்றும் தரம், ஆதாரங்களை மாற்ற, அழிக்க முடியுமா என்பது பற்றிய புரிதல் இதற்கான சாட்சியை சம்பந்தப்பட்ட நபர், தாக்கம் ஏற்படுத்த முடியுமா? அவர் நடைபெறம் விசாரணைக்கு ஒத்துழைப்பாரா? போன்ற பல அம்சங்களையும் சீர்தூக்கிப் பார்த்து அதன் பின்னர், கைது நடவடிக்கை முடிவு செய்யப்படும். இவை தவிர,

1. குற்றத்தைப் பற்றி முறையான விசாரணை நடைபெறுவதை உறுதி செய்யவும்

2. சம்பந்தப்பட்ட நபர் தலைமறைவாவதைத் தடுக்கவும்

3. முறைப்படுத்தப்பட்ட வகையில் சரக்குகளைக் கடத்துவது தொடர்பான வழக்குகள், பொருட்களை/சரக்குகளை மறைப்பதன் மூலம் சுங்க வரிகளைக் கட்டாமல் இருப்பது,

4. போலியான பெயர்களில், நபர்கள் மூலமாக, பினாமிகள் வழியாக ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகங்களில் ஈடுபடும் சூத்திரதாரிகளின் அல்லது மிக முக்கிய நபர்கள்

5. சாட்சிகளை கலைக்கும், தாக்கத்தை ஏற்படுத்தும் வாய்ப்புகளைத் தடுப்பதற்கு.

6. சாட்சியங்களை பயமுறுத்துவது, பிற வழிகளில் கட்டுப்படச் செய்வது மற்றும் ஒரு கோடிக்கு அதிகமான சுங்கவரி அல்லது சேவை வரியைக் கட்டாமல் இருப்பது.

போன்ற காரணங்களும், சூழ்நிலைகளும், கைது நடவடிக்கை பற்றி தீர்மானிக்கும்.

கேள்வி 24: கைது செய்தலுக்குரிய குற்றம் என்றால் என்ன?

பதில்: பொதுவாக, குற்றவியல் சட்ட விதிமுறைகளின்படி கைது செய்தலுகுரிய குற்றம் என்றால், கடுமையான குற்றங்களைச் சார்ந்த சட்டவிரோதச் செயலாகும். இவ்வாறு குற்றம் செய்த நபரை காவல்துறை அதிகாரி பிடியாணை இல்லாமல் கைது செய்யவும், நீதிமன்ற அனுமதியின்றி விசாரணை தொடங்கவும் அதிகாரம் உண்டு. அதே சமயத்தில் ஜிஎஸ்டி என்பது சிறப்புச்சட்டம் என்பதால், இது போன்ற நடவடிக்கையை இதற்கான அதிகாரம் பெற்ற அதிகாரிகள்தாம் மேற்கொள்ள முடியும்.

கேள்வி 25: கைது செய்யப்படத் தேவையில்லாத குற்றம் என்பது என்ன?

பதில்: கைது நடவடிக்கை தேவையில்லா குற்றம் என்றால், பிடியாணை இல்லாமல், காவல்துறை அதிகாரியால் கைது செய்ய முடியாது. அது போல விசாரணையும் நீதிமன்ற உத்தரவின்றித் துவக்க முடியாது. இதற்கான சிறப்புச் சட்டம் இருக்கம் பட்சத்தில் மட்டும் கைது நடவடிக்கையையும், விசாரணையும் அனுமதியின்றி சாத்தியப்படும்.

கேள்வி 26: CGST சட்டப்படி கைது செய்ய வேண்டிய குற்றம், கைது செய்யத் தேவையில்லாத குற்றம் எவை?

பதில்: CGST/SGST சட்டப்பிரிவு 132-ன் படி வரிவிதிப்புக்கு உள்ளான சரக்குகள், பொருடுகுளூ அல்லது சேவைகள் ஆகியவற்றில் வரி ஏய்ப்பு அல்லது உள்ளீட்டு வரிக்கடன் தவறாகப் பெற்றது அல்லது திரும்பப் பெறும் தொகை ஆகியன ரூ.5 கோடிக்கும் அதிகமானால் அது கைது செய்யப்பட வேண்டிய, ஜாமீன் பெற முடியாத குற்றம். இதைத்தவிர பிற குற்றங்கள், கைது செய்யத் தேவையில்லாதவை. ஒரு வேளை கைது செய்யப்பட்டாலும், ஜாமீன் வழங்கப்படக் கூடிய குற்றம்.

கேள்வி 27: CGST சட்டத்திபடி துறை அதிகாரி எப்போது குறிப்பிட்ட நபரை, அழைப்பாணை அனுப்பலாம்?

CGST/SGST சட்டப்பிரிவு 70-ன்படி இந்தத் துறையில் அதிகாரம் பெற்ற அதிகாரி, குறிப்பிட்ட நபரை, தான் விசாரிக்கும் விஷயம், பிரச்சினை, குற்றம் பற்றி சாட்சி சொல்லவோ, குறிப்பிட்ட ஆவணத்தைக் கொண்டு வரும்படியோ அல்லது வேறு எதற்காகவும், அவருக்கு அழைப்பாணை அனுப்பலாம். அந்த நபரிடம் இருக்கும், ஆவணங்கள், குறிப்பிட்ட அடையாளம் மற்றும் விவரணம் கொண்ட பொருள் ஆகியவற்றை எடுத்து வருமாறு அழைப்பாணை அனுப்பலாம்.

கேள்வி 28: இவ்வாறு அழைப்பாணை பெற்றவரின் பொறுப்புகள் யாவை?

பதில்: அழைப்பாணை பெற்றவர், அதை ஏற்றுக்கொள்ள் சட்டப்பூர்வமான கடமையுள்ளவராக ஆகிறார். அவரோ அல்லது அவரது ஒப்புதல் பெற்ற பிரதிநிதியோ, அழைப்பாணை அனுப்பிய அதிகாரியை சந்தித்தேயாக வேண்டும். அவர் எடுத்து வரச் சொன்ன ஆவணம் அல்லது பொருள் போன்றவற்றை நிச்சயமாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்வி 29: அழைப்பாணையை ஏற்க மறுத்தால் ஏற்படும் விளைவுகள் என்ன?

அழைப்பாணை அனுப்பிய அதிகாரியின் முன் நிகழும் செயல்முறைகளைக்கு சட்டபூர்வ அங்கீகாரம் முழுவதும் உண்டு. இவ்வாறு அழைப்பாணை பெறப்பட்ட பின்னர், முறையான காரணங்கள் இன்றி, அங்கே செல்லாமல் இருந்துவிட்டால்,

இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 177ன் கீழ் அவர் மேல் வழக்குத் தொடர முடியும். அழைப்பாணையைப் பெறாமல் தவிர்த்துவிட்டால், IPC 172இன்படி வழக்குத் தொடரப்படும். அழைப்பாணை ஏற்று வந்து கேட்கப்பட்ட ஆவணங்கள், பொருட்கள், மின்னணுப் பிரிவுகளை கொடுக்காவிட்டால் IPC 175இன்படி வழக்குத் தொடரப்படும். அவர் தவறான சாட்சியம், வேண்டுமென்று மறைத்துப் போன்றவற்றை செய்தால் IPC 193இன்படி வழக்குத் தொடரப்படும். இவை தவிர CGST/SGST அதிகாரியின் அழைப்பாணைப்படி வராவிட்டால் CGST/SGST சட்டம்பிரிவு 122(3)ன் கீழ் ரூ. 25,000 அபராதம் செலுத்த நேரிடும்.

கேள்வி 30: அழைப்பாணை அனுப்புவதற்கான வழிகாட்டு நெறிகள் என்ன?

பதில்: மத்திய கலால் மற்றும் சுங்கவரித் துறை (CBEC) நிதி அமைச்சகத்தின், வருவாய்த்துறை, அழைப்பாணைகள் தவறாகப் பயன்படுத்தப்படக் கூடாது எனபதை உறுதி செய்ய, அவ்வப்போது, வழிகாட்டு நெறிமுறைகளைச் சுற்றுக்கு அனுப்புவம். முக்கிய வழிகாட்டு நெறிமுறைகள் வருமாறு.

1. அழைப்பாணையைக் கடைசி நடவடிக்கையாக மட்டமே இருக்க வேண்டும்.யார் ஒத்துழைக்க மறுக்கிறார்களோ அவர்களுக்கு மட்டும்தான் அனுப்ப வேண்டும்.அழைப்பாணையை உயர் நிர்வாக அதிகாரிகளுக்கு அனுப்பக்கூடாது.

2. அழைப்பாணையில் பயன்படும் மொழி கடுமையாகவோ, சட்ட ஷரத்துக்கள் அதிகம் சேர்ந்தோ இருக்கக் கூடாது. இதனால், அதைப் பெறுபவருக்கு மன உளைச்சல், அவமான உணர்வு ஆகியன உண்டாகக் கூடாது.

3. அழைப்பாணையை அனுப்பும் கண்காணிப்பாளர், அதற்கான உத்தரவை துணை ஆணையர் நிலையில் உள்ள அதிகாரியிடம் எழுத்து பூர்வ அனுமதி பெற வேண்டும். இவ்வாறு அனுப்புவதற்கான காரணங்களை எழுத்து பூர்வமாக பதிவு செய்ய வேண்டும்.

4.அவ்வாறு எழுத்துப்பு பூர்வ அனுமதி பெற முடியாத சந்தர்ப்பங்களில், சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு தொலைபேசி வாயிலா நிலைமையை விளக்கி

அனுமதி பெற வேண்டும். அதன் பிறகு முடிந்த அளவுக்கு விரைவாக, எழுத்துபூர்வமாக அனுமதி கேட்டு பெற வேண்டும்.

5. அழைப்பாணை அனுப்ப்படும் எல்லா வழக்குகளிலும், அவற்றை அனுப்பும் அதிகாரி, அதைப்பற்றிய அறிக்கைஅல்லது நடவடிக்கை பற்றி சிறு விவரக்குறிப்பை வழக்கு ஆவணத்தில் குறிப்பிட வேண்டும். இதை, அழைப்பாணை வழங்க ஒப்புதல் அளித்த உயரதிகாரியிடம் வழங்க வேண்டும்.

6. மேல்மட்ட நிர்வாக அதிகாரிகளான CEO, CFO பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பெரிய நிறுவனத்தின் பொது மேலாளர்கள் ஆகியோருக்கு எடுத்தவுடன் அழைப்பாணை அனுப்பக் கூடாது. வரி வருவாய் நஷ்டமானதற்குக் காரணமாக இருந்த முடிவெடுக்கும் நடை முறைகளில், அவர்களது பங்களிப்பு, தொடர்பு இருக்கிறது என்பது உறுதியான பின்னர்தான், அழைப்பாணை அனுப்பப்பட வேண்டும்.

கேள்வி 31: அழைப்பாணை அனுப்புவதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய முன்னெச்சரிகை நடவடிக்கைகள் என்ன?

பதில்: யாருக்காவது அழைப்பாணை அனுப்பும் முன்னர், கையாள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாவன:

1. அழைப்பாணையை அனுப்ப நியாயமான காரணங்கள் இருக்க வேண்டியது அவசியமானது. குறிப்பிட்ட நபரைப் பற்றி விசாரணை நடக்கிறது, அவரது இருப்பு மிக அவசியமானது என்பது உறுதியான பின்னர்தான் அழைப்பாணை அனுப்பப்பட வேண்டம்.

2. அழைப்பாணை அனுப்பப்பட்டவர் வந்தவுடன், அவரது நேரம் மதிக்கப்பட வேண்டம்.சமய வரையில் விரைவாக அவரது வாக்குமூலத்தைப் பதிவு செய்ய வேண்டும். அவரைக் காக்க வைப்பது என்பது விசாரணையின் உபாயமாக இருந்தால் காக்க வைப்பதில் தவறில்லை.

4. பொதுவாக, அழைப்பாணை ஏற்று வருபவரது வாக்குமூலத்தை, அலுவலக நேரத்திலேயே பதிவு செய்ய வேண்டும். அதே சமயம், வழக்கின் தன்மையால், வாக்குமூலத்தைப் பெறும் நேரமும், இடமும் மாறுவதில் தவறில்ல.

கேள்வி 32: CGST/SGST அதிகாரிகளுக்கு உதவ வேறு துறை சார்ந்த அதிகாரிகள் இருக்கிறார்களா?

பதில்: CGST/SGST சட்டப் பிரிவு 72இன்படி பின்வரும் துறைசார்ந்த அதிகாரிகள், உதவி செய்ய அதிகாரம் பெற்றவர்கள் மட்டுமின்றி, உதவி செய்யக் கடமையும் அவர்களுக்கு இருக்கிறது.

அந்தத் துறைகள்:

1. காவல் துறை

2. ரயில்வே துறை

3. சுங்கத் துறை

4. GST வசூல் செய்யும் மாநிலய/யூனியன் பிரதேச மற்றும் மத்திய அரசு அதிகாரிகள்

5. நில ஆயத் தீர்வை வசூலிக்கும் மாநில/யூனியன் பிரதேசம் மற்றும் மத்திய அரசின் அதிகாரிகள்

6. அனைத்து கிராம அதிகாரிகள்

7. மாநில/மத்திய அரசுகளால் கோரும் அனைத்துத் துறை அதிகாரிகள்

------------------

## 20. "குற்றங்கள், அபராதங்கள், வழக்கு மற்றும் காம்பௌண்டிங்.

கேள்வி 1: CGST/SGST சட்டப்படி எவையெல்லாம் குற்றங்கள் என்று கருதப்படும்?

பதில்: CGST/SGST சட்டப்படி இத்துறை தொடர்பான குற்றங்கள் மற்றும் அவற்றுக்கான தண்டனைகள் அத்தியாமம் XXI இல் காணப்படுகிறது. இதில் சட்டப் பிரிவு 122-ன் படி 21 வகையான குற்றங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.இதைத் தவிர சட்டப் பிரிவு 10-இன்படி வரிவிதிப்பிற்கு உட்பட்ட நபர், அவருக்கு உரிமையில்லாத கூடுதல் சலுகை பெற்றால் அதுவும் குற்றம்தான்.

குற்றங்களின் பட்டியல் வருமாறு:

1. முறையான விற்பனை விலை விவரச் சீட்டு இல்லாமல் / தவறான விற்பனை விலை விவரச் சீட்டின் அடிப்படையில் பொருள் வழங்கல்.

2. பொருட்களை வழங்காமல் விற்பனை விவரச் சீட்டு அளிப்பது

3. வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட வரியை மூன்று மாதங்களுக்கு மேலாக துறையில் செலுத்தாமல் இருப்பது

4. CGST/SGST சட்டத்தை மீறி திரட்டிய வரியை, மூன்று மாதங்களுக்கு மேல் செலுத்தாமல் இருப்பது.

5. செலவின ஆரம்ப நிலையில் வரி பிடித்தம் செய்யாது இருத்தல், அல்லது குறைவாக வரிப் பிடித்தம் செய்தல் அல்லது சட்டப் பிரிவு 51ன் படி பிடித்த வரித்தொகையை, துறைக்குச் செலுத்தாது இருத்தல்.

6. சட்டப் பிரிவு 52-இன்படி பிடித்தம் செய்ய வேண்டிய வரியைப் பிடித்தம் செய்யாமல் இருப்பது, குறைவாகப் பிடித்தம் செய்வது மற்றும் பிடித்தம் செய்த தொகையை துறையில் செலுத்தாமல் இருப்பது.

7. உண்மையிலேயே சரக்குகளைப் பெறாமலும், அல்லது சேவையைப் பெறாமலும், உள்ளீட்டு வரிக் கடனைப் பெறுவது அல்லது பயன்படுத்துவது.

8. மோசடியான முறையில் கூடுதல் தொகை என்று பெறுவது

9. உள்ளீட்டு வரிக்கடனை பெறுவது/அதை உள்ளீட்டு சேவை விநியோகஸ்தர் மூலம் செய்வது. இது, சட்டப் பிரிவு 20க்கு எதிரானது.

10. வரி ஏய்ப்பு செய்யும் நோக்கத்துடன், தவறானத் தகவல்கள் தருவது, பொய்யான நிதிநிலை ஆவணங்களைத் தயார் செய்வது.

11. வரி செலுத்த வேண்டியவராக இருந்தாலும், அதற்கான பதிவை செய்யாமல் இருப்பது.

12. பதிவு செய்யும்போது, அதற்கான விண்ணப்ப நிலையில் தவறான தகவல்களைத் தருவது. அல்லது அதற்கு அடுத்துவரும் பதிவின்போது இவ்வாறு செய்வது.

13. வரித்துறை அதிகாரி தனது கடமையை செய்யவிடாமல் தடுப்பது

14. தேவையான ஆவணங்கள் இன்றி சரக்குப் போக்குவரத்து மேற்கொள்வது.

15. ஒட்டுமொத்த வருவாயைக் குறைத்துச் சொல்வது, மறைப்பது, அதன் மூலம் வரி செலுத்துவதைத் தவிர்ப்பது.

16. சட்டத்தில் உள்ளபடி கணக்கை பராமரிக்காமல் இருப்பது/ஆவணங்களை முறையாக உருவாக்காதது/சட்டத்தில் கண்டுள்ளபடியான காலகட்டத்தில், கணக்கை, ஆவணங்களை வைத்திருக்காமல் எடுப்பது.

17. வரித் துறை தொடர்பான நடவடிக்கைகளின் போது, சம்பந்தப்பட்ட அதிகாரி கேட்கும் தகவல்கள்/ஆவணங்கள் போன்றவற்றை தவறான தகவல்கள்/ஆவணங்களைத் தருவது.

18. பறிமுதல் செய்யப்படக் கூடிய சரக்குகளை, சேமித்து வைப்பது/வழங்குவது/வாகனங்கள் மூலம் கொண்டுசெல்வது.

19. மற்றொரு நபருடைய GSTIN எண்ணைப் பயன்படுத்தி விற்பனை விலை விவரச்சீட்டு அல்லது ஆவணங்களை அளிப்பது,

20. பொருள் சார்ந்த ஆதாரங்களைச் சேதப்படுத்துவது/மாற்றுவது/அழிப்பது.

21. தடுத்து நிறுத்தப்பட்ட பறிமுதலான/சட்டத்தின்படி நிறுத்தி வைக்கப்பட்ட சரக்குகளை சேதப்படுத்துவது/விற்றுவிடுவது

கேள்வி 2: அபராதம் என்ற பதத்தின் பொருள் என்ன?

பதில்: CGST/SGST சட்டத்தில் அபராதம் என்ற சொல் விளக்கப்படவில்லை. ஆனால் தீர்ப்புகள், அறிவிப்புகள் ஆகியன மூலம் அபராதம் என்பதற்கான விளக்கம் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட குற்றத்தை செய்வதற்காக தாற்காலிக தண்டனை வழங்கப்படல் அல்லது, சட்டத்தின்படி குறிப்பிட்ட தொகை அபராதமாக விதிக்கப்படல்

ஒப்பந்தப்படி குறிப்பிட்ட பணியை செய்யாததற்காக விதிக்கப்படும் சட்டபூர்வமான அபராதம்.

கேள்வி 3: அபராதங்கள் விதிக்கப்படுமபோது கடைப்பிடிக்க வேண்டிய பொதுவான கட்டுப்பாட்டு நெறிகள் எவை?

பதில்: அபராதம் விதிப்பது அரசு சார்ந்த சில கட்டுப்பாடு நெறியறைகளுடன்தான் இருக்க வேண்டும். இது நீதிமன்ற ஆணைகள்/கருத்துக்கள், இயற்கை நீதிக் கோட்பாடுகள், சர்வதேச வர்த்தகம் மற்றும் ஒப்பந்தங்களை ஆளுமை செய்யும் கோட்பாடுகள், போன்றவை அடங்கும், இவைகளைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட சட்டம் 126 பிரிவில் காணப்படும் அம்சங்களாவன

யாருக்கு எதிராக குற்றச்சாட்டகள் எழுந்துள்ளதோ, அவருக்கு அதற்கான விளக்கக் காரணம் கோரி நோட்டிஸ் அனுப்ப வேண்டும். அதன் பிறகு முறையாக விசாரணை நடத்தி, அதன் மூலம் அவருக்குத் தன்னிலை விளக்கம் அளிக்க வாய்ப்பு கொடுப்பதற்கு முன்பு அபாராதம் எதையும் விதிக்கக் கூடாது.

அபராதத் தொகை, வழக்கின் சூழ்நிலைகள், மற்றும் உண்மைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

மீறப்பட்ட விதிமுறைகள், சட்டப் பிரிவுகளை மீதியிருக்கும் தன்மை, அளவு, நிலை ஆகியவற்றைப் பொறுத்து அபராதம் முடிவு செய்யப்படும்.

அபராதத் தொகையை அறிவிக்கும் உத்தரவில், எந்தச் சட்டத்தை மீறியதற்காக இந்த அபராதம் விதிக்கப்படுகிறது என்பது தெளிவாகக் குறிப்பிடப்படும்.

எந்தச் சட்டத்தின் கீழ் அபராதம் விதிக்கப்படுகிறது என்பதம் அவருக்கத் தெரிவிக்கப்பட வேண்டும்.

சட்டப் பிரிவு 126, இதைப் பற்றி இன்னும் தெளிவாக விளக்கியுள்ளது. குறிப்பாக எதற்கெல்லாம் மிக அதிகமான அபராம் விதிக்கப்படாது என்பது தெரிவிக்கப்பட்டள்ளது.

அவையாவன:

குறைவான சட்ட மீறல் (அதாவது ரூ.5000-க்கும் குறைவாக வரி ஏய்ப்புப் பிரச்சினை) இருநதால், அல்லது

சட்டபூர்வமான தேவை அல்லது

சரிசெய்யப்படக் கூடிய தவறு. ஆவணங்களில் விவரம் விடுபட்டுப் போகுதல் (இதை வெளிப்படையாகத் தெரியும் தவறு என்று சட்டம் கூறுகிறது) இவற்றை மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் செய்யாமல் கவனப் பிசகால் நடப்பது.

அதுவுமின்றி CGST/SGST சட்டத்தில் குறிப்பிட்ட விதி மீறல்களுக்கு, குறிப்பிட்ட அபராதம் என்றிருப்பது அப்படியே பின்பற்றப்படும்.

கேள்வி 4: CGST/SGST சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அபராதத் தொகையின் அளவு என்ன?

பதில்: சட்டப் பிரிவு 122(1)-ல் 122 சட்டப் பிரிவின்படி தவறு/குற்றம் செய்தால், பின்ரும் தொகைகளை விட அதிகமான அபராதத் தொகை இருக்கும்.

கட்டாமல் தவிர்த்த வரித்தொகை/மோசடியான வழிகளில் பெறப்பட்ட கூடுதல் தொகை/வரிக்கடனாகப் பெற்ற தொகை/பிடித்தம் செய்யாத வசூலிக்காத/குறைவாகப் பிடித்தம் செய்த/குறைவாக வசூலிக்ககப்பட்ட தொகை அல்லது

ரூ. 10,000/. இதைத் தவிர, சட்டப் பிரிவு 122(2) இன்படி வரி செலுத்துபவர் என்று பதிவுசெய்யப்பட்ட நபர் வரி செலுத்தாமல் போனால், அல்லது குறைவாக வரி செலத்தினால் அல்லது வழங்கலுக்கான வரியில், குறைவாகச் செலுத்துவது ஆகியனவற்றில் அபராதத் தொகை பின்வரம் நிலையிலிருந்து அதிகமாக இருக்கும்.

வரி செலுத்தாமல் விட்ட அல்லது குறைவாகச் செலுத்தியதில் 10%

ரூ. 10,000/

கேள்வி 5: வரி விதிப்புக்குள்ளான நபரைத் தவிர மற்றவர்களுக்கு அபராதத் தொகை குறிப்பிடப்பட்டுள்ளதா?

பதில்: ஆமாம்! சட்டப் பிரிவு 122(3)இன்படி ரூ. 25,000/திற்கும் மேலாக அபராதம் விதிக்கப்படும் நபர்,

முன் குறிப்பிட்ட 21 குற்றங்களுக்குத் தூண்டிவிடுதல் மற்றும் துணை போவது.

பறிமுதல் செய்யப்படக் கூடிய சரக்குகளை/பொருட்கள் சார்ந்து எந்த விதத்திலாவது (பெறுவது, வழங்குவது, சேமித்து வைப்பது அல்லது ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்க மாற்றுவது) தொடர்பு வைத்திருத்தல்

சட்டத்திற்குப் புறம்பான விதத்தில் சேவைகளை வழங்குவது அல்லது அதில் தொடர்பு இருப்பது

அழைப்பாணை வந்தும் அதை அலட்சியம் செய்து, ஆஜராகாமல் இருப்பது

தனது கணக்குப் பராமரிப்பில் விற்பனை, விலைச் சீட்டு வழங்காமல் இருத்தல் அல்லது அவ்வாறு வழங்கப்பட்டதை கணக்கில் காட்டாமல் இருப்பது.

கேள்வி 5: CGST/SGST சட்டத்தில் தனியாகக் காணப்படாத விதிமீறல்களுக்கு என்ன அபராதம் விதிக்கப்படும்?

பதில்: CGST/SGST சட்டப்பிதிவு 125-ன் படி இச்சட்டத்தை மீறுகிற நபர்களுக்கு குறிப்பிட்ட அபராதத் தொகை எதுவும் குறிப்பிடப்படாவிட்டாலும், விதிமீறல் என்பது நிரூபணம் ஆனால் அவருக்கு ரூ.25,000/ வரை அபராதம் விதிக்கப்படும்.

கேள்வி 6: செல்லத்தக்க ஆவணங்கள் ஏதுமின்றி எடுத்துச் செல்லப்படும் சரக்குகள் அல்லது முறையான பதிவேடுகளில் குறிக்காமல் கொண்டு செல்ல முயற்சித்ததற்கு என்ன நடவடிக்கை எடுக்க முடியும்?

பதில்: சட்டப்படி (விலை விவரச் சீட்டு மற்றும் (அல்லது) பொறுப்பேற்று அறிக்கை) ஆகியன இல்லாமல் யாராவது எந்த சரக்கையாவது எடுத்துச் சென்றாலோ, அல்லது பயணத்தின்போது, எந்த ஆவணமோ, கணக்கோ இல்லாமல், இடைச் சேகரம் செய்தாலோ அந்த வகையான சரக்குகள் அவை கொண்டு செல்லப்படும் வாகனத்தோடு தடுத்து நிறுத்தப்பட்டு துறையின் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரப்படும்.

சரக்கு வாகனங்களின் உரியைமையாளர் முன்வருதல்: இது போன்ற சரக்குகள், அவற்றுக்கென விதிக்கப்படும் வரியையும், அதைப்போல 100% அபராதமாகவும் கட்டிவிட்டு அல்லது அதற்க இணையாக, காப்புப் பத்திரங்களைக் கொடுத்தால், அந்தச் சரக்கு வாகனம் ஆகியன விடுவிக்கப்படும் விலக்கு அளிக்கப்பட்ட சரக்குகள், பொருட்கள் என்றால் அவற்றின் மதிப்பில் 2% அல்லது ரூ.25000 ஆகியவற்றில் எது குறைவோ, அந்தத் தொகை அபராதமாக வசூலிக்கப்படும்.

உரிமையளர் முன்வராதபோது: இது போன்ற சரக்குகள் அவற்றின் மதிப்பில் 50% மற்றும் அதற்கான வரி ஆகியனவற்றை அல்லது அவற்றுக்கு இணைப்பான காப்பீடு பத்திரங்களை அளித்தால் மட்டுமே, சரக்குகள் விடுவிக்கப்படும்.

விலக்கு அளிக்கப்பட்ட சரக்குகள் என்றால் சரக்கின் மதிப்பில் 5% அல்லது ரூ.25,000 (எது குறைவோ அது) அபராதம் செலுத்திய பின் சரக்கு விடுவிக்கப்படும்.

கேள்வி 7: தொகுப்பு வரித் திட்டத்தில் (Composition) அதற்கான தகுதியின்றி சேரும் நபருக்கு என்ன அபராதம்?

பதில்: சட்டப் பிரிவு 10(5)இன்படி எந்த ஒரு நபரும், தொகுப்பு வரித் திட்டத்தில் சேரத் தகுதியில்லாமல், அந்த சலுகையை அனுபவிக்க முயற்சித்தால்,அவர் சாதாரணமாக செலுத்த வேண்டிய வரித் தொகை, அதைத் தவிர இதே தொகைக்கு சமமான அபராதம் ஆகியவற்றை அவர் செலுத்த வேண்டும்.

கேள்வி 8: கையகப்படுத்தல் என்றால் என்ன?

பதில்: கையகப்படுததல் என்ற வார்த்தைக்கு சட்டத்தில் விளக்கம் ஏதும் அளிக்கப்படவில்லை. இந்தக் கருத்தியல் ரோம் நாட்டுச் சட்டத்தில் இருந்து எடுக்கப்பட்டது. ஒருவருடைய பொருள் சக்ரவர்த்தியால் கையகப்படுத்தப்பட்டு, அது ராஜ்யத்தின் கருவூலத்தில் சேர்க்கப்படும். கையகப்படுத்தல் என்ற வார்த்தைக்கு ஐயர் அவர்களின் சட்ட அகராதியில் இதற்கான பொருள், தனி நபருக்கு சொந்தமான சொத்துக்களை, அபராதத்தின் மூலமாக கருவூலத்தில் சேர்ப்பது, அதை அரசாங்க உரிமையாகக் கொள்வது

சுருக்கமாக சொல்வதென்றால் சரக்கின் உரிமையை அரசாங்கத்திற்கு மாற்றுவதுதான்.

கேள்வி 9: CGST/SGST சட்டப்படி எந்த சூழ்நிலைகளின்போது சரக்குகளைக் கையகப்படுத்தலாம்?

பதில்: CGST/SGST சட்டம் 130-இன்படி யாராவது ஒருவர் பின்வரும் செயல்களில் ஈடுபட்டால், அவரது சரக்குகள் கையகப்படுத்தப்படும்.

இத்துறையில் எந்த ஒரு சட்டத்திற்குப் புறம்பாக, எதிராக, சரக்குகளை வழங்கல், பெற்றுக்கொள்ளல் ஆகியவற்றை செய்வது இதனால் அதற்கான வரியை செலுத்தாமல் இருப்பது (அல்லது)

சட்டத்தின்படி சரக்குகள் பற்றி விவரக்கணக்கு பராமரிக்காமல் இருப்பது, (அல்லது)

பதிவுக்காக விண்ணப்பிக்காமல் இருந்து, அதே சமயம் வரிவிதிப்புக்கு உள்ளான பொருட்களை/சரக்குகளை வழங்குவது (அல்லது)

CGST/SGST சட்டத்திலுள்ள விதிமுறைகளுக்கு எதிராக குறிப்பிட்ட சரக்குகளை அதற்கான வாகனங்களில் முறையாக எடுத்துப் போகாமல், பிற வாகனங்களில் எடுத்துச் செல்வது (இதனுடன் கூட, வாகனத்தின் உரிமையாளருக்குத் தெரியாமல் எடுத்துச்சென்றால்) (அல்லது)

சட்டத்தின்படி செலுத்த வேண்டிய வரியைக் கட்டாமல் தவிர்க்கும் நோக்கத்தில் செயல்படுவது ஆகியன சந்தர்ப்பங்கள் செயல்பாடுகள் இருந்தால் அந்தப் பொருள் / சரக்கு / வாகனம் கையகப்படுத்தப்படும்.

கேள்வி 10: முறையான அதிகாரம் பெற்ற அதிகாரியால் 'கையகப்படுத்தப்பட்ட சரக்குகளின்' நிலை என்ன?

பதில்: கையகப்படுத்தப்பட்ட சரக்குகளின் உரிமைகள், அரசாங்கத்திடம் இருக்கும். வரித்துறை அதிகாரியின் வேண்டுகோளிஇன்படி, எந்த ஒரு காவல்துறை அதிகாரியும், அந்த சரக்கை அரசாங்கத்தின் உரிமைப்படுத்துவதற்கு எடுத்துக்கொள்ள உதவுவார்.

கேள்வி 11: கையகப்படுத்திய பிறகு சம்பந்தப்பட்ட நபர் அதை மீட்டுக் கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்படுவது அவசியமா?

பதில்: ஆம். சட்டப் பிரிவு 130(2)-இன்படி அந்த பொருள்/சரக்கிற்கு உரிமையாளர் அல்லது பொறுப்பாளர் ஆகியோர் அந்தப் பொருட்களின் மதிப்பு அளவிற்கு அபராதம் செலுத்தி மீட்டுச் செல்லலாம் என்ற தெரிவு அளிக்கப்பட வேண்டும். இந்தத் தொகையுடன் அந்த சரக்கிற்கு செலுத்தப்பட வேண்டிய வரித்தொகை மற்ற கட்டணங்கள் ஆகியவற்றையும் சேர்த்து அபராதமாகச் செலுத்த வேண்டும்.

கேள்வி 12: முறையான ஆவணங்கள் இன்றி சரக்குகளை எடுத்துச் செல்லும் வாகனங்களைக் கையகப்படுத்த முடியுமா?

பதில்: ஆம். முறையான ஆவணங்கள், அறிவிக்கைகள், ஆதாரங்கள் ஏதுமின்றி இருக்கும் சரக்குகளை எடுத்துச் செல்ல வாகனமும் கையகப்படுத்த சட்டப் பிரிவு 130-இன்படி வரித்துறைக்கு உரிமையுண்டு. அதே சமயத்தில் இது போலநடப்பது தனக்கோ, அல்லது தன்னால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிக்கோ தெரியாமல், வாகனம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை அவர் நிரூபித்தால் வாகனம் கையகப்படுத்தப்படாது.

கேள்வி 13: குற்ற வழக்குத் தொடர்தல் என்றால் என்ன?

பதில்: குற்ற வழக்குத்தொடர்தல் என்றால், சட்ட நடவடிக்கைகளைத் துவங்குவதல், குற்றம் புரிந்தவர்க்கு எதிராக உள்ள குற்றச்சாட்டுகளை சட்டபூர்வமாக வெளிப்படுத்தல், குற்றவியல் நடைமுறை விதிமுறைகள் பிரிவு 198-இன்படி, குற்ற வழக்குத் தெடர்தல் என்றால், குறிப்பிட்ட நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளைத் துவங்குதல் என்ற விவரிக்கிறது.

கேள்வி 14: CGST/SGST சட்டத்தின்படி எந்தெந்த குற்றங்களுக்காக வழக்குத் தொடரலாம்?

பதில்: CGST/SGST சட்டப் பிரிவு 132-ன் படி 12 வகையான குற்றங்கள், வழக்குத் தெடார வேண்டிய அளவுக்கு பெரிய குற்றங்கள் என்று விதிமுறைகள் கூறுகின்றன. அவையாவன:

1. பொருள் விற்பனை விவர விலை சீட்டு இல்லாமல் பொருள் வழங்கல், அல்லது போலியான/தவறான விற்பனை விலை விவரச் சீட்டுக்கு பொருள் வழங்கல்.

2. பொருள் வழங்கல் இல்லாமல் விற்பனை விலை விவர சீட்டு தருவது

3. வசூலித்த வரியை 3 மாதங்களுக்கு மேல் கட்டாமல் இருப்பது

4. உண்மையில் சரக்குகளைப் பெறாமல்/சேவைகளைப் பெறாமல் உள்ளீட்டு வரிக்கடன் வசதியைப் பெறுவது அல்லது பயன்படுத்துவது.

5. மோசடியான முறையில் கூடுதல் வரியைத் திரும்பப் பெறுதல்

6. வரி ஏய்ப்பு, மோசடியான முறையில் ITC-.ஐப் பெறுவது அல்லது 1 லிருந்து 5 வரை குறிப்பிட்டுள்ள குற்ற அம்சங்கள் தவிர வேறு முறையில் கூடுதல் தொகையைப் பெறுவது

7. வரி கட்டாமல் இருக்க, தவறான தகவல் வேண்டுமென்றே போலியாக தயாரிக்கப்பட்ட நிதி நிலை ஆவணங்கள்/போலியான கணக்கு விவரங்கள் வரி ஏற்ப்பதற்கென்ற உருவாக்கப்பட்ட ஆவணங்கள்

8. வரித் துறை அதிகாரியைத் தனது கடமையை செய்ய விடாது தடுத்தல்/மறித்தல்

9. பறிமுதல் செய்யப்படக் கூடிய சரக்குகளைக் கையாளுதல், அதாவது அவற்றைப் பெறுவது, வழங்குவது, சேர்த்து வைப்பது மற்றும் இடம மாற வாகனங்கள் மூலம் உதவுவது

10. சட்டத்திற்குப் புறம்பாக சேவைகளைப் பெறுவது/அந்தச் சேவைகளை வழங்குவதில் தொடர்பிருப்பது

11. சாட்சி/ஆதாரமாக இருக்கக்கூடிய பொருள்களை அழிப்பது அல்லது சேதப்படுத்துவது

12. சட்டத்தின்படி துறைக்கு தெரியப்படுத்த வேண்டிய தகவலை அளிக்காமல் மறைப்பது/தவறான தகவலைத் தருவது

13. மேற்குறிப்பிட்ட குற்றங்களை நேரடியாக செய்வது அல்லது செய்வதற்குத் துணை போவது/தூண்டுவது

கேள்வி 17: CGST/SGST சட்டத்தினபடி நிரூபிக்கப்படும் குற்றங்களுக்கு என்ன தண்டனை?

பதில்: சட்டப் பிரிவு 132(1)ல் தண்டனை பற்றிய விவரம் வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு

குற்றத்தின் வகை தண்டனை (சிறைத்தண்டனை...)

ரூ. 5 கோடிக்கு மேல் வரி ஏய்ப்பு அல்லது தொடர்ந்து ரூ.250 லட்சம் வரி ஏய்ப்பு

5 வருடங்கள் மற்றும் அபராதம்

ரூ. 2இலிருந்து ரூ.5 கோடி வரை வரி ஏய்ப்பு

3 வருடங்கள் மற்றும் அபராதம்

ரூ.1 கோடியிலிருந்து 2 கோடி வரை வரி ஏய்ப்பு

1 வருடம் மற்றும் அபராதம்

போலி ஆவணங்கள்

அதிகாரியை கடமை செய்யவிடாது தடுத்தல்

ஆவணங்களை திருத்துதல்

6 மாதங்கள்

கேள்வி 15: CGST/SGST சட்டப்படி எவையெல்லாம் உடனடியாக கைது செய்யப்பட வேண்டிய குற்றங்கள், உடனடியாக கைது செய்யத் தேவையில்லாத குற்றங்கள்?

பதில்: CGST/SGST சட்டப் பிரிவு 132(4) மற்றும் 132(4)-இன்படி,

ரூ.5 கோடிகளுக்குக் குறைவாக வரி ஏய்ப்பு செய்தால் அது உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டிய குற்றம் அல்ல. அப்படியே கைது செய்தாலும், ஜாமீன் பெறக்கூடியது

ரூ.5 கோடிகளுக்கு மேல் வரி ஏய்ப்பு செய்யும் அனைத்து விதமான குற்றங்களும், உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டியவை. இதற்கு ஜாமீன் கிடையாது.

கேள்வி 16: வழக்குத் தொடரும் முன்பாக, அதற்கான அனுமதியை சம்பந்தப்பட்ட அதிகாரியின் அனுமதி பெறுவது அவசியமா?

பதில்: ஆமாம். இதற்காகவே அதிகாரம் பெற்றிருக்கும், தகுந்த அதிகாரியும், அனுமதி பெற்ற பின்னர்தான் வழக்குத் தொடரும் பணி துவக்கப்பட வேண்டும்.

கேள்வி 17: CGST/SGST சட்டத்தின்படி,அதன் சட்டத்தில் மென்ஸ்ரியா என்று குறிப்பிடப்படும் குற்றம் செய்யும் மனநிலை அல்லது குற்றம்புரிவதற்கான நோக்கம் இருந்தால்தான் வழக்குத் தொடரலாம் என்று இருக்கிறதா?

பதில்: ஆமாம். அதே நேரத்தில் சட்டப் பிரிவு 135 கருதுவது என்னவென்றால், குற்றம் செய்யும் மனநிலை இல்லாவிட்டால், அந்தக் குற்றத்தைச் செய்ய முடியாது என்பதுதான்.

கேள்வி 18: குற்றம் புரியும் மனநிலை என்றால் என்ன?

பதில்: குறிப்பிட்ட செயலைச் செய்யும்போது 'குற்றம் செய்யும் மனநிலை' என்பது குறிப்பிட்ட மனநிலையில் இருப்பது. உதாரணமாக,

செய்யும் செயல் வேண்டுமென்று நோக்கத்தோடு செய்யப்படுகிறது.

அந்தச் செயலும், அதன் விளைவுகளும், புரிந்துகொள்ளப்படுவது மற்றும் கட்டுப்படுத்துவது.

செயலைச் செய்பவர், யாருடைய வலியுறுத்தலும் இன்றிச் செய்வது மட்டுமின்றி, அந்த செயலைச் செய்வதற்கான தடைகளை முறியடித்து, நினைத்ததைச் செய்வது.

தான் செய்யும் செயல் சட்டத்திற்குப் புறம்பானது என்பது தெரிந்திருப்பது அல்லது தெரிந்திருக்கக் காரணங்கள் இருப்பது

கேள்வி 19: CGST/SGST சட்டத்தின்படி நிறுவனத்துக்கு எதிராக வழக்குத் தொடர முடியுமா?

பதில்: ஆம். CGST/SGST சட்டப் பிரிவு 137-இன்படி யார் ஒருவர், குறிப்பிட்ட நிறுவனத்தின் தொழில் நடக்கும் விதத்திற்குப் பொறுப்பாக இருக்கிறாரோ, அவர் தாம் அந்த நிறுவனம் செய்த தவறு/குற்றத்திற்கு அவர் பொறுப்பு ஏற்க வேண்டும். ஏனென்றால், நிறுவனம் ஏதாவது தவறு செய்திருந்தால், அது -

அவரது ஒப்புதல் அல்லது ஒத்துழைப்புடன்தான் நடந்திருக்கும்

அல்லது அவரது அலட்சியம்தான் காரணம் என்றால்,

அதுவும் ஒரு குற்றமாகவே கருதப்பட்டு, அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதற்கான தண்டனை வழங்கப்படும்.

கேள்வி 20. குற்றங்களைக் 'கண்டுகொள்ளாமல் விட்டுவிடுதல்' என்றால் என்ன?

பதில்: இந்தியக் குற்றவியல் சட்டத்தின் பிரிவு 320-ல் 'கண்டுகொள்ளாமல் விட்டுவிடுதல்' என்பது 'வெறெந்தக் காரணத்துக்காகவோ' (அ) பிரத்தியேகக் காரணத்தினாலோ குற்றம் புரிபவரைத் தண்டிக்காமல் விட்டு விடுவதைக் குறிக்கிறது.

கேள்வி 21. CGST/SGST சட்டத்தின் கீழ் குற்றம் கண்டுகொள்ளாமல் விட்டுவிடப்படலாமா?

பதில்: ஆம். CGST/SGST சட்டப் பிரிவு 138-ன் கீழ் பின்வருபவை தவிர மீதமுள்ள குற்றங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை செலுத்தப்பட்டபின் 'கண்டுகொள்ளாமல் விட்டுவிடப்படுதல்' நீதிமன்ற நடவடிக்கைக்கு முன்பு அல்லது பின்பு அனுமதிக்கப்படுகிறது:

* பெருங் குற்றங்களான 12இல் (கேள்வி 16-ல் சொல்லப்பட்டவை) 1 முதல் 6 வரையுள்ள குற்றங்கள் (குற்றம் சாட்டப்பட்டவர் மேற்சொன்ன குற்றங்கள் ஏதாவது ஒன்றிற்காக முன்பே இவ்வாறு 'விடப்பட்டிருந்தால்');

* இருக்கும் 12 பெருங்குற்றங்களில் 1 முதல் 6 வரையுள்ள குற்றங்கள் நிகழ உதவுதல் (குற்றம் சாட்டப்பட்டவர் மேற்சொன்ன குற்றங்கள் ஏதாவது ஒன்றிற்காக முன்பே இவ்வாறு 'விடப்பட்டிருந்தால்');

* SGST/IGST சட்டத்தில் ரூ.1 கோடிக்கும் அதிகமாக சப்ளை செய்தது தொடர்பாக மேற்சொன்னவை தவிர வேறு குற்றத்தில் குற்றம் சாட்டப்பட்டவர் மேற்சொன்ன குற்றங்கள் ஏதாவது ஒன்றிற்காக முன்பே இவ்வாறு விடப்பட்டிருந்தால்;

* NDPSA (அ) FEMA (அ) CGST/SGST சட்டம் தவிர வேறெந்த சட்டத்தின் கீழ் குற்றமாகக் கருதப்படும் அனைத்துக் குற்றங்களும்;

'விடப்படுதல்' என்பது வரி, வட்டி/அபராதத்தை முழுவதுமாகச் செலுத்திய பின்னர் மட்டுமே அனுமதிக்கப்பட வேண்டும்; வேறெந்த சட்டத்தின் கீழ் நிலுவையிலிருக்கும் எவ்வித நடவடிக்கையும் இதனால் பாதிக்கப்படாது.

கேள்வி 22: குற்றத்தைக் 'கண்டுகொள்ளாமல் விட்டுவிடுவதற்கு' நிதி தொடர்பான எல்லைகள் ஏதாவது வரையறுக்கப்பட்டுள்ளனவா?

பதில்: ஆம். பின்வருவனவற்றில் எது அதிகமோ அது இதற்கான குறைந்தபட்ச எல்லையாகக் கருதப்படும்:

* வரிப்பணத்தில் 50%; அல்லது
* ரூ.10,000/-

பின்வருவனவற்றில் அதிகமானது அதிகபட்ச எல்லையாகக் கருதப்படும்:

* வரிப்பணத்தில் 150%; அல்லது
* ரூ.30,000/-

கேள்வி 23. CGST/SGST சட்டத்தில் 'கண்டுகொள்ளாமல் விட்டுவிடுதலின்' விளைவுகள் என்னவாக இருக்கும்?

பதில்: பிரிவு 138 உட்பிரிவு (3)-ன் கீழ் விட்டுவிடுவதற்கான தொகையைச் செலுத்திய பின்னர் இச்சட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்ட நபர் மீது வேறெந்த நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது; இதற்கு முன் அவருக்கெதிராக நிலுவையில் இருக்கும் குற்றவியல் நடவடிக்கைகளும் நிறுத்தப்படும்.

--------------

## 21. IGST சட்டம் - ஒட்டுமொத்தப் பார்வை

கேள்வி 1: IGST என்றால் என்ன?

பதில்: ஒருங்கிணைக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவை வரி என்றால் IGSTயின் கீழ், மாநிலங்களுக்கு இடையே நடக்கும் வணிகம் அல்லது வர்த்தகம் ஆகியவற்றிற்காக வழங்கப்படும் சரக்குகள் மற்றும் சேவைகளுக்கான வரி.

கேள்வி 2: மாநிலங்கள் இடையிலான வழங்கல் என்றால் என்ன?

பதில்: வணிகம் அல்லது வர்த்தகம் சார்ந்த விஷயங்களுக்காக, மாநிலங்களிடையே நடக்கும் சரக்குகள் மற்றும் சேவைகள் வழங்கலாம். வழங்குபவர் மற்றும் அதைப் பெறுபவர் ஆகியோர் வெவ்வேறு மாநிலங்களில் வேறு யூனியன் பிரதேசங்களில் மாநிலத்திற்கும் ஒரு யூனியன் பிரதேசத்தில் இருப்பதுதான் இவை தவிர இறக்குமதி செய்ப்படும் சரக்குகள் மற்றும் சேவைகள், SEZ களுக்கும் தொழில் விரிவுபடுத்துவோருக்கு, அல்லது மாநிலங்களுக்கு இடையில் இல்லாத வழங்கல் ஆகியன இதில் அடங்கும். (IGST-ன் சட்டப் பிரிவு - 8)

கேள்வி 3: மாநிலங்கள் இடையிலான பொருள் வழங்கல்கள் மற்றும் சேவைகளை எவ்வாறு IGSTயின் கீழ் வரி விதிக்க முடியும்?

மாநிலங்கள் இடையிலான சரக்கு வழங்கல்களுக்கு IGST- ஐ மத்திய அரசு வசூலிக்கும். IGSTஎன்பத CGST மற்றும் SGST ஆகியவற்றை சேர்த்து மாநிலங்கள் இடையில் நடக்கும் அனைத்து விதமான வரிவிதிப்புக்கு உள்ளாகக் கூடிய சரக்குகள் மற்றும் சேவைகள் வழங்கல்களுக்கு இந்த வரி விதிக்கப்படும்.இரு மாநிலங்களுக்கிடையே விற்பனை செய்பவர் IGST வரியை செலுத்துவார். இதை அவருக்கென்று ஏற்கெனவே இருக்கும் IGST, CGST. SGST கடனுரிமையை அவரது வாங்கிய பொருள் மதிப்பீட்டுக்கு எதிராக சீரமைவு செய்துவிட்டு மீதித் தொகையை IGST வரியாகச் செலுத்துவார்.

ஏற்றுமதி செய்யும் மாநிலம், SGST - யில் வசூலானதை IGSTக்கான வரியாகச் செலுத்தும். இறக்குமதி செய்யும் வர்த்தகர், தனது வெளியீட்டு வரிச்சுமையை IGST- யின் மூலமான வருவாயைத் தனக்கு வர வேண்டிய வருவாயாக பாவித்து அதைக் கோரிப் பெறுவார்.

அதேபோல IGST மூலமாகப் பெற்ற வருவாயை, இறக்குமதி செய்யும் மாநிலத்திற்குத் திருப்புவார்கள் இந்தத் தொகை SGST- க்குச் செலுத்துவதற்குப் பயன்படுத்தியதாக இருக்கும்.

இதைப் பற்றிய தகவல்கள், அதற்கான மத்திய முகமை மையத்திற்கத் தெரிவிக்கப்படும். இதுதான் மத்திய மாநில அரசுகளின் இடையே நடக்கும் வணிகம் தொடர்புடைய அனைத்தையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து நிர்வகிக்கும். மத்திய மாநில அரசுகளில் யார், யாருக்கு எவ்வளவு தர வேண்டும் என்பதைச் சொல்லி, நிதி வழங்கலைச் சீரமைக்கும்.

கேள்வி 4: IGST வரைவுச் சட்டத்தின் முக்கிய அம்சங்கள் யாவை?

பதில்: IGST வரைவுச் சட்டம் 9 அத்தியாயங்களில் 25 பிரிவுகள் கொண்டது. சட்டம், பொருள்கள் வழங்கும் இடத்தைத் தீர்மானிப்பதற்கு தீர்மானிக்க விதிகளை வகுத்துள்ளது. இதன்படி வழங்கல் என்பது சரக்குகள் பிராயணப்படுதல் அடங்கியது. பொருள் வழங்கல் இடம் என்பது, சரக்குகளின் பெயர்ச்சி முடியும் இடம். அங்குதான் அதைப் பெறுவதற்கு கொண்டு சேர்த்தல் என்பது நடைபெறும். இதைத்தான் பொருள் வழங்கல் இடம் என்று விதிமுறை கூறுகிறது. பொருட்களின் பெயர்வு இல்லாதபோது, அதைப் பெற்றுக்கொள்பவர் எங்கு வந்து பெறுகிறாரோ, அதுதான் பொருள் வழங்கல் இடமாகக் கருதப்படும் வழங்கும் பொருள், குறிப்பிட்ட இடத்தில் ஒன்றிணைப்பு செய்யப்பட்டு முழுமையான பொருள் உருவாக்கப்பட்டால், அதுதான் பொருள் வழங்கல் இடம் என்று கருதப்படும். இறுதியாக பொருட்கள், சரக்குகள் ஆகியன பயண வழியில் வழங்கப்பட்டால், அது பெறப்படும் இடம்தான் பொருள் வழங்கும் இடம்.

அதுபோல, பொருளை வழங்குபவரும், பெறுபவரும், இந்தியாவினுள் இருந்தால், அது உள்நாட்டு வழங்கல் அல்லது பொருளை வழங்குபவரோ, பெறுபவரோ வெளிநாட்டில் இருந்தால், அது சர்வதேச வழங்கல்கள் என்று கருதப்படும். இதைப் பற்றி அடுத்த அத்தியாயத்தில் விளக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

இவற்றுடன் மற்ற சில குறிப்பிட்ட வழிமுறைகளும் இருக்கின்றன. வலைதளம் வாயிலாகத் தகவலைப் பெற்று வரி செலுத்தல்; வெளிநாட்டில் இருக்கும் ஒருவர், இந்தியாவில் உள்ள பதிவு செய்யப்படாத ஒருவருக்கு குறிப்பிட்ட தரவுத் தளத்தை அணுக்கம் செய்ய அனுமதிப்பது. இதற்காக, சட்டப் பிரிவு 14, IGST சட்டப்படி, மிக எளிமையான முறையில் பதிவு செய்துகொள்ள முடிவது.

கேள்வி 5: IGST மாதிரியின் சாதக அம்சங்கள் என்ன?

பதில்: IGST மாதிரியின் உண்டாகும் பெரும் சாதக அம்சங்களாவன:

1. மாநிலங்களுக்கு இடையிலான ITC பரிமாற்றத்தை தடைகளின்றி பராமரிக்க முடிவது

2. மாநிலங்கள் இடையிலான விற்பனையாளர் மற்றும் வாங்குபவர் ஆகியோருக்கு முன்னதாக வரிசெலுத்தத் தேவையில்லாத நிலை, மற்றும் பெரிய அளவிளலான நிதி முடக்கம் இருதரப்பினருக்கும் ஏற்படாதிருத்தல்

3. ஏற்றுமதி செய்யும் மாநிலத்திற்கு உபரிப் பணம் திருப்புதல் என்பது கிடையாது. ஏனென்றால் வரி செலுத்தும்போதே ITC முழுவதும் பயன்படுத்தப்பட்டு விடும்.

4.சுயமாக கண்காணிக்க ஏற்ற மாதிரி.

5.வரி விதிப்பை எளிமையாக வைத்திருப்பதன் முலம், வரி நடுநிலைத் தன்மையை உறுதி செய்கிறது.

6. மிக எளிமையான கணக்கீட்டு முறை இருப்பதால், வரி செலுத்துபவர் பல்வேறு விதிகளுக்கு உட்பட வேண்டிய அவசியம் இல்லாத நிலை.

7. மிக அதிக அளவிலான கட்டுப்படுதலை உறுதி செய்ய வழி செய்து கொடுப்பதால், அதிகமான வரிவசூல் செய்ய திறனான வழியை உருவாக்குகிறது. இந்த மாதிரி மூலம், தொழிலில் இருந்து தொழிலுக்கு மற்றும் தொழிலில் இருந்து வாடிக்கையாளருக்கு என்ற இரு விதமான பரிமாற்றங்களையும் கையாள முடியும்.

கேள்வி 6: இறக்குமதியும்/ஏற்றுமதியும் GST-யின் கீழ் எவ்வாறு வரி விதிப்பு செய்ய முடியும்?

பதில்: எல்லா விதமான இறக்குமதி/ஏற்றுமதி ஆகியன GST (IGST) வரி விதிப்பிற்கான மாநிலங்கள் இடையிலான வர்த்தகமாகக் கருதப்படும். வரிகட்டுவது யார் என்ற கேள்விக்கு, சரக்குகள் எங்கே சென்று அடைகின்றனவோ அவர்கள் மற்றும் SGST வரியைப் பொறுத்த மட்டில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் எந்த மாநிலத்திற்குச் செல்கிறதோ, யார் அதை பயன்படுத்துகிறார்களோ அந்த மாநிலம்தான் வரி செலுத்த வேண்டும். இதில் இறுதியான, முழுமையான எதிரீடு கிடைக்க வாய்ப்பு உள்ளது. ஏனென்றால் IGST யின் ITC வரி இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளுக்கும், சேவைகளுக்கும் செலுத்தப்பட்டு விடும். ஏற்றுமதி செய்யப்படும் சரக்குகள் மற்றும் சேவைகளுக்கு வரி ஏதுமில்லை. ஏற்றுமதி செய்பவர். பத்திர உத்திரவாதத்தின் பேரில் ஏற்றுமதி செய்யலாம். அதுவும் சுங்கவரி எதுவும் செலுத்தாமல் இவை தவிர ITC ஐ திரும்பத் தருமாறு கோரலாம். அல்லது ஏற்றுமதி செய்யும் சமயத்தில் IGST செலுத்தி விட்டு, அதன் பின் IGST திருப்புதல் கோரலாம் இறக்குமதிகளுக்கு விதிக்கப்படும் IGST சுங்க வரிக் கட்டணச் சட்டத்தின் பிரிவுகளில் வரிவிதிப்புக்குள்ளாகும் இறக்குமதி செய்யும் காலத்தில், சுங்கச் சட்டத்தின் படியும் வரிவிதிப் இருக்கும். (IGST-ன் சட்டப் பிரிவு 5)

கேள்வி 7: IGST ஐ எப்படி செலுத்த வேண்டும்?

பதில்: செலுத்த வேண்டிய IGST தொகையை ITC-ஐப் பயன்படுத்தியோ பணமாகவோ செலுத்தலாம். அதே சமயம் ITC-ஐக் கட்டணம் செலுத்தப்ப பயன்படுத்தினால் பின்வரும் முறைகளில் செய்ய வேண்டும்.

முதலில் இருக்கும் IGST-யின் ITC-யைத்தான் IGST கட்டணம் செலுத்தப் பயன்படுத்தலாம்.

IGST-யின் ITC தீர்த்தவுடன் CGSTயின் ITC - IGST கட்டணம் செலுத்த பயன்படுத்தலாம்

IGSTயின் ITCயும், GST.-யின் ITC- யும் தீர்ந்தவுடன்தான் வரி செலுத்துபவர் SGST - யின் ITC ஐப் பயன்படுத்தி, IGSTயின் கட்டணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவார்

இதற்குப் பிறகும் செலுத்த வேண்டிய IGST மீதி இருந்தால் அதை பணம் மூலம் செலுத்தலாம். GST முறைமை மேற்படி நிலைகளில் மட்டுமே கடன் வசதியைப் பயன்படுத்தி IGST கட்டணத்தை செலுத்த உறுதி செய்கிறது.

கேள்வி 8: ஏற்றுமதி செய்யும், மாநிலம், இறக்குமதி செய்யும் மாநிலம், மத்திய அரசு ஆகியவற்றிடையே ஒப்பந்தம் என்பது எப்படி இருக்கும்?

பதில்: மாநில அரசுகளுக்கும், மத்திய அரசுக்குமிடையே இரண்டு விதமான ஒப்பந்தக் கணக்கீட்டு முறை இருக்கும்.

மத்திய அரச மற்றும் ஏற்றுமதி செய்யும் மாநிலம் ஏற்றுமதியில் ஈடுபடும் மாநிலம் பொருள் வழங்குபவர் பயன்படுத்தும் IGST யின் ITC தொகைக்கு ஈடான தொகையை மத்திய அரசுக்கு செலுத்தும்.

மத்திய அரசும் இறக்குமதி செய்யும் மாநிலமும்: மத்திய அரசு, இந்த வாணிபம் தொடர்புள்ள டீலர், மாநிலங்களிடையேயான வழங்கல்களுக்கான SGST கட்டணத்தை செலுத்துவதற்குப் பயன்படுத்திய IGST யின் ITC தொ¬க்கு ஈடான தொகையை மத்திய அரசு செலுத்தும்

இவை தொடர்பான மாநில அளவிலான ஒப்பந்தம் குறிப்பிட்ட மாநிலத்தில் உள்ள அனைத்து டீலர்களும் ஒப்பந்த காலத்தில் தரும் விவரங்களின் ஒட்டுமொத்த கணக்கீட்டின் அடிப்படையில் இருக்கும் இதே போன்றதொரு ஒப்பந்தப்படி தொகை அளித்தல் CGST மற்றும் IGST -க்கு இடையே எடுத்துக்கொள்ளப்படும்.

கேள்வி 9: SEZ பிரிவுகள் அல்லது மேம்பாட்டாளருக்கு வழங்கப்படும் பொருட்கள் எவ்வாறு கருதப்படும்?

பதில்: SEZ பிரிவுகள் அல்லது மேம்பாட்டாளருக்கு அளிக்கப்படும் பொருள் வழங்கல்கள், ஆகியன முதன்மை (physical) ஏற்றுமதிகளுக்கு இருக்கும்.

பூஜ்ய சதவிகித கட்டணங்கள் முறைமையே இதற்கும் பொருந்தும். பொருள் வழங்குபவர் வரிகள் ஏதுமின்றி SEZ க்கு பெறுகிறார். அதன் பிறகு அது போன்ற வழங்கல்களுக்கான உள்ளீட்டு வரியை திரும்பப் பெறலாம். IGST-யின் சட்டப் பிரிவு 16இன்படி)

கேள்வி 10: தொழில் முறைமைகள், தேவையான விதிகளுக்கு உடன்படுதல் ஆகியன IGST/CGST சட்டங்களின்படி ஒன்றானவையா?

தொழில் முறைமைகள், விதிகளுக்கு உட்படும் அம்சங்கள் ஆகியன பதிவு செய்தல், வரவு - செலவு கணக்குகள் தாக்கல் செய்வது, வரி செலுத்தல் போன்றவற்றிற்கு ஒன்றேதான். இது தவிர CGST சட்டங்களில் சிலவற்றை மாற்றாமல் அப்படியே IGST சட்டம் தனதாக இணைத்துக்கொண்டுள்ளது. மதிப்பாய்வு கணக்குப் பரிசோதனை, மதிப்பீடு, பொருள் வழங்கல் நேரம் விலை விவரச்சீட்டு கணக்கீட்ட முறைகள், வழக்கு விவகார முறைமைகள் முறையீடு போன்றவை இதில் அடங்கும் (IGST யின் சட்டப் பிரிவு 20).

---------------

## 22. சரக்குகள் வழங்கல் இடம் மற்றும் சேவை

கேள்வி 1: GST- யின் கீழ் சரக்குகள் வழங்கல் இடம் மற்றும் சேவைகள் ஆகியவற்றின் தேவை என்ன?

பதில்: GST - யின் அடிப்படைக் கோட்பாடு என்னவெனில் வழங்கப்படும் பொருட்கள் எங்கே நுகரப்படுகிறதோ அந்த இடத்தில் வரிவிதிப்பு நடக்க வேண்டும் என்பதுதான். வழங்கப்படும் இடம்தான் அந்தப் பொருட்களின் வரிவிதிப்பிற்குரிய சட்ட வரம்பெல்லை. பொருள் வழங்கும் இடம்தான், அந்தப் பரிமாற்றம் மாநிலத்திற்குள்ளா அல்லது மாநிலங்களுக்கு இடையிலா என்பதை உறுதி செய்கிறது. வேறு விதமாய் சொல்வதானால், பொருள் வழங்கல் இடத்தை உறுதி செய்வதன் மூலம்தான் அந்தப் பொருள் SGST மற்றும் CGST வரி விதிப்பிற்குள் வருமா என்பதை முடிவு செய்ய முடியும். இந்த வழங்கல் மாநிலங்களுக்கு இடையே என்றால், அது IGST-யின் கீழ் வரும்.

கேள்வி 2: வழங்கல் தொடர்பான சட்ட ஷரததுக்கள் சரக்குகள் மற்றும் சேவைகள் ஆகியனவற்றில் வேறுபாடுகள் இருப்பது ஏன்?

பதில்: சரக்குகள் என்றால் எளிதில் கண்டறிய முடியக்கூடியவை என்பதால் அவை எங்கே பயன்படுத்தப்படுகின்றன என்பதை எளிதில் தெரிந்துகொள்ளலாம். ஆனால் சேவைகள் எளிதில் அறியப்பட முடியாதவை. அதற்கான காரணங்கள் யாவன:

1.சேவையை அளிக்கும் விதத்தை மிக எளிதாக மாற்ற முடியும். உதாரணமாக, தகவல் தொழில்நுட்பம் பொறுத்தவரை பெரும்பாலான தொடர்புகள் சேவைக்குப் பின் (Post paid) கட்டணம் என்பதிலிருந்து பெரும்பாலான தொடர்புகள், சேவைக்கு முன் (Prepaid) என்று மாறிவிட முடியும். கட்டண விலாசங்களை எளிதில் மாற்றலாம். கட்டணம் வசூலிப்பவர்களின் விலாசங்களையும் எளிதில் மாற்றலாம். மென்பொருள் பழுது பார்த்தல் அல்லத பராமரிப்பு சேவைகள் பயனாளிகளின் இடத்திற்குச் செல்வதற்கு பதிலாக, கணிணியின் மூலமாக செய்ய முடியும். வங்கிச் சேவைகள் சில வருடங்களுக்கு முன்பு வரை, வாடிக்கையாளர் வங்கிக்குச் செல்ல வேண்டிய தேவை இருந்தது இன்றைய காலகட்டத்தில் வாடிக்கையாளர்

எல்லா சேவைகளையும் எங்கிருந்து வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ள முடிகிறது.

2. சேவையை அளிப்பவர் சேவையைப் பெறுபவர், அளிக்கப்படும் சேவை ஆகிய எதுவுமே உறுதிசெய்யப்பட முடியாத நிலை எழுந்திருக்கிறது. இவற்றைக் கண்டறிவது கடினம். ஏனென்றால் கண்டறியும் விதத்தில் வழித்தடம் பொருள் என்று எதுவும் இல்லை.

3. சேவையை அளிப்பவர்க்கு நிலையான இடம் எதுவும் தேவையில்லை. அது போல, சேவையைப் பெறுபவரும் ஓரிடத்தில் இருக்கத் தேவையில்லை. அது போல சேவைக் கட்டண இடத்தையும் இரவோடு இரவாக மாற்ற முடியும்.

4. ஒரே அம்சம், பணி, சேவை ஆகியவை பல இடங்களுக்கும் பரவலாம். உதாரணமாக, ரயில் பாதை கட்டுமானம் என்று எடுத்துக்கொண்டால் ஒரு மாநிலத்திலிருந்து துவங்கி, மறு மாநிலத்தில முடியலாம். அது போல ஒரு திரைப்படம் என்று எடுத்துக்கொண்டால், அதை வெளியிடுவதற்கான காப்புரிமையைப் பல மாநிலங்களுக்கு அளிக்க வேண்டுமானால், அதை ஒரே ஒரு வணிக உடன்பாடு அல்லது ஒரு விளம்பரம் அல்லது ஓரிடத்தில் அதற்கான நிகழ்ச்சியை நடத்தி, அதை ஒளிபரப்புவது போன்றவை மூலம் செய்ய முடியும். விமான நிறுவனம் சீஸன் டிக்கெட்டுகளை விற்பனை செய்யலாம்.அதில் 10 பயணீச்சீட்டுகள் இருக்கலாம். அதை நாட்டில் எந்த இரு இடங்களுக்கிடையே வேண்டுமானாலம் பயணம் செய்யப் பயன்படுத்த முடியும் அதே போல டெல்லி மெட்ரோ வழங்கும் பயண அட்டையை வைத்துக்கொண்டு நோய்டா, டெல்லி, பரிதாபாத் ஆகிய இடங்களில், எங்கிருந்து வேண்டுமானாலும் பயணம் செய்ய முடியும். டெல்லி மெட்ரோவிற்கு, அந்த அட்டைக்கான பணத்தை பெறும்போது, பிரயாணி, பயணம் இடங்கள் பற்றி பிரித்தறிய முடியாது.

5. புதிதாகப் பல சேவைகள் உருவாகிவருகின்றன என்பதால் புதுப்புது சவால்களும் உருவாகிக்கொண்டேயிருக்கும். உதாரணமாக 15-20 வருடங்களுக்கு முன்னால், DTH, வலைதளம் மூலமாகத் தகவல் டிக்கெட்டுகள் பதிவுசெய்தல், வங்கிப் பணி

செல்பேசி மூலமாக தகவல் தொடர்புகள் ஆகியனவற்றை எண்ணிப் பார்த்திருக்க முடியாது.

கேள்வி 4: எந்த ஒரு வணிக/வர்த்தச் சேவை பரிமாற்றத்திலும், என்ன விதமான பதிலிகள் அல்லது அனுமானங்களைப் பயன்படுததிப் பொருள் வழங்கும் இடத்தைத் தீர்மானிக்கலாம்?

பதில்: சேவைகள் தொடர்பான வணிகப் பரிமாற்றத்தில் உள்ள பல அம்சங்கள் பதிலிகளாகக் கருதிஅதன் மூலம் பொருள் வழங்கலின் இடத்தைக் கண்டறியலாம்.

அனுமானம், பதிலி ஆகியன மிகப் பொருத்தமான முடிவை அளிக்கும். அதன் மூலம் பொருள் வழங்கும் இடத்தை உறுதி செய்ய முடியும். அவையாவன:

1. சேவை அளிப்பவர் இருக்கும் இடம்
2. சேவையைப் பெறுபவர் இருக்கும் இடம்
3. குறிப்பிட்ட செயல்பாடு / நிகழ்வு /நிகழ்ச்சி நடந்த இடம்.
4. பயன்படுத்தப்பட்ட இடம், மற்றும்
5. எந்த இடத்தில் யாருக்கு உண்மையான பலன் சென்றது

கேள்வி 4: B 2 B (பதிவு செய்த நபர்களுக்கு பொருள் வழங்கல்) மற்றும் B 2 C (பதிவு செய்யாத நபர்களுக்க பொருள் வழங்கல்) ஆகியவற்றிற்கு பொருள் வழங்கும் இடம் குறித்துத் தனித்தனியான விதிமுறைகள் இருக்க வேண்டியதன் அவசியம் என்ன?

பதில்: B 2 B வணிகப் பரிவர்த்தனைபோது, அதைப் பெறுபவர், அதற்கான வரியை கடனாகப் பெறுவதால், அது போன்ற வணிக பரிமாற்றங்கள் இயல்பாகக் கடந்துபோகும். B 2 B வழங்கல்களில் வசூலிக்கப்படும் CGST உண்மையில், அரசாங்கத்திற்கு ஒரு பொறுப்பை உருவாக்குகிறது. இது பொருள்களைப் பெறுபவர்களுக்கு சொத்துபோல. ஏனெனில் பொருளை/சேவையைப் பெறுபவர், எதிர்காலக் கடன்களைப் பெறுவதற்கு உள்ளீட்டுக் கடனைப் பயன்படுத்த முடியும்.

ஏனென்றால் B 2 B பரிமாற்றத்தின்போது, அதைப் பெறுபவரது இடம், எல்லா சூழ்நிலைகளையும் கவனித்துக் கொள்ளும். ஏனென்றால் அடுத்து வரும் கடன்களை, பொருட்களைப் பெறுபவர் தனது பொறுப்பில் ஏற்பார். பொதுவாக, இது போல பொருட்களைப் பெறுபவர், அதை மற்றொரு வாடிக்கையாளருக்கு வழங்குவார். ஆகவே வழங்கப்பட்ட பொருள், B 2 B பரிமாற்றத்திலிருந்து B 2 C பரிமாற்றமாக மாற்றப்பட்டவுடன்தான், அந்தப் பொருள் பயன்படுத்தப்படும். B 2 C பரிமாற்றத்தின்போதுதான், பயன்படுத்தப்பட்டு அதற்கான வரிகள் அரசாங்கத்திற்கு வந்து சேரும்.

கேள்வி 5: சரக்குகள் எடுக்கப்பட்ட பின், பொருள் வழங்கல் இடம் எதுவாக இருக்கும்?

பதில்: பொருட்கள் வழங்கப்பட்ட இடம் என்பது, அதைப் பெறுபவருக்காகக் குறிப்பிட்ட இடத்தில், நேரத்தில், அந்தப் பொருட்களின் பெயர்வு, பயணம் முடிவுக்கு வரும். அந்த இடம்தான் பொருட்கள் வழங்கப்பட்ட இடம் என்று கருதப்படும்.

கேள்வி 6: பொருட்களை வழங்குபவர், மூன்றாவது நபரின் வழிகாட்டலின்படி, குறிப்பிட்ட நபருக்குக் கொண்டு சேர்க்கிறார் என்ற நிலையில், பொருள் வழங்கல் இடம் எது?

பதில்: இந்த சூழலில், மூன்றாவது நபர்தான் பொருட்களைப் பெற்றதாகவும், பொருட்கள் வழங்கப்பட்ட இடம்தான், அவரது தொழில் நடக்கும் இடமாகவும் கருதப்படும்.

கேள்வி 7: வழங்கப்படும் பொருட்கள், பயணத்தில் இருக்கும் வாகனங்களில், கப்பலாக, விமானமாக, ரயிலாக அல்லது மோட்டார் வாகனமாக இருந்தால் பொருள் வழங்கப்பட்ட இடம் எது?

பதில்: இப்படிப்பட்ட சூழலில், எந்த இடத்தில் பொருட்கள்/சரக்குகள் பெறப்பட்டதோ, அந்த இடம்தான் பொருட்கள் வழங்கப்பட்ட இடம்(IGST சட்டத்தின்

10வது பிரிவு) அதே சமயத்தில், சேவைகளைப் பொறுத்தமட்டில், பயணிக்கும் வாகனத்தின் ஆரம்பப் பகுதிதான் (இடம்) பொருள் வழங்கப்பட்ட இடம் என்று கருதப்படும் (IGST சட்டத்தின் 12 மற்றம் 13 பிரிவுகள்)

கேள்வி 8: B 2 B பரிமாற்றத்தின் போது பொருள் வழங்கல் இடம் இதுவாகத்தான் இருக்கும் என்று இயல்பான அனுமானம் எது?

பதில்: IGST சட்டத்தின்படி பயன்படுத்தப்படும் பதங்கள், பதிவு செய்யப்பட்ட வரி செலுத்துவோர் மற்றும் பதிவு செய்யப்படாத வரி செலுத்தவோர். பதிவு செய்யப்பட்ட நபருக்கு பொருட்கள் வழங்கப்படும்போது, அவர் இருக்கும் இடம்தான், பொருள் வாங்கல் இடமாகக் கொள்ளப்படும். ஏனென்றால், அவர் பதிவு செய்த வரி செலுத்துபவராக இருப்பதால், அவரது முழு விவரமும், பதிவாகியிருக்கும். அதையேகூட அவரது பதவி விலாசமாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

கேள்வி 9: பதிவு செய்யப்படாதவர்களுக்குப் பொருள் வழங்கலின்போது என்ன விதமாக அனுமானம் இருக்கும்?

பதில்: பதிவு செய்யப்படாதவர்களுக்குப் பொருள் பெறப்பட்ட இடம்தான் பொருள் வழங்கும் இடமாகக் கருதப்படும்.ஆனால் பல சமயங்களில் பொருளைப் பெறும் நபரின் விலாசகம் இல்லையென்றால், பொருளை வழங்கியவரின் / சேவைகள் அளித்தவரின் இடம்தான், பொருள் வழங்கு இடத்திற்கு பதிலியாகக் கருதப்படும்.

கேள்வி 10: பொதுவாக அசையாச் சொத்துள்ள இடம்தான் பொருள் வழங்கு இடமாகக் கருதப்படும். உதாரணமாக டில்லியிலிருந்த மும்பை வரை நெடுஞ்சாலை போடப்படுகிறது. வழியில் பல மாநிலங்களைக் கடக்கிறது. இப்படி இருக்கும்போது, பொருள் வழங்கல் இடம் எது?

பதில்: அசையாச் சொத்து ஒரு மாநிலத்திற்கும் கூடுதலாகப் பரவியிருக்கும் பட்சத்தில், சேவை வழங்கல் என்பது ஒவ்வொரு மாநிலத்திலும் நடைபெற்ற பணி, அதற்கான ஒப்பந்தம், ஆகியனவற்றை வைத்து அந்தந்த மாநிலத்தில்

அளிக்கப்பட்ட சேவை என்று தனித்தனியாகக் கருதப்பட்டு, பொருள் வழங்கல் இடம் எது என்று தீர்மானிக்கப்படும். அது போல, ஒப்பந்தம் இல்லாதிருந்தால் IGST உள்ளூர் வழங்கல்கள் சட்டப் பிரிவு 12(3) - ன்படி தீர்மானம் செய்யப்படும்.

கேள்வி 11: IPL கிரிக்கெட் போட்டிகளைப் போல ஒரு நிகழ்ச்சி பல மாநிலங்களில் நடத்தப்படும்போது, சேவைகள் வழங்கும் இடமாக எது கருதப்படும்?

பதில்: எந்த ஒரு நிகழ்வாக இருந்தாலும் அந்த சேவையைப் பெறுபவர் பதிவு செய்தவராக இருந்தால் இவ்வகையான சேவைகளை அளிக்கும் நபர் எங்கிருக்கிறாரோ, அவர் இருக்கும் இடம்தான் சேவை வழங்கல் இடமாகக் கருதப்படும்

அதே சமயம், சேவையைப் பெறுபவர் பதிவுசெய்திராவிட்டால், அந்த நிகழ்வு நடக்கும் இடம்தாம், சேவை வழங்கல் இடமாகக் கருதப்படும். இந்த நிகழ்வு பல மாநிலங்களில் நடைபெறுவதால், அது நடக்கும் ஒவ்வொரு இடத்திலும் சேவையின் அளவிற்கு ஏற்றபடி, மதிப்பிடப்படும். இது பற்றிய விரிவான விளக்கம் IGST சட்டம் 12(7) குறிப்பிடப்பட்டுள்ளது.

கேள்வி 12: பொருள்களைப் போக்குவரத்தின் மூலமாகக் கொண்டு செல்லும் சேவைகள், (இதில் கடிதப் போக்குவரத்து மற்றும் கூரியரும் அடங்கும்) இருந்தால் பொருள் வழங்கல் இடமாக எதைக் கருதுவது?

பதில்: உள்ளூர் வழங்கல் என்ற பட்சத்தில், அதைப் பெறுபவர் பதிவு செய்திருந்தால் அந்த நபரின் இடம்தான் பொருள் வழங்கும் இடமாகக் கருதப்படும்.

அவர் பதிவு செய்யாமலிருந்தால், பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டு, எங்கே கொடுக்கப்படுகிறதோ அல்லது சேகரிக்கப்படுகிறதோ அந்த இடம்தான் பொருள் வழங்கல் இடமாகக் கருதப்படும். (IGST சட்டம் 12 பிரிவு)

சர்வதேச வழங்கல்கள்: போக்குவரத்து சேவை வழங்கல் இடங்கள், கொரியர் சேவைகளைத் தவிர மற்றவை, அந்த பொருள் போய்ச் சேரும் இடமாக இருக்கும்.

கூரியரைப் பொறுத்தமட்டில், சேவைகள் வழங்கும் இடம் என்றால் பொருட்கள், கடிதங்களைக் கொண்டு சேர்க்கும் இடம்தான் பொருள் வழங்கல் இடம். அதே சமயம், இப்படிக் கொடுக்கும்போது, அது சேர வேண்டிய இடம், சிறு அளவில் இந்தியாவில் இருந்தாலும் வழங்கல் இந்தியாவில் நடந்ததாகக் கருதப்படும். (IGST சட்டப் பிரிவு 13(3), 13(6) மற்றும் 13(9) ஆகியன.

கேள்வி 13: ஒரு நபர் மும்பையிலிருந்து டெல்லி, மறுபடியும் மும்பை என்றவாறு பயணம் செய்தால், எந்த இடம், பிரயாணிக்கான போக்குவரத்துச் சேவை வழங்கலாகக் கருத முடியும்?

பதில்: அந்த நபர் பதிவு செய்திருந்தால், சேவை வழங்கல் இடம் சேவையைப் பெறுபவரது இடம்தான். அவர் பதிவு செய்யாவிட்டால், மேல் நோக்கிச் செல்லும் பயணம் எங்கிருந்து துவங்குகிறதோ அதுதான் சேவை வழங்கல் இடம். உதாரணமாக, மும்பை டெல்லி மார்க்கத்தில் டெல்லிதான் சேவை வழங்கல் இடம்.

அதே சமயம் திரும்பி வரும் பயணத்தில் வழங்கு இடம் என்றால் டில்லியாகவே இருக்கும். இதைத் தனிப் பயணமாகவே கருத வேண்டும். (IGST சட்டம், 12(9) பிரிவிற்கான விவரக் குறிப்பு)

கேள்வி 14: ஏர் இந்தியா நிறுவனம் குறிப்பிட்ட ஒரு நபருக்கு இந்தியா முழுவதும் செல்லக்கூடிய அனுமதிச் சீட்டு/பயணச் சீட்டு வழங்குகிறது என்று வைத்துக் கொள்வோம், இதில் வழங்கலின் இடம் எதுவாக இருக்கும்?

பதில்: இந்த விஷயத்தைப் பொறுத்தவரை விற்பனை விலைச்சீட்டு அளிக்கப்படும்போது, எங்கிருந்து பயணம் தொடங்குவது என்பதைப் பற்றிய விவரம் கிடைக்காது. ஏனென்றால் பிரயாணத்திற்கான அதன் வழிகளுக்கான அனுமதி எதிர்கால பயன்பாட்டுக்குத்தான். ஆகவே, வழங்கல் இடம் புறப்படும் இடமாக இருக்க முடியாது இது போன்ற சந்தர்ப்பங்களில் ஏற்கெனவே இருக்கும் சட்ட விதிமுறை (IGST-யின் 12(9) பிரிவு) பொருந்தும்.

கேள்வி 15: செல்பேசி இணைப்புகளுக்கான வழங்கல் இடம் என்னவாக இருக்க முடியும்? பொருள் வழங்குபவரின் இடமாக இது இருக்க முடியுமா?

பதில்: உள்நாட்டு வழங்கல்களைப் பொறுத்தவரை, பொருள் வழங்குபவரின் இடமாக இருக்க முடியாது.ஏனென்றால் செல்பேசி நிறுவனங்கள் பல மாநிலங்களில், இந்த சேவைகளை வழங்கிவருகிறது. இதில் பல சேவைகள், மாநிலங்களுக்கிடையில் இருக்கிறது. பொருள் வழங்குபவர்களின் இடம்தான், வழங்கல் இடம் என்று எடுத்துக்கொண்டால் நுகர்வுக் கேட்பாடு வலுவிழந்து விடம். ஏனென்றால், எல்லா வருவாயும், பொருள் வழங்குவோர் இருக்கும் சில மாநிலங்களுக்கு மட்டும் சென்றுவிடும்.

ஆகவே செல்பேசி இணைப்பு வழங்கல் இடம் என்பது, அந்த இணைப்பு, சேவைக்கு முன் கட்டணம் சேவைக்குப் பின் கட்டணம் ஆகியவற்றின் அடிப்படையில் தீர்மானமாகும். சேவைக்குப் பின் கட்டணம் (Post paid) இணைப்பாக இருந்தால், அது குறித்த கட்டணச் சீட்டில் இருக்கும விலாசம் எந்தப்பகுதியில் இருக்கிறதோ, அதுதான் சேவை வழங்கல் இடமாகக் கருதப்படும். சேவைக்கு முன் கட்டணம் (Pre paid) இணைப்பு என்றால், இந்தக் கட்டணம் எந்த இடத்தில் பெறப்படுகிறதோ, அதுதான் சேவை வழங்கல் இடமாகக் கருதப்படும். அதே சமயம், சேவை புதுப்பித்தல் (Recharge) வலைதளம் வழியாக நடந்தால் அதைப் பெறுபவர் இருக்கும் இடம்தான், சேவை வழங்கல் இடமாக இருக்கும்.

சர்வதேச பொருள் வழங்குவோர்: இந்தச் சேவைகளைப் பெறுபவர் இருக்கும் இடங்கள்தாம், சேவை வழங்கும் இடமாகக் கருதப்படும்.

கேள்வி 16: கோவாவில் இருக்கும் ஒருவர், டில்லியில் இருக்கும் ஒரு பங்குத்தரகரின் மூலம் மும்பையில் இருக்கும் NSE-யின் பங்குகளை வாங்குகிறார். வழங்கல் இடம் என்னவாக இருக்கும்?

பதில்: இந்த சேவைகளை வழங்கும் நபர்கள்/நிறுவனங்களின் கட்டணச் சீட்டுகளில், வழங்கல் இடம், அதைப் பெறுபவரின் விலாசமாகத்தான் இருக்கும்

என்பதால் அதுதான் வழங்கல் இடம். ஆகவே கோவா-தான் வழங்கல் இடமாக இருக்கும்.

கேள்வி 17: ஒருவர் மும்பையிலிருந்த குல்லு-மனாலிக்குச் செல்கிறார். அங்கிருக்கும் ICICI வங்கியின் சேவைகள் சிலவற்றைப் பெறுகிறார். வழங்கல் இடம் என்னவாக இருக்கும்?

பதில்: அந்த நபர் பெறும் சேவை, அவரது வங்கிக் கணக்குத் தொடர்பானது இல்லையென்றால், வழங்குபவரின் இடம். அதே சமயம் அந்த நபர் பெறம் சேவை, அவரது வங்கிக் கணக்குகடன் சம்பந்தப்பட்டு இருந்தால், சேவை வழங்கும் இடம் மும்பையாகக் கருதப்படும். ஏனென்றால் வழங்குபவரின் ஆவணப் பதிவுகளில் அந்த சேவையைப் பெற்றவரது விலாசம்தான் குறிப்பிடப்பட்டு இருக்கும்.

கேள்வி 18: குர்கான் (Gurgaon) பகுதியில் வசிக்கும் ஒரு நபர், ஏர் இந்தியா விமானம் மூலம் மும்பையிலிருந்து டெல்லிக்குச் செல்கிறார். அவருக்கான பயணக் காப்பீடு மும்பையில் செய்துகொள்கிறார் இதில் வழங்கல் இடம் எதுவாக இருக்கும்?

பதில்: பொருள்/ சேவை வழங்குபவரின் சேவைப் பதிவு ஆவணங்களில், அதைப் பெற்றவரது விலாசம்தான் குறிப்பிடப்பட்டு இருக்கும் என்பதால், அதுதான் வழங்கல் இடமாகக் கருதப்படும் (IGST சட்டப் பிரிவின் ஷரத்து 12(13)).

-----------------

## 23. **ஜி.எஸ்.டி.என். மற்றும் ஃப்ரண்ட்எண்ட்** (FRONTEND) **தொழில்**

## ஜி.எஸ்.டி.என். - வலைதளப் பயன்பாட்டு முறை

கேள்வி 1: ஜி.எஸ்.டி.என். என்றால் என்ன?

பதில்: சரக்குகள் மற்றும் சேவைகள் வரி வலைத்தொடர்பமைப்பு (Goods and services tax network) என்பது, லாபநோக்கின்றி, மத்திய மற்றும் மாநில அரசுகளால் உருவாக்கப்பட்ட, அரசு சாரா நிறுவனம். இதன் மூலம் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு வரி செலுத்துவோர் மற்றும், பயனுரிமையாளர்களுக்குச் சேவை அளிக்க உருவாக்கப்பட்டது தான் இது. இதில் முன்தளச் சேவைகள், பதிவுகள், திருப்புதல்கள் (Returns) கட்டணங்கள் செலுத்தல், போன்றவை வழங்கப்படும். இந்த வலைதளம், அரசுக்கும், வரி செலுத்துவோருக்கும் இடையே தொடர்புமையமாக இருக்கும்.

கேள்வி 2: ஜி.எஸ்.டி.என். உருவாக்குவதற்கான தேவை என்ன?

பதில்: ஜி.எஸ்.டி.என். முறைமைத்திட்டம் என்பது தனித்துவம் பெற்ற சிக்கலான தகவல் தொழில்நுட்ப முன் முயற்சி. இதைத் தனித்தன்மை பெற்றது என்று குறிப்பிடக் காரணம், வரி செலுத்துவோர், மத்திய மற்றும் மாநில அரசு ஆகியோர் கூட்டாகப் பயன்படுத்தப்படும் தகவல் தொழில் நுட்பக் கட்டமைப்பு இது.

தற்போது மத்திய, மாநில மறைமுக வரி நிர்வாகங்கள் தனித்தனிச் சட்டங்களின் கீழ் இயங்குகின்றன. அதனால் அவற்றிற்கான தகவல் தொழில் நுட்ப வலைதளங்களும் தனித்தனியாகவே இருக்கின்றன.

இவற்றை ஜி.எஸ்.டி. அமல்படுத்தலுக்காக ஒன்றிணைப்பது மிகச்சிக்கலான விஷயமாகவே இருக்கும். ஏனென்றால் ஒட்டு மொத்த மறைமுக வரி விதிப்பு முறையை ஒருங்கிணைப்பதன் மூலம், வெவ்வேறு வரி நிர்வாக அமைப்புகளை (மத்திய மாநில மற்றும் யூனியன் பிரதேசங்கள்) ஒரே மாதிரியான தரத்தில் தகவல் தொழில் நுட்ப முறைமைகளாக மாற்றி, ஒரே விதமான வடிவமைப்புடன், வரி செலுத்துவோர், மற்றுமிருக்கும் வெளி பயனுரிமையாளர்கள் போன்றவர்கள்

தொடர்பு கொள்ளத்தக்க தளம் அமைக்கப்பட்ட வேண்டும். இதைத் தவிர, ஜி.எஸ்.டி. வரி விதிப்பின் அடிப்படையில், அதை நோக்கமாகக் கொண்டு இயங்கும் முறையாதலால் மாநிலங்கள் இடையிலான சரக்கு மற்றும் சேவைகள் ஆகியவற்றின் வணிகம், வர்த்தகம் போன்றவற்றுக்கு, செயல்படத்தக்க துடிப்புள்ள தீர்வுகளுக்கான வழி முறைகாணும் முறைமை அவசியமானது.

இது எப்போது சாத்தியமாகும் என்றால், வலுவான தகவல் தொடர்புக் கட்டமைப்பு, மற்றும் இந்த விஷயத்தின் பயனுரிமையாளர்களிடையே தகவல் பரிமாற்றம், அதை சரி பார்ப்பது, ஆய்வு செய்வது போன்றவற்றைச் சாத்தியமாக்கும் முதுகெலும்பு போன்ற சேவை மிக முக்கியம். இதில் பயனாளியாக, வரி செலுத்துவோர் மாநிலங்கள், மத்திய அரசு, வங்கி மற்றும் ரிசர்வ் வங்கி ஆகியன இதில் அடங்கும்.

இந்த நோக்கங்களை அடைவதற்குத் தான் ஜி.எஸ்.டி.என். உருவாக்கப்பட்டது.

கேள்வி 3: ஜி.எஸ்.டி.என்.எப்படிஉதயமானது?

பதில்:

21.7.2010இல்நடந்தமாநிலங்களின்நிதியமைச்சர்களின்உயர்அதிகாரக்கமிட்டியின் (EC) 4 - ஆவது கூட்டத்தில் மிகவலுவான தகவல் தொழில்நுட்பக்கட்டமைப்பு தேவை என்பது விவாதிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் ஜி.எஸ்.டி. க்கு வலுவான தகவல் தொழில்நுட்பக்கட்டமைப்பை உருவாக்க உயர்நிலை அதிகாரக்குழு ஒன்று உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக டாக்டர் நந்தன் நீல்கேனி, கூடுதல் செயலாளர் (வருவாய்த்துறை) மற்றும் உறுப்பினர்களாக (B&C) CBEC, DG ((முறைமைகள்) CEEC எ.்.ப்எ மத்தியநிதித்துறை ECயின் செயலர் மற்றும் ஐந்து மாநிலங்கள் வர்த்தக வரித்துறையின் ஆணையர்கள் (மஹாராஷ்டிரா, அஸ்ஸாம், கர்நாடகா, மேற்குவங்காளம், குஜராத்) ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

இந்தக் குழுமம் தான், தேசியத் தகவல் பயன்பாடு (NIC/SPV) என்ற மையம் உருவாக்கத் தேவையான வழி முறைகள், செயல்முறைகள் ஆகியவற்றை பரிந்துரைக்க வேண்டும். இதைவைத்து, ஜி.எஸ்.டி. வலைதளம் (ஜி.எஸ்.டி.என்.) என்ற பொதுவான, பொது நுழைவாயில் உருவாக்கவேண்டும் என்பது தான் நோக்கம். தேசியத் தகவல் பயன்பாட்டு மையம், அதன் அமைப்பு, செயல்படும் வழிமுறைகள் ஆகியவை அடங்கிய விளக்கமான அமல்படுத்தும் திட்டவரையரையைப் பரிந்துரை செய்யவேண்டும். இதை எப்படி உருவாக்குவது என்பதற்கான செயல்வரையறைத்திட்டமும் உருவாக்குவது மட்டுமின்றி இது தொடர்பான பயிற்சியளிப்பு, மற்றவர்களை அணுகுவது போன்றவற்றைப் பற்றியும் விவரமாக இந்தக்குழு பரிந்துரைகள் செய்யவேண்டும்.

2010 மார்ச் மாதம் 10ஆம் தேதி, நிதியமைச்சகம் TAGUP-ஐ உருவாக்கியது. தேசியத்தகவல் பயன்பாட்டுமையங்கள், தனியார் நிறுவனங்கள் போல உருவாக்கப்பட வேண்டும். இதன் பொதுவான நோக்கமும், ஜி.எஸ்.டி. உள்ளிட்ட பெரிய சிக்கலான தகவல் தொழில்நுட்பத்திட்டங்களை உருவாக்கி அமல்படுத்தவேண்டும் என்பதுதான். TAGUP-க்குக் கொடுக்கப்பட்டபணி, ஜி.எஸ்.டி., TIN, NPS போன்ற தகவல் தொழில்நுட்பத்திட்டங்கள் தொடர்புடைய தொழில்நுட்பச்சிக்கல்களை ஆய்வு செய்து, தீர்வைக் கண்டறிவதுதான்.

உயர்மட்ட அதிகாரக்குழுமம் (EG) ஆகஸ்ட் 2010இலிருந்து 2011 ஆகஸ்ட் வரையில் சில கூட்டங்கள் நடந்தன. நீண்ட நெடிய ஆலோசனைக் கூட்டங்களுக்குப் பின்னர் ஜி.எஸ்.டி. முறைமைத்திட்டத்தை அமல்படுத்த சிறப்பு நோக்க அமைப்பை உருவாக்கப் பரிந்துரை செய்தது. ஏற்கெனவே அதிக எதிர்ப்புகள் உள்ள சூழ்நிலையில் திறமையான, நம்பத்தகுந்த சேவைகள் அளிக்கப்படுவதை உறுதி செய்ய புதிய அரசுசாரா அமைப்பு ஒன்றை ஜி.எஸ்.டி.என். SPV க்காகவே EG உருவாக்க வேண்டும். அதில் 49% பங்குகள் (மத்தியஅரசு 24.5, மாநிலங்கள் 24.5%) என்றவிதத்தில் அரசாங்கம் வைத்திருக்க வேண்டும். இந்த முடிவுக்கு வருவதற்கு முன்பாக, சுதந்திரமான நிர்வாகம், முக்கிய அம்சங்களில் அரசாங்கத்தின் கட்டுப்பாடு, நெகிழ்வுத்தன்மையுடனான இயக்க அமைப்பு, முடிவு செய்வதில்

வேகமான செயல்பாடுகள், திறமையான மனிதவள ஆற்றலை வேலைக்கு அமர்த்துவது, அவர்களைத் தொடர்ந்து வேலையில் இருக்கும்படி செய்வது ஆகியனபற்றியும் EG விளக்கமான பரிந்துரைகளை அளித்திருந்தது.

ஜி.எஸ்.டி.என். அமைப்பின் மிக முக்கியமான பங்கு, அதனுள் சேரக்கூடிய மிக முக்கியமான தகவல்கள் ஆகியனவற்றால், அரசாங்கம் இதனைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்றும் விரும்பியது. SPV மீதான அரசாங்கத்தின் கட்டுப்பாடு, அதற்கான நிர்வாகமன்ற உருவாக்கம், சிறப்புத் தீர்மானங்கள் உரிமை, பங்குதாரர்களின் ஒப்பந்த முறைமைகளைக் கட்டுப்படுத்தல், அரசாங்கத்தின் சார்பில் அதிகாரிகள் இருப்பது, மற்றும் ஜி.எஸ்.டி.என். SPV மற்றும் அரசுக்கிடையே ஒப்பந்தங்கள் பங்கு உரிமையே, மத்தியஅரசிற்கு 24.5% என்றும் அனைத்து மாநிலங்களின் கூட்டுப்பங்கு 24.5 என்று இருக்கும். இரண்டும் சேர்ந்தால் பேச எந்த தனியார் நிறுவனத்தைக் காட்டிலும், மிக அதிகமாக இருக்கும்.

இந்த நிறுவனத்தைத் தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் மிகச் சீராக நடத்தவேண்டும், அப்போது தான் 100% எதிர்பார்ப்பது நடக்கும் என்ற அடிப்படையில் செயல்பட்டு EG இதற்கான தொழில்நடைமுறை அறிவுத்திறன் இந்திய அரசு மற்றும் மாநிலங்களின் அதிகாரிகளிடம் இருந்தது. ஆனாலும் கூட தகவல் தொழில்நுட்பத்தை முழுவதும் பயன்படுத்துவதால் தொழில்முறைசார்ந்தவர்கள் இந்த நிறுவனத்தை நடத்தவேண்டும். உதாரணமாக இதே போன்ற ஒருநிறுவனமான NSDC சுதந்திரமான முறையில் இயங்குவதமட்டுமின்றி, தொழில்முறைத்திறன் படைத்தவர்கள் தாம் இதை நிர்வகிக்கின்றனர். அரசு சாராநிறுவனமாக இருந்தால், சுதந்திரமாகச் செயல்படமுடியும் என்று EG பரிந்துரைத்தது.

இந்தப்பரிந்துரைகள், 2011 ஆகஸ்டு மாதம் 19ஆம் தேதியில் நடந்த மாநிலங்களின் நிதி அமைச்சர்கள் அடங்கிய உயர்அதிகாரக்குழு, 3 ஆவது கூட்டத்தில்,

விவாதிக்கப்பட்டது. இது தவிர 2011 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 14ஆம் தேதி நடந்த 4ஆவது EC கூட்டத்தில் இப்பரிந்துரைகள் மறுபடியும் விவாதிக்கப்பட்டன.

ஜி.எஸ்.டி.என். தொடர்பான ஜி.எஸ்.டி.க்குத் தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்புடன் லாபமில்லா நோக்குடன் சட்டப்பிரிவு 25இன் அடிப்படையில் நிறுவனத்தை உருவாக்குவது, அதனுடைய அடிப்படை உரிமைக்கட்டுப்பாடு அரசிடமே இருக்கவேண்டும் என்பன போன்ற பரிந்துரைகளை மாநிலநிதி அமைச்சர்களின் உயர் அதிகாரகமிட்டி ஏற்றுக்கொண்டது. இதற்கான கூட்டம் 14.10.11 அன்று நடந்தது.

வருவாய்த்துறை, சிறப்பு நோக்குவணிகம் (SPV) ஒன்றை உருவாக்கி அதை சரக்குகள் மற்றும் சேவைகள் வரிவலையிணைப்பு என்பது பற்றிய (ஜி.எஸ்.டி.என். - SPV) குறிப்பை மத்திய மந்திரிசபையின் பரிசீலனைக்கு வைக்கப்பட்ட இதை அமைச்சரவை 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் தேதி அங்கீகாரம் அளித்து ஏற்றுக் கொண்டது. இதைத்தவிர மத்திய அமைச்சரவை பின்வரும் ஷரத்துக்களையும் ஏற்றுக்கொண்டது.

1. ஜி.எஸ்.டி.என். - SPV யில் முதலீடு செய்ய பொருத்தமான, விருப்பமுள்ள அரசுசாரா நிறுவனங்களை, நிதி அமைச்சகம் அடையாளம் கண்டு ஆய்வு செய்து முடிவுசெய்யும்.

2. SPVயில் மீதான அரசின் கட்டுப்பாடு, அதன் இயக்குனர்குழும உருவாக்கம், சிறப்புத் தீர்மானங்கள் கொண்டுவரும் முறைமைகளைத் தீர்மானித்தல், மற்றும் பங்குதாரர்கள் ஒப்பந்தம், அரசு அதிகாரிகளை மாற்றுப்பணியாக அமர்த்துவது மற்றும் ஜி.எஸ்.டி.என். / SPV மற்றும் அரசுகளிடையே ஒப்பந்தங்கள்.

3. ஜி.எஸ்.டி.என். SPVயின் இயக்குனர் குழுமத்தில் 14 இயக்குனர்கள் இருப்பார்கள். இதில் மத்திய அரசிலிருந்து 3 இயக்குனர்களும், 3 மாநிலங்களில் இருந்தும், 3 இயக்குனர்கள் தனியார் பங்குதாரர்களிடமிருந்தும், 3 இயக்குர்கள் பெருமதிப்பிற்குரிய சமுகப் பெரியோர்கள், இவர்களைத் தவிர குழுமத்திய்தலைவராக, மத்திய, மாநில அரசுகள் இணைந்த ஒரு முறைமையின்

மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார். ஜி.எஸ்.டி.என்.. /SPV ன் CEO வெளிப்படையான தேர்வு முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார்.

4. அரசு அதிகாரிகள் மாற்றுப்பணியாக இங்கே பணியாற்ற ஏதுவாக Cஜி.எஸ்.டி. SPVஇன் விதிமுறைகள் தளர்த்தப்படும். இதன்மூலம், அந்த அமைப்பைக் கட்டுப்படுத்தமுடியும். இதைத் தவிர இந்ததுறையைப் பற்றிக் கற்றுணர்ந்து கொள்ளமுடியும்.

5. ஜி.எஸ்.டி.என். / SPV தன்னைத்தானே நிர்வகித்துக்கொள்ளும் அளவுக்கு வருமானத்தை உருவாக்கும்படியான கட்டமைப்பைக் கொண்டது. வரி செலுத்துவோரிடமிருந்து பயனாளிக்கட்டணம், மற்றும் இந்த அமைப்பிலிருந்து சேவையைப்பெறும் வரித்துறை ஆணையம், மையங்களிலிருந்து கட்டணம் வசூலிப்பது மூலமாக வருமானத்தை ஈட்டும்.

6. ஜி.எஸ்.டி.என். /SPV அமைப்பு தான், ஒருங்கிணைக்கப்பட்டவரிகள் தொடர்பான சேவைகளை வழங்கும் தனி உரிமை பெற்ற தேசிய முகமையாகும். வேறு யாராவது இது போன்ற சேவையை வழங்க முன்வந்தால், அவர்கள் இந்த அமைப்புடன் ஒப்பந்தம் செய்து கொள்வது அவசியமானது.

7. இந்த SPV உருவாக்கப்பட்டபின்னர், அது இயங்குவதற்கு ஒரு முறை சுழற்சி இல்லாத மான்யத் தொகையாக ரூ.315 கோடி வழங்கப்படும். இது மூன்று வருடகால செயல்பாட்டிற்கானது.

கேள்வி 4 ஜி.எஸ்.டி.என்.ன் விகிதப்பங்கு அமைப்பு மற்றும் வருவாய் கட்டமைப்பு என்ன?

விதிதப்பங்கு அமைப்பு மத்திய அமைச்சரவையின் முடிவுக்கு ஏற்றாற்போல, ஜி.எஸ்.டி. வலையமைப்பு லாப நோக்கில்லை அரசு சாரா தனியார் லிமிடெட் நிறுவனமாக, கம்பெனிகள் சட்டம் 8இன்படி (1956 ஆண்டு) பின்வரும் விகிதப்பங்குகள் அமைப்புடன் இயங்குகிறது.

| | |
|---|---|
| மத்தியஅரசாங்கம் | 24.5% |

| | |
|---|---|
| மாநிலஅரசுகள் | 24.8% |
| HDFC | 10% |
| HDFC வங்கி | 10% |
| ICICI வங்கி | 10% |
| NSE அடிப்படைத்திட்டமுத்லீட்டுநிறுவனம் | 10% |
| LIC வீட்டுவசதிநிதியமைப்புலிமிடெட் | 10% |

ஜி.எஸ்.டி.என்.இன் தற்போதைய அமைப்பு, நீண்ட நெடுங்காலம், பல கட்ட விவாதங்களுக்குப்பின், மாநில அரசுகளின் நிதியமைச்சகர்கள், மத்திய அரசின் நிதியமைச்சர் ஒப்புதலைப்பெற்றுத்தான் உருவாக்கப்பட்டது.

வருவாய் மாதிரி 2013ஆம் ஆண்டில் ஜி.எஸ்.டி.என். SPV உருவாக்கிச் செயல்பட மத்திய அரசு மான்யமாக ரூ.315 கோடிகள் தருவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இந்தத்தொகை 31.3.2015 லிருந்து 31.3.2015 வரையிலான செலவினங்களுக்கானது.

முதல்கட்டமாக ரூ. 143.96 கோடிகள் வழங்கப்பட்டது. இதில் மேற்குறிப்பிட்ட காலகட்டத்தில் 62.11 கோடிகள் மட்டுமே செலவழிக்கப்பட்டது, மீதித் தொகை அரசாங்கத்திற்கு திருப்பியளிக்கப்பட்டது. 2017-17 நிதியாண்டின் போது, ஜி.எஸ்.டி.என். CVP ஒரு வணிக வங்கியிலிருந்து தனக்கான நிதியைப் பெற்றது. இதைவைத்துக் கொண்டு மத்திய, மாநில அரசுக்கு சேவைகள் அளிப்பதற்குத் தகவல் தொழில்நுட்பதளம் ஒன்றை அமைத்தது. இதில் ஜி.எஸ்.டி. வலைதள நுழைவாயில் மூலம் இச்சேவைகள் அளிக்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதனுடன், 27 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் ஆகியவற்றைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து வைத்தது. ஜி.எஸ்.டி.என்.இன் வருவாய் மாதிரியை மத்திய, மாநில அரசுகளின் நிதியமைச்சர்கள் அடங்கிய உயர் அதிகார மட்டக்கமிட்டி அங்கீகாரம் செய்தது. இதன்படி ஜி.எஸ்.டி. வலைதளத்திலிருந்து சேவைகளைப் பெறும் வரி செலுத்துவோர், மற்று முள்ள

உரிமைப்பங்காளிப்பாளர்கள் பயன்படுத்துவதற்கு அவர்கள் சார்பாக மத்திய மாநில யூனியன் பிரதேச அரசுகள் சமமான அளவில் கட்டணத்தை அளிக்கும். மாநிலங்களுக்கான பயனாளிகள் கட்டணத்தைச் சமமாகப் பகிர்ந்து கொள்வார்கள். இது பதிவு செய்யப்பட்ட வரி செலுத்துவோரின் எண்ணிக்கையைப் பொறுத்து இருக்கும்.

கேள்வி 5 ஜி.எஸ்.டி.என். வலைதளம் எந்த விதமான சேவைகளைஅளிக்கும்?

பதில்: ஜி.எஸ்.டி.என். கீழே குறிப்பிட்ட சேவைகளை ஜி.எஸ்.டி. வலைதளம் மூலமாக அளிக்கும்.

1. பதிவு செய்வது (இப்போதுள்ள, இடம் பெயர்ந்திருக்கும் வரி செலுத்தவோ, பதிவு செய்யலாம். இந்த முறைமை, 2015 நவம்பர் 8இலிருந்து துவங்கியது.

2. கட்டண நிர்வாகம், இதில் பல்வேறு மின்னணு பணப்பரிமாற்றங்கள் மூலமும் வங்கிச்சேவைகளோடு ஒருங்கிணைப்பு ஏற்படுத்துவதன் வழியாகவும் சாத்தியமாக்குதல்

3. ரிடர்ன் தாக்கல் செய்தலும் அதன் செயல் முறைகளும்,

4. வரி செலுத்துபவர் நிர்வாகம் இதில் கணக்கு நிர்வாகம், அறிவிக்கைகள்அனுப்புதல் / வெளியிடுதல், தகவல் மற்றும் நிலைபற்றி தொடர்தகவல் பெறுவது.

5. வரித்துறை ஆணையத்தில் கணக்கு மற்றும் லெட்ஜர் நிர்வாகம்.

6. மத்திய, மாநில அரசுகளிடையே கட்டணங்கள் / பங்களிப்பு போன்றவைகுறித்து (ஜி.எஸ்.டி.என் .உடன்பாடு உட்பட) முடிவான உருவாக்குதல் ।ஜி.எஸ்.டி. க்கான அனைத்தையும் முறைப்படுத்துவது.

7. பொருள்கள் / சேவைகள் இறக்குமதி முறைமைகள், மற்றும் சமரசத்திட்டங்களை உருவாக்க மற்றும் சுங்கத்துறையின் EDI முறைமைகளோடு ஒருங்கிணைப்பது.

8. MISஐச்சாத்தியமாக்குவது தேவைகளின் அடிப்படையில் தகவல்கள் மற்றும் தொழில் / வர்த்தகம் குறித்த ஏற்றுமதி தகவல்கள்அளிப்பது.

9. பொதுவான ஜி.எஸ்.டி. போர்டல் மற்றும் வரி நிர்வாகமுறைமைகளிடையே கருத்துப்பரிமாற்றத்தைப் பரிமாறுவது.

10. பயனுரிமையாளர்களுக்குத் தேவையான பயிற்சி அளிப்பது.

11. வரித்துறை அதிகாரிகளுக்கு தொழில்/ வர்த்தகநிலை குறித்து ஆய்வுத் தகவல்களையும் ஒற்றுத் தகவல்களையும்அளிப்பது.

12. பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்வது மற்றும் சிறந்த நடைமுறைகளைக் குறித்து ஆய்வு செய்வது.

கேள்வி 6: ஜி.எஸ்.டி.என். / மாநிலங்கள் / CBEC ஆகியோருக்கிடையே உள்ள ஒருங்கிணைப்பு முறைமை என்ன?

பதில்: ஜி.எஸ்.டி. நிர்வாக முறையின் கீழ் வரி செலுத்துபவருக்கு தேவைப்படும் மிக முக்கியமான சேவைகளான, பதிவு செய்வதற்கு விண்ணப்பிப்பது, விற்பனை விலைச்சீட்டுகளை (Invoices) தரவேற்றம் செய்வது, ரிடர்ன் தாக்கல் செய்வது, வரிக் கட்டணங்களை செலுத்துதல் ஆகியனவற்றை ஜி.எஸ்.டி.யின் தளத்தில் செய்து கொள்ளலாம். எல்லா விதமான சட்டரீதியிலான செயல்பாடுகள் (பதிவுகளை அங்கீகாரம் செய்வது, தாக்கல் செய்யப்பட்ட ரிடர்ன் கணக்கை மதிப்பீடு செய்வது, தேவையான விசாரணைகளை மேற்கொள்வது மற்றும் கணக்கீடு போன்றவை) மத்திய, மாநில அரசுகளைச் சார்ந்த வரித்துறை அதிகாரிகள் மேற்கொள்வார்கள். இதன் மூலம் ஆரம்பகட்டப்பணிகள் (ஜி.எஸ்.டி.) வலைதளவாயில் மூலமான சேவைகள்) சேவைகளை ஜி.எஸ்.டி.என். வழங்கும் பின்னுள்ள பணிகளுக்கான செய்முறைக் கட்டமைப்பை மாநிலங்களும், மத்திய அரசும், தாங்களாகவே உருவாக்கிக்கொள்ளும். அதே சமயத்தில் 27 மாநிலங்கள் (இவற்றை மாதிரி 2 மாநிலங்கள் என்று குறிப்பிடுவார்கள். தங்களுக்கான பின்கட்டப்பணிகளுக்கான செய்முறைக்கட்டமைப்பை ஜி.எஸ்.டி.என். உருவாக்கித்தரவேண்டும் என்று

கேட்டுக்கொண்டார்கள். BEC மற்று முள்ள 9 மாநிலங்கள் (மாதிரி - 1) ஆகியன, தங்களுக்குத் தேவையான முறைமையைத் தாங்களே உருவாக்கி கொள்வதற்காக அறிவித்தன. மாதிரி 1 மாநிலங்கள் / CEEC யின் வசம் உள்ள (பதிவுகள், ரிடர்ன்கள், செலுத்தப்பட்ட கட்டணங்கள்) வரி செலுத்துவோரால் சமர்ப்பிக்கப்பட்ட முழுவிவரங்கள் தேவையின் அடிப்படையில் பரஸ்பரம் பரிமாறிக்கொள்ளப்படும். இது தகவலுக்காகவும் ஆய்வுகளை மேற்கொள்வதற்காகவும் இருக்கலாம்.

கேள்வி 7: பதிவு செய்வதில் ஜி.எஸ்.டி.என்.இன் பங்களிப்பு என்ன?

பதில்: பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம். ஜி.எஸ்.டி. போர்டலில், ஆன்-லைன் சேவையாகப் பெறலாம். முக்கியத் தகவல்களான 'பான்' எண், தொழில், வர்த்தக விவரங்கள், ஆதார், CIN/DIN ஆகியன (தேவையின் அடிப்படையில்) அந்தந்த முகமைகளின் தகவல் ஒருங்கிணைப்பு மூலம் ஜி.எஸ்.டி. போர்டல் சரி பார்க்கும். (அதாவது CBDT, UID, MCA போன்றவை) இதன் மூலம் குறைந்த பட்ச ஆவணங்கள் மட்டுமே அளித்தலை உறுதி செய்யும். விண்ணப்பவிவரம் அதற்கு ஆதாரங்களாக வைக்கப்படும் ஸ்கேன் செய்த ஆவணங்கள் ஆகியன, ஜி.எஸ்.டி.என். மூலம், மாநிலங்கள் / மத்திய அரசு ஆகியனவற்றிற்கு அனுப்பப்படும் இவற்றை ஆய்வு செய்தபின் தேவையான விளக்கங்கள் கோரியோ, அல்லது பெறப்பட்ட விவரங்களை ஏற்றுக்கொள்வது, நிராகரிப்பது, போன்றவற்றையும் இதைப்பற்றிய தகவல்களை மின்னணு மூலமான அதிகாரக் கையொப்பத்துடன் ஜி.எஸ்.டி.என்.-க்கு அனுப்பிவைக்கப்படும். வரி செலுத்துவோர், இதைத் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

கேள்வி 8: ஜி.எஸ்.டி.என்.இல் இன்ஃபோஸிஸ் நிறுவனத்திற்கு பங்கு என்ன?

பதில்: இன்ஃபோஸிஸ் நிறுவனத்தைத்தான் ஒற்றை நிர்வாகச் சேவை அளிக்கும் அமைப்பாக (MSP) பணியமைர்த்தியுள்ளது. ஜி.எஸ்.டி.என். முறைமையை வடிவமைத்து உருவாக்கி, பயன்பாட்டிற்கு ஏற்றவாறு செய்வது இதன் பணி. இதில் எல்லாவிதமான விண்ணப்பங்கள் மென்பொருள் உருவாக்கம், உபகரணங்கள் மற்றும் அடிப்படைக்கட்டமைப்பு ஆகியவற்றை உருவாக்கி, இந்த ஒட்டு மொத்த

முறைமையையும், நேரலை வடிவத்தில் பயன்பாடு ஆரம்பித்த நாளிலிருந்து 5 வருடங்கள் பராமரிப்பதும் இந்நிறுவனத்தின் பொறுப்பாகும்.

கேள்வி 9: ஜி.எஸ்.டி. பொது வலைதளகத்தின் அடிப்படை அம்சங்கள் என்ன?

பதில்: ஜி.எஸ்.டி. வலைதளம் (WWW.GRT.GOV.IN) இணைய தளத் தொடர்பு மூலமாக (வரி செலுத்துவோர் மற்றும் அவர்களது (சி.ஏ.க்கள் / வரி விவகாரங்கள் தொடர்பான வழக்கறிஞர்கள்) வரித்துறை அதிகாரிகள் போன்றவர்கள். இந்த வலைதளகம் தான் ஜி.எஸ்.டி. சேவைகள் தொடர்பான அனைத்துத் தொடர்புகளுக்கும் ஒரே நுழைவு வலைதளம் என்று கூறலாம். இத்தகைய சேவைகள் வருமாறு:

1. வரி செலுத்துவோர் பதிவு (புதியவை, ஒப்புடைப்புகள், ரத்துகள், திருத்தங்கள் போன்றவை)

2. விற்பனை விலைச்சீட்டு (invoice) தரவேற்றம் செய்வது, பொருள் வாங்குபவரது பதிவுக்கு குறிப்பைத் தயாரிப்பது, ஒவ்வொரு வகையான ரிடர்னுக்கும் ஏற்ற வாறு ரிடர்ன் தாக்கல் செய்வது, (ஜி.எஸ்.டி. (1,2,3,5,6, மற்றும் 9...)

3. வரி செலுத்துவதற்கான சலானை (Challan) உருவாக்குவது மற்றும் முகமை வங்கிகளுடன் ஒருங்கிணைப்பு

4. ITC மற்றும் பணப்பரிமாற்ற லெட்ஜர் மற்றும் பொறுப்புப் பதிவேடு

5. வரி செலுத்துவோர், வரித்துறை அதிகாரிகள் மற்றும் பங்கீட்டாளர்கள் போன்றோருக்கு MIS அறிக்கையைத் தெரிவிப்பது / அனுப்புவது

6. B1/ வரித்துறை அதிகாரிகளுக்கான ஆய்வறிக்கைகள்

கேள்வி 10: ஜி.எஸ்.டி. முழுமைத் தொடர்பு (Eco-system) முறை என்றால் என்ன?

பதில்: பொதுவான ஜி.எஸ்.டி. முறைமையின்படி அனைத்து மாநில / யூனியன் பிரதேச வணிகவரித்துறைப் பிரிவுகள், மத்திய வரித்துறை அதிகாரிகள், வரி செலுத்துவோர், வங்கிகள் மற்றும் பிற பங்கீட்டாளர்கள் ஆகியோருக்கு

இணைப்புகள் வழங்கும். முழுமைத் தொடர்புமுறைமை என்றால் வரி செலுத்துவோரில் இருந்து வரி தொடர்பான தொழல்துறை வல்லுனர்கள், வரித்துறை அதிகாரிகள் ஜி.எஸ்.டி. வலைதளம், வங்கிகள், கணக்கீட்டு ஆணையங்கள், அதிகாரிகள் ஆகியஅனைவரையும் உள்ளடக்கியது. ஜி.எஸ்.டி.யின் முழுமைத் தொடர்பு முறைமையை (Eco-system) விளக்கும் வரைபடம் கீழே தரப்பட்டுள்ளது.

கேள்வி 11: ஜி.எஸ்.பி (ஜி.எஸ்.டி. சுவிதாஅளிப்பாளர்கள்) என்றால் என்ன?

பதில்: ஜி.எஸ்.டி. முறைமை, ஜி.எஸ்.டி. வலைதளயகத்தை வரி செலுத்துவோர் ஜி.எஸ்.டி. மூலம் நடக்கக்கூடிய எல்லா விதமான காரியங்களையும் செய்து கொள்ள அதன் வலைதளத்தைப் பயன்படுத்தஅனுமதிக்கிறது. ஆனால் பல்வேறு விதமான வரி செலுத்துவோர் இருப்பார்கள். SME பெரு நிறுவனங்கள் சிறு நிறுவனங்கள், மற்றும் பிற வகையறா) இவர்களுக்கு வெவ்வேறு விதமான வசதிகள் தேவைப்படும். உதாரணமாக அவர்களது பொருட்கள் வாங்கியது / விற்பனை பதிவுத் தகவல்களை, ஜி.எஸ்.டி.-க்கு ஒத்துப் போகிறார் போல முறைமையை, மாற்றுவது, அவர்களது கணக்கீட்டு முறையுடன் ஜி.எஸ்.டி. முறைமையோடு ஒருங்கிணைத்தல் போன்றவை...

இதுதவிர, பல்வேறு வகையான, பொருந்தும் / பொருத்தமற்ற ITC உரிமைக் கோரல்கள், வரிப் பொறுப்புகள், தாக்கல் செய்யும் நிலைப்படிகள், போன்றவற்றைப் பார்த்தறிவது. விற்பனை விலைச்சீட்டின் நிலையைப் பற்றிய தாக்கல் செய்வது தேவையானது என்பதால் பெரு நிறுவனங்களுக்கு ஜி.எஸ்.டி. முறைமையோடு தன்னியக்கமான முறையில் தொடர்பு கொள்ள முடிவது அவசியமாகும். ஏனென்றால் அவர்களுக்கு மிக அதிக எண்ணிக்கையிலான விற்பனை விலைச்சீட்டுகள் மற்றும் பிற ஆவணங்களை ஒரு வலைதளவாயிலின் மூலம் தரவேற்றம் செய்ய முடியாது. அதனால்தான்முழுமைத்தொடர்புமுறைமை (Eco-system) தேவைப்படுகிறது. இதன் மூலம் அதைப் போன்ற வரி செலுத்துவோர் ஜி.எஸ்.டி. விதிமுறைகளின் படி நடந்து கொள்ள உதவிகரமாக இருக்கும்.

ஜி.எஸ்.டி.யின் வெற்றி, வரி செலுத்து வோருக்கு இணக்கமான வசதிகள் உருவாக்குவதில் தனன் அடங்கியிருக்கிறது. இது போன்ற முழுமையத் தொடர்பு முறைமை, வரி செலுத்துவோருக்கு மூன்றாவது நபர் விண்ணப்பங்களை ப்பயன்படுத்தத் தெரிவுகளை வழங்குகிறது. இதன் மூலம் மேசைக் கணிணி / செல்பேசி ஆகியவற்றின் மூலம் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு ஜி.எஸ்.டி. விதிமுறைகளுக்கு இணக்கமாக செயல்பட ஏதுவாக இருக்கும்.

மேற் குறிப்பிட்ட காரணங்களினால் மூன்றாம் நபர் சேவை அளிப்பவர்களுக்கு ஏற்கெனவே இருக்கும் ஜி.எஸ்.டி. பயன்பாட்டு உரிமையுடன் முழுமைத் தொடர்பு முறைமையைப் பயன்படுத்தி பயன்பாட்டு முறைகளை உருவாக்கும் திறனுடன் மற்றவர்களுக்கு இது போன்ற சேவைகளை அளிப்பார்கள். இது போன்ற சேவை அளிப்பவர்களுக்கு ஜி.எஸ்.டி. சுவிதா அளிப்பாளர்கள் அல்லது GSP என்று பெயர்.

கேள்வி 12: ஜி.எஸ்.டி. சுவிதாஅளிப்பாளர்களுடைய (GSP) பங்குஎன்ன?

பதில்: வரி செலுத்துவோர், ரிடர்ன் தாக்கல் செய்தல், ஜி.எஸ்.டி. விதிமுறைகளுக்கு இணக்கமான செயல்பாடுகள் உள்ளனவா என்று கண்காணிப்பது இதைத் தவிர, பல்வேறு விதமான ஜி.எஸ்.டி. தொடர்புடைய நடவடிக்கைகளுக்காக உதாரணமாக விற்பனை விலைச்சீட்டுகளைத் தரவேற்றம் செய்தல், ரிடர்ன் ஸ்தாக்கல் செய்தல் போன்றவைகளை பயன்படுத்துபவர்களுக்கான தனித்தனியாக உரிமை பெறுவதை சாத்தியமாக்குவது. வரித்துறையில் தொழில் முறையில் ஆலோசகராக இருப்பவர்கள், தங்களின் வாடிக்கையாளர் சேவை செய்ய அவர்களது ஜி.எஸ்.டி. செயல்பாடுகளுக்கு இணக்கமாக இருக்கும்படி நிர்வகிப்பது, ஏற்கெனவே, இருக்கும் கணக்கீட்டு முறைகள் / ERP ஆகியனவற்றை ஜி.எஸ்.டி. முறைமையோடு இணைப்பது ஆகியன.

கேள்வி 13: GSPகளைப் பயன்படுத்துவதால் வரி செலுத்துவோருக்கு என்ன லாபங்கள் / அனுகூலங்கள் என்ன?

பதில்: வரி செலுத்தும் நபர் ஜி.எஸ்.டி. மூலமாகச் செய்யக்கூடிய செயல்பாடுகளை ஜி.எஸ்.டி. வலைதளத்திலேயே செய்து கொள்ள முடியும் என்பதைக் குறிப்பிடுவது அவசியமானது. GSP என்பது குறிப்பிட்ட சில செயல்களைச் செய்வதற்கு இருக்கும் கூடுதல் வழித்தடம் என்று கூறலாம். அவர்களது சேவைகளைப் பெறுவது, தனிப்பட்ட நபரின் விருப்பத்தைப் பொறுத்தது. வரி செலுத்துவோர், GSP க்கள் மூலமாக ஜி.எஸ்.டி.யின் சேவைகளைப் பெறும் அளவிற்குத் தங்களது செயல்பாடுகளை எப்படி மாற்றிக் கொள்வது என்பதற்கான தீர்வை GSPக்கள் மூலம் பெறலாம். அவற்றில் சில சேவைகள் குறித்து இங்கே குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

1. இப்போது இருக்கும் கணக்கீட்டு மென்பொருள் மூலம் உருவாக்கப்பட்ட விற்பனை விலைச்சீட்டு அமைப்பை, அது CSV, PDF, WORD, EXCEL, WORD FORMAT போன்றவற்றிலிருந்து ஜி.எஸ்.டி. ஏற்றக்கொள்ளும்படியான வடிவத்திற்கு மாற்றலாம்

3. பல்வேறு கிளைகளை உடைய பெரிய நிறுவனம், தங்களத கிளைவாரியாக விற்பனை விலைச்சீட்டுகளை தரவேற்றம் செய்யவேண்டும். ஜி.எஸ்.டி. முறையின் படி ஒரு பயனாளிக்கு ஒரு பயனாளி அடையாளம் / கடவுச்சொல் ஆகியவற்றை அளிக்கும் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும், அதனது செயல் தேவைக்கு ஏற்றபடிதான் உரிமை கிடைக்கும் என்பதால், வெவ்வேறு கிளைகளுக்கு வெவ்வேறு வகையான செயல் தேவை.

1. இப்போது இருக்கும் கணக்கீட்டு மென்பொருள் மூலம் உருவாக்கப்பட்ட விற்பனை விலைச்சீட்டு அமைப்பை, அது CSV, PDF, WORD, EXCEL, WORD FORMAT போன்றவற்றிலிருந்து ஜி.எஸ்.டி. ஏற்றுக்கொள்ளும்படியான வடிவத்திற்கு மாற்றலாம்

3. பல்வேறு கிளைகளை உடைய பெரிய நிறுவனம், தங்களது கிளைவாரியாக விற்பனை விலைச்சீட்டுகளைத் தரவேற்றம் செய்ய வேண்டும். ஜி.எஸ்.டி. முறையின்படி ஒரு பயனாளிக்கு ஒரு பயனாளி அடையாளம் / கடவுச்சொல்

ஆகியவற்றை அளிக்கும் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும், அதனது செயல் தேவைக்கு ஏற்றபடிதான் உரிமை கிடைக்கும் என்பதால், வெவ்வேறு கிளைகளுக்கு வெவ்வேறு வகையான செயல் தேவை நோக்கம் ஆகியன இருக்க வேண்டும்.

4. ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களில் பதிவு செய்திருக்கும் நிறுவனத்திற்கு, அதன் செயல்பாடுகளை ஒன்றாகப் பார்த்தறிதல் மிகத் தேவையான ஒன்றாகும்.

5. ஜி.எஸ்.டி. தொழில் வல்லுனர்கள், வரி செலுத்தும் தங்களது வாடிக்கையாளருக்குத் தேவையான விதத்தில் விண்ணப்பங்கள் தேவையாக இருக்கும். அப்போது தான் ஜி.எஸ்.டி. சேவையைப் பயன்படுத்தவதற்கு ஏற்றாற்போல மாற்ற முடியும். மேற்குறிப்பிட்டவை சில அம்சங்கள் தாம். வெவ்வேறு வகையான வரி செலுத்துவோருக்கு, வெவ்வேறு வகையான தேவைகளாக இருக்கும். இவற்றை GSPக்களால் நிறைவேற்ற முடியும்.

கேள்வி 14: வரி செலுத்துவோருக்காக, ஜி.எஸ்.டி.என்.ஆல் உருவாக்கி, பராமரிக்கப்படும் ஜி.எஸ்.டி. வலைதளத்தில் வரி செலுத்துவோரால் என்னென்ன செயல்களைச் செய்ய முடியும்?

ஜி.எஸ்.டி. பொது வலைதளம், வரி செலுத்துவோருக்குத் தேவையான அனைத்தையும் பெறவும், செய்து கொள்ளவும், முடியும். ஜி.எஸ்.டி.என். மூலமாக நிர்வகிக்கப்படும் ஜி.எஸ்.டி. வலைதளத்தின் மூலம் வரி செலுத்துவோர் செய்து கொள்ளக்கூடிய பணிகளின் சிறு தொகுப்பு இங்கே அளிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்வதற்கான விண்ணப்பம், ஏற்கெனவே பூர்த்தி செய்ததில் மாற்றங்கள் செய்வது, பதிவை ரத்து செய்வது, ஒட்டு மொத்த கணக்கை நிர்வகிப்பது. வரி செலுத்துவது, இதில் அபராதங்கள், கூடுதல் தொகை, வட்டி போன்றவற்றையும் செலுத்த முடிவது. (செலான் வழியாக கட்டணம் செலுத்த, அதை வங்கியின் வலைதளம் வாயிலாக அதைப் பற்றி அறிந்து, உருவாக்குவது போன்றவை)

வரி செலுத்துவோரின் நிலை, கூடுதல் என்பதிலிருந்து சாதாரணமான நிலை அது போல சாதாரண நிலையிலிருந்து கூட்டு என்ற நிலைக்கு மாற்றுவது.

விற்பனை விலைச்சீட்டு விவரத்தரவுகள் பல்வேறு சட்டபூர்வமான ரிடர்ன்கள் மற்றும் ஆண்டு அறிவிக்கைகள் ஆகியவற்றைத் தரவேற்றம் செய்தல்

ரிடர்ன் / வரி லெட்ஜர் / பணப்பரிமாற்ற லெட்ஜர் / போன்ற பலவற்றை ஜி.எஸ்.டி. போர்ட்டல் மூலம், தனித்தன்மை வாய்ந்த விண்ணப்ப குறியீட்டு எண் (ARN) மூலம் கண்காணிப்பது

கூடுதல் கட்டணத்தைத் திரும்பப் பெறுவதற்கான விண்ணப்பத்தைத் தாக்கல் செய்வது ரிடர்ன்கள் / வரி லெட்ஜர் / பணப் பரிமாற்ற லெட்ஜர் ஆகியவற்றின் நிலைபற்றிய மீள் பார்வை.

கேள்வி 15: ஜி.எஸ்.டி.என். மூலமாக உருவாக்கப்பட்ட ஜி.எஸ்.டி. முறைமையில் மாநில, மத்திய அரசுகளின் வரித் துறை அதிகாரிகளின் பங்களிப்பு / நிலை என்ன?

பதில்: அதிகாரிகள், இவற்றிலிருந்து கிடைக்கும் வரி செலுத்துவோரின் தகவல்கள் / விண்ணப்பங்கள் / ஆகியவற்றைப் பின்வரும் சட்டபூர்வமான செயல்பாடுகளுக்கு பயன்படுத்திக் கொள்வார்கள். உறுப்பினராவதற்கான விண்ணப்பத்தை ஏற்பது / நிராகரிப்பது / வரி செலுத்துவோரின் பதிவை ஏற்பது மறுப்பது.

வரி நிர்வாகம் (மதிப்பீடு செய்தல் / ஆடிட் / கூடுதல் தொகையைத் திரும்பக்கோரும் விண்ணப்பத்தை ஆய்வு செய்தல்) வேண்டுகோள்) புலனாய்வு.

வரி நிர்வாகம் (மதிப்பீடு செய்தல் / ஆடிட் / கூடுதல் தொகையைத் திரும்பக்கோரும் விண்ணப்பத்தை ஆய்வு செய்தல்) வேண்டுகோள்) புலனாய்வு.

தொழில்/வர்த்தகநிலை, பற்றியஆய்வு, MIS
மற்றுமுள்ளசட்டரீதியிலானசெயல்பாடுகள்.

கேள்வி 16: ஒவ்வொரு விற்பனைவிலைச் சீட்டுவரிசைக்கும் ஜி.எஸ்.டி.என். முறைமையில் தனித்தனியான தனித்துவம் மிக்க அடையாளத்தை உருவாக்குமா?

பதில்: இல்லை. ஜி.எஸ்.டி.என். புதிய அடையாளத்தை உருவாக்காது. வழங்கல் தொழிலில் இருக்கும் நபரின் ஜி.எஸ்.டி.என். எண், விற்பனை விலைச்சீட்டு எண் மற்றும் நிதியாண்டு ஆகியன சேர்ந்து ஒவ்வொரு விற்பனை விலைச்சீட்டையும் தனித்துவமுடையதாக மாற்றிவிடும்.

கேள்வி 17: விற்பனை விலைச்சீட்டின் (Invoice) விவரங்களை தினசரி தரவேற்றம் செய்ய முடியுமா?

ஆம். ஜி.எஸ்.டி. வலைதளத்தில் விற்பனை விலைச்சீட்டின் விவரங்களை எப்போது வேண்டுமானாலும் தரவேற்றம் செய்து கொள்ளும் வசதி இருக்கிறது. எந்த அளவுக்கு விரைவாக, வழங்கல் பொறுப்பை மேற்கொள்ளும் வரி செலுத்தும் வர்த்தகர் / வணிகன் / சேவையளிப்பவர் தனது விற்பனை விலைச்சீட்டைத் தரவேற்றம் செய்கிறாரோ, இவற்றைப் பெறும் வரி செலுத்தும் வாடிக்கையாளர், விற்பனை வரிச் சீட்டின் விவரங்களை வைத்து விரைவாக முடிவு செய்யப்படும். இதன் மூலம், பொருள் வழங்கும் வரி செலுத்தும் நபர் அதற்கேற்றாற்போல அதற்குப் பொறுப்பேற்க முடியும். இதனால் பொருள் வழங்குபவர், ரிடர்ன்களை ஜி.எஸ்.டி.யில் தரவேற்றம் செய்ய வேண்டி நெருக்கடிக்கு உள்ளாக மாட்டார்.

கேள்வி 18: விற்பனை விலைச்சீட்டை ஜி.எஸ்.டி. வலைதளத்தில் தரவேற்றம் செய்யத் தேவையான உபகரணங்களை அளிக்குமா?

பதில்: ஆம். வரி செலுத்துவோருக்க ஜி.எஸ்.டி.என். ஸ்பிரெட் ஷீட் போன்றவற்றையும் (மைக்ரோ சா஁ப்ட் எக்ஸெல்) இலவசமாக அளிக்கும் இதன் மூலம், விற்பனை விலைச்சீட்டு விவரங்களைத் திரட்டவும், அதன் பின், அவற்றை ஜி.எஸ்.டி. வலைதளத்தில் தரவேற்றம் செய்யவும், முடியும். இது இணையம் தொடர்பில்லாத உபகரணம், இதில் விற்பனை விலைச்சீட்டு விவரங்களை உள்ளீடு / தரவு போன்றவற்றை இணையதளத் தொடர்பின்றியே, வேண்டிய விவரங்களைச் சேர்த்து இறுதிக் கோப்பைத் தயார் செய்து, ஜி.எஸ்.டி. வளைதளத்திற்குள் தரவேவற்றம் செய்யும்முறைக்கு மாற்றம் செய்ய முடியும்.

கேள்வி 19: ஜி.எஸ்.டி.என். லெட்ஜர் களையும், மற்ற கணக்கீடுகளையும் செல் பேசி பயன்பாடுகள் (Mobile Apps) மூலம் காண்பதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படுமா?

பதில்: ஆமாம். ஜி.எஸ்.டி. வலைதளம் நவீன நுண்ணறி செல் பேசியின் மூலம் பார்த்து அறய முடிகிறார் போலத்தான் வடிவமைக்கப்பட்டு இருக்கிறது. இதன் மூலம் பண லெட்ஜர், பொறுப்பு லெட்ஜர், ITL லெட்ஜர் போன்ற லெட்ஜர்களைப் பார்வையிடலாம்.

கேள்வி 20: தொழில் முறையில் ஜி.எஸ்.டி. சார்ந்த தொழில் முனைவோராக இருந்து, தனது வாடிக்கையாளருக்கு அவர்களின் சார்பில் பணிபுரிய அவரது சொந்த அடையாளச் சொல் மற்றும் கடவுச்சொல்லைக் கேட்காமல் புதிய பயனாளி அடையாளம் மற்றும் கடவுச்சொல்லை வழங்குமா?

பதில்: ஆம். ஜி.எஸ்.டி. சேவையை தொழில் முறையில் செய்து வருவோருக்கு அவரது அடையாளம் மற்றும் கடவுச்சொற்கள் கேட்காமல், புதிய பயனாளி அடையாளத்தையும் கடவுச்சொல்லையும் ஜி.எஸ்.டி.என். அளிக்கும். இது ஜி.எஸ்.டி. சட்டம் அனுமதிக்கிறது.

கேள்வி 21: இது போல ஒருமுறை தேர்வு செய்த ஜி.எஸ்.டி. சேவை வழங்கும் தொழில் முனைவோரை வரி சுமத்துவோர் மாற்ற முடியுமா?

பதில்: ஆம். வரி செலுத்துவோர், அவருக்கு விருப்பமானால் வேறொரு ஜி.எஸ்.டி. தொழில் முனைவோரை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

கேள்வி 22: இப்போதிருக்கும் மத்திய சுங்க வரிஅல்லது சேவை வரிஅல்லது மாநில 'வாட்' ஆகியவற்றின் கீழ் வரும் வரி செலுத்துவோர், ஜி.எஸ்.டி.யின் கீழ் மறுபடியும் பதிவு செய்ய வேண்டுமா?

பதில்: தேவையில்லை. இப்போதைய வரி செலுத்துவோர், அதுவும் ஜி.எஸ்.டி.யின் கீழ் கொண்டுவரப்பட இருக்கும் வரி வடைகளில் ஏற்கெனவே பங்கு பெற்றிருக்கும் நபர், அதுவும்அவரது PAN எண், CBDT தகவல்திரட்டின் மூலம் ஆய்வு செய்யப்பட்டு உறுதி செய்யப்பட்டது. இதன் காரணமாக, ஜி.எஸ்.டி.க்குப் புதிதாக விண்ணப்பிக்கத்

தேவையில்லை. அவர்களுக்கு ஜி.எஸ்.டி.என். தாற்காலிகமாக ஜி.எஸ்.டி. வலைதளம் மூலம் வழங்கப்படும். இது ஆறுமாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

இதுபோன்ற வரி செலுத்துவோர், ஜி.எஸ்.டி.யில் சேர்வதற்கான தேவையான விவரங்களை வழங்க வேண்டும். இதுபோன்ற விவரங்களைத் தாக்கல் செய்த பிறகு, வரி செலுத்துபவரின் நிலை 'இடப் பெயர்வு' முடிக்கப்பட்டது. (Migrated) என்ற மாற்றம் பெறும். இவ்வாறு மாறிய பின்பு அவர் வரிகளைச் செலுத்துவதற்கும் ரிடர்ன்கள் தாக்கல் செய்வதற்கும் ஜி.எஸ்.டி.என். இது போன்ற தாற்காலிக அடையாளங்கள் மற்றும் கடவுச்சொற்கள் வழங்கிய வரி செலுத்துவோர் பற்றி, வரித்துறை அதிகாரிகளுக்குத் தெரிவித்துவிடும். அங்கிருந்து தான் சம்பந்தப்பட்ட வரி செலுத்துவோருக்குத் தகவல் செல்லும். 2016 நவம்பர் 8ஆம் தேதி, ஜி.எஸ்.டி. வலைதளத்தில் சேர்ந்த வரி செலுத்துவோர்களுக்கு 2017 மார்ச் மாதம் இறுதியில் பெரும்பாலோருக்கு தாற்காலிக அடையாளம் அளிக்கப்பட்டு இடம் பெயரும் செயல்பாட்டை முடித்துவிட்டனர். மேலும் விவரங்களுக்கு https://www.grt.gov.in/help என்ற வலைதளத்தில் பெறலாம்.

கேள்வி 23: வரிகட்டுவோரின் வசதிக்காக, ஜி.எஸ்.டி. வலைதளத்தில் பணி செய்ய ஜி.எஸ்.டி.என். எந்த விதமான பயன்படுபொருள்களைத் தரும்?

பதில்: ஜி.எஸ்.டி.என். கணிணி அடிப்படையிலான பயிற்சி உபகரணங்களைத் (CBTS) தரும். இவற்றில், ஜி.எஸ்.டி. வலைதளத்தில் செய்ய வேண்டிய ஒவ்வொரு செயல்பாடுகளைப் பற்றியும் வீடியோப் படங்கள் உடன் இணைக்கப்பட்டு இருக்கும். இவை ஜி.எஸ்.டி. வலைதளத்தில் இருப்பது மட்டுமின்றி, அவற்றை நடைமுறையில் விளக்கும் வகையில் இருக்கும். இவை எல்லா வரி விதிப்பு ஆணையங்களிலும், அவற்றிவலைதளங்களிலும் காணும் படியாக வைத்திருப்பார்கள். CBT'S தவிர பல்வேறு விதமான பயனாளிகள் வழிகாட்டி, எப்போதும் கேட்கப்படும் கேள்விகள், போன்றவை உள்ளிட்டவை, வரி செலுத்துவோர்க்கு பல விஷயங்களைக் கற்றுத்தர பல விவரங்கள் ஜி.எஸ்.டி. வலைதளத்தில் சேர்க்கப்படும். இவை தவிர வரி செலுத்துவோருக்கு உதவும் இடம் உருவாக்கப்பட்டு அங்கே அவர்கள் தங்களது நுழைவுச்சீட்டுகளை மெயில்

மூலம் (helpdesk@ஜி.எஸ்.டி..gov.in) அல்லது தொலைபேசி எண் (012-4688999) ஆகியன குறிப்பிடப்பட்டிருக்கின்றன. CBT, FAQ மற்றும் பயனாளிகளுக்கான உதவிக் கையேடு ஆகியன. ஜி.எஸ்.டி. யில் சேர்வதற்கு உதவி செய்யத் தேவையான நடைமுறை செயல்பாடுகளை உள்ளடக்கியது. இதை https://www/ஜி.எஸ்.டி..gov.in/help என்ற வலைதள முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி 24: ஜி.எஸ்.டி. பொதுவலைதளத்தில் வரி செலுத்துவோரால் அளிக்கப்பட்ட ரிடர்ன் மற்றும் பதவி விவரங்கள் ரகசியமாக வைக்கப்படுமா?

பதில்: ஆமாம். ஜி.எஸ்.டி. பொதுவலைதளத்தில் வரி செலுத்துவோரின் தனிப்பட்ட மற்றும் தொழில் பற்றிய தகவல்கள், ரகசியமாக வைக்கப்படும் நிலையின் அடிப்படையில் உரிமைபெறும் கட்டுப்பாடு (RABC) மூலமும் வரி செலுத்துவோரின் முக்கியமான விவரங்கள் மாறும் போதும், சேமிப்பிலும் சுருக்கப்பட்ட வடிவத்தில் விவரங்கள் இருக்கும். உரிய அதிகாரம் பெற்ற வரித்துறை அதிகாரிகள் தான் அவற்றைப் பார்க்கவும் படிக்கவும் முடியும்.

கேள்வி 25: ஜி.எஸ்.டி. முறைமையில் பாதுகாப்பு அம்சத்தை உறுதி செய்ய ஜி.எஸ்.டி.என்.-ஆல் எடுக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ன?

பதில்: ஜி.எஸ்.டி. முறைமைத் திட்டம், அதில் சேர்க்கப்படும், விவரங்கள் மற்றம் சேவைகள்ஆகியவற்றை அதி நவீன பாதுகாப்பு அம்சங்களைச் சேர்த்திருக்கிறது. கணிணியில் மிகப் பாதுகாப்பான தடுப்பான்கள், ரகசியமாய் நுழைய முயற்சிப்பதைக் கண்டறிவது, தரவேற்றம் செயச்த விவரங்களை சங்கேதவடிவில் சுருக்குவது, அவற்றை சாதா நிலையிலும் பயன்பாட்டு நிலையிலும் இதே வடிவில் இருப்பது யாரும் மாற்ற சேதப்படுத்த முடியாத அளவுக்குப் பாதுகாப்பு அம்சங்கள் போன்றவற்றுடன் OS, host heardering சங்கேத வார்த்தைகள் தொடர்ந்து மாற்றுதல் ஆகியன செயல் படுத்தப்படுகின்றன. இவை தவிர ஜி.எஸ்.டி.என். அடிப்படை மற்றம் இரண்டாம் கட்டப் பாதுகாப்பு செயல்பாடுகள் செயல்பாடு மற்றும் கட்டுப்பாட்டு மையம் உருவாக்கப் பட்டிருக்கின்றன. இவற்றின் மூலம் எப்போதும் இந்த வலைதளத்தில், அனுமதி பெறாத யாராவது புக முயற்சித்தால்,

அதை எதிர்க்கவும், தகவல்களைக் காப்பாற்றவும் தொடர்ந்து கண்காணிப்பில் இருந்து வருகிறது. இவையெல்லாம் தவிர, குறியீட்ட மைவுகளைப் பாதுகாக்க இவற்றின் ஆதாரக் குறியீட்டமைவைத் தொடர்ந்து ஸ்கேன் செய்வது (IIABRARIES) லைப்ரரிகளைத் தொடர்ந்து ஜி.எஸ்.டி.யின் பயன்படுத்தல் மூலம் பொதுவாகத் தெரிந்த மற்றும் தெரிந்திராத அச்சுறுத்தல்களுக்கு எதிராக இயங்கிப் பாதுகாப்பு அளிப்பது உறுதி செய்யப்படுகிறது.

------------------

## 24. மாற்றத்தின் வரையறைகள்

கேள்வி -1: ஜி.எஸ்.டி. சட்டம் வருவதற்கு முன்னால் கடைசி ரிடர்னில் முன்னெடுத்துச் செல்லப்பட்ட CENVAT கடன் (அல்லது வாட் கடன்), இப்போதுள்ள ஜி.எஸ்.டி. - யின் கீழ் ITC - என்பதாக இருக்குமா?

பதில்: பதிவு செய்யப்பட்ட ஒரு நபர், காம்பொஸிஷன் திட்டத்தின் கீழ் வரி செலுத்துவதாக தெரிவு செய்தாலொழிய, அவர் தனது மின்னணு கடன் லெட்ஜரில், கடைசி ரிடர்னில் முன்னெடுத்துச் செல்லப்பட்ட CENVAT கடன் (அல்லது வாட் கடன்) தொகைக்கு ஈடாகக் கடன் பெற முடியும். புதிய சட்டத்தில் இருக்கும் இது குறித்தான நிபந்தனைகளுக்கு உட்பட்டது. (Cஜி.எஸ்.டி./ Sஜி.எஸ்.டி. சட்டப் பிரிவு 140(1)).

கேள்வி 2: அந்த நிபந்தனைகள் யாவை?

பதில்: அந்த நிபந்தனைகள் வருமாறு

1) இந்தஸ் சட்டத்தின் கீழ், ஏற்கெனவே இருக்கும் கடன் தொகை உள்ளீட்டு வரிக் கடனாக ஏற்க அனுமதிக்கப்படுவது

2) பதிவுசெய்த நபர் இப்போதிருக்கும் சட்டத்தின்படி (உ.ம். மத்திய சுங்கம் மற்றும் வாட்) அனைத்து ரிடர்ன்களயும் சமர்ப்பித்திருக்க வேண்டும். இது குறிப்பிட்ட தேதிக்கு ஆறு மாதங்களுக்கு முந்தியதாக இருக்க வேண்டும்.

3) இந்தக் கடன் தொகை குறிப்பாணை எண் ….. இன் கீழ் விற்கப்பட்ட சரக்குகள் தொடர்பானதாக இருக்கக் கூடாது. இது தவிர இதன் பிறாகு செலுத்தப் பட்ட வாட்டின் திரும்பப் பெறும் பணமாக இருக்கக் கூடாது.

4) ஜி.எஸ்.டி. - சட்டத்தின் கீழ் இன்னுமொரு நிபந்தனையும் இருக்கிறது. அது வருமாறு.

மத்திய விற்பனை வரிச் சட்டம் 1956 ன் பிரிவு 3, பிரிவு 5 மற்றும் 6 ன் துணை பிரிவு (3) அல்லது பிரிவு 8ன் துணை பிரிவு (8) ஆகியவற்றின் கீழ் வரும்

எந்தவொரு க்ளெய்முடனும் தொடர்புடைய கிரெடிட்கள், மத்திய விற்பனை வரி (பதிவு மற்றும் விற்பனை) விதிமுறைகள், 1957ன் விதி எண் 12ல் குறிப்பிட்டுள்ள கால வரம்பு மற்றும் செயல்முறைகளின்படி செயல்படுத்தப்படவில்லை என்றால் அவை எலக்ட்ரானிக் க்ரெடிட் லெட்ஜரில் பதிவு செய்யப்பட தகுதியற்றவையாகவே கருதப்படும்.

அதே சமயம், மேலே குறிப்பிட்டதற்கு இணையான தொகை, இப்போதைய சட்டத்தின் கீழ் திரும்ப அளிக்கப்பட வேண்டுமனால், அதற்கான கோரிக்கைகள்1957 ஆண்டின் மத்திய விற்பனை வரி (பதிவு மற்றும் மொத்த வருவாய்) சட்டத்தின் 12 - ஆம் விதி முறையில் குறிப்பிட்டுள்ளபடி இருக்கிறது என்பது நிரூபணமானால் வழங்கப்படலாம்.

கேள்வி 3: பதிவு செய்த ஒரு நபர் மூலதன பொருட்களை இப்போதிருக்கும் சுங்க வரிச் சட்டத்தின்படி ஜூன் காலாண்டுக் கால கட்டத்தில் 2017 - 2018 வாங்குகிறார். அதற்கான விற்பனை விலைச் சீட்டு பெறப்பட்டது ஜீன் 30 -ஆம் தேதிதான் என்றாலும் முதலீட்டு சரக்கு பெறப்பட்ட்டது, 5, ஜீலை, 2017 (அதாவது ஜி.எஸ்.டி. - யின் சட்ட ஆளுமையில்). இந்த நபருக்கு ஜி.எஸ்.டி. -ஆளுமையில் CANVATஇன் முழுக் கடன் பெற முடியுமா?

பதில்: ஆம் முடியும். அவருக்கு 2017 - 2018 காலகட்டத்தில் கடன் பெறத் தகுதி உண்டு. அதே சமயம், போன்ற கடன் CANVAT கடனாகப் பெறலாம் என்பது இப்போது இருக்கும் சட்ட்டத்தில் இருந்தால். மேலும், Cஜி.எஸ்.டி. சட்டத்தில் Cஜி.எஸ்.டி. - பிரிவு 140 (2)இன்படி கடனாக அளிக்கப்படலாம் என்றும் இருக்க வேண்டும்.

கேள்வி 4: இப்போது இருக்கும் சட்டத்தின்படி, (சுங்கத் தீர்வை) VAT கடன் என்பது ‘x’&’y’ எனபவற்றிற்கு முதலீட்டு சரக்குகள் என்பதாகக் கிடைகாது. ஆனல் அவை ஜி.எஸ்.டி.யில் சேர்க்கப்பட்டுள்ளன. அப்படியானால், பதிவு செய்த வரிசெலுத்துபவர் என்றிருப்பதால் இந்தக் கடனைப் பெற முடியுமா?

பதில்: அது போன்ற பொருட்கள் ITC யில் இப்போதய சட்டத்தின்படி அனுமதிக்கப் பட்டிருந்தால், அதனுடன் கூடவே ஜி.எஸ்.டி. யிலும் அனுமதிக்கத் தக்கது என்றிருந்தால் அவருக்கு அந்தக் கடனைப் பெற உரிமை உண்டு. ஒருவேளை, இது போன்ற கடனை தற்போதைய சட்டங்களின்படி பெற முடியாது என்றால் அவர் ஜி.எஸ்.டி.யில் பெற முடியாது. Sஜி.எஸ்.டி.யின் சட்டப் பிரிவு 140(2).

கேள்வி 5: பதிவு செய்யப்பட்ட ஒரு நபர், தற்போதைய சட்டத்தின் படிதவறாக கடனைப் பெற்றுவிட்டார் என்று வைத்துக் கொள்வோம். இதைத் திரும்ப வசூலிப்பது, ஜி.எஸ்.டி. சட்டத்தின்படி நடக்குமா? அல்லது தற்போதைய சட்டத்தின்படி நடக்குமா?

ITC தவறாக அனுபவித்ததை மீட்பது தற்போதைய சட்டப்பபடி முடியாது என்றால், அந்தத் தொகை நிலுவைத் தொகையாக, ஜி.எஸ்.டி. சட்டத்தின்படி வசூலிக்கப்படும்.

கேள்வி 6: பதிவு செய்த, வரி செலுத்த வேண்டிய ஒரு நபர் இப்போது இருக்கும் சுங்கத் தீர்வை சட்டப்படி பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்பதற்கும், அதே சமயம், ஜி.எஸ்.டி. சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டியது அவசியம் என்பற்கான இரண்டு உதாரணங்களைத் தருக.

பதில்: ஒரு உற்பத்தியாளரின் ஆண்டு மொத்த வருமானம் ரூ. 60 லட்சம். அவர் தற்போதைய சட்டஹ்தின்படி, ss - ந் விலக்குப் பெறவராகிறார். ஆனால் ஜி.எஸ்.டி. சட்டத்தின்படி பிரிவு (22) ன்படி, அவரது ஆண்டின் மொத்த வருமானம் சட்ட வரம்பான ரூ. 20 லட்சத்திற்கு மேல் இருக்கிறது.

ஒரு வணிகருக்கு ஆண்டின் மொத்த வருவாய் VATன் வரம்பைவிடக் குறைவுதான். ஆனால் அவர் கணிணி மூலமாக விற்பனை செய்யும் வணிகர் மூலமாக தனது பொருளை விற்பதால், அவர் ஜி.எஸ்.டி.யின் கீழ் பதிவு செய்யப் பட வேண்டியவராகிறார். இது போன்ற நபர்களுக்கு, சட்டப் பிரிவு 24இன்படி இச்சலுகைகள் கிடையாது.

கேள்வி 7: குறிப்பிட்ட தினத்தில், VAT வரி செலுத்தப்பட்ட இன்புட்களை ஸ்டாக்குகளாகக் கொண்டிருக்கும் சேவை வழங்குநருக்கு ITC அனுமதிக்கப்படுமா?

பதில்: ஆம். சட்டப் பிரிவின்படி அவரது இத்தகைய ஸ்டாக்குகளுக்கு இன்புட் வரிக் கடன் பெற உரிமை உண்டு.

கேள்வி 8: பதிவு செய்த ஒரு நபர், கடைசி வாட் திருப்புத் தொகையில் கூடுதலாக ITC ரூ.10,000 பெற்றார். ஜி.எஸ்.டி.யின் கீழ் அவர் காம்பொஸிஷன் திட்டத்தின் கீழ் இருக்கத் தெரிவு செய்கிறார். அவரால் கூடுதல் ITCயை முன்னெடுத்துச் செல்ல முடியுமா?

பதில்: பதிவு செய்த நபரால், ITCயின் வாட் உபரித் தொகையை காம்பொஸிஷன் திட்டத்தின் கீழ் இருக்கத் தெரிவு செய்வதால் - சட்டப் பிரிவு 140 (1)ஐ முன்னெடுத்துச் செல்ல முடியாது.

கேள்வி 9: மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் விற்பனை ஆன பொருட்கள் திரும்புதல் என்பது ஒட்டுமொத்த வருவாயிலிருந்து, ஆறு மாதங்களுக்குள் கழித்துக் கொள்ளக் கூடியதா? உதாரணமாக பொருளை வாங்கும் ஒரு நபர் ஜி.எஸ்.டி. ஆளுமையில் இருக்கும்போது பொருளைத் திருப்புகிறார்.இது குறிப்பிட்ட நாளிலிருந்துஆறு மாதங்களுக்குள்ளாக நடக்கிறது. இது ஜி.எஸ்.டி. - யின் கீழ் வரிவிதிப்பிற்கு உரியதா?

பதில்: அமலில் இருக்கும் ஒரு சட்டத்தின்படி வாங்கியது எந்தப் பொருளாக இருந்தாலும் அதற்கு வரியும் (இந்த விஷயத்தைப் பொறுத்தவரை, CST) ஏற்கெனவே ஒப்புக் கொண்ட நாளுக்கு ஆறு மாதங்களுக்குள் செலுத்தியாகி விட்டது. வாங்கியவர் அந்த சரக்கினை, ஏற்கெனவே ஒப்புக் கொண்ட நாளுக்குப் பின்னர் திருப்பி அனுப்பி விடுகிறார். அவ்வாறு அனுப்பப்பட்ட சரக்கை வழங்கல் என்றுதான் ஜி.எஸ்.டி. கூறுகிறது. அதற்கான வரி செலுத்தப் படவேண்டும். இதற்க்கான இரண்டு நிபந்தனைகள்.

1) அந்தச் சரக்குகள் ஜி.எஸ்.டி. சட்டப்படி வரி விதிப்புக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

2) பொருளை வாங்கியவர் ஜி.எஸ்.டி. வரியின் கீழ்பதிவு செய்திருக்க வேண்டும்.

அதே சமயம் பொருளை விற்றவர், ஒரு வேளை வாங்கியவர் தற்போதைய சட்டப்படி பதிவு செய்திரா விட்டால், அத்தகைய வரியை ( CST) உரிமை பெற்றிருக்கிறார். இது தவிர,

அந்தச் சரக்குகள் ஆறு மாதங்களுக்குள் (அல்லது நீட்ட்டிக்கப்பட்ட கால வரையாக, அதிக பட்சம் மேலும் இரண்டு மாதங்கள்) திரும்ப அனுப்பப் பட்டிருக்க வேண்டும்.அந்த சரக்குகள் அடையாளம் காணும் வகையில் இருக்க வேண்டும். சட்டப் பிரிவு 140 (1).

கேள்வி 10: ஒரு உற்பத்தியாளர் அல்லது பணித் தொழிலாளி ஆகியோர் பாதி முடிக்கப்பட்ட பொருட்களை, முழுவதுமாக முடித்துக் குறிப்பட்ட தினத்திற்குப் பிறகு அனுப்புகிறார்கள். தற்போதைய சட்டத்தின்படி, இவர்கள் வரி செலுத்தக் கடமைப்பட்டவர்களா?

பதில்: இல்லை. பின் வரும் சூழ்நிலைகளில் உற்பத்தியாளரோ, பணித் தொழிலாளரோ எந்த வரியையும் செலுத்த வேண்டியதில்லை

1) உள்ளீடுகள் அல்லது பாதி முடிக்கப் பட்ட பொருட்கள், இப்போதிருக்கும் சட்டங்களில் உள்ள ஷரத்துக்களின்படி, குறிப்பிட்ட நாளுக்கு முன்பு அனுப்பி வைக்கப்படும் நிலை

2) பணித் தொழிலாளி, அவற்றை ஆறு மாதங்களுக்குள்ளாக, (அல்லது அதற்கு மேல் நீட்டிக்கப்பட்ட காலகட்டத்திற்குள்) குறிப்பிட்ட நாளில் திருப்பி அனுப்பிவிடுகிறார்.

3) உற்பத்தியாளர் மற்றும் தொழிலாளி ஆகியோர் பணித் தொழிலாளியிடம் இருந்த கையிருப்புச் சரக்கைப் பற்றி குறிப்பிட்ட நாளில் அதற்கான படிவத்தின் வாயிலாக அறிவித்து விடுகிறார்கள்.

இது தொடர்பான சட்டப் பிரிவுகள் - 141(1), 141(2), & 141(4)

அதே சமயத்தில், அந்த பொருட்கள் ஆறு மாதங்களுக்குள் (அல்லது நீட்டிக்கப்பட்ட அதிகபட்ச காலமான, மேலும் இரண்டு மாதங்களுக்குள்) திரும்ப அனுப்பப்படாவிட்டால், பயன்படுத்திய வரிக்கடன் மீட்டெடுக்கப்படும்.

கேள்வி 11: வேலையாட்கள் குறிப்பிட்ட நேரத்தில் பொருட்களைத் திருப்பிச் செலுத்தவில்லை என்றால் என்ன ஆகும்?

பதில்: வேலையாட்கள் பொருட்களை, நிர்ணயிக்கப்பட்டநாளில் இருந்து ஆறு மாதத்துக்குள் (அல்லது மேலும் அதிகபட்சமாக நீட்டிக்கப்பட்ட இரண்டு மாதங்களுக்குள்) உற்பத்தியாளரின் தொழில் நடக்கும் இடத்துக்குத் திரும்பக் கொண்டுவந்து சேர்க்கவில்லை எனில் அந்தப் பொருட்களுக்கான வரி அவரிடமிருந்துதான் பெறப்படும் - பிரிவு 141(1), 141(2)

கேள்வி 12: உற்பத்தியாளர் சோதனைக்காக அனுப்பப்பட்ட முழுமையடைந்த பொருட்களை, வரி செலுத்துபவர் வேறு யாருக்கேனும் தர முடியுமா?

பதில்: ஆம், உற்பத்தியாளர் சோதனைக்காக அனுப்பிய முழுமையடைந்த பொருட்களை, ஆறு மாதங்களுக்குள் (அல்லது மேலும் அதிகபட்சமாக நீட்டிக்கப்பட்ட இரண்டு மாதங்களுக்குள்) இந்தியாவில் வரி செலுத்தப் பதிவுசெய்த வேறு நிறுவனங்களுக்குத் தரலாம் அல்லது வரி செலுத்த வேண்டிய அவசியமற்ற ஏற்றுமதி மூலம் அனுப்பிக்கொள்ளலாம். -141(3)

கேள்வி 13: தொழிற்சாலையிலிருந்து அனுப்பப்பட்ட முழுமையடைந்த பொருட்கள் தற்போதுள்ள சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட நாளில் அல்லது அதற்குப் பின் திருப்பி அளிக்கப்பட்டுவிட்டால் ஜிஎஸ்டி வரி செலுத்த வேண்டியிருக்குமா?

பதில்: தொழிற்சாலையிலிருந்து முழுமையடைந்த பொருட்கள் நிர்ணயிக்கப்பட்ட நாளுக்கு முன் பிற நிறுவனங்களுக்கு அல்லது சோதனைக்காக அனுப்பப்பட்டு சோதனை செயல்பாடுகள் முடிந்து மீண்டும் நிர்ணயிக்கப்பட்டநாளிலிருந்து ஆறு மாதங்களுக்குள் (அல்லது மேலும் அதிகபட்சமாக நீட்டிக்கப்பட்ட இரண்டு மாதங்களுக்குள்) திருப்பி வழங்கப்பட்டால் ஜிஎஸ்டி சட்டம் பிரிவு 141(3)இன் கீழ் எந்த வரியும் இல்லை.

கேள்வி 14: உற்பத்தி செயல்பாட்டின் கீழ் வராத, சோதனை செயல்பாடுகள் அல்லது வேறு செயல்பாடுகளுக்காக வேறு நிறுவனத்தைச் சார்ந்த வேலையாளுக்கு அனுப்பப்பட்ட உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்குத் தற்போதுள்ள சட்டத்தின் கீழ் எப்போது ஜிஎஸ்டி வரியானது செலுத்த வேண்டி வரும்?

பதில்: நிர்ணயிக்கப்பட்டநாளுக்கு முன் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சோதனைக்காகவோ அல்லது வேறு செயல்பாடுகளுக்காகவோ பிற நிறுவன வேலையாளுக்கு அனுப்பப்பட்டிருந்தால் தற்போதுள்ள சட்டத்தின் கீழ், அந்தப் பொருட்கள் நிர்ணயிக்கப்பட்டநாளிலிருந்து ஆறு மாதங்களுக்குள் (அல்லது மேலும் அதிகபட்சமாக நீட்டிக்கப்பட்ட இரண்டு மாதங்களுக்குள்) திருப்பி வழங்கப்படாவிட்டால் ஜிஎஸ்டி வரியை அந்த வேலையாள் செலுத்த வேண்டியிருக்கும். மேலும் உற்பத்தியாளர் அனுபவித்து அந்த இன்புட் டேக்ஸ் கிரெடிட்டும், அந்தப் பொருட்கள் நிர்ணயிக்கப்பட்டநாளிலிருந்து ஆறு மாதங்களுக்குள் திருப்பி வழங்கப்படாதபட்சத்தில் அவரிடமிருந்து திருப்பி வாங்கப்படும் - பிரிவு 141(3)

கேள்வி 15: பிரிவு 141இல் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு மாத நீட்டிப்பு என்பது தானாகவே செயல்படுத்தப்படுமா?

பதில்: இல்லை, தானாகச் செயல்படுத்தப்பட மாட்டாது. ஏற்றுக்கொள்ளத் தக்க காரணங்களைத் தெரிவித்த பின்னரே ஆணையரால் அது நீட்டிக்கப்படும்.

கேள்வி 16: விலைகளை மறுபரிசீலனை செய்வதற்கு டெபிட்/கிரெடிட் விவரக் குறிப்புகளை வழங்குவதற்கான கால வரம்பு என்ன?

பதில்: வரி செலுத்த வேண்டிய நபர் டெபிட்/கிரெடிட் விவரக் குறிப்புகள் அல்லது சப்ளிமெண்டரி இன்வாய்ஸ் விலை மறுபரிசீலனைக்கு 30 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

விலைகள் கீழ்நோக்கி மறுபரிசீலனை செய்யப்பட்டால், வரி செலுத்துபவர் அவருடைய வரியைக் குறைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவார் அதுவும் பொருளைப் பெற்றவர் இன்வாய்ஸ் அல்லது கிரெடிட் குறிப்புகளில் இன்புட் டேக்ஸ் கிரெடிட் குறைக்கப்பட்டிருந்தால் மட்டுமே இந்த வரிக் குறைப்பு ஏற்றுக்கொள்ளப்படும் -பிரிவு 142(2).

கேள்வி 17: தற்போது சட்டத்தில் நிலுவையில் உள்ள திருப்பி வழங்கப்பட வேண்டிய வரி/வட்டி போன்றவற்றின் விதி என்ன?

பதில். நிலுவையில் உள்ள திருப்பி வழங்கப்பட வேண்டிய வரி/வட்டி போன்றவை தற்போதுள்ள சட்டம் பிரிவு 142(3)இன் படி வழங்கப்படும்.

கேள்வி 18: தற்போதுள்ள சட்டத்தின் கீழ் நிலுவையில் உள்ள VAT வரியின் மீதான CENVAT/ITC போன்றவற்றைப் பெறுவதற்கான கோரிக்கை அல்லது பரிசீலனையின் விதி என்ன? அது வெளியீட்டு வரியுடன் தொடர்புடையதாக இருந்தால்?

பதில்: CENVAT / ITC அல்லது நிர்ணயிக்கப்பட்டநாட்களுக்கு முன் அல்லது பின் செயல்படுத்தப்பட்ட எந்தவொரு வெளியீட்டு வரி ஆகியவற்றின் மீதான அனைத்து கோரிக்கைகள், மறுபரிசீலனைகள், ஆய்வுகள் அல்லது குறிப்புகள் தற்போதுள்ள சட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும். மற்றும் திருப்பி வழங்கப்பட வேண்டிய CENVAT / ITC அல்லது வெளியீட்டு வரி தொகை நிலுவையில் இருப்பது தெரியவந்தால் தற்போதுள்ள சட்டத்தின் கீழ் வழங்கப்படும். அதேபோல் எதேனும்

தொகை திருப்பி எடுக்கப்பட வேண்டியிருந்தால் அவை ஜிஎஸ்டி சட்டத்தின் கீழ் நிலுவை வரிகளாக எடுத்துக்கொள்ளப்படும் - பிரிவு 142(6)/142(7).

கேள்வி 19: மேல்முறையீடு அல்லது மறுபரிசீலனை அசெஸீக்கு சாதகமாக மாறினால், ஜிஎஸ்டி சட்டத்தின் கீழ் ரீஃபண்ட் செய்யப்படுமா? ஒருவேளை முடிவு அசெஸீக்கு எதிராக மாறினால் என்ன ஆகும்?

பதில்: தற்போதுள்ள சட்டத்தில் உள்ள விதிமுறைகளுக்கு ஏற்பவே ரீஃபண்ட் முறைகள் செயல்படுத்தப்படும். தற்போதுள்ள சட்டத்தின் கீழ் ஏதேனும் மீட்கவேண்டிய தொகை மீட்கப்படாமல் இருந்தால் ஜிஎஸ்டி சட்டத்தின் கீழ் நிலுவை வரியாக மீட்கப்படும் - பிரிவுகள் 142(6) & 142(7)

கேள்வி 20: தற்போதுள்ள சட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்ட கணக்குத் தாக்கல் பரிசீலனையில் ஏதேனும் ரீஃபண்ட் செய்யப்பட வேண்டியதாக இருந்தால் அது ஜிஎஸ்டி சட்டத்தின் கீழ் எப்படி கையாளப்படும்?

பதில்: தற்போதுள்ள சட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்ட கணக்குத் தாக்கல் பரிசீலனையின் விளைவாக ஏதேனும் ரீஃபண்ட் செய்யப்பட வேண்டியிருந்தால் நிர்ணயிக்கப்பட்டநாளுக்குப் பின்னர் ரொக்கமாக தற்போதுள்ள சட்டத்தின் விதிமுறைகளுக்கு ஏற்பவே ரீஃபண்ட் செய்யப்பட்டுவிடும் - பிரிவு 142(9)(பி).

கேள்வி 21: ஜிஎஸ்டியில் எந்தவொரு பொருட்கள் சேவைகள் சப்ளை செய்யப்பட்டாலும், தற்போதுள்ள சட்டத்தின் கீழ் அதற்கான கான்ட்ராக்ட் பதிவு செய்யப்பட்டிருந்தால், எந்த வரியை செலுத்த வேண்டியிருக்கும்?

பதில்: அந்த சப்ளைகளுக்கு ஜிஎஸ்டி வரி செலுத்தப்பட வேண்டியிருக்கும் - ஜிஎஸ்டி சட்டம் பிரிவு 142(10)

கேள்வி 22: தற்போதுள்ள சட்டத்தின் கீழ் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு வரி வித்க்கப்பட்டிருக்கும் பட்சத்தில், ஜிஎஸ்டி சட்டத்தின் கீழ் சப்ளை செய்யப்பட்டால் ஜிஎஸ்டி வரியும் செலுத்த வேண்டியிருக்குமா?

பதில்: தற்போதுள்ள சட்டத்தின் கீழ் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு வரி விதிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில், ஜிஎஸ்டி சட்டத்தின் கீழ் சப்ளை செய்யப்பட்டால் எந்த ஜிஎஸ்டி வரியும் செலுத்த வேண்டியதில்லை - பிரிவு 142(11).

கேள்வி 23: தற்போதுள்ள சட்டத்தின் கீழ், நிர்ணயிக்கப்பட்டநாளுக்குப் பிறகு செயல்படுத்தப்பட்ட எந்த ஒரு அசெஸ்மெண்ட் அல்லது நீதிமன்ற நடவடிக்கைகளுக்கான ரீஃபண்ட் செய்யப்பட வேண்டிய வரி, வட்டி, அபராதம் ஆகியவை ஜிஎஸ்டி சட்டத்தின் கீழ் கொடுக்கப்படுமா?

பதில்: தற்போதுள்ள சட்டத்தின் கீழ் எந்த ரீஃபண்ட் தொகையும் ரொக்கமாகத் தரப்பட மாட்டாது - சிஜிஎஸ்டி சட்டம் பிரிவு 142(8)(b)

கேள்வி 24: முந்தைய சட்டத்தின் கீழ் ஐஎஸ்டி பெற்ற சேவைகளுக்கான இன்புட் டேக்ஸ் கிரெடிட் ஜிஎஸ்டி சட்டத்தில் வழங்கப்பட முடியுமா?

பதில்: ஆம், இதுபோன்ற சேவைகளோடு தொடர்புடைய இன்வாய்ஸ் நிர்ணயிக்கப்பட்டநாளில் பெறப்பட்டிருந்தாலும் சரி அல்லது அதற்குப் பிறகு பெறப்பட்டிருந்தாலும் சரி வழங்கப்படும் - சிஜிஎஸ்டி சட்டம் பிரிவு 140(7).

கேள்வி 25: மாநில VAT வரிச் சட்டத்தின் கீழ், பொருட்களை எங்கு விற்றாலும் வாட் வரி பிடிக்கப்படும். ஆனால் நிர்ணயிக்கப்பட்டநாளுக்கு முன் இன்வாய்ஸ் வழங்கப்பட்டு ஆனால் நிர்ணயிக்கப்பட்டநாளுக்குப் பிறகு பண செலுத்தப்பட்டிருந்தால் வரிப் பிடித்தமானது இந்தச் சட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுமா?

பதில்: இல்லை, இது போன்ற நிகழ்வுகளில் ஆதார விலையில் செய்யப்படும் வரிப் பிடித்தமானது ஜிஎஸ்டி சட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும்.

கேள்வி 26: ஒப்புதலின் பேரில் அனுப்பப்பட்ட பொருட்கள் நிர்ணயிக்கப்பட்டநாளுக்கு முந்தைய ஆறு மாதங்களுக்கு முன்பாக அனுப்பப்படவில்லை ஆனால் அந்த பொருட்கள் நிர்ணயிக்கப்பட்டநாளுக்குப் பிறகு

ஆறு மாதம் கழித்து விற்றவருக்கே திருப்பி வழங்கப்பட்டால், அதற்கு ஜிஎஸ்டி சட்டத்தின் கீழ் வரி செலுத்த வேண்டுமா?

பதில்: ஆம், அப்படிப்பட்ட பொருட்கள் ஜிஎஸ்டி வரி சட்டத்தின் கீழ் வரிச் செலுத்தப்பட வேண்டியிருந்தால், பொருட்களைத் திருப்பி அளிக்கும் நபர் அல்லது பொருட்களை ஒப்புதல் செய்யாத நபர், நிர்ணயிக்கப்பட்ட நாளுக்குப் பிறகு ஆறு மாதம் (அல்லது மேலும் அதிகபட்சமாக நீட்டிக்கப்பட்ட இரண்டு மாதங்கள்) கழித்து திருப்பி வழங்கும் பட்சத்தில் வரி செலுத்த வேண்டியிருக்கும். மேலும் இந்த நிகழ்வுகளில் பொருட்களை ஒப்புதலில் பேரில் அனுப்பியவரும் வரி செலுத்த வேண்டியிருக்கும் - பிரிவு 142(12).

----------------------------